மே 1979 (2)

# தமிழரசு


JL
V.21 mN
N79
5366


தமிழரசு



டெல்லியில் தமிழக அரசு நடத்திய கலை நிகழ்ச்சியில் சில காட்சிகள் (கட்டுரை உள்ளே)

85366

# தமிழக முதல்வரின் மே தின வாழ்த்து



உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்ற உன்னத கொள்கையை உலகத்துக்கு சொல்வது மட்டும் அல்லாமல் அந்த உயர்ந்தவர்களின் உரிமைகளுக்காக 1886-ம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் உயிர் நீத்த உத்தமர்களின் திருநாமத்தை புகழ் மொழிகளால் பாடவும், இன்னும் உலகில் உரிமை பெறாமல் இருக்கும் பாட்டாளிகளின் துயரைப் போக்க சூளுரை எடுத்துக் கொள்வதற்குமாக அமைந்த ஒரு நாள்—திருநாள்—பெருநாள் தான் மே தினமாகும்.

தொழிலாளர் வட்டாரங்களில் மட்டுமே கொண்டாடப்பட்டு வந்த இந்த மே நாள் தமிழக முழுவதும் தமிழ் நெஞ்சங்கள் முழுவதும் கொண்டாடும்படி தனது பேனாவாலும், நாவாலும் கிளர்ச்சி ஊட்டிய பெருமை மட்டுமன்று, அரசுக் கட்டிலில் ஏறிய பிறகு மே நாளை கட்டாய விடுமுறை நாளாக்கிய பெருமையும் பேரறிஞர் பெருந்தகை அமரர் அண்ணா அவர்களுக்கே உரியதாகும். அந்த அமரர் அண்ணா வழியில் வந்த நாம் ஒரு பெருவிழாவை கொண்டாடுவதோடு, இன்னும் உரிமை பெறாத பாட்டாளி, தொழிலாளி வர்க்கங்களின் உரிமைகளுக்காக பாடுபடுவது என்று சூளுரைக்கும் இதே நேரத்தில் தொழிற்சாலை என்பது மலர்; தொழிலாளர் உரிமை என்பது மலரில் உள்ள தேன்; மலருக்கு நோவு ஏற்படாமல் தேன் எடுக்கும் தேனீ போல் நாம் இயங்கவேண்டும். மலரை கசக்கி அத்தர் எடுக்கும் போக்கில் சென்றுவிடக்கூடாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

தொழிற்சாலைகள் என்னும் மலர் தோட்டத்தின் காவலனாக இன்று யார் யாரோ இருந்தாலும், எதிர்காலத்தில் தொழிலாளர் வர்க்கம்தான்—பாட்டாளி வர்க்கம்தான் அந்த ஆலைகளையும், இந்த அன்னை நாட்டையும் ஆண்டிடப் போகிறது என்று பொறுப்புணர்வோடு, கடமை உணர்வோடு, நமது போக்கும், நோக்கும் அமைந்து விட்டால் இன்றைக்கு நாடு முழுவதும் தோன்றியுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்ப்பு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒரே உலகம் அது உழைப்பாளர் உலகம் என்ற பூரிப்பான கொள்கையோடு, மகிழ்ச்சி விழா எடுத்துக் கொண்டிருக்கும் பாட்டாளி தொழிலாளர் தோழர்களுக்கு எனது மே நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

Verified

# நீண்டநாள் கோரிக்கை நிறைவேறியது!

வருங்காலத்தில், மாநில அரசு அலுவலர்களுக்கு மத்திய அரசு கைக்கொள்ளும் முறையை ஒட்டி, மாநில அரசின் நிதி நிலைமையையும் கருத்தில் கொண்டு, ஆண்டுக்கு ஒருமுறை அகவிலைப்படி பற்றி முடிவு எடுக்கவேண்டும் என்று ஊதியக் குழு பரிந்துரைத்தது. எல்லா அலுவலர் சங்கங்களும், மத்திய அரசு அண்மையில் அளித்த அகவிலைப்படியை ஒட்டி தமிழக அரசும் அகவிலைப்படி வழங்கவேண்டும் என்று கோரின. இதனையேற்று, அரசு 1.4.79 முதல் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு அகவிலைப்படி அளிக்க முடிவு செய்துள்ளது. மத்திய அரசு, வாழ்க்கைச் செலவுப் புள்ளி 200ஐ அடிப்படையாகக் கொண்டு, 4% என்ற முறையில் அகவிலைப்படி அண்மையில் அளித்துள்ளது. நமது ஊதிய விகிதங்கள், வாழ்க்கைச் செலவுப் புள்ளி 320ஐ அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், ரூ.650வரை சம்பளம் பெறுவோர்க்கு 2.5% அகவிலைப்படியும், ரூ.650 முதல் ரூ. 1600 வரை சம்பளம் பெறுவோர்க்கு 1.875% அகவிலைப்படியும், ரூ. 1600க்கு மேற்பட்டு சம்பளம் பெறுவோர்க்கும் அதே அளவு அகவிலைப்படியும் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி குறைந்த அளவு மாத அகவிலைப்படி ரூ. 6 ஆகவும், உயர்ந்த அளவு ரூ.30 ஆகவும் அமையும். இந்த அகவிலைப்படி 1.4.79 முதல் கணக்கிடப்பட்டு வழங்கப்படும். ஏப்ரல் மாதத்திற்கான சம்பளம் வரும் மே மாதம் பெறும்போது, இந்த அகவிலைப்படியும் பெறலாம்.

ஒய்வு ஊதியம் பெறுவோர்க்கு ரூ.3 முதல் ரூ. 12 வரையில், தக்க முறையில் அகவிலைப்படி வழங்கப்படும். இதுவும் இதே தேதியிலிருந்து ஒய்வு ஊதியத்துடன் அளிக்கப்படும்.

பழைய அடிப்படைச் சம்பளத்தில் 5% உயர்வு பெற்று, புதிய சம்பள விகிதத்தில் சம்பளம் நிர்ணயம் செய்து கொள்ளுவதற்கான வாய்ப்பு 1.4.78 அன்று மட்டுமே அளிக்கப்பட்டு வந்தது. தங்களது வேண்டுகோளுக்கு இணங்க, இந்தச் சலுகையை 31.3.79 வரை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது.

மிதி வண்டி (Cycle) வாங்குவதற்கென அரசு அலுவலர்களுக்குத் தரப்படும் முன்பணம், அண்மையில் ரூ. 400 ஆக உயர்த்தப்பட்டது. புதிய மிதி வண்டிகள் வாங்கவேண்டும் என்ற அடிப்படையில் இதனை ரூ. 600 ஆக உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கையை அரசு, அப்படியே ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது.

இவ்வாறு அரசு ஏற்றுள்ள இந்த முடிவுகளின் விளைவாக ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ரூ. 12 கோடி செலவாகும்.

ஓய்வு பெறும் வயதை உயர்த்தவேண்டும் என்று ஊதியக்குழு செய்துள்ள பரிந்துரையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது அலுவலர் சங்கங்களின் முக்கியமான கோரிக்கைகளுள் ஒன்று. அரசு, இந்தக் கோரிக்கையை ஏற்க முடிவு செய்துள்ளது. தற்போது 55 வயதில் ஓய்வுபெற வேண்டிய நிலையில் உள்ள தமிழக அரசு ஊழியர்கள் அனைவரும், இனிமேல் 58 வயதில் ஓய்வு பெறுவார்கள்.

சங்கங்கள் ஏதும் கோராத முக்கிய முடிவு ஒன்றை அரசு அறிவித்துள்ளது. தற்போது ஓய்வு ஊதியம் வழங்கும் முன் Accountant General சரிபார்க்க வேண்டும் என்ற முறையில் ஒரு சில மாதங்கள் காலத் தாமதம் ஏற்படுகின்றது. இதனை மாற்றிப் பொதுவாக மாவட்ட மட்டத்திலேயே ஓய்வு ஊதியம் வழங்க அதிகாரம் அளிக்கப்படும். இதன் வாயிலாக ஓய்வு பெறும் அதே நாளில், ஓய்வு ஊதிய உத்தரவுகளை அலுவலர்கள் பெற வகை ஏற்படும்.



சட்டப்பேரவையில் மாண்புமிகு முதல்வரின் சார்பில்
மாண்புமிகு நிதியமைச்சர் அறிவிப்பு.



## உழைப்பவரே உயர்ந்தவர்

மாண்புமிகு
தொழிலாளர் நல அமைச்சர்
திரு எஸ். ராகவானந்தம் அவர்களின்
மே நாள் வாழ்த்து

இன்று தமிழகத்தில் நடப்பது "உழைப்பவரே உயர்ந்தவர்" என்ற கொள்கையை அரசியல் சித்தாந்தமாக ஏற்று உள்ள புரட்சித் தலைவரின் ஆட்சி.

அண்ணாவால் உருவாக்கப்பட்ட கொள்கையைச் செயல்படுத்த உறுதிபூண்டு இரவு பகலென பாராமல் இல்லாமைபோக, வழிவகை காண திட்டம் தீட்டிச் செயல்பட்டு வருகிறார், அண்ணாவின் அன்புத்தம்பி நம் புரட்சித் தலைவர்.

தங்கள் கோரிக்கைகள், தேவைகள் முதலியவற்றைப் பெற தியாகம் செய்ய தேவை இல்லாமல், போராடத் தேவையில்லாமல் சட்டபூர்வமாகவே உழைக்கும்வர்க்கத்திற்கு பாதுகாப்பும், வாய்ப்பும் தர சட்டங்கள் இயற்றவும், அவைகளைத் தூய உள்ளத்தோடு செயல்படுத்தவும் முனைந்துள்ள "புரட்சித் தலைவர் கரத்தை வலுப்படுத்துவோம்" என சூளுரை எடுத்துக் கொள்ள வேண்டுமென உழைக்கும் மக்களை வேண்டிக் கொண்டு என் மே தின வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# சிகரத்து விளக்கென விளங்கும் சிறு தொழில்!

மனித உழைப்புத்தான் ஒரு சமுதாயத்தின் ஆதாரமாகவும், நாட்டின் பொருள் ஆதாரமாகவும் இருக்கிறது.

மாண்புமிகு கிராமத்தொழில் அமைச்சர்
திரு க. ராசாமுகமது



இவைகள் இரண்டும் இணைந்து செல்ல வேண்டும். வெறும் லாப நட்டக் கணக்கைப் பார்த்து மட்டுமே உற்பத்தியைச் செய்ய நினைத்தால், ஏழ்மை, வறுமையின் தாலாட்டோடு வளர்ந்து வருமே தவிர, சமத்துவ சமுதாயத்தைச் சமைக்க முடியாது. சமுதாயத் தேவையை உணர்ந்து மனித உழைப்பை அலட்சியப் படுத்தி விடாமல், உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும்.

மனித சக்தியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் அளவு சமுதாயத் தேவைகளை நிறைவு செய்ய முடியாத போது, தேவைகளை நிறைவு செய்ய உற்பத்தியின் அளவை உயர்த்த வேண்டும். இந்தச் சூழ்நிலையில் இயந்திரங்களைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாதது. சிறு தொழில் வளர்ச்சியின் மூலமாகவே உண்மையான தொழில் வளர்ச்சியை நாம் நிலைநாட்ட முடியும். சிறு தொழில் வளர்ச்சி என்பது இரண்டு வகையில் வளர்க்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

ஒன்று பெரிய தொழிற்சாலைகளை நிறுவி தேவையான துணைப் பொருட்களை உற்பத்தி செய்யக் கூடிய சிறு தொழில்களை வளர்ப்பது. இரண்டாவது- கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களை அந்த இடத்திலேயே பயன்படுத்தி, அவைகளைச் செய்பொருள் களாக்க் கிராமப்புறங்களிலேயே தொழில்களை ஆரம்பிப்பதாகும்.

கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் என்று மூன்று வகையான தொழில் கட்டுமானங்களை கிராமப் பகுதிகளிலும், சிறிய நகர்ப்புறங்களிலும் நிறுவ அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. பட்டு வளர்ப்பு, தீப்பெட்டி, தேயிலை உற்பத்தி, எரால் மீன் வளர்ப்பு, குடிசைத் தொழிலாக சோப்பு தயாரித்தல், விசைச் செக்குகள் மூலம் எண்ணெய் உற்பத்தி இப்படிப் பல வகையான தொழில்களைக் கிராமங்களில் அதிகமாக ஏற்படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் மூலமாக தொழில் வளர்ச்சியில் தமிழகத்தில் பெரிய மாறுதல் ஏற்பட்டு வருகிறது.

இதன் மூலமாக, கிராமங்களின் சமூக, பொருளாதார வளர்ச்சி மேம்பாடடையும்; அதோடு கிராம மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்து,நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி சீராக விளங்கும் என்பது திண்ணம்.

சிறு தொழில் வளர்ச்சி பற்றிய தெளிவான புள்ளி விவரங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும், பல்வேறு துறைகளின் சார்பில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழக அரசின் அக்கறையும், தொழில் வளர்ச்சியில் நமக்கிருக்கின்ற தெளிவான நிலைப்பாடும் இங்கே தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. தமிழக முதல்வர் மாண்புமிகு 'புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்தில், தொழில் வளர்ச்சி என்பது குறிப்பாக, சிறு தொழில் வளர்ச்சி என்பது குன்றின் விளக்காகி நிற்பதைக் கண்டு, உழைக்கும் வர்க்கம் மகிழ்ந்து வரவேற்கும் என்று நம்புகிறேன்.

அதிகமான அளவில் வேலை வாய்ப்பிற்கு வழி வகுக்கும் அடிப்படையில் சிறு தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படுகிறது. வளர்ச்சிக்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்க, புரட்சித் தலைவரின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தொழில் உரிமங்கள் பெறுவதில் உள்ள தாமதங்களையும், இடர்ப்பாடுகளையும் களைய இன்றைக்குப் பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

## வாழ்வின் ரகசியம்

உழைக்கும்போது நீங்கள் உலகின் பண்டைய நெடுங்கனவின் ஒரு பகுதியை நிறைவேற்றியவராவீர்கள். அக்கனவு என்று பிறந்ததோ அன்றே உங்களுக்குரிய பங்கும் ஒதுக்கி வைக்கப்பட்டுவிட்டது.

எனவே, உழைப்போடு ஒத்திசைந்து நடக்கையிலேதான் உண்மையில் நீங்கள் வாழ்வைக் காதலிக்கின்றீர்கள். இவ்வாறு உழைப்பால் வாழ்வைக் காதலிப்பது, வாழ்வின் அந்தரங்க இரகசியங்களை நெருங்கி அறிந்து கொள்வதாகும்.

—கலீல் கிப்ரான்.



# காலத்தால் நிலைத்த கவி

அரசுக்கவிஞர் திரு. கண்ணதாசன்.

தேனிலே நனைத்த சொற்கள்
திகைப்புறும் எழுத்துக் கோவை
வானிலா அனைய மாட்சி
வளர்க்குமோர் உவமைக் காட்சி
ஊனிலே உயிரி லேபோய்
உவப்புறச் செய்யும் வண்ணம்
ஞானமே கவிதை யாக
நல்கினான் புரட்சி வேந்தன்!

விதவையின் துயரம் பற்றி
வெண்ணிலா அழகைப் பற்றி
மதுரமாம் தமிழைப் பற்றி
மங்கையர் உறவைப் பற்றி
முதியவர் காதல் பற்றி
மோகனக் குடும்பம் பற்றி
எதையவன் எழுதா(து) ஓய்ந்தான்?
எடுத்ததைத் தொடுத்தான் நன்றாய்!

காலத்தால் உயர்ந்தே நிற்கும்
கவிஞர்கள் சிலர்தான் உண்டு!
ஞாலத்தை ஈர்த்த வேந்தன்
நல்லறி வாளன்; மேனிக்
கோலத்தில் மறவர் சிங்கம்;
குணத்திலே குழந்தைத் தங்கம்
ஆலெனப் படர்ந்து நின்றான்
அரசென வணங்க வைத்தான்!

பாரதி தாசன் என்னும்
பாவலன் பெயரைக் கேட்டால்
மாரதி நடனம் செய்வாள்,
மன்மதன் யாழை மீட்ட!
நேரதைப் புரிந்து கொண்டே
நிகரிலா விழாவெ டுக்கும்
ஊர்தமிழ் அரசை எந்த
உள்ளமும் வணங்கு மாக!





# திருமுன் படைத்தல்

டாக்டர் ச. சு. இளங்கோ

பாவேந்தர் தம்முடைய படைப்புகள் சிலவற்றைத் தம் உள்ளங் கவர்ந்த நண்பர்களுக்கும், நற்றமிழ்ச் சான்றோர்களுக்கும் சமர்ப்பணம் செய்துள்ளார். இனி அந்தச் சமர்ப்பணங்கள் எழுந்த வரலாற்றை நோக்குவோம்.

பாவேந்தர் 1930ல் 'சுயமரியதைச் சுடர்' என்னும் நூலை வெளியிட்டார். அந்நூலைப் 'புதுவை முரசு' ஆசிரியர் எஸ். குருசாமி அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். அதில்

நயமறியா மக்கள் நலம்நாடி இனிய
சுயமரியாதைக் கொள்கைத் தூய்மையினை
தன் அருமைப்
பாரத நாடெங்கும் பரப்பும் திருப்பணியில்
நேரடைந்த நல்லுணாவு நித்தங்
கனிந் துயர்ந்தே
ஆங்கில ரிவோல்ட்டுக்கும் ஆசிரியனாய்
உழைத்தே
தொட்ட எழுதுகோல் தொட்டபடி
யுழைக்கும்
ஆசிரிய ராக அமர்ந்த குருசாமி
பேசரிய வாய்மையன் என்நண்பன்
அன்னோன்
உயர்முன் சமர்ப்பித்தேன்! உரைத்த
இதன் பேர்
'சுயமரியாதைச் சுடர்'
—பாரதி தாஸன்

என்று குறித்துள்ளார். பஃறொடை வெண்பா யாப்பில் இந்தச் சமர்ப்பணம் எழுதப்பட்டுள்ளது.

பாவேந்தர் சுயமரியாதைக் கழகத்தில் ஈடுபட்ட காலத்தில் சமர்ப்பணம் செய்த முதல் நூல் இது. என்பதும் உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களையும் நட்பினை மறவாத நன்நெஞ்சம் கொண்டவர் கவிஞர் என்பதும் இச்சமர்ப்பணத்தின் மூலம் தெரிய வரும். தன்னினும் குறைந்த வயதுடையவர் குத்தூசியார் என்பதையும் கவிஞர் கவனியாது, அவரின் தொண்டாற்றலுக்கும் துணிச்சலுக்கும், நேர்மைப் பண்புக்கும், இந்நூலைச் சமர்ப்பணம் செய்தார்.1

1930இல் வெளிவந்த 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' எனும் நூலைச் சுயமரியாதை வீரர்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். அதில் ''தேச மக்களின் மனத்தில்-ஊறிக்கிடக்கும் எண்ணம் அவர்கள் நடை இவற்றை எதிர்க்கும் முறையில் தான் நாட்டுக்கு நலன் உண்டு என்று தோன்றினால் அஞ்சாது எதிர்ப்பவர் வீரர், தேசபக்தர். அவ்வகைச் சுயமரியாதை வீரர்களின் பாதங்களில் இந்நூலை சமர்ப்பணம் செய்கிறேன் ''2 என்று எழுதியுள்ளார்.

இதிலிருந்து, பாவேந்தர், தொடக்கக் காலத்தில் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டபோது இருந்த வேகத்தையும், தொண்டர்களை மதிக்கும் தன்மையையும், தேசம், தேசபக்தர் என்னும் சொற்களிலிருந்து சுயமரியாதை இயக்கப்பாதையில் செல்லும் போது கூடத் தேசியப்பற்று கொஞ்ச நஞ்சம் அவரிடம் ஒட்டிக் கொண்டிருந்த விதம் பற்றியும், மூடநம்பிகை ஒழிப்பு எவ்வளவு கடினமான பணி என்பதையும் மேற்குறித்த கவிஞரின் முன்னுரையிலிருந்து அறியலாகும்.

பாரதிதாசனின் கவிதைகள் முதல் தொகுதி 1938ல் திருமதி. குஞ்சிதம் குருசாமி அவர்களால் வெளியிடப்பட்டது. நூல் வெளியிடப் பொருள் உதவி செய்தவர் கடலூர் நாராயணசாமி நாயுடு ஆவார்கள். எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு' என்னும் குறள் கருத்திற்கேற்பப் பாவேந்தர் தமது கவிதைகள் தொகுதி ஒன்றை வெளியிட உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் துணை நின்ற சான்றோர் அன்பர் கடலூர் நாராயணசாமி நாயுடுக்கு நன்றிப் பெருக்கால் தொகுதி-1ஐ சமர்ப்பணம் செய்தார். அதில்

நல்ல குணம்செயல்கள் நன்கமைந்தார்! கல்வி
யிலே
வல்ல எவர்க்கும் மகிழ்ந்தா தரவளிப்போர்;
தற்பெருமை யற்றார்! தமிழ்ப்பெரு மக்கள்
முற்பெருமை காக்கஎனில் முன்னேறும் போர்
வீரர்;
செந்தமிழே யாண்டும் சிறக்கச், செழுந்தமிழர்
செந்தமிழால் யாண்டும் சிறப்புப்பெறுக என்று
செல்வத்தால் நல்லுடலால் தீந்தமிழ்க்குத்
தொண்டேதான்
அல்லும் பகலும் அநவரதமும் புரிவார்;
சைவப் பெரியாரின் சங்கத்தின் அங்கத்தார்
நைவர்க் கிரங்கி நலம்புரியும் நோன்புடையார்
வாராச்சீர் கோவிலூர்க் கீழ மருதூரார்
நாராயணசாமி நாயடுகார் அன்னவர்க்கே,
என்னூல் சமர்ப்பித்தேன்! இன்னோக்கம்
என்னூலைப்
பொன்னூலாய்ச் செய்யும் பொருட்டு!3

என்று குறித்துள்ளார்.

பஃறொடைவெண்பா யாப்பில் 14 அடி உடையது இப்பாடல்.

1938 ல் முதல் இந்தி எதிர்ப்புப் போ[illegible] தமிழகத்தில் துவங்கியது. தந்தை பெரியா[illegible] இந்தித் திணிப்பை எதிர்த்துப் போர் நட[illegible]தினார். எனவே பெரியார் அன்றைய [illegible]ள வந்தாரால் கைது செய்யப்பட்டுச் [illegible]றைக்கனுப்பபப்பட்டார். இப்படிப்பட்ட காலகட்டத்தில் உருவான நூலே பா[illegible]ரின் 'இரணியன் அல்லது இணையற்ற வீ[illegible]' என்னும் நாடகமாகும். ஆகவே பாவே[illegible]தர் சிறைப் பறவையான தனது தானைத் [illegible]லைவனுக்கு அந்நூலைச் சமர்ப்பணம் செய்[illegible]ார். அதில், ''சுயமரியாதை இயக்கம் கண்டவரும், பார்ப்பனரல்லாத மக்கட்குழைப்பதே தன் கடனெனக் கொண்டவரும் ஜஸ்டிஸ் என்ற நீதிக் கட்சியின் தலைவரும், தற்போது தமிழுக்காக சிறையிலிருக்கும் பேருருவமாகிய தமிழர் திலகம், அறிவின் அம்சம், புரட்சியின் சிகரம் பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களுக்கு இந்நூல் ஏற்புடைத்து''4 என்று எழுதியுள்ளார்.

பாவேந்தருக்குத் தனித்தமிழ் மலர்ந்து மணம் வீசிய காலமான 1944ஆல் குடும்ப விளக்கு 2ஆம் பகுதி, விருந்தோம்பல் வெளிவந்தது. எனவே அக்காலத்தில் எழுந்த விருந்தோம்பல் எனும் பகுதியை நிறைதமிழ் ஆய்வாளர் தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகட்குத் திருமுன் படைத்தார். அதில்

''இற்றைக்கு 30 ஆண்டின் முன் தொடங்கியே தனித் தமிழில் நூல் எழுதிக் காட்டியே, தனித்தமிழ் வேண்டும் எனும் கருத்தை, வலியுறுத்தி வரும் நிறைதமிழ் ஆய்வாளர் மறைமலையடிகளின் திருமுன் இதைப் படைக்கின்றேன் ''5 என்று குறித்[illegible]துள்ளார்.

சமர்ப்பணம்' என்று 1930இல் குறித்த பாவேந்தர் தனித் தமிழ் உணர்வு உந்தலுக்குப் பின் அந்த வடமொழிச் சொல்லை நீக்கி, 'திருமுன்படைத்தல்' என்ற நல்லதனித் தமிழ்ச் சொல்லை இங்கும் பாவேந்தர் ஆண்டிருப்பது, நோக்கத்தக்கது.

21.5.1949ல் 'திராவிடர் புரட்சித் திருமணத்திட்டம்' என்னும் நூலைப் பாவேந்தர் வெளியிட்டார். அந்நூலில்,

''இச்சிறு நூல் பரங்கிப் பேட்டை. தோழர் கோ. வேணு கோபாலன், தோழியர் மீனா திருமணநினைவாக இயற்றப்பட்டது''6 என்று குறித்துள்ளார்.

''சாதி புதைந்த மேட்டில், மாதுபுதைந்தாள் அழகன் மார்பில் ''7 எனும் பாவேந்தரின் கவிதைச் சிறுகதையில் முன்னர்க் கவிஞரால் குறிப்பிடப்பட்டுள்ள பரங்கிப் பேட்டை என்னும் ஊர் குறிக்கப்படுகிறது என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

1955-ஆகஸ்டில் பாரதிதாசன் கவிதைகள் 3ஆம் தொகுதி வெளிவந்தது. அந்நூலில் 'பிரிந்த க.பிச்சையனார் பெயர் வாழ்த்து வெளியீடு'8 என்று பாவேந்தர் எழுதியுள்ளார்.

## புதுவை வானொலியில் தந்தை பெரியார் பேட்டி

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி 'பெரியார்— விடுதலை போராட்ட வீரர்' என்ற அடிப்படையில் 1973ம் ஆண்டில் அவர் மறைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு புதுவை வானொலி நிலைய இயக்குநர் அவர்களால் எடுக்கப்பட்ட பேட்டி வரும் 10.5.79 இரவு எட்டு மணிக்கு பாண்டிச்சேரி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகும்.

க. பிச்சையன் என்பவர் பாவேந்தரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த இளைஞர். தமிழறிஞர் புலியூர்க் கேசிகனாரின் இளவல். பாவேந்தர் நூற்களை அழகியமுறையில் கட்டடம் செய்து கொடுப்பவர். பாவேந்தருக்குத் தமது நூற்களை அழகாக அச்சிடுவதிலும் அழகாகக் கட்டடம் செய்வதிலும் பேரார்வம் உண்டு. அதனால் பிச்சையனிடம் பாவேந்தர் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். பிச்சையன் இளமையிலேயே நோய்வாய்ப்பட்டு இறக்க நேர்ந்தது. பாவேந்தர் இரங்கினார். இளைஞர் எனப் பாராது தம் நூல் ஒன்றையும் பாவேந்தர் பிச்சையனுக்குக் காணிக்கையாக்கினார். பெரியவர், சிறியவர் என்று வேறுபாடு கருதாது அன்பு ஒன்றையே கருதி பாவேந்தர் அதற்குக் கட்டுப்பட்டும் விளங்கினார்.


1. பாரதிதாசன், சுயமரியாதைச் சுடர், முதற் பதிப்பு (1930 புதுச்சேரி) ஸமர்ப்பணம்

2. பாரதிதாசன், சஞ்சீவி பர்வதத்தின் சாரல் முதற் பதிப்பு (புதுச்சேரி, 1930) ஸமர்ப்பணம்

3. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், முதற்பதிப்பு (கடலூர், 1938) சமர்ப்பணம்

4. பாரதிதாசன், இரணியன் அல்லது இணையற்றவீரன், இரண்டாம் பதிப்பு (ஈரோடு' 1943) உரிமையுரை.

5. பாரதிதாசன், குடும்ப விளக்கு (விருந்தோம்பல் ஏழாம்பதிப்பு சென்னை-1956) திருமுன் படைத்தல்.

6. பாரதிதாசன் திராவிடர் புரட்சித் திருமணத் திட்டம், முதற் பதிப்பு (புதுச்சேரி 21.5.1949)

7. பாரதிதாசன், பன்மணித்திரள், முதற் பதிப்பு (சென்னை, 1964 பக். 28)

8. பாரதிதாசன், கவிதைகள் தொகுதி 3, முதற் பதிப்பு (புதுச்சேரி 1955)

9. பாடத்திட்டக் குழுவினர், பாடும் குயில்கள், (சென்னை 1971 நன்றியுன்ளம், பக். 97

# வங்கத்தின் துயரந்துடைக்க தங்கத்தமிழகத்தின் உதவி

நா. அமிர்தலிங்கம்,
துணை இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

''உடுக்கை இழந்தவன்
கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''

என்றார் திருவள்ளுவர். இந்த இலக்கணத்துக்கு நல்லதோர் இலக்கியமாய்த் திகழ்வது நமது தமிழக அரசு.

அண்மையில் இலங்கையில், இயற்கையின் சீற்றத்தால் மக்கள் இன்னலுற்றபோது தமிழகத்திலிருந்துஉடனடியாகமருந்து வகைகளும் மற்ற பொருள்களும் அனுப்பப்பட்டன. அதேபோல், வங்க மாநிலம் பொங்கு கடலாலும், புயல் சூறாவளியாலும் வெள்ளக்காடாகி வேதனையுற்றபோது வேண்டிய உதவிப் பொருள்களைத் தமிழகஅரசு அனுப்பி வைத்தது. அதைத் தொடர்ந்து வங்க நிவாரணப் பணிகளுக்காக, இந்தியப் பிரதமரின் தேசிய நிவாரண நிதி திரட்டுவதற்கென, புதுடில்லியில்நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில், தமிழகத்துக் கலைஞர்களும் கலந்து கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் விரும்பினார். அவரது விருப்பத்தினை நிறைவேற்றிட விரைந்து பணியாற்றியது தென்னிந்திய நடிகர் சங்கம்.

*1979*-ஏப்ரல் மாதம் 5ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரைநடைபெற்றக் கலை விழாவில், ஏப்ரல் 11ஆம் நாளன்று தமிழ் நாட்டின் சார்பில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

ஏப்ரல் 10ம் தேதி மாலையில் டெல்லிக்கு நமது கலைக்குழுவினர் வந்துவிட்டனர். திரைப்பட ,நட்சத்திரங்களான சிவாஜி கணேசன், மேஜர் சுந்தர ராஜன், கமலஹாசன், வி.கே. ராமசாமி, நாகேஷ், முத்துராமன், விஜயகுமார், தேங்காய் சீனிவாசன், சுருளிராஜன், வி.எஸ். இராகவன் மனோரமா, ஸ்ரீவித்யா, மஞ்சுளா பத்மினி ஆகியோர் தென்னிந்திய நடிகா சங்கத்தின் சார்பில் கலைக் குழுவில் அங்கம் வகித்தனர். இவர்களுடன் இசையமைப்பாளர் திரு எம்.எஸ்.விஸ்வநாதன் குழுவினரும், பின்னணி பாடகர்களான திருவாளர்கள் எஸ்.பி. பாலசுப்பிரமணியம், பி. சுசிலா, வாணி ஜெயராம், எல். ஆர்.ஈஸ்வரி, கோவை சௌந்தரராஜன் ஆகியோரும் நாட்டியக் கலைஞரான குமாரி சுவர்ணமுகியும் வருகை தந்திருந்தனர்.

பாலம் விமான நிலையத்தில், டெல்லி வாழ் தமிழ் மக்களும், தமிழ்ச் சங்கமும், மேற்கு வங்க நிவாரண நிதிக் குழுவினரும் பெருந்திரளாகவந்திருந்து கலைக் குழுவினருக்கு உற்சாகமான வரவேற்பளித்தனர்.

*11.4.79* மாலை, புதுடெல்லியில் உள்ள ரபீந்தர ரங்கசாலா என்னும் திறந்தவெளி கலையரங்கத்தில் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளம்! மத்திய அமைச்சர்களான திரு. பா. ராமச்சந்திரன், திரு ரபிரே, திரு. சமரேந்திரகுண்டு மற்றும் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு க. ராசாராம், இந்திய உயர்நீதிமன்ற நீதிபதி திரு வி. ஆர். கிருஷ்ணய்யர், திருமதி சௌந்தரா கைலாசம் ஆகியோர் முக்கிய விருந்தினர்களாகக் கலை நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தனர். புகழ்பெற்ற பின்னணிப் பாடகி திருமதி பி.சுசீலா 'நீராடுங்கடலுடுத்த' என்று தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைப் பாடினார்.

விழா ஆரம்பத்தில் குழுவின் செயலாளர் திரு. தினேஷ்ஜோர்டர் எம்.பி. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அப்பொழுது தமிழ் நாட்டின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்தக் கலைநிகழ்ச்சிக்கு மனமுவந்து எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்த தமிழ்நாடு முதல்வர் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களை, மேற்கு வங்க மக்களின் சார்பிலும்,அதன் முதல்வர் திரு. ஜோதிபாசுவின் சார்பிலும் பாராட்டி, அன்பு கலந்த நன்றியினையும் தெரிவித்துக் கொண்டார்.


விழாவிற்குத் தலைமைவகித்த மத்திய எரிபொருள் அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள், வங்க மக்களின் துயரத்தைத் துடைக்க எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைக்காக தமிழ் நாடு அரசையும், முதல்வர் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களையும் மனமாரப் பாராட்டுவதாகக் கூறினார்.

தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு. கா. ராசாராம் அவர்கள் பேசும்பொழுது, பிறர் துயர் துடைக்கும் பணி எங்கு தேவைப்பட்டாலும் அதனை மகிழ்ச்சியோடு செய்வதில் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் இயங்கும் அரசு முன்னணியில் நிற்கிறது-நிற்கும் என்று குறிப்பிட்டார். அதுபோல் இந்தியத் தலைமை நீதிமன்ற நீதிபதி திரு வி. ஆர். கிருஷ்ணய்யர் உரையாற்றுகையில், இந்தியாவில் எந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டாலும், தமிழக மக்களும், தமிழ்நாடு முதல்வர் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களும் கருணையும் மென்மை உள்ளமும் கொண்டு உதவுவார்கள் என்று சுட்டிக் காட்டினார். திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் பேசுகையில் தமிழர்களின் கலை உணர்வினையும், தமிழக அரசும், தென்னிந்திய நடிகர் சங்கமும் முன்வந்து செய்த உதவியினையும் பாராட்டிப் பேசினார். பண்யாத்ரன் கமிட்டியின் தலைவரான நீதிபதி திரு ஏ. சி. குப்தா அவர்களின் துணைவியார் பேசுகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் வருகைதந்திருந்த கலைக் குழுவினரின் கட்டுப்பாட்டையும், பண்பாட்டினையும் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

பின்னர் கலைநிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. முதலில் இசையமைப்பாளர் திரு விசுவநாதன் குழுவினரின் இன்னிசைக் கச்சேரி. இதில் பின்னணிப் பாடகர்களுடன் ஒருவராக திரு கமலஹாசனும், திருமதி ஸ்ரீ வித்யாவும், திரைப்படப் பாடல்களைப் பாடி மகிழ்வித்தனர். அதைத் தொடர்ந்து திரு சிவாஜிகணேசன் அவர்களின் 'சாம்ராட்அசோகன்' என்னும் ஓரங்க நாடகம் நடைபெற்றது. இந்நாடகத்தில் திரு. சிவாஜி கணேசன் அவர்களது சிறந்த நடிப்பு அனைவரையும் ஆட்கொண்டு விட்டது. பிறகு, நகைச் சுவையின் அடிப்படையிலும் வரவேற்கத் தகுந்த முறையிலும் கலைக் குழுவினர் சிறுசிறு குழுக்களாகத் தோன்றி பல ஓரங்க நாடகங்களை நடித்துக் காட்டினர். இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் காண்பவர்களுக்குக் கவர்ச்சிகரமாகவும், நவீனமாகவும் இருந்தது என்று கூறினால் மிகையாகாது. விழாவின் கடைசி நிகழ்ச்சியாக செல்வி. சுவர்ணமுகி அவர்களின் நாட்டியம் நடைபெற்றது. அதில் இடம் பெற்ற ''பாம்பு நடனம்'' பலத்த கைத்தட்டலையும், மிகுந்த வரவேற்பினையும் பெற்றது. இரவு 11 மணி அளவில் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் முடிவுபெற்றன.



# சிறந்த தமிழ்த் திரைப்படங்களுக்கும் திரைப்படக் கலைஞர்களுக்கும் விருது



சிறந்த திரைப்படங்களையும் சிறந்த கலைஞர்களையும் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கி கௌரவிக்கும் திட்டம் 1978-ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதன்படி, 1.4.77 முதல் 31.3.78 வரை தணிக்கை செய்யப்பட்ட சிறந்த திரைப்படங்களையும், சிறந்த கலைஞர்களையும் தேர்ந்தெடுக்கும் பொருட்டு முன்னாள் மதுரை பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. சிட்டிபாபு அவர்கள் தலைமையில் தேர்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தேர்வுக்காக, 25 முழு நீளத் திரைப்படங்கள், 6 செய்தி விளக்கப்படங்கள், ஒரு குழந்தைகள் படம் சார்பாக விண்ணப்பங்கள், வரப்பெற்றன. இவ் விண்ணப்பங்களில் தேர்வு விதிகளுக்கு உட்பட்ட 19 முழு நீளத் திரைப்படங்களையும, 4 செய்தி விளக்கப் படங்களையும் ஒரு குழந்தைப்படத்தையும் மட்டுமே இத்தேர்வுக்குழு பார்வையிட்டு கீழ்க்கண்ட பரிந்துரைகளை அரசின் முடிவுக்கு அனுப்பியது. அவற்றை அரசு ஏற்றுக்கொண்டு கீழ்க்கண்ட பரிசுகளை வழங்க முடிவு செய்துள்ளது.

*முழு நீளத் திரைப்படங்கள் :*

அ) முதல் பரிசு -
சிறந்த படம் : ''பதினாறு வயதினிலே''

ஆ) இரண்டாவது பரிசு -
சிறந்த படம் : ''மதுரகீதம்''

இ) மூன்றாவது பரிசு -
சிறந்த படம் : ''பலப்பரீட்சை''

ஈ) சிறப்புப் பரிசு : ''மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்''

சிறந்த நடிகர் -
கமலஹாசன் : (பதினாறு வயதினிலே)

சிறந்த நடிகை -
செல்வி லதா : (மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்)

சிறப்புப் பரிசு நடிகர் -
முத்துராமன் : (பலப்பரீட்சை)

சிறப்புப் பரிசு நடிகை -
ஸ்ரீவித்யா : (மதுரகீதம்)

சிறந்த இயக்குநர் -
பாரதி ராஜா : (பதினாறு வயதினிலே)

சிறந்த கதாசிரியர் -
குகநாதன் : (மதுரகீதம்)

சிறந்த உரையாடல்
ஆசிரியர் - தூயவன் : (பலப்பரீட்சை)

சிறந்த இசையமைப்பாளர்-
இளைய ராஜா : (பதினாறு வயதினிலே)

சிறந்த பின்னணிப்பாடகர்-
ஜேசுதாஸ் : (மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் மற்றும் அந்தமான் காதலி)

சிறந்த பின்னணிப்பாடகி-
ஜானகி : (பதினாறு வயதினிலே)

சிறந்த பாடலாசிரியர் -
புலமைப்பித்தன் : (மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்

சிறந்த செய்தி விளக்கப்
படம்-ஏன் இந்த விஷம் : (மதுவிலக்குப் பற்றிய கருத்து விளக்கப் படம்)

சிறந்த ஒளிப்பதிவாளர் -
வண்ணப்படம் -
திரு பாபு : (காற்றினிலே வரும் கீதம்)

சிறந்த ஒளிப்பதிவாளர் -
கறுப்பு-வெள்ளைப் படங்கள்-
ஏ. சோமசுந்தரம் : (மதுரகீதம்)

*சிறந்த குழந்தைகள் படம் :*


குழந்தைப்பட கதாசிரியர்-
திரு பூவண்ணன் : (அன்பின் அலைகள்)

குழந்தை நட்சத்திரம் -
செல்வி இந்திரா : (அன்பின் அலைகள்)

*இராஜா சான்டோ நினைவுப் பரிசு :*

திரு எம். ஏ. வேணு.

# ‘ஊதாமுகிநீ’



மதுரை மாவட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி. சி. சிரியாக், ஐ. ஏ. எஸ்; அவர்கள் ஒரு நூதன திட்டத்தை வகுத்துள்ளார். அதன் பெயர் ''ஊதாமுகிநீ'' ஆகும்.

'ஊதாமுகிநீ' என்றால் என்ன?

**'ஊ'** என்பது ஊரகத்தொழில் வளர்ச்சித் திட்டம்.

**'தா'** என்பது தாழ்த்தப்பட்டோருக்கான வீடுகட்டும் திட்டம்.

**'மு'** என்பது முசுக்கட்டைச் செடி வளர்ப்புத் திட்டம்.

**'கி'** என்பது கிராம முன்னோடித் திட்டம்.

**'நீ'** என்பது நீர்ப்பாசனத் திட்டம்.

இந்த ஐவகைத் திட்டத்தின் பெயரே 'ஊதாமுகிநீ'

## ஊரக தொழில் வளர்ச்சித் திட்டம் :

ஊரகப் பகுதிகளில் தச்சு, கொல்லு, மண்பாண்டம் வனைதல், நாரிலிருந்து கயிறு திரித்தல், நாட்டுச்செக்கு, மின்விசைச் செக்கு, சோப்பு உற்பத்தி, தீப்பெட்டித் தயாரித்தல் போன்ற தொழில்கள் ஆரம்பிப்பதற்கு அரசு 25 சதம் மான்யமும், 75 சதம் கடனும் அளிக்கிறது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் ஊரகப் பகுதிகளில் தொழில் நுணுக்கக் கல்வி கற்றவர்களுக்குச் சிறிய தொழிற்கூடங்கள் ஆரம்பிக்க உதவி செய்கிறது.

பின்வரும் தொழில்கள் துவங்க அரசின் உதவி அளிக்கப்படுகிறது. 1. தையல், 2. ரொட்டி உற்பத்தி, 3. சைக்கிள் ரிப்பேர், 4. மருந்துக்கடை 5. சிகை அலங்காரம், 6. மருத்துவ நிலையம் 7. வெற்றிலைப்பாக்கு வியாபாரம் 8. தேநீர் நிலையம். 9. மோட்டார் பழுது பார்த்தல்.

எல்லாத்தரப்பட்ட தொழில்களுக்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொழில் நடத்த முற்படுவோருக்கு இயந்திரம் வழங்குதல், மூலப்பொருள் வழங்குதல் ஆகியவற்றிற்கு எளிய வட்டி விகிதத்தில் மூலதனக் கடனும் தொழில் நுணுக்க ஆலோசனையும் வழங்குகிறது.

இந்த ஊரகத் தொழில் வளர்ச்சித் திட்டத்திற்கு மதுரை மாவட்டத்திலுள்ள அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் கடனுதவி வழங்குகின்றன.

## வீடுகட்டும் திட்டம்

நடப்பு ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதாவது 1978 79 முதல் 1982-83 முடிய உள்ள காலத்தில் ஒரு இலட்சம் வீடுகள் கிராமப்புறங்களில் கட்ட அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதற்கான நிதி உதவி வகை கிராம வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும்.

வீடுகள் மூன்று வகை அமைப்புகளாகப் பிரிக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. வீட்டின் மதிப்பீட்டில் 20 சதம் அரசு மான்யமாக வழங்கும் மீதம் கடனாக வழங்கப்படும். அரிசன வகுப்பைச் சேர்ந்தோர்க்கு வழங்கப்படும் கடனுக்கு வட்டி கிடையாது. இவ்வாண்டு இறுதிக்குள் இத்திட்டத்தின் கீழ் 3000 வீடுகள் கட்டி முடிக்கப்பட உள்ளன.

## முசுக்கட்டைச் செடி வளர்ப்புத் திட்டம் :

முசுக்கட்டைச் செடியில் பட்டுப்புழு வளர்ப்பு மிக இலாபகரமான தொழில் ஆகும். பயிரிடத் தொடங்கி மூன்றாவது மாதத்தில் பலன் தரக்கூடிய தொழில் இது ஒன்றே. ஒருமுறை நடப்பட்ட செடி தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்குப் பலன் தருகிறது. இப்புழு வளர்ப்பு, வீட்டிலேயே பெண்களும் செய்யக்கூடிய ஒரு தொழில். ஒரு ஆண்டில் 8 முதல் 10 மகசூல்கள் தருகிறது.

இந்த வளர்ப்புத் திட்டத்திற்குத் தமிழக அரசு ஏக்கருக்கு ரூ. 200 மான்யம் வழங்குகிறது. பட்டு வளர்ப்பு உபகரணம் வாங்க ரூ. 300 மான்யம் தருகிறது. பட்டுப்புழு வளர்ச்சி பயிற்சி விவசாயிகளுக்குத் தரப்படுகிறது. பயிற்சி பெறும் விவசாயிகளுக்கு மாதம் ரூ. 75 உதவித்தொகையாக மூன்று மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. பட்டு நூற்பகம் அமைப்பதற்கு இயந்திரங்கள் வாங்க ரூ. 1,100 மாயன்மாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் மதுரை மாவட்டத்தில் சிறப்புற இயங்கி வருகிறது.

## கிராம முன்னோடித் திட்டம் :

திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சிஒன்றியத்திலும்இரண்டு கிராமங்கள் முன்னோடி கிராமங்களாகத் தேர்வு செய்யப்பட்டு அக்கிராமங்களில் கீழ்க்கண்ட எல்லாத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

*சிறு விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் உரம், பூச்சி மருந்துகள் மற்றும் விவசாயக் கருவிகள் ஆகியவற்றைக் குறித்த காலத்தில் நியாய விலையில் வழங்குவது; பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்துதல்.

*உயர்விளைச்சல் அடைய விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

*பொதுக் கழிவிடம் அமைத்தல், தெருக்களில் வடிகால் வசதிகள் ஏற்படுத்துதல்.

*பழத்தோட்டம், தென்னங் கன்றுகள் நடுதல்.

*கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசி போடுதல், உயர்ரகக் கால்நடைகள் வளர்ப்புப் பயிற்சி அளித்தல்.

*மீன்பண்ணை ஏற்படுத்துதல்,

*வீட்டுக் காய்கறித் தோட்டம் அமைத்தல்

*குழந்தைகள் காப்பகம் அமைத்தல், தடுப்பு ஊசி போடுதல், பாலர் பள்ளி நடத்துதல்,

*பள்ளி வயதுக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்தல்.

*சத்துணவுத் திட்டம் அமல்படுத்துதல்

*மகளிர் மன்றங்கள் அமைத்தல்

*ஆடு வளர்ப்பு, பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைத்தல்.

இந்தக் கிராம முன்னோடித் திட்டத்தின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட கிராமங்கள் எல்லா வசதிகளும் பெற்று கிராம மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெற வேண்டும் என்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

படிப்படியாக ஒரு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எல்லாக்கிராமங்களையும், இத்திட்டத்தின் கீழ் கொணர்ந்து எல்லாக் கிராமங்களுக்கும் இப்பயன் கிட்டுமாறு செய்வதே இத் திட்டத்தின் இலக்காகும்.

## நீர்ப்பாசனத் திட்டம்

வளர்ச்சிப் பணிகளுக்கு அச்சாக விளங்குவது நீர்ப்பாசனமே. ஒழுங்கான சீரமைக்கப்பட்ட நீர்ப்பாசன வசதியால்தான் உணவுப் பொருள்களின் உற்பத்தியில் தன்னிறைவு காண இயலும்.

மதுரை மாவட்டத்தில் பெரியாறு, வைகைஅணை மற்றும் ஆளியாறு திட்டம் போன்ற பல இலட்சம்ஏக்கர் பயன்தரும் பாசனத் திட்டங்களைப்போன்ற சிறிய பாசனத் திட்டங்களிலும் தமிழக அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது. கண்மாய்களில் உள்ள நீர் முழு அளவும் பயன்படுத்தும் முறையில் இக் கண்மாய்களுக்கு 'ரிவட்மெண்ட்' கட்டுதல், மடைகள் அமைத்தல், புதிய கால்வாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாகப் புதியகிணறு வெட்டவும், கிணறுகளை ஆழப்படுத்தவும், பம்புசெட்டு அமைக்கவும் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

ஆகவே, இந்த ஐவகைத் திட்டங்களின் மூலம் மதுரை மாவட்டம் வளம் பெற்றுத் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

**— அ இராஜமாணிக்கம்**

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளர்.

(செய்தி—மக்கள்தொடர்பு)






## அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு

# தமிழ்நாடு குழு அமைப்பு

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டினையொட்டி, தமிழகத்தில் மகளிர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவ வசதி, கைத்தொழில் பயிற்சி ஆகியவற்றில் தனிக் கவனம் செலுத்துவதாக, 'அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு தமிழ்நாடு குழு' எனப்படும் இக்குழுவின் பணிகள் அமையும்.

இந்தக் குழுவினை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி. பி. டி. சரசுவதி அவர்கள் துவக்கி வைத்தார்.

திருமதி சரோஜினி வரதப்பன், திருமதி ராஜம் கிருஷ்ணன் இருவரும் இக்குழுவின் தலைவர்களாவர். திருமதி கல்யாணி குமாரமங்கலம், திருமதி ஜானகி [illegible]ணன், திருமதி பிரமீளா ஜெகன் ஆகியோர் செயலாளர்களாவர். திருமதி ராஜலட்சுமி வானமாமலை இக்குழுவின் பொருளாளர் ஆவார்.

**அங்கம் வகிப்போர் :**

குழந்தைகள் நலனில் அக்கறை கொண்ட பல்வேறு அமைப்புகளின் சார்பில், கீழ்க் கண்டோர் இக்குழுவின் உறுப்பினர்களாகப் பங்கேற்றுள்ளனர்.

அனைந்திந்திய மகளிர் சங்கம், ஒய். டபிள்யூ. சி. ஏ., தேசிய மகளிர் அமைப்பு, சைதாப்பேட்டை மாதர் சங்கம், தாம்பரம் மாதர் சங்கம், கஸ்தூரிபா மகளிர் மன்றம், கமலா நேரு மகளிர் அணி, வட செங்கற்பட்டு சமூகசேவை நிலையம், சென்னை மகளிர் அணி, மகாலட்சுமி மழலைக் குழந்தைகள் காப்பகம், தமிழகப் பட்டதாரி ஆசிரியைகள் சங்கங்கள், வங்கியில் பணியாற்றும் மகளிர் சங்கம், அஞ்சல், தந்தி அலுவலக மகளிர் சங்கம், பொன்மணி வைரமுத்து, திருமதி மந்தா கிருஷ்ணமூர்த்தி, ராஜம் ராமசாமி ஆகியோர் இந்தக் குழுவின் முக்கிய உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர்.

நம்நாட்டுக் குழந்தைகளின் நலம் காக்கும் உயரிய நோக்கத்தோடு உருவாக்கப்பட்டுள்ளது இக்குழு. இதன் நன்னோக்க நடவடிக்கைகளின் துவக்க விழாக் கூட்டம் சென்னை-அண்ணா சாலையில் உள்ள அவ்வை தி. க. சண்முகம் அரங்கில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

ரஷியத் தூதரகத்தின் சார்பில் ஜெனரல் ஒல்கா டிஸியூர் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார். இந்தக் குழுவின் [illegible] அமைப்பை அவர் [illegible] வேற்பதாகத் தமது [illegible] குறிப்பிட்டார்.

## இறைவனைக் காண்போம்

கடினமான நிலத்தில் ஏர்கட்டி உழுவோரிடமும் சாலை அமைக்கச் சரளைக்கல் உடைப்போரிடமும் அவன் இருக்கின்றான். அவர்களுடன் அவன் மழையில் நனைகின்றான். வெயிலில் உலர்கின்றான். அவனைப் போல் நீங்களும் புழுதியில் இறங்கி வாருங்கள். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உங்கள் இறைவனைக் கண்டுகொள்ளுங்கள்!

—தாகூர்.



குழுத் தலைவியான திருமதி சரோஜினி வரதப்பன் பேசுகையில், இந்த ஆண்டில் குழந்தைகளுக்கான பல்வேறு நிகழ்ச்சிகளையும், போட்டிகளையும் நடத்த இக்குழு திட்டங்களை வைத்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

**சமூக நலத்துறை அமைச்சர் உரை**

'அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு தமிழ்நாடு குழு' வைத் துவக்கி வைத்து, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் பி. டி. சரஸ்வதி அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :

குழந்தைகள் நலனில் இந்த அரசு காட்டிவரும் அக்கறை மகத்தானதாகும்.

பாலர் பள்ளித் திட்டம் ஒவ்வோர் ஆண்டும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. எல்லா பஞ்சாயத்துக்களிலும் பாலர் பள்ளிகள், அமையத்தக்க வகையில், இந்த அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு முதலான ஐந்தாண்டுகளில், இந்த அரசின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அமையும்.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழும் இவ்வாறான பாலர் பள்ளிகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்ற எல்லா மாணவ மாணவியரும், பயிற்சி நிலையத்திற்குச் சென்று திரும்ப இலவச பஸ் பயண வசதி செய்து தர அரசு திட்டமிட்டிருக்கிறது.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டினையொட்டி, தமிழ் நாட்டிலுள்ள ஆறு மாவட்டத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டமொன்றை விரைவில் மாநில அரசு மேற்கொள்ளவிருக்கின்றது. இத்திட்டத்திற்காக உலக வங்கியின் உதவி கோரப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், சமூக நலத்துறையின் மூலம் சென்னை மாநகரில் ஆயிரம் குழந்தைகளுக்கான அனாதை இல்லம் ஒன்று தொடங்கப்படவிருக்கின்றது.

பரிசுச் சீட்டு மூலம் கிடைக்கின்ற ஒரு மாத வருமானத்தின் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு முடிவு செய்திருக்கின்றது.

இந்த உயரிய நோக்கத்தின் உருவாக்கப் பணிக்காக-ரேஸ் கிளப், திரைப்பட அரங்குகள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் ஒருநாள் வருமானத்தை ஒதுக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு செய்து அறிவித்திருக்கிறார்கள்.

உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு, முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலே உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

முதலமைச்சர் நிவாரண நிதியானது-இது, அனைத்து நாட்டுக் குழந்தைகளாண்டு என்ற காரணத்தினாலே - முதலமைச்சர் குழந்தைகள் நலநிதி என்று அழைக்கப்படும்.

குழந்தைகள் நல வாரியம் கண்ட பெருமையும் இந்த அரசுக்கே சேரும்.

இதுபோன்ற நல்ல பணிகளை நிறைவேற்றுவதில் அரசு மட்டுமே அக்கறை காட்ட வேண்டும் என்றில்லாமல், வசதி படைத்தவர்களெல்லாம் தாமாக முன் வந்து, குழந்தைகள் நலத்திற்கென உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த 'அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டின் தமிழ் நாடு குழுவின்' செயல்முறை நடவடிக்கைகள் சிறப்புற அமைய வாழ்த்துகிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதிஅவர்கள் பேசினார்.

மகாலட்சுமி மழலைக் குழந்தைகள் பள்ளி மாணவிகளின் வாழ்த்திசையோடு தொடங்கிய இவ்விழா, திருமதி ஜானகி கிருஷ்ணன் நன்றியுரையோடு முடிவுற்றது.

—பி. எல். ஆர்.

**வணங்கத் தக்கவன்**

**உழைத்து வாழ்பவனே வணங்கத்தக்கவன்! வாழ்த்துக்குரியவன்! அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்!**

**—பேரறிஞர் அண்ணா.**





# முட்டை இறைச்சி

மனிதனது உணவில் மிக முக்கியப் பங்கை ஏற்படுத்தி வரும் முட்டையை 24 வாரங்களிலும், புலாலை 10 முதல் 12 வாரங்களிலும் கோழியின் மூலம் பெறலாம். நம்முடைய உணவிற்காகவும், வருவாய்ப் பெருக்கத்திற்காகவும், பயன்படும் கோழியின் முக்கியத்துவம் இதுகாறும் சரியான முறையில் எடுத்துச் சொல்லப்பட்டதில்லை. மக்கள் தொகை மிக வேகமாகப் பெருகி வரும் இந்நாளில் முட்டை மற்றும் புலால் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் வறுமையையும் உணவுப் பற்றாக் குறையையும் எதிர்த்துப்போராட முடியும். கோழிகளின் வாழ்க்கைக் காலம் குறுகியதாகையால் பெரிய கால் நடைகளைக் காட்டிலும் அவை விரைவில் பயன் தரத்தக்கவை. இவை எந்த தட்ப வெப்ப நிலையிலும், உயரமான இடங்களிலும் கூட நன்கு வளர்ந்து பயன் அளிக்கக்கூடியவை. கோழிப்பண்ணை ஆரம்பிப்பதற்கு வேண்டிய நிலமும், மூலதனமும் குறைவே.

நன்றாகப் பராமரிக்கப்பட்டால், கோழிகள் மனிதனுக்கு வேண்டிய மிகுந்த சக்திவாய்ந்த புரதத்தை தீனியிலிருந்து உண்டாக்கிக் கொடுக்கின்றன. இதற்கு இறைச்சிக் கோழியினங்கள் சாலச் சிறந்தவை. மனிதனால் நேரடியாக உபயோகிக்க முடியாத அரிசித்தவிடு, கோதுமைத் தவிடு, கீரைப்பொடி, கசாப்புக்கடைக் கழிவுகள், பட்டுப் பூச்சியின் புழூப்பா, மீன்தூள், வயல்பாசி முதலியவற்றை மிக லாபகரமாகக் கோழிகளுக்கு உணவாகப் பயன்படுத்த முடிகிறது. கோழி முட்டையையும் புலாலையும் போன்று சத்து நிறைந்த கால் நடைப் புரதத்தை வேறு எந்த வகையிலும் இவ்வளவு விரைவாகப் பெறுதல் இயலாத காரியம். மக்களுக்கு நேரடியாகப் பயன்படாத, சுவையற்ற தீனிகளை கால்நடைகள் உண்டு மனிதனுக்கு வேண்டிய சத்துநிறைந்த புரதத்தையும் மற்றவற்றையும் அளிக்கின்றன.

கோழி முட்டையும் புலாலும் தனித்தன்மை வாய்ந்தவை. முட்டைகளில் நிறைய ஜீரணிக்கத் தக்க புரதச்சத்து இருப்பதோடு அல்லாமல் மனிதனின் ஆரோக்கியத்திற்குத் தேவையான கொழுப்புச்சத்து சரியான விகிதத்தில் இருக்கிறது. எடைக்கு எடை என்ற அளவில் ஒப்பு நோக்கினால் ஒரு முட்டையில் உள்ள புரதம், பன்றி இறைச்சிலும் கோழி இறைச்சியிலும் உள்ளதற்குச் சமமாகவும், பாலையும் பால் ஆடையையும் நோக்குமிடத்து மூன்றில் இரண்டு பங்கிற்குச் சமமாகவும் உள்ளது. தினமும் நம்முடைய உணவில் இரண்டு முட்டைகளைச் சேர்த்துக் கொண்டால் நமக்கு வேண்டிய பெரும் பங்கு புரதத்தை, அடையலாம். மேலும் முட்டைகள், முக்கியமான சில தின்பண்டங்களுக்குச் சுவையேற்றுவதோடு, அதன் ஓடுகள் உணவுக் கலப்பு, சூரியவெய்யில் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கிறது. முட்டைகள் முக்கியமாக உணவிற்கும், குஞ்சுபொறித்தல், உலரவைத்து சேமித்தல், உறையவைத்தல் போன்றவற்றைத் தவிர மருந்து, தோல், சாயம், போட்டோ தொழில், அச்சடித்தல், மற்றும் வாசனைத் திரவியங்கள் தயாரித்தல்போன்ற தொழில்களுக்கும் பயன்படுகிறது. பொதுவாகச் சொல்லப் போனால் சமையலில் முட்டையின் பங்கு கட்டிடக் கலையில் சிமெண்ட்டில் பங்கை ஒத்தது எனலாம். முட்டை நம் உணவுப் பழக்க வழக்கங்களில் பெரும் பங்கு வகிக்கிறது என்பதைக்கீழ்க் கண்ட காரணங்கள் விளக்கும்.

உணவுச் சத்து நிறைந்தது.

பல வழிகளில் சமைத்து உண்பது.

ருசி மற்றும் மணம் எளிதில் கிடைப்பது.

கலப்படம் செய்ய இயலாதது.

முட்டையின் உட்பகுதி எளிதில் அசுத்தம் செய்ய முடியாதது.

உடல் திசுக்களுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் நல்ல முறையில் இருப்பதும் கிடைப்பதும்.

கோழிப் பண்ணையில் வளர்ச்சியை ஆதரிப்பதற்கு வேண்டி தற்சமயம் விஞ்ஞானிகள் முட்டை மற்றும் புலாலை சுகாதார முறைப்படி சேமிப்பதற்கு வேண்டிய ஆராய்ச்சியில் வெற்றி கண்டுள்ளனர். இதன்படி முட்டைகளை சாதாரண சூழ்நிலையில் 4 வாரங்களுக்கும் 55 டிகிரி பாரன் ஹீட் வெப்பத்தில் 12 வாரங்களுக்கும், 100 டிகிரி பாரன் ஹீட் வெப்பத்தில் 10 நாட்களுக்கும் கெடாமல் பாதுகாக்க முடியும்.

வெற்றிகரமாக முட்டைப் பவுடர் தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது. முட்டையின் உற்

பத்தி அதிகமாகி விற்பனை குறைந்து தேக்கம் காணும்போது இந்தப் பவுடர் பயனை அளிக்கும். அழுக்கு முட்டையிலுள்ள நுண் கிருமிகளையும், அழுக்கையும் அகற்றி அதன் சேமிப்பு நாட்களை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய மருந்துக் கலவையும் நம் நாட்டில் கண்டறியப்பட்டிருக்கிறது. கோழியின் இறைச்சியை குளிர்சாதனப்பெட்டியின் மூலம் சேமித்தல், புட்டிகளில் அடைத்தல் போன்றவற்றிற்கும் சரியான முறைகள் கண்டறியப்பட்டிருக்கின்றன.



கோழியின் புலாலில் மற்ற புலால் வகைகளைக் காட்டிலும் ''லின் ஒலிக் ஆசிட்'' எனப்படும் கொழுப்புச் சத்தில் ஒரு பகுதி அதிகமாக இருப்பதால் உடல் நலத்திற்கு ஏற்றது. கோழியின் தசை நார்களில் போதுமான அளவு கொழுப்பு இருந்தபோதிலும் மற்ற புலால் வகையைக் காட்டிலும் எரியும் சக்தி (Calorific Value) குறைவு.

நமது நாட்டில் சராசரியாக நாம் உட்கொள்ளும் பிராணிப் புரதம் 6.4 கிராம். இது உலகத்திலேயே மிகவும் குறைவானதாகும் என்று உலக உணவு வேளாண்மை நிறுவனம் (FAO) என்ற உலக இயக்கம் குறிப்பிடுகிறது. எனவே இறைச்சிக் கோழிகளை விஞ்ஞான முறைப்படி இயந்திரங்களின் உதவி கொண்டுசுத்தம் செய்துசேமித்து வழங்கும் தொழில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இறைச்சிக் கோழிகளைத் தவிர, உபயோகமற்ற கோழிகளையும், வயதான கோழிகளையும் பதனிட்டு டப்பாக்களில் அடைத்து வெளி நாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் பொருளாதாரம் பெருகுவதோடு அன்னியச் செலாவணியும் கிடைக்கிறது. கோழிகள் 18 மாதங்களுக்குப் பிறகு முட்டையிடும் திறனை இழந்து விடுவதால், இம்முறையின் மூலம் விற்பனை செய்து பொருளாதார இழப்பைச் சரிக்கட்டலாம். மேலும், தேவைக்கு அதிகமான சேவற் குஞ்சுகள் பல ஹீனமான கோழிகள், முட்டையிடும் திறனை இழந்த கோழிகள் ஆகியவற்றிலிருந்து ''சாலேஜ்'' என்ற உணவு வகையையும் செய்யலாம்.

''கோழி எசன்ஸ்'' என்ற மற்றுமொரு பொருள் நமது நாட்டில் பிரசித்தி பெற்று வருகிறது. இது நல்ல ஆரோக்கியமுள்ள வேகவைத்த கோழிக் குஞ்சுகளின் புலாலில் கொதி நீரைச் சேர்த்து, காற்றில்லா குப்பிகளின் உதவி கொண்டு தயாரிக்கப்படுகிறது. இது மீண்டும் தூய்மை செய்யப்பட்டு கொழுப்பு நீக்கப்படுகிறது. தேவையான அளவு இனிப்பு, கெடாமல் இருப்பதற்காக வேண்டிய பொருள் ஆகியவை சேர்க்கப்பட்டு 10 மில்லி லிட்டர் அளவுள்ள குப்பிகளில் அடைக்கப்படுகிறது. இதில் 7 முதல் 8 சதம் வரை புரதச் சத்தும் 0.2 முதல் 0.3 சதம் வரை குளோரைடும் இருக்கிறது.

சரியான விஞ்ஞானப் பதனீடு வசதியின்மையால் நமது நாட்டிலும் வேறு பலஆசிய ஆப்பிரிக்க நாடுகளிலும் கோழி இறைச்சியின் உபயோகம் முழு அளவு மனிதனை எட்டவில்லை. அமெரிக்கா, டென்மார்க், இங்கிலாந்து போன்ற நாடுகளில் ஒரு மனிதன் ஓர் ஆண்டிற்கு 400 முட்டைகளுக்கு மேலும், நெதர்லாந்து நாட்டில் 420 முட்டைகளுக்கு மேலும், உருசிய நாட்டில் 360 முட்டைகளுக்குமேலும் உண்கிறார்கள். ஆனால் உலகத்தின் கால்நடைகளில் நான்கில் ஒரு பங்கைப் பெற்றுள்ள நம் நாட்டில் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு உண்ணும் முட்டையின் அளவு 7 ஆகும். இத்தகைய பற்றாக்குறையும், அறியாமையும் நீக்கி ஒரு நாளைக்கு ஒரு முட்டை என்று ஏற்படுமாயின் எத்தனையோ பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

விஞ்ஞான பதனீடு, சேமிப்பு வசதி நல்ல முறைப்படியான விற்பனை வசதி ஆகியவை அதிகரிக்குமானால் கோழியின் முட்டையும், இறைச்சியும் அனைவரையும் எட்டுவதோடு குறிப்பாக வளரும் 'குழந்தைகளின் புரதப் பசி' நீக்கப்படுவதுடன், சக்தி வாய்ந்த புரதச்சத்து மிகுந்த முட்டையை உட்கொள்ளுவதால், நல்ல உடல் நலம்பெறலாம் என்பதை மக்கள் அனைவரும் உணருவார்கள் என்பதில் ஐயமில்லை.

**டாக்டர் இரா. சுப்ரமணியன்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்**



# தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர்

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள் ஏப்ரல் 11-ஆம் நாள் சென்னை வந்தார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களும், மற்றும் தமிழக அமைச்சர்களும் குடியரசுத் தலைவர் அவர்களை வரவேற்றனர்.

அன்று மாலையே மாமல்லபுரம் வந்தார் குடியரசுத் தலைவர். மாமல்லபுரத்தில் தங்கி ஓய்வு எடுத்த அவர், பல்லவர் காலச் சிற்பங்களைக் கண்டு களித்தார்.

ஐந்து ரதம், அர்ச்சுனன் தபசு, கடற்கரைக் கோயில் மற்றும் சிற்பப் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றை அவர் சுற்றிப் பார்த்தார். பள்ளியின் சார்பில் 9 அங்குல உயரத்தில் கல்லினால் உருவாக்கப்பட்ட கௌரி சிலை பரிசாக வழங்கப்பட்டது. தமிழக அரசு சார்பில் நடந்த பத்மா சுப்பிரமணியத்தின் நாட்டிய நிகழ்ச்சியைக் குடியரசு தலைவர் பார்த்தார்.

மாமல்லபுரச் சிற்பங்களைக் கண்டுகளித்த குடியரசுத் தலைவர் அவர்கள் ''சிற்பங்கள் அற்புதமாக இருக்கின்றன'' என்று பாராட்டினார்.

ஏப்ரல் 13-ஆம் நாள், சென்னை மூர்மார்க்கெட் எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் சென்னை-கும்மிடிப் பூண்டி மின்சார ரயில் போக்குவரத்துத் தொடக்கவிழா நடந்தது.

சென்னை - விஜயவாடாவுக்கு இடையே மின்சார ரயில்விட மத்திய அரசு திட்டமிட்டது. இதில் முதல் கட்டமாகச் சென்னையிலிருந்து கும்மிடிப் பூண்டிக்கு மின்சார ரயில் அன்று முதல் விடப்பட்டது. இந்தத் திட்டத்தின் மதிப்பு ரூ. 10 கோடியாகும். சென்னைக்கும், கும்மிடிபூண்டிக்கும் இடையே உள்ள தூரம் 48 கிலோ மீட்டர். பச்சை வண்ணத்தில் பார்க்க அழகாக இருந்தது இந்த ரயில்.

இவ்விழாவில் மத்திய எரிபொருள் அமைச்சர் திரு பா. இராமச்சந்திரன், மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு மதுதந்தவதே தமிழக ஆளுநர் மேதகு பிரபுதாஸ் பட்வாரி, தமிழக முதல்வர் மாண்புமிகு திரு எம். ஜி. ஆர். ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

ரயில்வேக்கு நிலம் வழங்கிய தமிழக அரசையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும் குடியரசுத் தலைவரும், அமைச்சர்களும் பெரிதும் பாராட்டி உரையாற்றினார்கள்.

சென்னையிலுள்ள எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடைபெற்ற இவ் விழாவிற்கு வருகை தந்தோரை ரயில்வே வாரியத் தலைவர் கே. எஸ். ராஜன் வரவேற்றார். விழாவின் முடிவில் எம். ஆர். என். மூர்த்தி நன்றி கூறினார்.

**குடியரசுத் தலைவர் உரை :**

குடியரசுத் தலைவர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

நமதுநாடு சுதந்திரம் பெற்று பல்லாண்டுகள் ஆன பின்னர், பலதுறைகளில் நாம் முன்னேற்றம் கண்டுள்ளோம்.

முன்பெல்லாம் உணவுப் பொருட்களைக்கூட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தோம். இன்று அந்த நிலை மாறியிருக்கிறது.

வறுமையை ஒழிப்பதில் அனைவரும் ஒன்றுபட்டு எதிர்த்ததாக வேண்டும். பணக்காரர்கள் ஏழைகளுக்கு இடையேயுள்ள பெரிய இடைவெளியைக் குறைத்தாக வேண்டும்.

நமது நாட்டைச் சுற்றிலும் உள்ள சில நாடுகளின் நிகழ்ச்சியைப் பார்க்கும்போது இந்தியாவில் ஒரு நல்ல அமைதிச் சூழ்நிலை இருக்கிறது. இதற்குக் காரணம் இந்தியாவில் நல்ல ஜனநாயக அமைப்பு இருப்பதாகும்.

எல்லா மாநிலங்களுக்கும் நான் சென்றுள்ளேன். மத்தியில் உள்ள ஜனதா அரசோடு எல்லா கட்சியினரும் நன்கு ஒத்துழைந்து செயல்பட்டு வருகின்றனர்.

குறைந்த விலையில் பொருட்கள் மூர்மார்க்கெட்டில் கிடைக்கின்றன. இந்த இடத்தால் பெரும் பயன் கிடைக்கிறது.



சென்னை நகருக்கு வருவோர் மூர்மார்க்கெட்டைப் பார்க்காமல் செல்ல முடியாது.

எனது பள்ளி, கல்லூரி வாழ்க்கையில் பல புத்தகங்களை இங்கே வந்து வாங்கியிருக்கிறேன். அது தற்போது போகிறது. இருந்தாலும் அது குறித்துக் கவலைப் '' - வேண்டியதில்லை.

தமிழக முதல்வர் வேறு இடத்தில் மூர்மார்க்கெட்டை ஏற்படுத்தித் தருவார் என்று நம்புகிறேன்.

மிகவும் தைரியசாலி அவர். ரயில் நிலையத்துக்கு இந்த இடத்தை ஒப்படைத்தது ஒரு நல்ல காரியமாகும்.


தமிழ்மக்களுக்கு எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

—இவ்வாறு குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டி அவர்கள். பேசினார்.

**மத்திய அமைச்சர்**
**பா. இராமச்சந்திரன் :**

மத்திய அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் பேசியதாவது :

தமிழகத்தின் பல பகுதிகளிலும் குறுகிய ரயில் பாதைகள் தான் இருக்கின்றன. இதை மாற்றி அகல ரயில் பாதைகள் போடவேண்டும்.




சென்னை-திருச்சிக்கு மணியாச்சி வழியாக அகல ரயில் பாதையை உருவாக்கித் தர வேண்டும்.

தூத்துக்குடி துறைமுகம் பெரிய துறைமுகமாக ஆக்கப்பட்டு வருவதால் தமிழ்நாட்டின் உள் பகுதிகளில் உள்ள குறுகிய ரயில் பாதைகளை அகல ரயில் பாதைகளாக மாற்ற வேண்டும்.

சென்ட்ரல் ரயில் நிலையத்தை விரிவுபடுத்த எடுக்கப்பட்ட முயற்சிக்குப் பேருதவி புரிந்த தமிழக முதல்வருக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீண்ட நாட்களாகப் பலவித தடைகளால் இந்த முயற்சி வெற்றி பெறாமல் இருந்தது.

இன்று அந்த நிலை மாறியிருக்கிறது. இந்த விரிவாக்கப்பணி முயற்சிக்கு தமிழகத்தின் முதல்வர் பேருதவி புரிந்தார். அதற்காக அவரை நான் பாராட்டுகிறேன்.



மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் பேசுகையில், ''இரயில்வேதுறை மேற்கொண்டுள்ள ரயில்பாதைகளை மின்சார மயமாக்கும் திட்டம் காரணமாக, நகருக்கு அருகே உள்ளவர்கள் நகரிலேயே குடியேற வேண்டும் என்று நினைப்பது தடுக்கப்படும் என்றும், கிராமப்பகுதிகள் நல்ல முன்னேற்றம் அடையும்'' என்றும் குறிப்பிட்டார்.

**மத்திய அமைச்சர்**
**மது தந்தவதே :**

மத்திய ரெயில்வே அமைச்சர் திரு மது தந்தவதே அவர்கள், பேசியதாவது :



இந்திய ரயில்வேயில் தினந்தோறும் ஒரு கோடிப் பேர் பிரயாணம் செய்கின்றனர்.

சென்னை, பம்பாய், புறநகர் ரயில் திட்டப் பணிகளை மேலும் விரிவுபடுத்த இருக்கிறோம்.

ரெயில் பிரயாணிகளின் இட நெரிசலைக் குறைக்கப் பல இடங்களில் மின்சார ரெயில் திட்டங்களை கொண்டு வருகிறோம். மின்சார மயமாக்கும் திட்டங்களுக்கு 132 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டுள்ளோம்.

ரூபாய் 109 கோடி மதிப்புக்கு 660 மின்சார ரயிலுக்கான ரயில் பெட்டிகள் தயாரிக்கும் உத்தரவு பெரம்பூர் ரெயில் பெட்டித் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

முதல் வகுப்பில் பிரயாணம் செய்வோருக்குக் கிடைக்கும் வசதிகள் அனைத்துப் பயணிகளுக்கும் கிடைக்கச் செய்யும் வகையில் திட்டங்களைச் செயலாற்ற இருக்கிறோம். இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

## முன்னேற்றம்

**கடினமான உழைப்பே, நம் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுக்கும்; பொறுப்புணர்ந்து உண்மையுடனும் ஒற்றுமையுடனும் உழைக்கும் நம் மன உறுதிப்பாட்டினால்தான் நம் நாட்டின் முன்னேற்றத்தைக் காணமுடியும்!**

**—அண்ணல் காந்தியடிகள்.**

இங்கே மத்திய அமைச்சர் திரு ராமச்சந்திரன் பேசுகையில் சில கோரிக்கைகளை எடுத்துரைத்தார். அதையொட்டி சில அறிவிப்புகளைச் செய்ய விரும்புகிறேன்.

கரூர்-திண்டுக்கல் அகல ரயில் பாதை போடப்படும். திண்டுக்கல்-தூத்துக்குடி சிறிய ரெயில் பாதை அகல ரெயில் பாதையாக மாற்றப்படும்.

இதற்கான அனுமதியை இப்பொழுதே வழங்குகிறேன். இது குறித்தான ஆய்வுப் பணிகள் நடந்த பின்னர் பணிகள் மேற்கொள்ளப்படும்.


**தமிழக முதல்வர் உரை :**

ரயில் நிலையத்தை விரிவுபடுத்தி, புதிய புறநகர் ரயில் நிலையம் கட்டுவதற்காகத் தமிழக அரசு சார்பில் நிலம் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

இந்த நிகழ்ச்சி நாலரைக் கோடி தமிழ் மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாகும்.

சென்னை-விஜயவாடா ரெயில் போக்குவரத்து மின் இணைப்புத் திட்டம் ஓரளவிற்குச் செயல்படத் தொடங்கியிருக்கிறது.

இங்கே வரவேற்புரையாற்றிய நண்பர் பேசுகையில், தமிழக அரசு இந்த ரெயில்வே நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு நல்ல முறையில் ஒத்துழைத்தது என்று குறிப்பிட்டார்.



சுமார் நாலேமுக்கால் கோடி ரூபாய் பெறுமான நிலப்பரப்பை ஒதுக்கித்தர வேண்டும் என்று கேட்டார்கள்.

இதன் மூலம் எத்தனைப் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைகின்றன என்பதை அறிந்த போது அதன் விலையில் பாதியாகக் குறைத்துக் கொடுக்கப்பட்டது.

விரிவாக்கத் திட்டம் விரைவில் செயல்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்திற்கு உதவினோம் என்று வரவேற்புரையாற்றிய நண்பர் குறிப்பிட்டார்.

இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த வரையில் பாகுபாடு இன்றி நல்ல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த நல்ல பணிகளில் ஒன்றுதான் இங்கே தொடங்கி வைக்கப்படும் இந்த நிகழ்ச்சி.

குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டி அவர்கள் இந்த நல்ல பணியைத் தொடங்கி வைக்கிறார். தமிழக அரசு சார்பிலும் தமிழக மக்கள் சார்பிலும் அவரை வாழ்த்தி வரவேற்று வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்கள் கொண்ட நல்ல கொள்கைகளை மனப்பூர்வமாக ஏற்று அப்படியே அதை நிறைவேற்றுவதில் தீவிரமாக இருக்கிறார். இந்தியத் துணைக்கண்டத்தில், அவசிய அவசரம் ஏற்படும் நேரங்களில் தனக்கு மனதில் பட்டதைச் சுட்டிக் காட்டி எடுத்துக் கூறும் தைரியம் படைத்தவர். அந்த நல்ல ஆற்றல் படைத்த குடியரசுத் தலைவரைத் தமிழக மக்கள் சார்பில் வாழ்த்துக்கூறி வரவேற்கிறேன். இந்த நாடு அவரை வாழ்த்துகிறது.


அவரது கையால் இங்கே இந்த நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்படுகிறது. பல்வேறு நல்ல திட்டங்கள் உருவாகும் நிலைமையை இது ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். இதற்காக உழைத்த அதிகாரிகளைப் பாராட்டுகிறேன்.

—இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பேசினார்.

## ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடு திட்டம்

ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடுகள் விநியோகம் மற்றும் தேவைக்கு இடையே உள்ள இடைவெளியை கருத்தில் கொண்டு, ஆண்டொன்றுக்கு 36,000 டன் சிமிண்டு தகடுகள் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் திட்ட முதலீடு ரூ. 166 இலட்சம்ஆகும். இத்தொழிற்சாலை ஆலங்குளம் சிமிண்டு ஆலைக்கு அருகில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1980 இறுதியில் திட்டப் பணிகள் முடியலாம் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை சுமார் 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.


# வருந்தித் தொழில்செய்வார்-அவர வாழ்க! வாழ்க!



மேதினி போற்றும் மேதினம் இந்நாள்: இந்த மேலான நாளில், பழகுதமிழ்ப் பாட்டில் 'உழைப்பவர் உலகம் உயர்வும் உரிமையும் பெற வேண்டும்' என்பதனை ஆவேசத்தோடும் உணர்ச்சியோடும் வலியுறுத்திய பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கருத்துக்களை எண்ணிப் பார்ப்பது இன்பமும் பயனும் விளைப்பதாகும்.

பாவேந்தர் அவர்கள் கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், போன்றவர்கட்குச் சிறிதும் சளைத்தவரல்லர்.

ஆம். 'தொழிலாளரைப் பற்றி இவரளவுக்குப் பாடியவர் வேறு யாருமிலர்; இவர் பாடல்களில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உணர்ச்சி முழுமை எய்தியிருக்கின்றது' என்றார் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். 1946-ல் சென்னையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்னின்று நடத்திய (பாவேந்தர் அவர்களுக்கு) பொற்கிழி வழங்கு விழாவில் பங்குகொண்ட ஜீவா அவர்களும் இந்த உண்மையைத் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.



பாவேந்தர் அவர்கள், 'தொழிலாளர்களுக்குத் தம் உழைப்பில்-தோள் வலிமையில் நம்பிக்கை வேண்டும்' என்கிறார். ஆம், இருள்படிந்த அவர்கள் வாழ்வில் எழில் ஊட்டுவது-ஒளியூட்டுவது-வலிவூட்டுவது நம்பிக்கை தானே! 'தம் தோள் உழைப்பில் நம்பிக்கை தானுமின்றி' என்ற சொற்றொடரால் பாவேந்தர் இந்த உண்மையை உணர்த்துகிறார்.

அடுத்து,

காடுகழனிகளில் பாடுபடும் பண்ணையாட்களை கண்ணுற்ற பாவேந்தர்,

'களைபோக்கு சிறுபயன் விளைக்க இவர்கள்
உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுல(கு) உழைப்பவர்க் குரிய தென்
பதையே!'

என்கிறார். உழைப்பவர்களுக்கு உலகம் சொந்தம் என்னும் உயர்ந்த கருத்தினை எவ்வளவு இலாகவமாகச் சொல்கிறார்!

தொழிலாளர்களின் உழைப்பு என்னும் மூலதனத்தைக் கொண்டே இவ்வுலகில் ஒவ்வொருவரும் இன்பத்தை அடைகின்றனர் என்பதனை,

'இந்த உலகினில் யாரும்-நல்
இன்ப மெனும்கரை யேறல்
சந்தத மும்தொழி லாளர்—புயம்
தரும்துணை யன்றி வேறே
எந்த விதத்திலும் இல்லை—இதை
இருபது தரம் சொன்னோம்'

என்கிறார்.

பாவேந்தர் இயற்றிய 'புரட்சிக்கவி'யில் வருகின்ற கவிஞன் உதாரன், கொலைக்களத்தில் கூடியிருந்த திரளான மக்களிடையே முழங்குகிறான். ஆம்!

'நீரோடை நிலங்கிழிக்க நெடும ரங்கள்
நிறைந்துபெருங் காடாகப் பெருவி லங்கு
தேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்
நெடுங்குன்றில் புலஞ்சேரப், பாம்புக்கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார்....?'

என்று கவிஞன் கேட்கிறான். 'தொழிலாளர்கள்' என்று நம்மையுமறியாமல் நாமே முழங்குகிறோம். இல்லையா?

...அழகு நகருண்டாக்கி
'சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின்
தோள்கள் ?'

—இப்படிக் கவிஞர் கேட்கிறார். தொழிலாளர் தம் தோள்களேயன்றோ?



''கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான்
யார்கை?

இப்படிக் கவிஞன் கேட்கிறான்! 'தொழிலாளர் கை' என்பதுதானே நமது பதில்.

'பொற்றுகளை கடல்முத்தை மணிக்கு
லத்தைப்
போயெடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?'

''..................பொழுது தோறும்
புனலுக்கும் அனலுக்கும் சேற்றி னுக்கும்
கக்கும்விஷப் பாம்பினுக்கும் பிலத்தி னுக்கும்
கடும்பசிக்கும் இடையறா நோய்க ளுக்கும்

பலியாகிக் கால்கைகள் உடல்கள் சிந்தும்
பச்சைரத்தம் பறிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடைய தாகத்
தந்ததெவர்?''
—தொழிலாளர்கள்தாமே!

தொழிலாளர்கள் எப்படியெல்லாம் தம் உழைப்பின் திறத்தால் சிந்த உலகின் இருட்டை மாற்றி அழகுடையதாக—ஒளியுடையதாக-வசதியுடையதாக ஆக்கினார்கள் என்பதையெல்லாம் 'புரட்சிக்கவி' வாயிலாகப் பாவேந்தர் எவ்வளவு அழகாகவும் தெளிவாகவும் ஆணித்தரமாகவும் சித்திரித்திருக்கிறார்.

''தொழிலாளர் விண்ணப்பம்' என்னும்
தலைப்பில்

காடு களைந்தோம்-நல்ல
கழனி திருத்தியும் உழவுபிரிந்தும்
நாடுகள் செய்தோம்-அங்கு
நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்
வீடுகள் கண்டோம்-அங்கு
வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்
தோம்
பாடுகள் பட்டோம்-புவி
வாழவென் றேகடல் ஆழமும் தூர்த்தோம்

''மலையைப் பிளந்தோம்-புவி
வாழவென் றேகடல் ஆழமும் தூர்த்தோம்

அலைகடல் மீதில்-பல்
ஆயிரங் கப்பல்கள் போய்வரச் செய்தோம்
பலதொல்லை யுற்றோம்-யாம்
பாதாளம் சென்று பசும்பொன் எடுத்தோம்

உலையில் இரும்பை-யாம்
உருக்கிப் பல் யந்திரம் பெருக்கியும்
தந்தோம்.

''ஆடைகள் நெய்தோம்-பெரும்
ஆற்றை வளைத்துநல் நாற்றுக்கள்
நட்டோம்
கூடை கலங்கள்-முதல்
கோபுரம் நற்சுதை வேலைகள் செய்தோம்
கோடையைக் காக்க,யாம்
குடையளித் தோம்நல்ல நடையணிகள்
செய்தோம்
தேடிய பண்டம்-இந்த
செகத்தில் நிறைந்திட முகத்தெதிர் வைத்
தோம்

அடுத்து, 'நீங்களே சொல்லுங்கள்' என்னும் தலைப்பில் வரும் பாடல் முழுவதிலும், பாவேந்தர் ஒரு புதிய அணுகுமுறையைக் கையாளுகிறார்.

Sig 6

பாவேந்தர், எழில்மிக்க சோலைகளைப் பார்க்கிறார், அவற்றின் அழகிலே மட்டும் மனம் பறிகொடுத்து நின்றுவிடவில்லை. அந்த அழகிய சோலைகளை உருவாக்கிட இரத்தம் சிந்திய பாட்டாளிகளை-அவர்கள் பட்ட துயர்களை எண்ணிப் பார்க்கிறார்.

'சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்தஇப் பாரினிலே—முன்னர்
எத்தனை தோழர்களரத்தம் சொரிந்தனரோ!
உங்கள் வேரினிலே!'

—என்று கேட்கிறார்.



நெல்விளை கழனியைப் பார்க்கிறார்; காடு மேடு திருத்திக் கழனியாக்கவும், கழனியில் நெல் விளைக்க உழவர் பெருமக்கள் நெற்றி வியர்வை சிந்தப் பாடுபட்டதை நினைவு படுத்திப் பார்க்கிறார்:

'நித்தம் திருத்திய நேர்மையினால்மிகு
நெல்விளை நன்னிலமே! உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!'

—என்று அந்த நெல்விளை கழனியைப் பார்த்துப் பேசுகிறார்.

தாமரை பூத்த தடாகங்களைப் பார்க்கிறார். தாமரையைப் பார்த்ததும் 'தாமரை முகம்' நினைவுக்கு வரவில்லை. அந்தக் குளத்தை வெட்டும்போது அங்கு தூர்ந்து மறைந்த தொழிலாளர், அவர் கண்முன் தோன்றுகின்றனர்:

'தாமரை பூத்த தடாகங்களே-உமைத்
தந்தஅக் காலத்திலே-எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே!'

—என்று தாமரைக் குளத்தைப் பார்த்துக் கேட்கிறார்.

நிழல்தரு மரங்கள் சூழ்ந்த நெடுஞ்சாலைகளைப் பார்க்கிறார். சாலைபோடக் கல்லுடைத்தும் வேறு பணிகள் புரிந்தும் கஷ்டப்பட்ட தொழிலாளர்களை அவர் எண்ணுகிறார்.

'மாமிகு பாதைகளே! உமை இப்பொழுது
வையமெ லாம் வகுத்தார்—அவர்
ஆமை எனப் புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெல்லாம் உழைத்தார்.

—என்று நெடுஞ்சாலைகளைப் பார்த்துச் சொல்கிறார்.

யந்திரக் கூட்டங்களைப் பார்த்ததும், அதை நிறுவிட தொடக்ககாலம் முதல் பாடுபட்ட தொழிலாளர்களை - அவர் தம் உழைப்பை நினைந்து பார்க்கின்றார்.

'ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! உங்கள்
ஆதிஅந்தம் சொல்லவோ—நீங்கள்
ஊர்த்தொழிலாளர்கள் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?'

—என்று யந்திரக் கூட்டங்களின் ஆதிஅந்தம் சொல்லுகிறார்.

போகப் பொருட்கள் நிரம்பிய இந்த உலகத்தோரின் இயக்கத்திற்கு உதவும் கடைக்காலான தொழிலாளர்களை எண்ணிப் பார்க்கிறார்.

'கீர்த்திகொள் போகப் பொருட் புவியே- உன்றன்
கீழிருக்கும் கடைக்கால்-எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!'

—என்று இந்தப் பேரின்ப உலகின் கடைக்கால் உருவாவதற்கு உதவிய கச்சாப் பொருள்களை விளக்குகிறார்.

'நீர், கனல், நல்லநிலம், வெளி, காற்றென
நின்ற இயற்கைகளே!—உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!'

—எனத் தொழிலாளர் தம் தடக்கைச் சிறப்பினைப் பேசுகிறார்.

'தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ?'

—என்று இந்தத் தரணியைப் பார்த்துக் கேட்ட பாவேந்தர்,

''.........................பசி
தீரும்என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?'

என்று தொழிலாளர் துயர் நீங்க, அவர்களுக்காகப் பரிந்து, பேசுகிறார்.

ஆம்! 'தொழிலாளர்'கள் சிங்க ஏறுகள்' என்று, மற்றவர்களுக்கு நினைவூட்டி, அவற்றிற்கு அநீதி விளைவிக்காதீர்கள்! புலிகள் என்றைக்கும் புதரினில் தூங்கிக் கிடக்க மாட்டா என்று எச்சரிக்கும் வகையில்,

''எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ?—இனி
புலிகள் நரிக்குப் புசிப்பளித் தேபெரும்
புதரினில் தூங்கிடுமோ?
'கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும் உத்தேசமில்லை-சொந்த
வலியுடையார் இன்ப வாழ்வுடையார் ,இந்த
வார்த்தைக்கு மோசமில்லை!'



இங்கே எலிகளாகவும் நரிகளாகவும் செல்வர்களையும் சிங்க ஏறுகளாகவும் புலிகளாகவும் தொழிலாளர்களையும் உருவகம் செய்துள்ள திறன் போற்றி மகிழத்தக்கது.

பாவேந்தர் தாம் இயற்றிய 'கடல் மேற் குமிழிகள்' என்னும் காப்பியத்தில் அழகன் என்பவன் தொழிலாளர்களிடம் ஆற்றும் வீரஞ்செறிந்த உரையைக் கேளுங்கள்.

''ஏரியிலே மண்ணெடுத்துக் கரை உயர்த்தும்
தோழர்களே இப்பெரிய நாட்டின் ஆணி
வேரினிலே பெருநெற்றி வியர்வை நீரை
விட்டுவளர்த் திடுகின்ற நாட்டு மக்காள்!
ஊரினிலே தெருவினிலே வீட்டில் எங்கும்
உம்உழைப்பைப் பொன்னெழுத்தால் காணப தன்றி
ஆரிங்கே உழைத்தார்கள்? அரசன் என்போன்
அரசியொடு பொன்னூஞ்சல் ஆடு கின்றான்.

''சடுகுடுவென் றேநெய்வீர்; கந்தை யில்லை
தார்வேந்தன் கூட்டுவது சரிகை வேட்டி;
கடல்நடுவில் முத்தெடுப்பீர்; கஞ்சியில்லை;
கடனறியா வேந்துக்கு முத்துத் தொங்கல்!
மடுப்புனலும் செங்குருதிப் புனலும் வார்த்து
வளவயலில் களையெடுத்துக் காத்த செந்நெல்
அடுக்களையில் கண்டீரோ? அரசின் வீட்டில்
ஆன்நெய்யில் சீரகச்சம் பாமி தக்கும்!''

''எவன்படைத்தான் இந்நாட்டை? இந்த நாட்டை
எவன்காத்தான்? காக்கின்றான்? காப்பான்? கேளீர்!
தவழ்ந்தெழுந்து நடந்து வளர் குழந்தை போலும்
தரை, வீடு, தெரு, சிற்றூர், நகரம் ஆக
அவிழ்ந்ததலை முடிவதற்கும் ஓயாக் கையால்
அணிநாட்டைப் பெற்றவர்கள் கண்ணுறங்கிக்
கவிந்திடஓர் ஈச்சம்பாய் இல்லை. தங்கக்
கட்டிலிலே ஆளவந்தார் நாயுறங்கும்!''



கடமை—பாட்டாளிகளின் கடமை, சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

அவர்களுடைய கண்ணியம், தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே இருக்கிறது.

அவர்களுடைய கட்டுப்பாடு, தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார், எந்த மாதிரி முயற்சி எடுத்துக் கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கிறது.

—பேரறிஞர் அண்ணா.

வர்க்கப் போராட்டத்திற்கு வரவேற்பளிப்பதுபோல் அமைந்துள்ள இவ்வுரையில், உழைப்பாளிகளையும், உறிஞ்சுவோரையும் நேர்நிறுத்திக் காட்டுகிறார் பாவேந்தர்.

அடுத்து, பாவேந்தர் தமது 'குறிஞ்சித் திட்டு' என்னும் காப்பியத்தில், 'மல்லிகை' என்பவள் வாயிலாக வெளியிடும் கருத்துக்களைக் காணலாம்.

'கட்டத் துணியளித்தார் கல்லுழுது நெல்லளித்தார்
வெட்டிக்கா டெல்லாமே வீடாக்கித் தந்தார்
எருக்கு முளைக்கும் இடர்ப்பாம்பின் பல்போல்
பருக்கைக்கல் வாய்த்தும் படுபள்ளம் வாய்த்தும், முள்
முட்டுநிலம் நேராக்கி, முல்லை பரப்பியதோர்
பட்டுமெத்தை போன்ற நிழற் பாதையளித்தார்
தரைமீது பட்டணங்கள் தந்தார்; கடலின்
திரைமீது பட்டணங்கள் செல்லும்படி யமைத்தார்
வானத்தெருக்களிலே மாமுகிலின் சோலையிலே
போனேன் இதோஎன்னும் புள்ளூர்தி செய்தளித்தார்
அப்போதைக் கப்போதில் ஆசையுற்ற எப்பொருளும்
தப்பாது செய்தளித்தார்; தங்கள்செல் வாக்கையெல்லாம்
இந்நாட்டை நீயாள ஈந்தார்!'

பாவேந்தர் தாம் இயற்றிய இளைஞர் இலக்கியம் என்னும் நூலில், குயவர், தட்டார், கொத்தனார், கருமார், தச்சர், கொல்லர், சிலை தைக்கும் பெண்கள், கூடைமுறம் கட்டுவோர், குடை பழுதுபார்ப்போர், சாணை பிடிப்போர், பூட்டு பழுது பார்ப்போர், வடை தோசை விற்போர், எண்ணெய்க்காரர், இப்படிப் பல்வேறு தொழிலாளர்களையும்,

'இசையமுது' என்னும் இசைப்பாடல் தொகுதிகளில், வண்டிக்காரன், மாடுமேய்ப்பவன், பாவோடும் பெண், தறித்தொழிலாளி, இரும்பாலைத் தொழிலாளி, விறகு வெட்டுவோர், பூக்காரி, குறவன், தையற்காரன், சுண்ணாம்படிக்கும் பெண், ஓவியன் இப்படி பல திறப்பட்ட தொழிலாளர்களையும் எழில் மிகு கவிதை ஓவியங்களாக்கிக் காட்டுகின்றார்.

'கழைக் கூத்தாடியின் காதல்' என்னும் நாடகத்தில், 'கழைக் கூத்தாடி' யான ஒரு பெண்ணையே கதைத் தலைவியாக்கியிருக்கிறார்.

'தொழில் ஒன்றினாலேயே அடிமையும் துன்பமும் தொலையும்' என்பது பாவேந்தர் கருத்து. அவர், உழைப்பவர்களிடம் இரக்கங் கொண்டு, அவர் தம் துன்பம் போக்கத் துடிக்கிறார். முதலாளிகளால் தொழிலாளர்கள் தாழ்த்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணி எண்ணி இதயம் குமுறுகிறார் அவர்களின் விடுதலைக்காக எழுச்சிப்பண் பாடுகிறார்.

'வருந்தித் தொழில் செய்வார்—அவர்
வாழ்க வாழ்க.'

என்று வாழ்த்துகிறார்.

'பற்பலபேர் சேர்க்கை பலம்சேர்க்கும் செய்தொழிலின்
முற்போக்கும் உண்டாக்கும் முன்னிடுவீர் தோழர்களே!'

—என்று பாவேந்தர் தொழிலாளர் உலகை அழைப்பதில், 'உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்' என்ற ஒலியையே நாம் கேட்கவில்லையா?

தொழிலாளி துயர்க்குரலைக் கவிதையாக்கித் துயர் களையும் வகையினையும் கவிதையாக்கிய-பாட்டாளிகளின் கவிஞர் பாவேந்தர் புகழ் வாழ்க! என்று வாயார—மனமார வாழ்த்தி அவர் காணவிரும்பிய தொழிலாளர் உலகைக் காண நாம் பாடுபடுவோமாக!



—சாமி பழனியப்பன்.





கன்னியாகுமரி திருவனந்தபுரம் அகலரயில் பாதையை 15.4.79 அன்று கன்னியாகுமரியில் மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி, மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் ஆகியோர் தலைமையமைச்சர் துவக்கி வைத்தார். விழாவில் ரயில்வேத்துறை அமைச்சர் திரு மதுதந்தவதே, கலந்து கொண்டனர்.

இந்திய பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் சென்னையில் 14-4-79 அன்று திரு எஸ் என். ஸ்ரீராம தேசிகன் மொழிபெயர்த்துள்ள தமிழ், ஆங்கில விளக்கத்துடன் கூடிய சமஸ்கிருதம் திருக்குறள் நூலின் இரண்டு தொகுதிகளை வெளியிட்டார். எரிபொருள் அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் பிரதிகளை பெற்றுக் கொண்டார்.





புகுமுக வகுப்பு, பட்ட வகுப்பு, பல்கலைக் கழகத் தேர்வுகளில் உயர்ந்த அளவு தேர்வு விழுக்காட்டினைப் பெற்ற கல்லூரிகளுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் 18.4.79ல் சென்னையில் சுழற்கோப்பைகளை வழங்கினார்.






சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் திறப்பு விழா 14.4.79 அன்று நடைபெற்ற பொழுது மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம், கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவை[illegible] செயலாளர் திரு [illegible] ஆகியோர் கலந்து [illegible]னர்.



அகில இந்திய தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் கூட்டணி மாநாட்டை 14.4.79 அன்று தலைமை அமைச்சர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் துவக்கி வைத்தார்கள். மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களும் கலந்து கொண்டார்கள்.



மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் 13.4.79 அன்று தலைமைச் செயலகத்தில் தொழிலதிபர்களுடன் விவாதித்தார்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சென்னையில் 18.4.79 அன்று நடைபெற்ற கண்ணாடியிழை படகுகள் அறிமுகப்படுத்தும் விழாவினை மாண்புமிகு உணவு-மீன்வள அமைச்சர் திரு ஜி.ஆர். எட்மண்ட் துவக்கி வைத்தார்.





# தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்



தமிழ்நாட்டில் 1978-ஆம் ஆண்டில் தொழில் அதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு நிலவியது. தொழிலாளர்களின் நலனுக்கென உள்ள சட்டங்கள் அனைத்தின் விதி முறைகளைக் கண்டிப்பாகச் செயல்படுத்தித் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதே அரசின் தலையாய கொள்கையாகும்.

தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்ய உள்ள உரிமையை அரசு ஏற்றுக் கொள்ளும். அதே சமயத்தில், வேலை நிறுத்தங்கள் நிகழ்வதைத் தடுக்க அல்லது அத்தகைய வேலை நிறுத்தங்கள் நீடித்துக் கொண்டே போகும்போது அவற்றிற்கு முடிவு காண வேண்டி, தொழில் தகராறுகளில் தலையிட்டு, செவ்விய முறையில் இணக்கம் செய்வதன் மூலமும், சுமுகமாக அவற்றிற்குத் தீர்வு காண்பதன் மூலமும் உரிய காலத்தில் அவற்றைத் தீர்த்து வைப்பதென்றும் நடைமுறையை அரசு மேற் கொண்டது.

1978-இல் இம்மாநிலத்தில் 6,61,245 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள 10,541 தொழிற் பிரிவுகளில் 27-1-79 தேதி நிலவரப்படி 11 நிறுவனங்களில் மட்டுமே தொழில் தகராறுகள் எழுந்தன. அவற்றின் மூலம் 2,775 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர்.

தமிழ்நாட்டில் பெரும்பான்மையோராக உள்ள, தொழிற்சங்க அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்குக் குறைந்தளவு ஊதியமும், நல்ல வாழ்க்கைத் தரமும் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, சட்டவழி பெற்ற அறிவிப்பின் மூலமும், சிறப்பு நடவடிக்கைகள் மூலமும் ஏற்பாடுகள் செய்வதில் தமிழக அரசு சிறப்பு நாட்டம் செலுத்தியது.

அத்தகைய தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் அவர்களது நலனை மேம்படுத்தவும் வேண்டி, அவர்களுக்குக் குறைந்தளவு ஊதிய வீதங்களை அறிவிக்கவும் தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படுத்தவும் அரசு சிறப்பு நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளது. அத்தகைய நடவடிக்கைகளின் விளைவாகவும் தொழிலாளர் நலத்துறை தொழில் தகராறுகளில் தலையிட்டு இணக்க ஏற்பாடு செய்ததன் விளைவாகவும் தொழிலதிபர்களுக்கும் தொழிலாளர்களுக்கு மிடையில் சுமுகமான நல்லுறவு நிலவியதுடன், . தொழிலாளர்களின் நலிந்த பிரிவினர்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டன.

### மூடப்பட்டிருந்த ஆலைகளைத் திறத்தல் :

செயலற்றுப்போன கீழ்க்கண்ட நிறுவனங்கள் அரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக மீண்டும் திறக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகின்றன.

### 1. தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ் திருப்பூர் :

சுமார் 101 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலை 1976-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25-ஆம் நாளிலிருந்து செயல்படவில்லை. ஆலையினைத் திறப்பது தொடர்பாக கோயம்புத்தூர் தொழிலாளர் நல துணை ஆணையாளர், சம்பத்தப்பட்ட தரப்பினர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். தரப்பினர்களிடையே (அதாவது குத்தகைதாரர்களான ஸ்ரீசென்கோ நிறுவனங்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே) 1978 பிப்ரவரித் திங்கள் 6-ஆம் நாளன்று ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து, 1978 20-ஆம் நாளன்று ஆலை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

### 2. இராஜா மில்ஸ், மதுரை :

125 தொழிலாளர்கள் பணிபுரியும் இந்த ஆலை 1976 நவம்பர் திங்கள் 20-ஆம் நாளிலிருந்து செயல்படவில்லை. இந்த ஆலை ஏல விற்பனையில் திரு ஏ. ஆர். பாலகிருஷ்ண முதலியாரால் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆலை 1978 மே திங்கள் 19-ஆம் நாளிலிருந்து மதுரை ஸ்ரீ அங்கப்பா ஸ்பின்னிங் மில்ஸ் என்ற பெயரால் செயல்பட்டு வருகிறது.

### துணி ஆலைத் தொழிலில் சிக்கனச் சீரமைப்பு:

1978-ஆம் ஆண்டில் தொழிலாளர் துறையின் உதவியுடன்



## மேநாள் நன்னாள்

உழைக்கின்ற மக்கள்தம் உயர்வை வையம்
உள்ளத்தால் நினைக்கின்ற நாளாம்; நாடு
தழைக்கின்ற தொழில்பலவும் தரமாய் ஓங்க,
தருகின்ற கைகளுக்கு மலர்கள் சூட்டி;
கொழிக்கின்ற செல்வத்தின் அளவைப் பார்க்க
கொட்டிவிட்ட வியர்வைதனை எண்ணிப் பார்த்த;
வழிசெய்யும் உள்ளங்கள் வாழ்க! வென்றே
வாழ்த்தொலிகள் வான்முட்டும் நன்னாள் மேநாள்!

மலையெனவே நினைக்கின்றோம உழைப்பை; நல்ல
மலையருவி எனஅவர்கள் வியர்வை ஓட!
கலையெனவே நினைக்கின்றோம் திறனை; நல்ல
காட்டாற்றின் வேகம்போல் அவர்தம் வேகம்!
குலையாத நெஞ்சுரமும் கொடுமை தாங்கும்
குறுகலில்லா மனப்பரப்பும் கொண்ட வீரர்;
நிலையான சோசலிசப் பாதை சேர்க்கும்
நெடுஞ்சாலை மைல்கல்லே மேநாள் நன்னாள்!

மண்ணினின்று பொன்னெடுத்து, மரத்தை வெட்டி
மனம்மகிழும் கலைப்பொருட்கள் செய்து ,காட்டி
விண்ணதிர ஓசையிடும் எந்தி ரங்கள்,
விதவிதமாய்ச் செய்தவரை; போட்டி போட்டு
கண்ணெதிரே பசும்புரட்சி வளத்தைக கூட்டி,
கடும்இரவைப் பகலாக்க ஒலியைக் காட்டி,
எண்ணலிலாப் புதுமைகளைச் செய்தோர் தம்மை
இதயத்தில் நினைக்கின்ற நன்னாள் மேநாள்!

மன்னை. கா. கல்யாணசுந்தரம்.

துணி வகைகள் ஆலைகளில் சிக்கனச் சீரமைப்பு தொடர்பாக 52 தொழிற் தகராறுகள் தீர்க்கப்பட்டன. நேரடி பேச்சு வார்த்தை மூலம் 32 தகராறுகள் தீர்க்கப்பட்டன.

### தொழிற்சங்கங்கள் :

1978 சனவரித் திங்கள் 1-ஆம் நாளன்று நிலவரப்படி 2,550 பதிவு பெற்ற தொழிற்சங்கங்கள் இருந்தன. நடப்பு ஆண்டில் 466 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 244 தொழிற்சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. மூன்று சங்கங்களின் பதிவு ரத்து நீக்கிவிடப்பட்டது. 5 சங்கங்கள் கலைக்கப்பட்டன. இவ்வாண்டு இறுதி நிலவரப்படி பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 2,770 ஆகும்.

### தொழிற்சாலையில் ஒழுங்குமுறை விதி :

தொழிற்சாலையில் ஒழுங்குமுறை விதியைச் செயல்படுத்தும் பணியும், தொழிற்சங்கங்களை அங்கீகாரமளிக்கும் பணியும் மாநில மதிப்பீட்டுச் செயற்பாட்டுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்குழு 1978 சனவரித் திங்கள் 18-ஆம் நாள், 1978 சூன் திங்கள் 28-ஆம் நாள், 1978 டிசம்பர் திங்கள் 2-ஆம் நாள் ஆகிய நாட்களில் மூன்று முறை கூடியது; தொழிற்சாலையில் ஒழுங்குமுறை மீறிய 10 வழக்குகளை விசாரித்தது. 23 தொழிற்சங்கங்களை அங்கீகரிக்கப் பரிந்துரைத்துள்ளது.

### தொழிலாளர் நலச்சட்டங்களுக்குத் திருத்தங்களைக் கூறுவதற்காக முத்தரப்புக்குழு :

சட்டத்திலேயே விதித்துறைக்கு வகை செய்து தொழிலாளர்களுக்குப் பயனும் பாதுகாப்பும் அளிக்க உறுதி செய்வதே அரசின் கொள்கையாகும். இதனைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களுக்குத் திருத்தங்களை எடுத்துரைக்க தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய முத்தரப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழு இதுவரையில் எட்டு முறை கூடி, தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டம் தொடர்பாகவும், தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் தொடர்பாகவும் தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம் தொடர்பாகவும் திருத்தங்கள் குறித்து இக்குழு விவாதித்து முடித்துள்ளது.

### சிறந்த தொழில் உறவுக்கான பரிசுத் திட்டம் :

இத்திட்டத்தின்கீழ் நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகளை வழங்குவதன் மூலம், நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சிறந்த தொழில் உறவைப் பராமரிக்கவும் அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் ஊக்குவிப்பதற்காகவும் 1978-ல் தமிழ்நாடு அரசு, சிறந்தொரு நடவடிக்கையை எடுத்தது. பரிசு பெறுவதற்கு உரியோரைத் தெரிந்தெடுக்க, உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரைத்தலைவராகக்கொண்டு முறையே தொழிலதிபர்கள், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் எழுவர் அடங்கிய தேர்வுக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

பரிசு வழங்குவதற்கான இத்திட்டம் 1978-ஆம் ஆண்டில் இருந்து செயல்படுத்தப்பட உள்ளது. இக்குழு 28-11-78-ல் கூடியது. இத்திட்டத்தின் கீழ்ப் பரிசுகளைப் பெற தொழிலதிபர்கள், தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்ய வேண்டிய விண்ணப்பப் படிவத்தை முடிவு செய்ததோடு விளம்பரம் முதலியவை போன்ற ஏனைய பொருட்களையும் கருதிப் பார்த்தது.

திட்டம், விண்ணப்பம் ஆகியவை செய்தித்தாள்களில் வெளியிடப்பட வேண்டுமெனக் குழு முடிவு செய்தது.

### மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு :

மாநிலத் தொழிலாளர் நல ஆலோசனைக் குழு முதல் நிலை ஆலோசனைக் குழுவாகும். தொழிலாளர் சம்பந்தப்பட்ட எல்லாப் பொருட்களும், அவை குறித்து அறிவுரை பெறுவதற்கு அவற்றிற்கு அனுப்பி வைக்கப் படுகின்றன. இக்குழு 1978 பிப்ரவரியில் மீண்டும் அமைக்கப்பட்டது. அதற்குத் தொழிலாளர் நல அமைச்சர் தலைவர் ஆவார். இதில், தொழிலதிபர்கள், தொழிலாளர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாள், 1978-ஆம் ஆண்டு மே திங்கள் 25-ம் நாள், 1978-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ஆம் நாள் ஆகிய நாட்களில் கூடி தொழில் உறவுகள் சம்பந்தமான பல்வேறு பொருட்கள் குறித்து விவாதித்தது.

### துறை அதிகாரிகள் கூட்டம் :

தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளின் 16-வது ஆண்டுக் கூட்டம் சென்னையில் 1978 டிசம்பரில் கூடியது. இக்கூட்டத்தில் தொழிலாளர் நல அமைச்சர் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் தொழிலாளர் நல நிர்வாகம் தொடர்பான பல்வேறு பொருட்கள் குறித்தும், தொழிலாளர் நல தொழிற்சாலைச் சட்டங்களைச் செயல்படுத்துவது குறித்தும், எடைகள்-அளவைகள் சட்டத்தைச் செயல்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டதோடு, நிர்வாகத்தை முடுக்குவதற்கும் அதிகப்படியாகத் தொழிலாளர்களுக்கு நல நடவடிக்கைகளை நீட்டிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அரசுக்குக் கருத்துந் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிரமவீர் பரிசுகளும் மாநிலப் பாதுகாப்புப் பரிசுகளும் :

மிகுந்த பாதுகாப்பு, அதிக உற்பத்தி, குறைந்த செலவு, இறக்குமதி செய்ய வேண்டிய பொருளுக்குப் பதிலாக வேறு பொருளை உற்பத்தி செய்தல் முதலியவற்றிற்கு உறுதுணை புரியும் சிறந்த கருத்தை நல்குவதன் மூலம் பொதுவாகத் தொழிற்சாலைத் திறனை மேம்படுத்துவதில் சிறந்த பணிபுரிந்த தொழிலாளர்களை மாநில அளவில் அங்கீகரித்துப் பரிசு வழங்குவதே 'சிரம வீர்' பரிசுத் திட்டத்தின் நோக்கமாகும்.

விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைப்பதில் நிர்வாகத்தினரிடையே சுமுகமான போட்டியை உருவாக்கும் நோக்கோடு, விபத்துக்கள் ஏற்படுவதைக் குறைக்கும் பணியில் தன்னிகரற்ற பணிபுரியும் தொழிற்சாலைகளுக்கு மாநில பாதுகாப்புப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

சாதனை ஆண்டுகளாக 1976, 1977-ஆம் ஆண்டுகளுக்குரிய பரிசுகள், சென்னை, ராஜாஜி மண்டபத்தில் 1978 சனவரித் திங்கள் 22-ஆம் நாள், 1979 சனவரித் திங்கள் 19-ஆம் நாள் நடைபெற்ற விழாக்களில் வழங்கப்பட்டுள்ளன.

பரிசுத் திட்டத்தில் போட்டியிடுவதற்காக, 1978-ஆம் ஆண்டிற்கான மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள், சிரமவீர் பரிசுகள் ஆகியவற்றைப் பெறுவதற்குப் போட்டியிடுவதற்கான விண்ணப்பங்கள், தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

### தொழிற்சாலை விபத்துக்கள்—துயர் துடைப்பு நிதி :


ஆண்டொன்றிற்கு 15,000 ரூபாய் தொடர் மானியத்துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல் உடைத்தல், வெடி வைத்துத் தகர்த்தல், கிணறு தோண்டுதல் அதனால் என்றுமே பணியாற்ற இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்த தொழிலாளரைச் சார்ந்துள்ளவர்களுக்கு இந் நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். 1923-ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் சட்டத்தின்கீழ் இழப்பீடு வழங்குவதற்கு நிதி வசதி இல்லாத தொழிலதிபர்களின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோருக்கு இந்நிதியிலிருந்து துயர் தணிப்பு உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் இந்நிதியிலிருந்து தொகை பெறுவர். 1978-ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து ஐந்து பேருக்கு 4,000 ரூபாய் துயர் துடைப்பு நிதி அனுமதிக்கப்பட்டது.

### தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் :

தொழிலாளர்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்குவதற்காகச் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் மூன்று குழுக்கள் செயலாற்றி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஓய்வு பெற்ற நீதித்துறை அதிலாளர் நல அதிகாரியாலும் நிர்வகிக்கப்படுகின்றன. போதிய நிதி வசதியில்லாத மக்களுக்குச்சட்ட ஆலோசனை வழங்குவது குறித்துத் திட்டமொன்றினை வகுப்பது பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழுவால் செய்யப்பட்ட பரிவுரைகளை ஒட்டி அரசால் இக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்கள்தொழிலாளர்களின் முறையீடுகளைக் கனிவோடும் பரிவோடும் கேட்டறிந்து அவர்கள் தம் குறைகளைக் களைவதற்குப் பின்பற்ற வேண்டியநடைமுறைகள் குறித்து கருத்துரை நல்கி தொழிலாளர்களுக்கென்று இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்கள் அவை சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஆகியவற்றின் கீழ் நிவாரணம் பெறுவதற்குரிய முறைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறுகின்றன. 1978-ஆம் ஆண்டில் இந்த மூன்று குழுக்களும் 380 முறையீடுகளை விசாரித்து ஆலோசனை நல்கியுள்ளன.





# முதல்வரின் முத்துக்கள்

* நாகரிகம் என்ற பெயரில் நமது பாட்டினை இழந்துவிடக் கூடாது. தாய்மார்கள் உடை அணிவதில்கூட இந்தப் பண்பாட்டை இழந்துவிடக் கூடாது. வேட்டி, சட்டை அணிவதை அவமானம் என்று கருதக் கூடாது. அப்படிக் கருதுவது நாகரிகம் அல்ல. தேசிய உணர்வை விட்டுவிடக் கூடாது.

* எந்த ஒரு மனிதனும் எவ்வளவுதான் படித்திருந்தாலும், அனுபவம் பெற்றிருந்தாலும் சரி, மக்கள் அவரை ஆதரிக்காவிட்டால், மக்கள் அவருக்கு ஒத்துழைப்புத் தராவிட்டால் சமுதாயத்தில் நிற்க முடியாது.

* பணம் இருந்தால் மனம் இருப்பதில்லை; மனம் இருந்தால் பணம் இருப்பதில்லை. இரண்டும் இருந்து உதவி செய்யச் செலவு செய்தால் சட்டம் இடம் அளிப்பதில்லை. அப்படியிருந்தும் சேவை செய்ய முன் வருகிறவர்களைப் பாராட்ட வேண்டும். தியாகம் செய்கிறவர்களுக்குப் பாதுகாப்புத் தந்தாக வேண்டும். அவர்களுக்கு எதிர்கால உத்தரவாதம் கொடுத்தாக வேண்டும்.

* நல்ல உணர்வுகளைச் சட்டத்தின் மூலம் மட்டும் ஏற்படுத்த முடியாது.

* மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் பண்புக்கும், பாங்குக்கும் நாம் சொந்தக்காரர்கள் ஆகவேண்டும்.

* பதவி வரும்போது அந்தச் சூழ்நிலைக்கேற்ப மனநிலை மாறும். அப்படி மாறக்கூடாது என்பதை அமரர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதைத்தான் இந்த அரசும் கடைப்பிடிக்கிறது.

* உண்மையைப் பேசுகின்ற மனப்பக்குவம்—துணிச்சல் உள்ளவர்கள் எந்த இடத்திலும், யாருக்கும் பயந்து நடக்க மாட்டார்கள்.

* ஏழைகளைக் கடவுள் உருவாக்கவில்லை இந்தச் சமுதாயம்தான் உருவாக்குகிறது. நாம்தான் உருவாக்குகிறோம். இந்தச் சமுதாய அமைப்பை மாற்றியமைக்க நாம் வழிகாணவேண்டும். ஏழைகள் என்று ஒரு பிரிவும், அவர்களுக்கு இரக்கம் காட்டச் சிலரும் இருக்கும் சமுதாயம் தேவையா? இந்த அமைப்பு மாறியாக வேண்டும்!

**தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம் :**

பின்வரும் நோக்கங்களுக்காகத் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம் தொடங்கப்பட்டது :

* பொதுத் துறை, தனியார் துறை தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு (உடலுழைப்பாளர்கள், எழுத்தர்கள் தொழில் நுட்பப் பணியாளர்கள்) தொழிலாளர் சட்டம், தொழிலாளர் கொள்கைகள் தொடர்பான எல்லா அம்சங்களும் கற்பிக்கப்படுகின்றன. அவ்வாறு கற்பிக்கையில், தொழிற்சங்கங்களுக்குத் தொழிலாளர்களிடையே இருந்து தலைவர்களைத் தெரிந்தெடுப்பதனால் ஏற்படும் நன்மைகள் வலியுறுத்திக் கூறப்படுகின்றன.

* பொதுத்துறை, தனியார் துறை தொழில் நிறுவனங்களிலுள்ள நிர்வாக அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

* தொழிலாளர் சட்டங்களை நிர்வகித்தல், செயற்படுத்துதல் ஆகியவற்றுக்குப் பொறுப்பு வகிக்கின்ற தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

* கூட்டுறவுச் சங்கங்களிலும் உள்ளாட்சி மன்றங்களிலும் தொழிலாளர்களுடனும் பணியாளர்களுடனும் தொடர்புள்ள அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

**உழைப்பவர் உலகம் :**


தொழிலாளர் நல ஆணையாளரின் பொறுப்பின் கீழ் இயங்கி வந்த இந்த நிறுவனத்தை அரசு, ஒரு தனித் துறையாக அமைத்தது. அவ்வாறு இந்த நிறுவனத்தின் தரத்தை உயர்த்தும் வகையில் இது தற்போது ஆற்றிவரும் பணிகளுடன், தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் தொழிலாளர் சட்ட நூலைத் தமிழில், வெளியிடும் பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அத்துடன், பல்வேறு தொழிலாளர் சட்டங்களையும் நீதிமன்ற முடிவுகளின் மீதான குறிப்புரையுடன் தமிழில் வெளியிடும் பொறுப்பையும் இந்த நிறுவனம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டது. தொழிலாளர் சட்ட நூல் 'உழைப்பவர் உலகம்' என்னும் பெயரில் தமிழில் வெளியிடப்படுகிறது. இந் நூலை முதலமைச்சர் அவர்கள் அறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான 1978 செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாளன்று வெளியிட்டார்.

*(தமிழ்நாடு சட்டப் பேரவையில் 19-4-1979 அன்று அளிக்கப்பட்ட தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டவை).*





# வழிகாட்டிய ஒளி விளக்கு



—எ. ராஜப்பன்

**கா**லைக் கதிரவன் தன் செங்கதிர்களை வீசிக்கொண்டு வெளிக்கிளம்புகிறான். படுக்கையிலிருந்து எழுந்து வீட்டிற்கு வெளியில் வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தேன். என்னை அறியாமலே நீண்ட பெருமூச்சு ஒன்று வெளிக் கிளம்பியது. ஆம். நான் எதை எதிர்பார்த்தேனோ அது என் கண்களுக்குத் தென்படவே இல்லை. இது இன்று நேற்று ஏற்படும் அனுபவமல்ல. சென்ற இரு மாதங்களாக அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சி. நாட்கள் கடந்து செல்லச் செல்ல என் பெருமூச்சில் வேகமும் மனச் சோர்வும் அதிகரித்து வந்தன.

இந்நிலை நீடிக்குமானால்..... 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்ற வள்ளுவரின் குறள் ரீங்காரம் செய்தது.

இத்தனை ஆண்டுளாக உழுது பயிரேற்றி அறுவடை செய்து மன மகிழ்வோடு வாழ்ந்த எனக்கு இப்படி ஒரு சோதனையா? தன்னிறைவோடு வாழ்ந்த எனக்குப் பிறரின் தயவை நாடும் நிலை வந்து விடுமோ? உள்ளம் வேதனையால் துடித்தது. வானத்தில் மேகங்களின் அம்சத்தையே காணோம். மழை பொய்த்து விட்டது. இதற்குள் நாற்றுநட்டு ஒரு மாத பயிராக இருக்க வேண்டிய தருணம் மழை இல்லை. அணைகளிலும் தண்ணீர் இல்லை.

வேதனை உள்ளத்தில் உறவாட, சஞ்சலம் ஊஞ்சலாட செய்வழி தெரியாது, திகைத்து வீட்டில் யோசனையுடன் உட்கார்ந்திருந்தேன்.

''ஐயா'' என்று யாரோ அழைப்பது கேட்டு வெளியில் வந்து ''யார்-என்ன வேண்டும்'' என்று வினவினேன்.

''நான் குருத்தங்கோடு ஒன்றிய விவசாய அதிகாரி. இவர்கள் என்னுடைய சக ஊழியர்கள்!''

விவசாய அதிகாரி என்றதும் அறியாமலே ஒரு உற்சாகம் ஏற்பட்டது. என்னுடைய சோதனைக்கு ஒரு மாற்று வழி கூற மாட்டார்களா என்ற நம்பிக்கையுடன் அவர்களை அமர வைத்தேன்.

''விரிவிளை பகுதியில் விளக்கப்பண்ணை ஒன்றை அமைக்க இருக்கிறோம். அந்தப் பகுதியில் உங்களுடைய வயலும் இருக்கிறது. அது சம்பந்தமாகப் பேச வந்தோம்'' என்றார் விவசாய அதிகாரி.

''ஆமாம் 35 சென்டு நிலமிருக்கிறது. பண்ணை அமைப்பதால் என்ன பயன்?''

''இப்பண்ணை எங்கள் மேற்பார்வையில் நடத்தப்படும். விதை கட்டுவதிலிருந்து அறுவடை வரை இலாகா சிபாரிசுபடி சாகுபடி செய்ய உதவி செய்வோம். எல்லா விவசாயிகளும் ஒத்துக் கொண்டு விட்டார்கள். உங்கள் அனுமதியைக் கேட்கத்தான் வந்தோம்''.

''நல்லது. ஆனால் மழையும் இல்லை. கால்வாயில் தண்ணீரும் இல்லை. பிற விவசாயிகள் தண்ணீர் உள்ள இடங்களில் நாற்றங்கால் போட்டு விட்டார்கள். எனக்கு வேறு வசதி இல்லாததால் நாற்றங்காலும் போடவில்லை; நான் எப்படி அவர்களோடு சேர்ந்து நடவு செய்ய முடியும்!'' என்ற கவலையை தெரிவித்தேன்.

''இதற்கு நீங்கள் கவலைப் பட வேண்டியது இல்லை. அதற்கு மாற்று வழி ஒன்று கண்டு பிடித்துள்ளோம். பாய் நாற்றங்கால் என்பது அதன் பெயர். இதற்குத் தனியாக நிலம் தேவையில்லை. வீட்டின் பின் பக்கத்திலோ வராந்தாவிலோ தயார் செய்யலாம். செலவும் குறைவு. ஒரு ஏக்கருக்கு 20 ச. மீட்டர் பாய் நாற்றங்கால் போதும்''.

அவர் கூறியதைக் கேட்டதும் எனக்கு ஆச்சரியமாகவும் அதே நேரத்தில் நல்ல பலனைத் தருமா என்ற சந்தேகமும் எழுந்தது. நாம் செய்வதை விட அவர்களே அதை செய்து காட்டினால் என்ன என்ற கேள்விக் குறியும் எழுந்தது.

''ஐயா! ஏற்கெனவே மனம் நொந்து இருக்கிறேன். புதிய உத்திகளில் எனக்கு அனுபவம் கிடையாது. நான் அதைச் செய்து நஷ்டமேற்பட்டால் அதை என்னால் தாங்கிக் கொள்ளும் சக்தியும் இல்லை. ஆதலால் எனக்காக ஒரு உதவி செய்வீர்களா?''


''சொல்லுங்கள். எது வேண்டுமானாலும் செய்கிறோம்.''

''எனக்கு இருக்கிற 35 செண்டு நிலத்திற்கும் நீங்களே பாய்நாற்றங்கால் தயார் செய்து தாருங்கள். அதற்கான செலவைத் தந்து விடுகிறேன்.''

''சரி, எங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளைவிற்குள் பாய் நாற்றங்கால் அமைத்துத் தருகிறோம். 24-7-78 அன்று அலுவலகத்திற்கு வாருங்கள். பாய் நாற்றங்கால் தயார் செய்து விடுவோம்.''

எனக்குப் பெரும் நிம்மதி ஏற்பட்டது. நாற்றுப் பாயும் வருவதாகக் கூறி அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினேன்.

24-7-78 அன்று காலை ஒன்றிய அலுவலகத்திற்குச் சென்றேன். விவசாய அதிகாரியும்



சக ஊழியர்களும் தயாராக இருந்தார்கள். விவசாயக் கிடங்கியின் பக்கத்திலுள்ள பந்தலில் முளை கட்டிய ஆடுதுறை 31 வித்துக்களை பெவிஸ்டின் என்ற புதிய மருந்தில் நனைத்து 5 ச. மீட்டரில் பாய் நாற்றங்கால் அமைத்தார்கள்.

நாற்றங்கால் அமைக்கும் பிரச்னை தீர்ந்து விட்ட மன நிறைவோடு வீடு திரும்பினேன். இரண்டு வாரங்கள் சென்றன. கால்வாயில் தண்ணீர் வந்துவிட்டதால் என் பக்கத்து வயல்களில் எல்லாம் நடவு துரிதமாக நடந்தது. நாமும் உடனடியாக நடாவிட்டால் அறுவடை பிந்திவிடுமே என்ற எண்ணம் எழுந்தது. நாற்றங்கால் அமைத்து இரு வாரங்கள் தானே ஆயிற்று? எவ்வாறு நடவு செய்யப் போகிறோம் என்ற கவலையுடன் ஒன்றிய அலுவலகம் சென்று விவசாய அதிகாரியிடம் நிலைமையை விவரித்தேன்.

''இதற்கா கவலைப்படுகிறீர்கள். நாளையே நட்டுவிடுவோம்!'' அவரது பதில் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

''எப்படிங்க முடியும்? நாற்று இரண்டுவாரம் தானே ஆயிற்று?''

''இரண்டுவார நாற்றுத்தான். அதனால் ஒன்றும் பாதகமில்லை. வாருங்கள். நாற்றங்காலைப் பார்க்கலாம்'' என்று கூறி அழைத்துச் சென்று நாற்றங்காலைக்காட்டினார். பிரமிப்பால் என்ன பேசுவதென்றே தெரியவில்லை எனக்கு. நாற்றுக்கள் கம்பீரமாக நின்றதோடு 24 நாட்கள் மதிக்கக்கூடிய அளவில் வளர்ந்துநின்றன.

விரைவாக வீட்டை அடைந்து நடவிற்கான ஏற்பாடுகளைச்செய்தேன், மண் பரிசோதனை ஆய்வில் 61 தழைச்சத்து 13 மணிச்சத்து 20 சாம்பல் சத்து போட வேண்டுமென்று சிபாரிசு செய்திருந்ததைக் கணக்கிட்டு அடியுரங்களை வாங்கினேன்.

8-8-78 அன்று காலையில் 15 நாட்களுடைய நாற்றுக்கள் 6'' × 4'' என்ற முறையில் நடவு செய்யப்பட்டது. விவசாய அதிகாரியும் ஊழியர்களும் உடனிருந்து கண்காணித்தது கண்டு பெருமைப்பட்டேன். நிலம் என்னுடையதாக இருந்தாலும் பயிர்ச் செலவுகள் நான் செய்தாலும் பயிரேற்றிய பெருமை அவர்களையே சாரும்.

அதைத் தொடர்ந்து எல்லா முறைகளும் மேலுரமிடல், இரண்டு முறை பயிர் பாதுகாப்பு செய்தல் ஆகிய அனைத்தும் அவர்களின் சிபாரிசுப்படியும் மேற்பார்வையிலும் நடைபெற்றன. பயிர் தழைத்தோங்கி வளர்ந்ததைக் காண என் கண்களுக்கு மட்டுமல்ல, இதர விவசாயிகளுக்கும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அறுவடை நாள். அறுவடை செய்து மகசூல் கணக்குப் பார்வையிடப்பட்டது. ஆச்சரியத்தால் என் கண்கள் விரிந்தன. உள்ளம் உவகையால் நிறைந்தது. 35 சென்டிலிருந்து 10.5 கோட்டை நெல் (630 கிலோ) களஞ்சியத்தை நிரப்பின.

வறட்சியின் காரணமாக முதற்போகம் போட முடியுமா? தண்ணீரில்லாதபோது நாற்றங்கால் அமைக்க முடியுமா? தன் தேவைக்குப் பிறரின் தயவை நாடும் அவல நிலை வந்துவிடுமா என்ற கேள்விகளுக்குத் தக்க விடையாக, சவாலாக வந்தது பாய் நாற்றங்காலே. இந்த முறையை நான் கடைபிடித்திராவிட்டால் பயிரேற்றிருக்கவும் முடியாது. அரிசி கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கும். ஆதலால் 'பாய் நாற்றங்காலை நல்வாழ்வுக்கு வழிகாட்டிய ஒளி விளக்கு' என்று கூறினால் அது மிகையாகாது.

## முதன்மை வகிக்கும் கதர் உற்பத்தி

கதர் கிராமத் தொழில்கள் கமிஷனின் தமிழ்நாடு பிரிவு அடுத்த நிதியாண்டில் கூடுதலாக 15,500 வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்கும். தற்போது தமிழ்நாடு மாநிலத்தில் கதர் கிராமத் தொழில்கள் துறையில் நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கின்றனர்.

**1977-78-ஆம் ஆண்டில் தமிழ்நாடு க்தர் உற்பத்தித் துறையில் இந்தியாவிலேயே முதலாவது இடத்தை வகிக்கின்றது.** இந்த ஆண்டில் 45 இலட்சம் மதிப்புள்ள கதர்த் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த ஆண்டில் நமது நாடு முழுவதும் 64 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

தமிழ்நாட்டில் 1977-78-ஆம் ஆண்டில் அனைத்து கிராமத் தொழில்கள் துறையிலும், 25 கோடியே 7 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. கிராமத் தொழில்கள் துறையில் 3 கோடியே 60 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது. அடுத்து 10 கோடியே 18 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பனைவெல்லம் உற்பத்தி செய்யப்பட்டது.

கிராமத் தொழில்கள் துறையில் மொத்தம் 3 இலட்சத்து 2 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கின்றனர். இதில் பனை வெல்லத் தொழிலில் மட்டும் சுமார் 2 இலட்சத்து 34 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கின்றனர்.

தமிழ்நாடு முழுவதும் மொத்தமுள்ள 1500 குடிசைத் தொழிலில் தீப்பெட்டி தயாரிக்கும் பிரிவுகளில் 132 பிரிவுகள் அரிசனங்களால் நடத்தப்படுகின்றன.



# தீக்குச்சியின் கதை

''என்னங்க...தம்பி அங்க இருக்கானா?''

''ஏன் மாலதி, அவனுக்கு இப்ப ஒண்ணும் வேலை கொடுக்காதே...படிச்சிக்கிட்டிருக்கான்.

''இல்லேங்க.. தீக்குச்சி தீந்து போச்சு...ஓடிப்போயி ஒருபெட்டி வாங்கி வரச் சொல்லுங்களேன்''

எல்லா வீடுகளிலும் நமக்கு மிகவும் பழக்கப்பட்ட, அடிக்கடி கேட்கும் கோரிக்கை குரல்தான்! அவசியமாய் இருக்க வேண்டிய தீப்பெட்டி இந்த வீட்டில் சற்று அவசரமாய் தேவைப்படுகிறது!

வத்திப்பெட்டி, நெருப்புப் பெட்டி, தீப்பெட்டி என வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படும் இத்தீப்பெட்டி இருள் நீக்கி ஒளிதருவது மட்டுலமல்ல, இத்தொழிலை நம்பி வாழ்ந்து வரும் பல குடும்பங்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்தும்வருகிறது.

அன்றாட வாழ்க்கையில் பயன்படும் அவசியத் தேவைகளுள் ஒன்றான, தீப்பெட்டி உற்பத்தியில் நமது தமிழ்நாடு, அகில இந்திய அளவில், முதலிடத்தை வகித்து வருகிறது. தீப்பெட்டி தொழில் வளர்ச்சிக்கென தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் இச்சிறப்பை ஏற்படுத்தியுள்ளன.



### தீப்பெட்டியின் வரலாறு

ஆதிமனிதன் உலர்ந்த குச்சிகளை ஒன்றோடொன்று பன்முறை தேய்த்து, உராய்வின் காரணமாக தீப்பொறி பறக்க அதனருகே உலர்ந்த புல் முதலியவற்றை வைத்துத் தீ மூட்டினான். பிறகு சக்தி முக்கிக் கல் பயன்பட்டது. இம்முறைகளில் தீ மூட்ட வெகுநேரம் பிடிக்கும் பின்னர் இரசாயனப் பொருட்களைக் கொண்டு தீ மூட்டும் பழக்கம் வந்தது. ஆனால் அம்முறையைக் கையாள்வதும் வசதியாக இல்லை.

இக்காலத்துத் தீக்குச்சியைப் போன்ற ஒரு வகையான தீக்குச்சியை ஜான் வாக்கர் என்ற ஆங்கிலேயர் 1827ல் முதன் முதலில் செய்தார். ஆண்டிமணி சல்பைடு, பொட்டாசியம் குளோரேட்டு, வேலம் பிசின் ஆகியவற்றின் கலவையைக் மூன்று அங்குல நீளமுள்ள மெல்லிய குச்சியின் முனையில் பூசி இவர் தீக்குச்சி தயாரித்தார். உப்புத்தாள் போன்ற ஒரு காகிதத்தின்மீது இக்குச்சி முனையைத் தேய்த்தால் வடித்துக் கொண்டே எரியும்.

விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப தீக்குச்சிகள் தயாரிக்கும் முறையில் தற்போது பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. தீக்குச்சி செய்வதற்கேற்ற பைன் அல்லது ஆஸ்பென் (Aspen) மரங்களை மெல்லிய குச்சிகளாக வெட்டிக் கொள்வர். இக்குச்சிகளைச் சட்டகங்களிலிட்டு ( Frame ) நிரப்பி அவற்றை பரபின் மெழுகில் மூழ்க வைத்து எடுப்பர். பாஸ்பர செஸ் குவிசல்பைடு ( Phospherouses quisulphid ) பொட்டாசியம் குலோரேட்டு, பொடித்த மண், படிகக்கல் ( Quartz ) கண்ணாடி பிசின் சாயம், துத்தநாக ஆக்ஸைடு போன்ற இரசாயனப் பொருட்களைத் தக்க விகிதத்தில் கலந்து அரைத்து, கிடைக்கும் இரசாயனக் கலவைக் குழம்பில், சட்டகத்திலுள்ள குச்சியின் முனைகளில் தோய்த்தெடுப்பர். இவ்வாறு தோய்க்கும்பொழுது இரசாயனக் கலவை முனைகளில் அளவோடு ஒட்டிக் கொள்ளும். இச் சட்டகங்களை உலரவிட்டு நன்கு உலர்ந்த பிறகு குச்சிகளை தீப்பெட்டிகளில் நிரப்பி சீட்டு ஒட்டி விற்பனைக்கு அனுப்புவர். தீப்பெட்டி செய்வதற்கு ஏற்ற மரத்தை மிக மெல்லிய தகடு போன்ற பலகைகளாகத் தயாரித்து அவற்றை வேண்டிய அளவில் மடித்துக் காகிதம் தயாரிக்கிறார்கள். தீப்பெட்டியின் ஓரங்களில் இரசாயனக் கலவை பூசி உலரவைக்க வேண்டும்.

### அரசின் நடவடிக்கைகள்

நாட்டின் மொத்தத் தேவையில் 30 சதவீதத்தை விம்கோ கம்பெனிக்கும், மீதமுள்ள 70சதவீதத்தை கையினாலேயே செய்யப்படும் தீப்பெட்டித் தொழில் பிரிவுகளுக்கும் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. கையினால் செய்யப்படும் தீப்பெட்டித் தொழில் முழுஅளவில் தமிழகத்திலும், குறிப்பாக, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மா

வட்டங்களில் பின்தங்கிய பகுதிகளிலே வளர்ந்து வருகின்றன. தவிரவும் உலர்ந்த சீதோஷ்ண நிலை பரவியுள்ள இடங்களே இத்தொழிலுக்குச் சாதகமான இடங்கள் என்பதால் மழையின்றி இருக்கும் தமிழ் நாட்டின் பிற்பட்ட பகுதிகளில் இத்தொழில் வளர வாய்ப்புக்களும் வசதிகளும் உள்ளன. எனவே, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் மட்டும் வளர்ந்துள்ள இத்தொழில் மற்ற மாவட்டங்களின் பின்தங்கிய பகுதிகளிலும் வளரவேண்டும் என்ற கருத்தில் தமிழக அரசு கூட்டுறவுச் சங்கங்களை அந்தந்த மாவட்டங்களிலேயே அமைக்கத்தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.



### தொழில் வளர்ச்சியில் கூட்டுறவின் பணி

75 மில்லியன் தீப்பெட்டிகள் மட்டும், ஆண்டுதோறும் உற்பத்தி செய்யும் திறனுள்ள தொழிற்கூடங்களுக்கு மத்திய அரசு கலால் வரிச்சலுகை அளிக் அளிக்கிறது. எனவே, சிறு சிறு தொழிற்கூடங்கள் பிற்பட்ட பகுதிகளிலே பல மாவட்டங்களில் துவக்கப்பட்டு வருகின்றன. இம்மாதிரி தொழிற்கூடங்கள் அமைந்துள்ள சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தங்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் அனைத்தையும் மற்ற மாநிலங்களிலிருந்து பெறுவது மிகவும் சிரமம் என்பதாலும், உற்பக்கியான தீப்பெட்டிகளை வடமாநிலங்களில் உள்ள சந்தைகளில் விற்பனை செய்வது கடினம் என்ற காரணத்தினாலும் தமிழக அரசு இந்தச் சிறு உற்பத்தியாளர்களுக்கு உதவ, ஆங்காங்கே சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கங்களைத் துவக்குவதற்கு உதவி செய்து வருகிறது. 1963 ஆம் ஆண்டு முதலாவதாக துவக்கப்பட்ட சங்கம் வெற்றிகரமாகச் செயல்பட்டு உற்பத்தியாளர்களுக்கு நல்ல பல சேவைகளைச் செய்ததால் உற்பத்தியாளர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டு இதுபோல் பல கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துத் தரவேண்டுமென்று அரசை அணுகினர். இது வரை, அதுபோன்ற 17 கூட்டுறவுச் சங்கங்கள் தமிழக மெங்கும் அமைக்கப்பட்டு, சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றன. தற்போது சாத்தூர், கோவில்பட்டி, கடைய நல்லூர், சிவகாசி, குடியாத்தம், பொள்ளாச்சி, புதுக்கோட்டை, முதுகுளத்தூர், அருப்புக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் விளாத்திகுளம் ஆகிய இடங்களில் இந்த 17 கூட்டுறவு சங்கங்களும் இயங்கி வருகின்றன. சிறு தொழிற்கூடங்கள் தமிழகமெங்கும் துவக்கப்பட்டு வருவதால் ஏனைய மாவட்டங்களிலும் இது போன்ற கூட்டுறவுச் சங்கங்கள் வரும் ஆண்டுகளில் துவக்கப்பட உள்ளன.

சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ள தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் ரூ. 500-பங்குத் தொகையாகச் செலுத்தினால் ரூ. 3000 வரை கடனாக அரசு கொடுத்து அந்தத் தொகையை உற்பத்தியாளர்கள் சார்ந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே பங்குத் தொகையாகச் செலுத்த உதவுகிறது. இது போன்று ரூ. 3500 பங்குத் தொகையாகச் செலுத்தியுள்ள உறுப்பினர்களுக்கு 75 சதவிகிதம் வரைக்கும் கடன் முறையில் தீப்பெட்டி உற்பத்தி செய்வதற்கான எல்லாவிதமான கச்சாப் பொருட்களையும் அந்தந்த சங்கங்களே அளிக்கின்றன. உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் தீப்பெட்டிகள் அனைத்திற்கும் சங்கமே கலால் வரி செலுத்தி உறுப்பினர்களிடமிருந்து பெறும் தீப்பெட்டிகளின் மதிப்பில் 90 சதவீத தொகையை முன்பணமாகத் தருவதுடன் தீப்பெட்டிகளை நல்ல விலைக்கு வட மாநிலங்களில் விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்கின்றன. இவ்விதம் தம் உறுப்பினர்களுக்காக சேவை செய்வதற்காக அந்தந்த சங்கங்கள், அவைகளின் நிர்வாகச் செலவிற்காக பண்டல் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் உறுப்பினர்களிடமிருந்து பெறுகின்றன. ஆண்டு இறுதியில் மிதந்த இலாபம் பெறும் சங்கங்கள் ஏற்கெனவே வசூல் செய்த கமிஷன் தொகையில் பெரும் பகுதியை உறுப்பினர்களுக்கே திருப்பிக் கொடுத்து விடுகின்றன.

தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு உதவுவது போன்றே இத்தொழிலிலே ஈடுபட்டுள்ள தொழிலாளர்க்காகவும், தமிழக அரசு கூட்டுறவு சங்கங்களை அமைத்துத் தருகிறது. 75 மில்லியன் தீப் பெட்டிகள் உற்பத்திச் செய்யும் தொழிற் கூடங்களுக்கு மட்டுமே மத்திய அரசு கலால் வரிச்சலுகை அளித்து வருகிறது. எனவே 20 முதல் 30 தொழிலாளர்கள் கொண்ட சிறு சிறு சங்கங்கள் தமிழக அரசினால் அமைக்கப்பட்டு வருகின்றன. அவைகள் மூலப்பொருட்களை கொள்முதல் செய்து தீப்பெட்டிகளை வசதியாக நல்ல விலைக்கு விற்பனை செய்ய இயலாதாகையால், இதுபோன்ற சங்கங்கள் அப்பகுதியிலே இயங்கி வரும் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாகச் சேர்ந்து ஏனைய சிறு உற்பத்திளர்கள் பயன்பெறுவதுபோன்றே பயன் பெறுகின்றன. தாழ்ந்த நிலையிலே வாய்ப் பற்றிருக்கும் தொழிலாளர்க்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு இதுபோன்ற சங்கங்களை பெருமளவில் தோற்றுவிக்க தமிழக அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இச்சங்கங்களில் சங்கம் ஒன்றுக்கு ரூ. 7500 வீதம் தமிழக அரசு பங்கு முதலீடு செய்கிறது. இவ்வாண்டு இறுதிக்குள் இத்தகைய சங்கங்களின் எண்ணிக்கை 90 வரை உயரும் என்பதுடன், வரும் ஆண்டுகளிலும் தமிழகமெங்கும் பெருமளவில் சங்கங்கள் துவக்கப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

இத்தொழிலை புதிதாக ஒரு பகுதியில் பரப்ப வேண்டுமென்றால் அப்பகுதியிலே வாழும் தொழிலாளர்க்கு இத்தொழிலை கற்றுத் தர வேண்டும். அதற்காக சில பகுதிகளில் பெண்களுக்குப் பெட்டித் தொழில் பற்றிய பயிற்சி அளிப்பதற்காக பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டு வருகின்றன அருப்புக்கோட்டை, விளாத்திக்குளம், மேலப்பாளையம் ஆகிய பகுதிகளில் பகுதி ஒன்றுக்கு சராசரியாக 165 பெண்களுக்கும் மற்றும் திருமங்கலம் பகுதியில் 500பெண்களும் பயிற்சியளிக்க பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. பயிற்சி நிலையங்கள் அமைப்பதற்கும் நடத்துவதற்குமென செலவுகள் அனைத்தையும் அரசே ஏற்றுக் கொள்வதுடன் பயிற்சிக் காலத்தில் 30 நாட்களுக்கு நாளொன்றுக்கு ரூ 3 வீதம் பெண்களுக்கு ஊதியமாகவும் தரப்படுகிறது. தீப்பெட்டி உற்பத்தியில் குச்சி அடுக்குதல், பெட்டிகள் செய்தல், போன்ற பல வேலைகளைபெண்கள் தங்கள் வீடுகளிலே, தங்களதுளது அன்றாட வேலைகளைச் செய்து கொண்டு இந்தத் தொழிலையும் செய்து ஊதியமும் பெற முடிகிறது. பயிற்சி நிலையங்களைச் சுற்றி சுமார் பத்துமைல் சுற்றளவிலான பகுதியில் வாழும் பெண்களும் இப்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தமிழகத்தில் இயங்கி வரும் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் கடந்த நிதியாண்டில் (1977-78) ரூ. 1.50 கோடி மதிப்புள்ள கச்சாப் பொருட்களை உறுப்பினர்களுக்கு பங்கிடு செய்து கொடுத்துள்ளது. ரூ. 4.02 கோடி மதிப்புள்ள தீப்பெட்டிகள் உற்பத்தி செய்து ரூ.4.48 கோடிக்கு விற்பனை செய்துள்ளன. நடப்பு நிதி ஆண்டின் சனவரி மாதம் வரை இச்சேவை கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 1.67 கோடி மதிப்புள்ள கச்சாப் பொருட்களை விநியோகம் செய்து ரூ. 4.08 கோடி பெறுமான தீப்பெட்டிகள் உற்பத்தி செய்து ரூ. 4.71 கோடி மதிப்புள்ள தீப்பெட்டிகளை விற்பனை செய்துள்ளன.

தமிழ்நாட்டில் வரும் ஆண்டுகளில் கூட்டுறவுத் துறையின் கீழ் தொழிற்கூடங்கள் அதிகமாக அமைக்கப்பட்டு, அதன்பொருட் தீப் பெட்டிகளின் உற்பத்தி மற்றும் விற்பனையும் அதிகமாக வாய்ப்புக்கள் உள்ளன.

—இராவணன்

## புலியைப் பார்த்தீர்களா?



நீங்கள் எங்காவது புலியைப் பார்த்தீர்களா?

அப்படியானால் நீங்கள் அது பற்றிய தகவல்களை, புது டில்லியிலுள்ள கிரிஷிபவனில் அமைந்துள்ள மத்திய விவசாயப் பாசன வசதி அமைச்சகத்தைச் சேர்ந்த புலிகள் பாதுகாப்புத் திட்டத்தின் இயக்குநருக்குத் தகவல் தெரிவிக்கலாம்.

புலியைப் பார்த்தவரின் பெயர், தேதி, மாதம், இடம், காட்டின் பெயர் மற்றும் அதன் பரப்பு, புலி கண்ணுக்குத் தென்பட்ட நேரம், அந்த நேரத்தில் அந்தப் புலி நின்றிருந்த கோணம், அந்தப் புலி அந்தப் பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கும்போது காணப்பட்டதா அல்லது படுத்த நிலையில் காணப்பட்டதா, ஒய்வு எடுக்கும் நிலையில் காணப்பட்டதா அல்லது தூங்கும் நிலையில் காணப்பட்டதா என்பது போன்ற விவரங்கள், நீங்கள் அளிக்கும் தகவல்களில் இடம் பெற வேண்டும்.

இயற்கைச் சூழ்நிலையில் உயிரினங்களின் வாழ்க்கையை ஒருநிலைப்படுத்துவதற்கு வனவிலங்குகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியம். வனவிலங்குகளில் புலி ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

கடந்த காலத்தில் காடுகள் அழிக்கப்பட்டதனாலும், புலிகள் சட்டத்துக்குப் புறம்பாக வேட்டையாடப்பட்டதனாலும், புலிகளின் எண்ணிக்கை அஞ்சத்தக்க வகையில் குறைந்து வந்துள்ளது. வரும் தலைமுறையின் நன்மைக்காகவும், வனவிலங்குகளை நியாயமான முறையில் பாதுகாக்கவும் புலிகளின் எண்ணிக்கையைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம்.

ஏராளமான வனவிலங்கு சரணாலயங்களும், புலி பாதுகாப்புப் பகுதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மிகவும் மதிப்புள்ள வனவிலங்குகளின் தோல், கொம்பு, ஆகியவற்றுக்காக மனிதன் அவற்றைச் சிறிதுகூட கருணையில்லாமல் கொன்றுவிடுகிறான். அந்த அபாயத்திலிருந்து அந்த மிருகங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக இந்தச் சரணாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில், 1971 மக்கட் தொகைக் கணக்கின்படி 9,47,351 மக்கள் 4,651 சதுர கி.மீ. பரப்பில் வசிக்கின்றனர். தமிழ்நாட்டிலுள்ள சிறிய மாவட்டங்களில் இதுவும் ஒன்று. இங்கு 2,359 கிராமங்கள் உள்ளன. புதுக்கோட்டை, அறந்தாங்கி ஊர்களைத் தவிர மக்கட்தொகை நெருக்கமாக உள்ள நகர்ப்புறங்களே இல்லை.

குளத்தூர், திருமயம் வட்டங்களில் 2,108 சதுர கி.மீ. பாறை உள்ளது. திருமயம் வட்டத்தின் தென்கிழக்குப் பகுதி புதுக்கோட்டை, ஆலங்குளம் வட்டங்களில் 582 சதுர கி.மீ. பரப்பிற்கு மண்பாங்கானது. கடல் இதுவரை இருந்ததற்கு இன்றும் அடையாளங்கள் உள்ளன. ஆவுடையார்கோவில், அறந்தாங்கிப் பகுதிகளில் 1,847 சதுர கி.மீ. மணல் களி மண்ணுடன் கலந்து உள்ளது. கடற்கரை ஓரங்களில் அண்மைக் காலத்தில் மணல் படிவால் ஆன பகுதி உள்ளது. இதன் பரப்பு 118 சதுர கி.மீ. ஆகும்.

மொத்த நிலப்பரப்பில் 90 சதவீத பூமியில் நிலத்தடி நீர் பெறுவதும், உபயோகிப்பதும் கடினமாகும். 50 சதவீத பரப்பில் கடல்நீர் நிலத்தடி நீரில் கலந்ததால் அதிக உப்பாக உள்ளது. எனவே, மிகக் குறுகிய நிலப்பரப்பில்தான் குடிக்க ஏற்ற போதுமான அளவு நிலநீர் உள்ளது.

**கிராமக் குடிநீர் நிலை உள்ள கிராமங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | குடிநீர் நிலை இல்லாதவை | 434 |
| 2. | உப்பு நீர் உள்ளவை | 77 |
| 3. | கோடையில் குடிநீர் அற்றவை | 327 |
| 4. | தனியாரது குடிநீர் நிலை கொண்டவை | 418 |
| 5. | ஒரு கி.மீ. தூரத்தில் நீர் நிலை உள்ளவை | 49 |
| 6. | எக்காலத்தும் குடிநீர் உள்ளவை | 1054 |
| | மொத்த கிராமங்கள் | 2359 |


**வாரியப் பணிகள்:**

அரசு அறிவித்த கொள்கைப்படி நீரில்லாத கிராமங்கள், உப்பு நீர் கொண்ட கிராமங்கள் ஆன 551 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்கத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதுக்கோட்டை, அறந்தாங்கி ஆகிய நகர்ப்புறத் திட்டங்களையும் விரிவுபடுத்தும் பணியும் நடந்து வருகிறது. இவைகளின் மதிப்பீடு 3 கோடி ரூபாயாகும்.

ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதலுக்கென அனுப்பிய திட்டங்களின் மதிப்பு ரூ. 31 இலட்சமாகும். தவிர மேலும் ரூ. 31 இலட்ச மதிப்புடைய திட்டங்கள் ஆய்வு அமைப்பு நிலையில் உள்ளன.

**சிறப்புத் திட்டங்கள்:**

குளம், குட்டைகளில் தேங்கிக் கிடக்கும் மழை நீரையே மக்கள் உபயோகித்து வரு




# வரப்பில் உளுந்து



"பருப்பில்லாமல் கல்யாணமா!" என்ற பழமொழியை நாம் அனைவரும் அறிந்ததே. நமது உணவு சுவையுள்ளதாகவும், ஊட்டம் தரும் புரதச் சத்து நிறைந்ததுமாக இருக்கப் பயறு வகைகளைத் தேவையான அளவு உபயோகிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

'சமச்சீர் உணவு பெற ஒவ்வொரு நாளும் ஒரு மனிதனுக்கு உணவு 84 கிராம் பயறு வகைகள் கிடைக்க வேண்டியது அவசியம். ஆயினும் தற்போது சராசரியாக நாம் உபயோகிக்கும் பயறு வகைகளில் அளவு 17 கிராம் மட்டுமே ஆகும்.

இவ்வளவு குறைவான அளவில் பயறு வகைகள் உபயோகிப்பதற்குக் காரணம் என்ன என்று பார்ப்போம்.

தமிழ்நாட்டில் 1970-71-ஆம் ஆண்டில் 4.55 இலட்சம் எக்டேர் பரப்பில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. 1976-77-ஆம் ஆண்டில் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும் பரப்பு 5.45 இலட்சம் எக்டேர் ஆகும். இவ்வாறு பயிரிடப்படும் பயறுவகை பயிர்களைப் பெரும்பாலும் மானாவாரிப் பயிர்களாக இருப்பதால் 1.56 இலட்சம் டன்களே பருப்பு வகைகள் கிடைக்கின்றன. சமச்சீர் உணவு பெற நமது மக்கள் தொகைக் கணக்குக்கிணங்க 1984-ஆம் ஆண்டில் 16.4 இலட்சம் டன்கள் தேவையெனக் கணக்கிடப்படுகிறது.

எனவே, நமது தமிழக வேளாண்மைத்துறை பயறுவகைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க பல திட்டங்களைத் தீட்டியுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

1. பயறு சாகுபடிப் பரப்பை அதிகரிக்கச் செய்தல்.

2. நெல் தரிசு நிலங்களில் பயறு வகைப் பயிர்கள் பயிராகும் பரப்பை அதிகரித்தல்.

3. பயறு வகைப் பயிர்களின் உற்பத்தியை எக்டேருக்கு 7 கிலோ வீதம் அதிகரிக்கும் வகையில் கீழ்க்கண்ட பொறுக்கு விதைகளை விநியோகித்தல்.

4. 1. துவரை, எஸ். ஏ., 1, பிரபாத்.

2. உளுந்து, கே. எம். 1, கே. எம். 2.

3. தட்டைப்பயறு, கோ. 1. மற்றும் டி. 9 சி-152.

4. பயறு வகை விதைகளுடன் நுண் உயிர்ச்சத்து (பாக்டீரியல் கல்ச்சர்) கலந்து விதைப்புச் செய்தல்.

5. தகுந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்தல்.

6. மகசூலை அதிகரிக்க மணிச் சத்து உரங்களைப் பயிருக்குத் தெளித்தல்.

7. பயறு வகைப் பயிர்களுக்கு அடியுரமாகத் தழை மற்றும் மணிச்சத்து உரங்களை இடச் செய்தல்.

8. போதிய விதை அளவை உபயோகிப்பதால் தேவையான பயிர் எண்ணிக்கை இருக்குமாறு பார்த்துக் கொள்ளுதல்.

9. ஒரு ஏக்கர் மாதிரி தளைகள் அமைத்து பயறு வகைச் சாகுபடி முறைகளைப் பரவச் செய்தல்.

10. பரந்த அளவில் மருந்து தெளிக்கும் இயக்கத்தைக் கையாளுதல்.

இவ்வாண்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் நெல் வயலின் வரப்புகளில் டி. 9 உளுந்து பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டு அய்யப்பன்தாங்கல் கிராமத்தில் ஊக்கமுடன் பயிரிடப்பட்டு, நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு வயலில் உணவுப் பயிரும் வரப்பில் ஊட்டமுற புரதப்பயிரும் வளர்த்துத் தமிழ்நாட்டில், சத்துள்ள உணவைப் போதிய அளவு உற்பத்தி செய்ய வேளாண்மைப் பெருமக்கள் முன்வரலாமே!

கின்றனர். சேறு அதிகமுடைய குட்டைகளில் பெறும் நீரைத் ''தேத்தாங்கொட்டை'' மூலம் தெளிய வைத்து உபயோகிக்கின்றனர்.

மழை குறைவான ஆண்டுகளில் குளம், [illegible] நீர் கிடைப்பதில்லை. எனவே, [illegible] கிணறுகளில் நீர் பெறுகின்ற [illegible] ரப் பகுதிகளில் ஊற்று நீரை அகப்பைக் கொண்டு இறைத்து உபயோகித்து வருகின்றனர். இம்முறைகள் மக்கள் நலத்தைப் பெரிதும் பாதித்து நீர்வழி நோய்களான டைபாய்டு, காலரா, வயிற்றுக் கடுப்பு, போன்ற நோய்களை விளைவிக்கின்றன.

நிலப்பரப்பில் பாதி பாறை, 40 சதவீதம் உப்பு, நிலத்தடி நீர்கொண்ட கடல் ஓரப் பகுதிகள். எனவே, திட்ட அமைப்பின் தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**பாறைப்பகுதித் திட்டங்கள் :**

நீர்நிலை இல்லாக் கிராமங்கள் பெரிதும் இப்பகுதியில் உள்ளன. குளங் குட்டைகளின் எண்ணிக்கை குறைவு. மக்கள் பெரிதும் கிணற்று நீரையே உபயோகிக்கின்றனர். குடிநீரே இல்லாத கிராமங்கள், உப்பு நீர் கொண்ட கிராமங்கள் ஆகியவற்றுக்கென திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

குடிநீருக்கான ஆழ்துளைக் கிணறுகளும், கைப்பம்ப்பு, மின்விசைப் பம்ப்புகளும் உயர் மட்டத் தொட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

துளைக் கிணறு அமைக்கும் முன் 'மின் தடைக் கருவிகள்' கொண்டு நீருள்ள இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. குழாய்க் கிணறுகளில் கிடைக்கும் நீரைப் பரிசோதித்து குடிக்க ஏற்றது எனில் கைப்பம்ப்போ, மின்விசைப் பம்ப்போ பொருத்தி நீர் வழங்கப்படுகிறது. 30 முதல் 40 மீட்டர் ஆழம் வரை பாறைப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் உப்புத் தண்ணீர் தான் கிடைக்கிறது. வெளி இடங்களிலிருந்து நீர் பெற்று வழங்கத் திட்டங்கள் உள்ளன.

கைப் பம்ப்புகளைப் பழுதின்றிப் பாதுகாக்க பல வகைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மின் அழுத்தம் குறைவு, தவறான இயக்கு முறைகளால் மின்விசைப் பம்புகள் பழுதுறுகின்றன. இக்குறைபாடுகளைப் போக்கப் பாதுகாவலர், இயக்குனர் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பம்ப்புகளைப் பழுது செய்வதற்கென 1,000 கைப்பம்ப்புகளுக்கு ஒரு நடமாடும் பணி மனை அமைக்கப்பட்டுள்ளது.

**உப்பு நீர்ப் பகுதித் திட்டங்கள் :**

நீர்நிலை இருந்தும் குடிக்க உப்பு நீர் ஒன்று தான் வழி. மழை நீரில் ஒரு பகுதி குளம் குட்டைகளில், ஆறு ஆகிய நீர் நிலையை அடைகிறது. பயன்படுத்திய நீர் போக மீதி நீர் ஆறுகளின் வழி கடலில் சேர்கிறது.

மறு பகுதி பூமிக்குள் கசிந்து நிலத்தடி நீர் ஆகிறது. பூமியின் பாங்கிற்கேற்ப இதன் தன்மை அமைகிறது. நீர் பல பொருட்களைக் கரைக்க வல்லது. எனவே, நிலத்தடி நீரில் உப்புக்கள் பல கரைந்திருக்கும். குளம், குட்டை, ஆறு இல்லாத பகுதிகளுக்கு நிலத்தடி நீர் ஒன்றுதான் நீர் நிலை. அதிக உப்புக் கரையாத நீரை மக்கள் குடிக்கும் நீர் என ஏற்று உபயோகிக்கின்றனர்.

நிலத்தடி நீர் அடி பூமியின் வாட்டத்திற்கு ஏற்ப கடல் நோக்கிச் சென்று கலக்கிறது. மேல் மட்டத்தில் கடலுடன் சேரும் பகுதி, கீழும் மேலும், நீர் புகா நில அமைப்புகளுக்கிடையே மிக்க அழுத்தத்துடன் ஆழ்கடல் சென்று கலக்கும் பகுதி எனப் பிரிக்கலாம். கடலோரப் பகுதிகளில் கிணறுகள் அமைத்து விவசாயத்திற்கென நீர் மின்விசைப் பம்ப்புகளால் இறைக்கப்படுகிறது.

நிலத்தடி நீர் ஊறும் அளவு, இருப்பளவு, இவற்றிற்கு மேல் நீர் பெற்றால் மேல் பகுதியில் கடலுடன் கலக்கும் நீரின் அளவும் அழுத்தமும் குறையும். பருவ மழை தவறுவது பெரும் அளவில் கடலோரப் பகுதிகளில் கிணறுகள் அமைத்து நீர் பெற்றால் இவைகளால் இவ்விளைவு விபரீதத்தை விளைவிக்கும்.

அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், அரிமழம் போன்ற பகுதிகளில் நிலத்தடி நீர் பெரிய அளவில் பயன்படுத்தப்படுகிறது. எனவே, கடலுடன் கலக்கும் நிலத்தடி நீரின் அழுத்தம் குறைந்ததால் கடல் நீர் பூமிக்குள் புகுந்துள்ளது. இன்றைய நிலை கடல் நீரும் நிலத்தடி நீரும் கலந்த நிலத்தடி நீர்தான் இப்பகுதிகளில் கிடைக்கிறது. எனவே, குடிக்க நீர் வேண்டும் எனில் குளம் குட்டை ஆறு வற்றிய காலங்களில் இவ்உப்பு நீர் ஒன்றுதான் வழி.

குளம் குட்டைகள் மிக அதிகமாக உள்ள பகுதிகளும் இதுவே. இந்த நீர் நிலைகளிலிருந்து கசிந்து பூமிக்குள் புகும் நீர் உப்புத் தன்மையைக் குறைக்கிறது. கோடைக் காலங்களில் நீர்நிலைகளில் நீர்வற்றிவிடும். எனவே, மக்கள் பல்லாண்டுக் காலமாக உப்பு நீரையே உபயோகித்து வருகின்றனர். ஆற்றில் ஊற்று தோண்டி நீர் பெற்றாலும் அதுவும் உப்பு நீரே. இங்கு வசிக்கும் மக்கள் இக் காரணங்களினால் அன்றாட வாழ்விற்குக் குறைந்த அளவு நீரையே உபயோகிக்கின்றனர்.

இக்குறை நீண்ட நெடுங்காலமாக நீக்கப் படாமைக்குக் காரணம், திட்டச் செலவின் மிகப் பெரிய அளவே. மக்கள் நெருக்கம் மிகக் குறைவு. பரந்த நிலப் பரப்பில் சிறுசிறு கிராமங்களில் ஆங்காங்கு வாழ்கின்றனர். கடலோரப் பகுதிகளில் மீன் பிடிப்போரும் கடலை ஒட்டிய நிலப்பரப்பில் விவசாயம் செய்வோரும் வாழ்கின்றனர்.

திட்டச் செலவின் அளவையும் பாராது குடிக்க நீரின்றி அவதியுறும் ஏழை எளிய மக்களின் குறைபோக்க அரசு அறிவித்த கொள்கைப்படி, தமிழகத்திலேயே, கிராமக் குடிநீர்த் திட்டங்கள் மிகப் பெரிய அளவில் இராமநாதபுரம், புதுக்கோட்டை. மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகின்றன. சுமார் ரூ. 10 கோடி மதிப்புடைய திட்டங்கள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன.

பூமி தோன்றிய காலந்தொட்டு நீக்கப் படாத குறை போக்கப்படுகிறது. மக்களின் நல்வாழ்விற்குக் குடிநீர் பெரிதும் பயன்படும். நலமாக வாழ்தல் அதிக உழைப்பு நாட்களை நல்கும். எனவே, அந்த உழைப்பின் அடிப்படையில் பலமுனை முன்னேற்றம்!



# மதியைக் கெடுக்கும் மது



**—டாக்டர் எஸ். எம். சன்னபசவன்னா**

**தேசீய மனநோய் மருத்துவக் கழகப் பேராசிரியர், பெங்களூர்.**

இன்பத்தை அனுபவிப்பதற்காகவும், துன்பத்தைப் போக்குவதற்காகவும் ஆண்டாண்டுக் காலமாகப் புதிய முறைகளைத் தேடி மக்கள் முயற்சி செய்து வருகின்றனர். இந்த இடைவிடாத முயற்சியின் எடுத்துக்காட்டாக மது திகழ்கிறது. பொழுதுபோக்கு நடவடிக்கைகளையும்விட மது பானங்கள் அதிக அளவில் காணப் படுகின்றன.

சுறுசுறுப்பு நிறைந்த இந்த நவீன உலகில் மகிழ்ச்சிக்காகவும், ஆறுதலுக்காகவும் அமைதிக்காகவும் இலட்சோப இலட்சம் மக்கள் மது அருந்துகிறார்கள். எனினும் இன்றைய தினம் மது மனித வர்க்கத்தைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. வரலாறு முழுவதும் இதுதான் நிலைமை. ஒவ்வொரு சமூகத்திலும் மது அருந்துபவர்கள் அதற்கு அடிமையாகாமல் அதை அனுபவிக்க இயலாமல் உள்ளனர்.

''மனிதன் மதுவை முதலில் அருந்துகிறான்; பின்னர் மனிதனை மது அழித்துவிடுகிறது'' என்பது ஜப்பானியப் பழமொழி. மது பழக்கத்தினால் ஏற்படுகின்ற பிரச்சினை ஒரு நோயாகப் பொதுமக்கள் மற்றும் விஞ்ஞானக் கண்ணோட்டத்தை இயக்கும் வகையில் அமைந்துள்ளது.

மனித உடலில் மூளை மிக முக்கியமான உறுப்பாகும். இருதயம் வெறும் 'பம்பு' போன்றதுதான். நுரையீரல்கள் சுவாச அமைப்பாகும். ஆனால், கட்டுப்பாடு எஜமான் மூளையேயாகும்.

மன உணர்வின் இருப்பிடமாகவும், மனிதனின் சிந்தனை மற்றும் உணர்வுகளின் இருப்பிடமாகவும் அது திகழ்கிறது. மனிதனின் சிந்தனை மற்றும் இருதயத்தையும் சுவாச முறையையும் அது ஒழுங்குபடுத்துகிறது. கோபத்தைக் கட்டுப்படுத்துகிறது.

உணர்ச்சி உறுப்புகள் மூலமாக வரக்கூடிய தகவல்களைப் பிரித்து அவற்றை முறைப்படுத்தி மனிதன் தக்க முறையில் செயல்படவும், தன்னைச் சுற்றியுள்ள உலகத்துடன் தொடர்ந்து தொடர்பு கொண்டிருக்க மூளை உறுதுணை செய்கிறது. உணர்வுகளைத் தூண்டவும் கட்டுப்படுத்தவும் செய்கிறது. பால் உணர்வுகளை ஒழுங்குமுறைபடுத்துகிறது.

உடலில் ஒவ்வொரு உறுப்பையும் மது பாதிக்கிறது. வயிற்றில் மது சென்றவுடன் இரத்தக் குழாய்கள் வழியாக நரம்பு மண்டலத்தை எட்டுகிறது. இதன் முக்கியமான பகுதி மூளையாகும். மூளையின் செயல்பாட்டைக் குறைக்கவும் அல்லது மயக்கமுறச் செய்யவும் மது காரணமாகிறது. சோர்வூட்டும் தன்மை மதுவுக்கு இருந்தபோதிலும் முதலில் இதற்கு நேர்மாறான உணர்வை மது ஏற்படுத்துகிறது. சுயக்கட்டுப்பாடு தடைகளையும் தயக்கங்களையும் அது அகற்றிவிடுவதே அதற்குக் காரணமாகும்.

பலமுறை மது அருந்திய பின்னர்தான், மூளையின் இயக்க மையம் வெளிப்படையாகப் பாதிக்கப்பட்டுக் கால் தள்ளாடுவதும் கைகள் நடுங்குவதும் ஏற்படுகின்றன.

**கட்டுப்பாடற்ற செயலற்ற நிலைமை:**

தன்னைப் பற்றிய தற்புகழ்ச்சி கட்டுப்பாடுகள் அகற்றப்படுவதாலும், ஆரம்பத்தில் மதுவினால், உற்சாகம் ஏற்படுகிறது. தயக்கங்கள் நீக்கப்படுவதால், மதுவைக் குறைந்த அளவு பயன்படுத்துவதற்கான முக்கியக் காரணமாக அமைகிறது. உடல் நல மற்றவர்களுடன் தயக்கமின்றிப் பழகுவது சில வேலைகளில் ஆக்கப்பூர்வமான பணிகளுக்கும் திறமையான முயற்சிகளுக்கும் அதிக உத்வேகம் ஏற்படுவதாகக் கருதப்படுவதும் இதனால் உருவாகிறது.

மதுவை அதிகமாகப் பயன்படுத்துவதால் நியாய மற்றும் பகுத்துணரும் தன்மைகள் பாதிக்கப்படுகின்றன. பலமும் நிறைவும் குறைகின்றன. இறுதியாக மனிதனின் ஆழ்மையும் தோற்றமும் படிப்படியாக நாசமடைகின்றன. அளவுக்கு அதிகமாக மது அருந்துவதன் மூலம் ஒருவனின் நடவடிக்கை எந்த விதத்திலும் தொடர்பில்லாமல் போய்விடுகிறது. அவனுடைய வேலைத் திறமை குறைகிறது. நியாய உணர்வு பாதிக்கப்படுகிறது. புதிய நிலைமைகளுக்கு ஈடு கொடுக்கக்கூடிய தன்மையை இழக்க நேரிடுகிறது.

மதுவை அதிகமாக அருந்துவதன் மூலம் மூளையும், நரம்பு மண்டலமும் செயல்வேகத்தை இழக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.

ஒரு கட்டத்தில் மதுவுக்கு அடிமையாகக்கூடிய நிலைமை ஏற்படும். இதனால் உடலும் உள்ளமும் பாதிக்கப்படுகின்றன.

இந்த நிலைமைக்குக் குடிநோய் என்று பெயர். மது அமைதியின்மையும் வேறு பல நோய்க்கூறுகளும் இதன் மூலம் ஏற்படுகின்றன.

**மதுவினால் ஏற்படும் நோய்கள் என்னென்ன?**

ஜன்னி கூறுகள் : தொடர்ச்சியாக மது அருந்திக் கொண்டே இருப்பதன் மூலம் இந்த நோய் சாதாரணமாக ஏற்படுகிறது. உணவு மற்றும் வைட்டமின் சத்து நிறைந்த பொருட்களைச் சாப்பிடாமல் ஒதுக்குவதன் மூலம் இது ஏற்படுகிறது. இதனால் ஓய்வின்மையும் தூக்கமின்மையும் அச்சமும் வியர்த்துக் கொட்டும் தன்மையும் ஏற்படுகிறது. தூக்கம் வராமல் அவதிப்படும் நிலைமைகளோடு அச்சம் அடையக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. பார்வை சுத்தம் மற்றும் உணர்வு பூர்வமாக எல்லாவிதத் தோற்ற மயக்கமும் ஏற்பட்டு, ஜன்னியும் பிதற்றக்கூடிய நிலைமையும் உருவாகிறது. வலிப்பும் ஏற்படும். ஜன்னியினால் தன்னையே முழுமையாக இழந்துவிடுவதோடு பெரும் பீதியும் ஏற்படுகிறது.

விரல்கள் முக தசை நார்கள், நாக்கு ஆகியவை பொதுவாகப் பாதிக்கப்படுகின்ற நாடித்துடிப்பு வேகம் அடைகிறது. உடல் வெப்பம் அதிகரிக்கிறது. நிலைமை சீரடைய 3 முதல் 4 தினங்கள் பிடிக்கலாம். சில வேளைகளில் மாரடைப்பு மூலம் உயிரே போய் விடக்கூடிய அபாயம் உள்ளது.

**ஞாபக மறதி:**

ஞாபக மறதி : ஞாபக மறதியும், குழப்பமும், மயக்கமும் ஏற்படுவதோடு ஆட்களையும் இடத்தையும் நேரத்தையும் பற்றிக் கவலைப்படாத தன்மையும் உருவாக்குகிறது. ஆட்களைச் சரியாக அடையாளம் காண முடிவதில்லை. ஞாபக மறதி பளிச்சென்று தெரியும்வரையில் அமைந்துவிடும். அண்மையில் நடந்த நிகழ்ச்சிகளைக்கூட ஞாபகத்தில் வைத்திருக்க முடியாது. மனநோய்க் கூறுகளுடன் சத்துக் குறைவால் ஏற்படக்கூடிய தன்மைகளும் வெளிப்படும். தசை நார்கள் வலுவிழந்து உணர்வுகள் பாதிக்கப்பட்டு முன்னங்கால் தசைகள் மென்மையடைந்துவிடுகின்றன. நடை தள்ளாடும் : விழிகள் சோர்வடைந்து எந்தப் பொருளையும் பார்க்கும்போது இரண்டாக தெரியும்.

**வலிப்பு:**

வலிப்பு : நாள்பட்ட குடிகாரர்களுக்கு வலிப்பு ஏற்படுவது சகஜம். அதிகபட்சமாக குடிக்கும்போது அல்லது குடிப்பழக்கத்தை நிறுத்தியவுடனேயோ இது ஏற்படலாம். இதற்கு ''நரம்புவலிப்பு'' என்று பெயர்.


தள்ளாட்டம் மதுவினால் மூளை நரம்புகள் பாதிக்கப்படுவதால் நடை தள்ளாடுவதும், கைகள் நடுங்குவதும் ஏற்படுகின்றன. இது மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு நீடித்து அப்படியே ஸ்தம்பித்து விடலாம்.

உடல்வலி : எலும்பிலிருந்து தசைகள் கிழிந்து வருவதைப் போன்று கடுமையான வலி தோன்றலாம். இரவில் இது மேலும் மோசமடையும். மதுவினால் ஏற்படக்கூடிய அச்சமூட்டு கனவுகள் போன்று பல வகையான மனநோய்களும் ஏற்படும்.

மூளை, நரம்பு மண்டலம் மனிதனின் மனம் ஆகியவற்றில் மது ஏற்படுத்தக்கூடிய விளைவுகளை நோக்கும்போது, யாரும் மது அருந்தாமல் இருப்பதே நல்லதெனப் புலனாகிறது.

மது மூளையைப் பாதிப்பதால், நமது நாட்டில் சாலை விபத்துக்கள் அதிக அளவில் ஏற்படுகின்றன. குற்றங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றன.

## மதுவிலக்கு — தமிழ்நாட்டுக்குப் பாராட்டு!



மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் பிரதாப் சந்திர சுந்தர் அவர்கள், நான்கு ஆண்டுகளில், பூரண மதுவிலக்கை அமல் செய்வதற்கு ஒத்துழைக்குமாறு மாநிலங்களைக் கேட்டுக் கொண்டார்.

மூன்று நாள் 'மதுவிலக்கு' கருத்தரங்கு ஒன்றினைத் துவக்கி வைத்துப் பேசுகையில், மதுவிலக்கை அமல் செய்ததற்குத் தமிழ்நாட்டைப் பாராட்டியதோடு, ஏனைய மாநிலங்களும் தமிழ்நாட்டைப் பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தினார்.

மதுவிலக்கினை அமல்படுத்துவதில் அதிக ஈடுபாடு கொண்டிருக்கும் தமிழ்நாடு முதல்வருக்குத் தனிப்பட்ட முறையில் நன்றி கூற தாம் கடமைப்பட்டிருப்பதாகவும் மத்திய கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்.


சில புதிய சட்டங்களைத் தமிழக முதல்வர் நிறைவேற்றியிருப்பதன் மூலம் மதுவிலக்கு அமல் செய்யப்படுவதை மேலும் தீவிரப்படுத்தியிருப்பதை மத்திய கல்வி அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

நன்றி : 'வெஸ்கோஸ்ட் டைம்ஸ்' 30.3.79





# எழுக நீ புலவன்!



**பாரதியார்—பாரதிதாசன் நட்பின் தொடக்கம் சுவையானது. அதை பாரதியாரே விளக்குகிறார். இதில் தராசு—பாரதியார்; கவிராயர்—பாரதிதாசன்.**

இன்று நமது கடைக்கு ஒரு தமிழ்க் கவிராயர் வந்தார். கைக்கோள ஜாதி; ஒட்டக்கூத்தப் புலவர்கூட அந்தக் குலந்தானென்று நினைக்கிறேன்.

இவருக்கு இங்கிலீஷ் தெரியாது. தம்முடைய பெயரை வெளிப்படுத்தக் கூடாதென்று சொன்னார். ஆதலால் வெளிப்படுத்தவில்லை.

தராசு முகமலர்ச்சியுடன் சிரித்தது. ''இப்படி ஒரு கவிராயன் வந்தால் எனக்கு சந்தோஷம்; எப்போதும் வீண்வம்பு பேசுவோரே வந்தால் என்ன செய்வேன்?'' என்றது. ''கவிராயரே, என்ன விஷயம் கேட்க வந்தீர்?'' என்று தராசு கேட்டது.

''எனக்குக் கவிராயர் என்பது பரம்பரையாக வந்த பட்டம், என்னுடைய தகுதியால் ஏற்படவில்லை. அத்தகுதி பெற முயற்சி செய்து வருகிறேன். அந்த விஷயமாகச் சில வார்த்தைகள் கேட்க வந்தேன்'' என்று கவிராயர் சொன்னார்.

''இதுவரை பாடின பாட்டுண்டானால் சொல்லும்'' என்று தராசு கேட்டது.

''இதுவரை பாடின நாற்பது அல்லது ஐம்பது அடிகளுக்கு மேல் பாடியது கிடையாது. இப்போதுதான் ஆரம்பம். அது, அத்தனை ரஸமில்லை'' என்று சொல்லிக் கவிராயர் விழித்தார்.

''மாதிரி சொல்லும்'' என்றது தராசு.

புலவர் பாடத் தொடங்கினார். தொண்டை நல்ல தொண்டை.

''காளை யொருவன் கவிச்சுவையைக்-கரை
காண நினைத்த முழுநினைப்பில்—அம்மை
தோளசைத் தங்கு நடம்புரிவாள்-இவன்
தொல்லறி வாளர் திறம் பெறுவான்,
ஆ! எங்கெங்கு காணினும் சக்தியடா!—தம்பி
எழுகடலவள் மேனியடா!
ரங்கும் வெளியினிற் கோடியண்டம்-எங்கள்
தாயின் கைப் பந்தென வோடுமடா!
கங்குலில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்தது கேட்டதுண்டோ?
மங்கை நகைத்த ஒலியதுவாம்—அவள்
வாயிற் குறுநகை மின்னலடா!''

தராசு கேட்டது, ''புலவரே தமிழ் யாரிடம் படித்தீர்?'' கவிராயர்: இன்னும் படிக்கவில்லை, இப்போதுதான் ஆரம்பம் செய்கிறேன்.

தராசு : சரிதான் ஆரம்பம் குற்றமில்லை; விடா முயற்சியும் தெய்வபக்தியும் அறிவிலே விடுதலையும் ஏறினால், கவிதையிலே வலிவையேறும்.

இங்ஙனம் வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கையில் சீட்டிக் கடை சேட் வந்தார். ''சாமியாரே, தீபாவளி சமீபத்திலிருக்கிறது. ஏதேனும் சீட்டித்துணி செலவுண்டா? என்று கேட்டார்.

''இல்லை'' என்று சொன்னேன்.

கவிஞர் தராசை நோக்கி, ''நம்முடைய சம்பாஷணைக்கு நடுவிலே கொஞ்சம் இடையூறுண்டாயிற்று'' என்கிறார்.

தராசு சொல்கிறது: உமக்கும் அதுதாங் காணும் வார்த்தை. நெசவிலே நாட்டு நெசவு மேல். விலைக்கு நெய்வதைக் காட்டிலும் புகழுக்கு நெய்வதே மேல். பணம் நல்லது; ஆனால் பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல். காசிப்பட்டுப் போலே பாட்டு நெய்ய வேண்டும். அல்லது உறுதியான, உழவனுக்கு வேண்டிய கச்சை வேஷ்டி போலே நெய்ய வேண்டும். ''மல்'' நெசவு கூடாது. ''மஸ்லின்'' நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையும் இருக்க வேண்டும். இதற்கு மேலே நல்ல வர்ணஞ் சேர்த்தால் குற்றமில்லை. சேராமலிருந்தால் விசேஷம்.''

அப்போது புலவர் தராசை நோக்கி ''நீயே எனது குரு'' என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினார்.

தராசு: ''எழுக நீ புலவன்!'' என்றது.

---

ஆதாரம் : பாரதிநூல்கள் (வசனங்கள்) தராசு.

தகவல் : சீனி விசுவநாதன்.




# குறள் தந்த வள்ளுவருக்கு

இந்தியாவின் தெற்கு எல்லை குமரி முனை. இந்துமாக் கடல் அரபிக்கடல், வங்கக்கடல் என்னும் முக்கடல்கள் சந்திக்கும் பகுதி குமரி முனை. நரேந்திரன் என்ற பெயரில் வாழ்ந்த பெருமகன் ஒருவருக்கு நல்லறிவு என்னும் ஞானத்தை வழங்கி அவரை விவேகானந்தர் என்று உலகம் புகழ்வதற்கு வழிவகை வகுத்தது, குமரிமுனை. அண்ணல்காந்தியடிகளுக்கு அழகான நினைவு மண்டபம் அமைத்திருக்கும் இடம் குமரி முனை. இப்படிப் பல்வேறு சிறப்புகள் பெற்றது கன்னியா குமரியாகும்.

இங்கே கடலில் உள்ள பாறையில் 1972ஆம் ஆண்டு, விவேகானந்தருக்கு நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பாறையின் அருகே காணப்படும் மற்றொரு பாறை இன்று பலராலும் மதிக்கப் பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. ஆமாம்! இந்தச் சிறு பாறையில் தான் பெரும்புகழ் பெற்ற திருக்குறளாசான் திருவள்ளுவருக்கு உருவச் சிலை அமைக்கும் பணியில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது.

இந்த அரும்பணிகளுக்குரிய கால்கோள் விழா ஆளுநர் தலைமையில் 15ஆம்நாளன்று கன்னியா குமரியில் நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்தோர் அனைவரையும் செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வரவேற்றுப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்.

''திருக்குறள் இந்தியாவில் உள்ள 12 மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் மட்டுமே ஏறக்குறைய 30 ஆசிரியர்கள் திருக்குறளை மொழி பெயர்த்திருக்கின்றனர் பிரெஞ்சு மொழியில் 8 மொழி பெயர்ப்பு, ஜெர்மன் மொழியில், 8, லத்தீன் மொழியில் 2 மொழி பெயர்ப்பு நூல்களும் வெளிவந்துள்ளன.

''எல்லை கடந்து, மலை கடந்து, கடல் கடந்து குறளின் பெருமை பரவியிருக்கிறது.''

விழாவுக்குத் தலைமை ஏற்ற மேதகு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''மதுவிலக்கின் அவசியத்தை திருவள்ளுவர், குறளில் வலியுறுத்தி இருக்கிறார். எனவே தான் இந்தியாவில் தமிழகமும் குஜராத்தும் மதுவிலக்கைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வருகின்றன திருக்குறள் எந்த மதத்தவருக்கும் சொந்தமானது அல்ல. அது பொதுநூல்''

வள்ளுவரின் நினைவாலயத்திற்கு அடிக்கல் நாட்டிய முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''இங்கே நிறுவுகின்ற சிலை உறுதியாக இருக்க வேண்டும். தமிழ் மொழிக்கு அடித்தளம் அந்தக் காலத்தில் உறுதியாக அமைக்கப் பட்டதால்தான் தமிழ் மொழி இன்றும் உறுதியாகஇருக்கிறது. அதன் காரணமாக வள்ளுவருக்குச் சிலை எடுக்க முடிகிறது.

''வரலாற்றுச் சிறப்புமிக்க குமரி முனையில் திருவள்ளுவருக்குச் சிலை நிறுவுவது மிகவும் பொருத்தமானது. சிலைக்கு அடிக்கல் நாட்ட வந்த பிரதமரைப் பாராட்டுகிறேன்.





# குமரி முனையில் உருவச் சிலை - நினைவாலயம்

''கன்னியாகுமரிப் பாறையில் அமைக்கப்படவிருக்கும் இந்தச் சிலை இங்கு வருவோர் எல்லாரையும் கவரத்தக்க வகையில் அமையும். 40 அடி உயரமுள்ள வேலைப்பாடு மிகுந்த பீடத்தில் 30 அடி உயரச் சிலை நடுக்கடலில அமைக்கப்படுவதால், எந்த உலோகத்தில் சிலையை அமைப்பது என்னும் விஷயத்தில் அரசு மிகுந்த பொறுப்புடனிருக்கிறது.''

சிலைக்கு அடிக்கல் நாட்டிய மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது திருக்குறள். இதனை எழுதிய திருவள்ளுவருக்குச் சிலை எழுப்புவது மிகவும் பொருத்தமானது. அதற்காக தமிழக அரசைப் பாராட்டுகிறேன். ஒரு நாட்டின் பண்பாட்டைக் காக்க வேண்டும் என்றால் இதுபோன்ற நல்ல பணிகளைச் செய்யவேண்டும்.

''வள்ளுவர் எழுதிய திருக்குறள் உலகப் பொதுமறையாகத் திகழ்கிறது. அந்த அளவுக்குச் சிறப்புப் பெற்றது. வள்ளுவரின் கருத்துக்கள் எக்காலத்துக்கும் பொருத்தமாக உள்ளன.

### மாபெரும் பழப்பண்ணை

புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 இலட்சம் ஏக்கருக்குமேல் பழப் பயிர்சாகுபடி செய்வதற்குத் தகுதியான நிலங்கள் உள்ளன.

இப்பழத் தோட்டம் புதுக்கோட்டையிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வல்லத்திராக்கோட்டை கிராமத்திற்கருகில் 21-10-77 முதல் செயல்பட்டு வருகிறது. இதுவரை 4 இலட்சம் செலவில் 560 ஏக்கரில் பழச்செடிகள் நடப்பட்டுள்ளன. மீதமுள்ள 440 ஏக்கரில் அடுத்த ஆண்டு பழச் செடிகள் நட்டு முடிக்கப்படும்.

''உருவாகப் போகும் வள்ளுவர் சிலை இந்தப் புனித பூமிக்கு வருகை புரிகின்ற ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளையும் யாத்திரிகர்களையும் கவர்வது உறுதி.


''இந்தியாவில் அவ்வப்போது தோன்றிய பேரறிவாளர்களை மதித்து அவர்களது அறிவுரைகளைப் போற்றி ஏற்றுக்கொள்ளும் பண்பாடு நமது நாட்டிற்கே உரியது''

கன்னியாகுமரிக் கடற்கரையில் உள்ள காந்தி நினைவு மண்டபத்தில், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் உதவியுடன் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த திருக்குறள் நூல் கண்காட்சியினை மாண்புமிகு மத்திய மின்துறை அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் திறந்து வைத்தார்.

விவேகானந்தர் நினைவாலயம், விவேகானந்தர் கேந்திரம் ஆகியவற்றின் தலைவர் திரு ஏகநாத் ரானடே நன்றி உரை ஆற்ற விழா இனிது முடிந்தது!




# மதுவிலக்கும் பழமொழிகளும்



டாக்டர் ந. சஞ்சீவி.
பேராசிரியை
திருமதி கிருஷ்ணா சஞ்சீவி.

மது என்ற சொல்லினும் கள் என்ற சொல் பழந்தமிழ் மக்களின் பழகுதமிழ் வழக்கு. இலக்கிய வழக்கிலும் மதுவினும் கள்ளே மிகுதி. பழந்தமிழ் நாட்டில் மது விலக்குச் சட்டம் இல்லை. எனினும் மதுவை வெறுக்கும் மனம் பழந்தமிழ்ச் சான்றோரிடம் அரும்பி வந்தது. அதன் மலர்ச்சியைத் திருக்குறளில் தெளிவாய்க் காணலாம்.

பழந்தமிழ் மக்களின் நாகரிக வாழ்வை நலியச் செய்த நஞ்சுகள் நான்கு எனலாம். 1. புலால் 2. வரைவின் மகளிர் 3. கள் (மது) 4. சூது. இவ்வுண்மையை நன்குணர்ந்த திருவள்ளுவர்-மேற்சொன்ன நான்கும் பழந்தமிழர் நாகரிகத்தின் 'கால்வழிகட்டிலாய்' அமைந்த அவலத்தை ஆழ உணர்ந்து இந்த நான்கையும் வன்மையாகக் கடிந்தார். அதிலும் பின் மூன்றையும் அறத்துப்பாலில் கடியாமல் அனைவருக்கும் பொதுவாகிய -தனிமனிதச் சார்பு மட்டுமின்றி சமூகச் சார்புடைய பொருட்பாலில் வைத்து வன்மையாகக் கண்டித்தார். அத்துடன் கலை நலம் விளங்க அவர் செய்த காமத்துப்பாலிலும் இந்த நான்கும் இடம் பெறாமல் காத்தார். ஆம், கலையும் கலைஞர்களும் அழிவதும் இந்த நான்கால் எனக் கண்டறிந்த பகுத்தறிவுத் தந்தை வள்ளுவப் பெரியார். அதிலும் அவர் புலால் -வரைவின் மகளிர்-கள்-சூது என முறை வைப்புச் செய்து கண்டித்த அருமைப்பாடே பெருமைப்பாடு.

இனி திருவள்ளுவருக்கும் - ஏன்?தொல்காப்பியருக்கும் முன்னே தோன்றிய தமிழ் மொழியே பாரதியார் பாடியது போன்று- 'தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும் சூழ் கலைவாணர்களும் இவள் என்று பிறந்தவள்' என்று உணர முடியாத் தொன்மை உடைய தமிழ் மொழியே-கள்ளைக் கடிந்திருக்கும் -மது விலக்கைப் போற்றி யிருக்கும்- மாண்பை நினைக்கலாம்.

எத்தனையோ தமிழ்ச் சொற்களைப் போல 'கள்' என்ற சொல்லே 'பெய ரேவினை' என்ற வாய்பாட்டில் அமைந்துள்ளது. பெயர் பெயர்ந்தால் (இயங்கினால்) வினைதானே!

'கள்' என்ற சொல் வினையாய் வரும் போது (களை) பிடுங்குதல், பறித்தல், திருடல், வஞ்சித்தல் என்ற பொருள்களில் வரும். இந்த நான்கும். பறித்தல், வஞ்சித்தல் என்ற பொருளில் அடங்கும். அறிவைப் பறித்தலிலும் அரிய பெரிய பிடுங்குதல் திருடுதல் வேறென்ன இருக்கிறது.? எனவே இவ்வினைப் பொருளுக்குக்காரணமாய் இருக்கும் பொருளையும் 'கள்' என்றே பழந்தமிழர் குறிப்பிட்டது மாதுவின் சூது உணர்ந்த மாண்பைக் காட்டுகிறதல்லவா ?

அடுத்து, 'கள்' என்ற சொல்லை முதலாகக் கொண்டு தமிழ்ப் பேரகராதியில் இடம் பெற்றுள்ள அடிப்படையான மூன்று சொற்களையும் அவற்றின் பொருள்களையும் பார்ப்போம். 1. கள்ளாடுதல்-வஞ்சித்தல் 2. கள்ளுணி-குடிகாரன் 3. கள்ளுத் தொந்தி-கட்குடியால் பருத்த உடல். இம்மூன்று சொற்களாலும் அவற்றின் பொருள்களாலும் தமிழ் மக்கள் கள்ளை வெறுத்தற்குரிய பொருளாகவே கருதினர். என்பது விளங்கும். 'கள்ளுத் தொந்தி' என்ற தொடர் மொழியால் கள்ளால் உடலுக்கு நேரும் கேட்டையும் பழந்தமிழ் மக்கள் உணர்ந்திருந்த பான்மை பளிச்சிடும்.

இறுதியாக உண்மையான மக்கள்மொழிகளாகிய பழமொழிகள் வாயிலாகத் தமிழ் மக்கள் காலம் காலமாகக் கள்ளை-மதுவை- வெறுத்துக் கடிந்த விழுப்பத்தை விழி திறந்து பார்ப்போம். கள்-மது-பற்றிய பழமொழிகள்-விளக்கம் ஏதும் வேண்டா-விழுமிய பழமொழிகள் வருமாறு:

* கள்ளுக் குடித்தவனுக்கு வாய் என்றும் மற்றது என்றும் தெரியாது.
* கள்ளுக் குடித்தவன் சொல்லுப் பொறுக்கான். (கோபம் கொள்வான் என்று பொருள்)
* கள்ளுண்ட குரங்கு. (வெறி பிடிக்கும் என்று பொருள்)
* கள்ளும் சூதும் இருக்கும் இடத்தில் விலைமகளும் கள்ளனும் கண்டிப்பாய் இருப்பார்கள்.

# புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவுதல்

1977 ஆம் ஆண்டில், பொதுத்றையில் புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவும் முடிவினை அரசு மறுபரிசீலனை செய்து, இனிப்புதிதாக நிறுவவிருக்கும் சர்க்கரை ஆலைகளைக் கூட்டுறவுத்துறையில் மட்டுமே நிறுவவேண்டுமென்று முடிவு செய்தது.

அதன்படி, தென்னாற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் பெரியசெவலை கிராமத்தில் புகிய கூட்டுறவுச் சர்க்கா ஆலையொன்று நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இரண்டு சர்க்கரை ஆலைகளை தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனம் நிறுவிய அனுபவத்தைக் கருத்தில்கொண்டு இப்புதிய சர்க்கரை ஆலை நிர்யாணப் பணியும் அந் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலை 1979–80 ஆம் சர்க்கரைப் பருவத்தின் இறுதியில் உற்பத்தி செய்யத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1977-1978ல் அரசு இந்த ஆலையில் தனது பங்குத் தொகையாக 145 இலட்ச ரூபாய் முதலீடு செய்தது. நிதிநிறுவனங்களிடமிருந்து நிதி உதவி கிடைக்கத் தாமதமாவதால் ஆலையை நிறுவ தாமத மேற்படுமென அஞ்சப்பட்டது. எனினும் ஆலையின் நிர்மாணப்பணிகனில் இனி மேலும் கால தாமதம் ஏற்படக்கூடாது என அரசு கருதியது. எனவே, வழிவகை முன்பணமாக 1978–79 ஆம் ஆண்டில் ஆலையின் நிர்மாணப்பணிகளுக்கு 150 இலட்ச ரூபாயை தமிழ்நாடு சர்க்கரை உற்பத்தி நிறுவனத்திற்கு வழங்க அரசு முடிவெடுத்தது. அதன்படி இத் தொகையை 1978–79 நிதி ஆண்டிலேயே இந்நிறுவனம் பெறுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(கள்ளும் சூதும் இருக்கிற இடத்தில் கூத்திக் கள்ளனும் இருப்பான்)

* கள்ளை ஊற்றி உள்ளதைக் கேள்
* கள்ளைக் கொடுத்து காரியத்தை அறி
* சாராயத்தைத்தான் தினம் குடித்தால் தாராளனும் கடைமகனாவான்.
* சாராயத்தை வார்த்துப் பூராயத்தைக் கேளு
* கள்ளை விட்டுக் காட்டுத்தேனைக் குடித்தது போல (நல்லதையும் கெட்டதாக்கும் அறியாமை-காட்டுத் தேனில் (நஞ்சான) கள்ளைக் கலந்து குடித்தது போல என்று பொருள்)
* கள் விற்ற காற்காசிலும் அமிர்தம்விற்ற அரைக்கால் காசு நேர்த்தி. (கள்விற்றுக் காற்பணம் சம்பாதிப்பதை விடக் கற்பூரம் விற்றுக் காற்பணம் சம்பாதிப்பது மேல்)
* குடிக்கிறது காடிநீர், அதற்குத் தங்க வட்டிலா?
* குடிக்கிறவன் கையைச் சுற்றிச் சூடு போட்டாலும் குடியை விடான்.
* குடிக்கிற வீடு விடியுமா?
* குடி சூது விபசாரம் குடியைக் கெடுக்கும்.
* குடியனும் வெறியனும் சரி
* குடியனும் வெறியனும் அடிபடாமல் குணப்படான்.

மேற்கண்ட பழமொழிகளுள் ஒன்றுகூட (ஒரு வாக்குகூட) குடிக்கு ஆதரவாய் இல்லை. மேலும் அச்சமே கீழ்களது-ஏன்? இந்நாளில் மேல்களதும் ஆசாரம் என்பதை உணரும் நமக்கு உறுதி ஊட்டுவது போலல்லவா குடியனும் வெறியனும் அடிபடாமல் குணப்படான்' என்று இறுதிப் பழமொழி அறுதியிட்டு அறை கூவுகிறது! ஆம். குடியன் - வெறியன் - குடி வெறியன் -அடிபடுவது அப்புறம் இருக்கட்டும். முதலில் அவன் சட்டத்தின் கைகளில் பிடிபடவாவது வேண்டுமே!

**இவ்வகையில் பழமொழிகள் தீர்க்க விரும்பும் பழிமொழிகளைத் துடைக்க நம் மாநில-மைய அரசுகள் செய்யும் செயல்கள் செந்தமிழ்ப் பண்பாடு சிறக்கவே உதவும்.!**



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

**31—3—79**

ரூபாய் 22 கோடியே 12 இலட்சம் செலவில் பெரிய நடுத்தர நீர்ப்பாசனத் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு நிறைவேற்றும் என்றும், ரூ. 15 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு எண்ணெய் வித்து மேம்பாட்டுக் கழகம் அமைப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது என்றும் சட்டப் பேரவையில் மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அறிவித்தார்.

மலைவாழ் மக்களின் நலனுக்காகத் தனி அதிகாரிகளை நியமிக்கவும், தனி ஒன்றியங்களை அமைக்கவும் அரசு ஆலோசித்சித்து வருகிறது என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர் திரு பெ. சவுந்திர பாண்டியன் தெரிவித்தார்.

**1—4—79**

1979-80-ல் கிழக்கு இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தஞ்சை ஆகிய மாவட்டப் பகுதிகளில் மேலும் ஐந்து பால் கொள்முதல் குழுக்களை அமைத்து மேலும் பல பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கும் பணிக்காக ரூ. 11 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவிட திட்டமிட்டுள்ளது.

நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் தஞ்சை, திருச்சி, கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடனாக 20 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் மாண்புமிகு கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு கே. ராஜாமுகமது அறிவித்தார்.

**2—4—79**

அடுத்த இரண்டு ஆண்டுகளில் கைத்தறி ஏற்றுமதி ரூபாய் ஐந்து கோடியாக உயரும். 'கோ-ஆப்டெக்ஸ்' இப்பொழுது உற்பத்தி செய்யும் பாலிஸ்டர் ரகத் துணிகளைப் பதப்படுத்தி பிரிண்ட் செய்யும் நிறுவனம் ஈரோட்டில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுபபுலடசுமி ஜெகதீசன் சட்டப் பேரவையில் அறிவித்தார்.

**3—4—79**

தென் ஆர்க்காடு மாவட்டம் 'வடக்கத்து' என்னும் இடத்தில் ரூ. 350 இலட்சம் திட்ட முதலீட்டில் காகிதத் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்துத் தொடங்கப்படும் இந்த காகித ஆலை 1979-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் வர்த்தக ரீதியில் உற்பத்தியைத் தொடங்கும்.

கரும்புச் சக்கையைக் கொண்டு காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை பள்ளிப்பாளையத்தில் துவக்கப்படவிருக்கிறது.

இந்தத் தகவலைச் சட்டப்பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அறிவித்தார்.

**4—4—79**

உடல் ஊனமுற்றோர் சொந்தமாகத் தொழில் செய்ய வசதியளிக்க ஆயிரம் சிறு கடைகள் அமைத்துத்தரப்படும். புதிதாக 250 குழந்தைகள் காப்பகங்கள் வரும் ஆண்டில் திறக்கப்படும்.

ஊனமுற்றோர் ஆயிரம் பேருக்கு 3 சக்கர வண்டிகள் வழங்கப்படும். திக்கற்ற ஆயிரம் விதவைகளுக்குத் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படும் என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி சட்டப்பேரவையில் அறிவித்தார்.

**5—4—79**

சிவில் சட்டங்கள் மொழி மாற்றம் செய்யப்பட்டபின் சிவில் கோர்ட்டுகளில் தமிழில் தீர்ப்பு அளிக்க அரசு ஆணை பிறப்பிக்கும். மதுரையில் உயர்நீதி மன்றப் பிரிவு(பெஞ்சு) ஏற்படுத்த வேண்டும் என்பதில் அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு கே. நாராயணசாமி முதலியார் அவர்கள் அறிவித்தார்.

# மின்சாரவாரிய அலுவலர்களுக்குச் சலுகைகள்

* 1977-ம் ஆண்டு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் நடவடிக்கைகளுக்குள்ளான ஊழியர்கள் மீது இருந்த அனைத்து நடவடிக்கைகளும் திரும்பப் பெறப்பட்டது.
* 1975-76-ஆம் ஆண்டிற்கான 4 சதவிகித போனஸ் வழங்கப்பட்டது.
* சுருளியாறு மின் திட்ட துவக்க விழாவில், ஒரு மாத ஊதிய அளவிற்கு ஊக்க போனஸ் வழங்கப்பட்டது. * குந்தா நான்காவது கட்ட துவக்க விழாவின்போது 1000 அடிக்கு மேல் உள்ள இடங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் மலைவாழ் படி வழங்கப்பட்டது. * காடம்பாறை நீரேற்று மின் திட்ட அடிக்கல் நாட்டு விழாவில், அலுவலக, பண்டகசாலை ஊழியர்களுக்கும் திட்ட சிறப்பு ஊதியம் வழங்கப்பட்டது.
* 30.11.79. வரை காத்திருக்காமல், ஊதியப் பிரச்சினைபற்றி மின்சார வாரியம் தொழிற்சங்கங்களோடு உடனடியாகப் பேச்சுவார்த்தைகளைத் துவக்கி 30.11.79க்குள் அடுத்த ஊதிய உயர்விற்கான ஒப்பந்தம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது.

**6—4—79**

அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் டாக்டர்கள் தொடர்ச்சியாக நீண்ட நேரம் பணிபுரிந்து வருகிறார்கள். இந்த நிலைமையை மாற்றி அவர்கள் பணி நேரத்தினைத் தக்கப்படி திருத்தி அமைக்க அரசு ஆலோசித்து வருகிறது. கோவை அரசு மருத்துவமனையில் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை செய்யும் பிரிவு ஒன்றை ஏற்படுத்தப்படும். இந்தத் தகவலை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அறிவித்தார்.

**7—4—79**

கிராமங்களையும் பிர்க்காக்களையும் சீரமைக்கும் பணிகளை அரசு மேற்கொள்ளும். வருகிற இரண்டு ஆண்டுகளில் 350 பிர்க்காக்கள் அதிகரிக்கப்படும். ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் வீடு அலுவலகம் இரண்டும் ஒரே இடத்தில் அமைக்கப் படும். முதற் கட்டமாக 200 இடங்களில் இந்தக் கட்டடங்கள் அமைக்கப் படும் என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அறிவித்தார்.

**9—4—79**

தமிழ்நாட்டில் ஆறு கோடி ரூபாய் செலவில் 12 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பளவில் முசுக்கொட்டைப் பயிர் செய்யப்படும். கூடுதலாகப் பட்டு உற்பத்தி ஆவதால் பொது நிறுவனங்களாகவும் கூட்டுறவு அடிப்படையில் இருபதுக்கு மேற்பட்ட இடங்களில் நூற்பாலைகள் அமைக்கப் படும் என்று மாண்புமிகு கிராமக் கைத் தொழிலமைச்சர் திரு கே. ராசாமுகமது அறிவித்தார்.

**10—4—79**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடப்பு ஆண்டில் பல்வேறு வீட்டுவசதிப் பணிகளுக்காக ரூபாய் 30 கோடி அளவுக்குச் செலவிடும் என்று வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு ஏ. இ. செல்லையா தெரிவித்தார்.

வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்குவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்று கோவை மாவட்டம் பெத்த நாயக்கனூரில். மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அறிவித்தார்.

**11—4—79**

நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்படும். திருச்சிராப்பள்ளியில் 1979-லில் உணவுத் தொழில் கைவினைஞர்களைப் பயிற்றுவிப்பதற்கான கல்வி நிலையம் ஒன்று தொடங்கவிருக்கிறது. பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் மூன்றுவரும் 1978-80-ஆம் ஆண்டிலிருந்து கிராமப்புற விரிவுப்பணியைத் தொடக்க இருக்கின்றன என்று மாண்புமிகு கல்வியமைச்சர் செ. அரங்கநாயகம் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

**12—4—79**

தமிழ்நாட்டில் வருகிற ஆண்டில் புதிதாக 4 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப் படுவார்கள்.

பணியிலிருக்கும்பொழுது இறந்து விட்டால் அவர் குடும்பத்துக்கு ரூ. 10,000 தர வகை செய்யும் குழு ஈட்டுறுதித் திட்டத்தை தனியார் கல்லூரிக்கு விரிவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று சட்டப் பேரவையில் மாண்புமிகு கல்வியமைச்சர் செ. அரங்கநாயகம் அறிவித்தார்.

**14—4—79**

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்குப் பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்க தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருகிறது என்று அகில இந்திய துவக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி வெள்ளிவிழா மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



# தமிழரசு

பதிவு எண் [illegible] 8676



[illegible] நடைபெற்ற [illegible]

# தமிழரசு

16.5.1979 50காசு






# நாடும் ஏடும்

*மாண்புமிகு செய்தி-அற நிலையத் துறை அமைச்சர்*

**திரு. இராம. வீரப்பன்**

**29-4-79 அன்று 'தினமலர்' நாளேட்டின் சென்னைப் பதிப்பை வெளியிட்டு ஆற்றிய உரையின் முழுவிவரம்.**

எனக்கு முன்னாலே பேசியவர்கள் பலரும் இதழ்களை நடத்துவதற்கு என்ன இலக்கணங்கள் வேண்டும் என்பதைப் பற்றியும், எந்த அடிப்படையிலே நடத்த வேண்டுமென்பதைப் பற்றியும் குறிப்பாக 'தினமலர்' அப்படிப்பட்ட தகுதியை எப்படி வளர்த்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த 27 ஆண்டுகளாக ஒரு நாளேட்டைத் துவங்கி நெல்லையிலிருந்து திருச்சிக்கு வந்து இப்போது தலைநகருக்கு வந்திருக்கிற அந்த வளர்ச்சி என்பது, பெரிதும் பாராட்டுதற்குரிய வளர்ச்சியாகும். சாதாரணமாகத் தலைநகரத்திலே தொடங்கி தென் குமரிமுனைக்குப் போவதுதான் வழக்கம். ஆனால் 'தினமலர்' தென் குமரி முனையிலே துவங்கி இப்போது தலைநகரத்தை நோக்கிப் படையெடுத்திருக்கிறது. இந்தப் படையெடுப்பு வெற்றிகரமாக அமைய வேண்டுமென்று நான் உளப்பூர்வமாக அவர்களை வாழ்த்துகிறேன்'. 'தினமலருக்கு, என்று சில நடைமுறைகள் வைத்துக் கொண்டு அந்த அடிப்படையிலே அவர்கள் இந்த இதழை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பத்திரிகைகள் நடத்துவது என்பது அவ்வளவு சாதாரணமான காரியம் அல்ல என்பதை அதிலே ஈடுபட்டிருக்கிற நண்பர்கள் அறிவார்கள். ஆனால், பல பேர் அதனுடைய ஆழத்தையும், ஆபத்தையும் தெரியாமல் காலை விட்டுவிட்டு அதிலே சிக்கிக் கொண்டு அவதிப்பட்டிருக்கிறவர்கள், அதிலே அழிந்து போயிருக்கிறவர்கள் பலபேர். 'ஆனால் அதற்குள்ளே இருந்து மீறி, கடலுக்குள்ளே குளித்து முத்து எடுக்கின்ற அத்தகைய ஆற்றலைப் பெறுவதைப் போல் பத்திரிகைத் துறைக்குள்ளே நுழைந்து சிறந்த நிர்வாகத்தாலும், அதை நடத்துகின்ற திறமையான முறைகளாலும் மக்களிடத்திலே நல்ல உணர்வை வளர்த்து அவர்களுடைய ஆதரவைப் பெற்ற சிறப்பினாலும் சில பத்திரிகைகள் இன்றைக்கு நீண்டகாலம் வாழ்ந்து வளர்ந்து வருகின்ற நிலைமையைப் பார்க்கிறோம். இந்த 'தினமலர்' நாளிதழ் தொடங்குகிறபொழுது 51-ஆம் ஆண்டு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மத்திய உள்துறை அமைச்சராக டெல்லியிலே இருந்து அனுப்பியிருக்கிற வாழ்த்துச் செய்தியில்கூட, அவர்கள் ஒரு நிர்வாகி என்ற காரணத்தினால் என்னென்ன சங்கடங்கள் இருக்கும் என்ற அடிப்படையிலே அவர்களுடைய வாழ்த்து அமைந்து இருக்கிறது. பொருளாதாரக் கஷ்டம் எப்படி வரும்; அது தினசரி எப்படி நாளேட்டை நடத்துகிறவர்களைத் தாக்கும்; அதற்கு ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட்டு விட்டதா என்கின்ற அடிப்படையில் அவர்கள் வாழ்த்துக்களை அனுப்பி இருக்கிறார்கள். அதனால்தானோ என்னவோ பத்திரிகை நடத்துகிற நண்பர்கள் பத்திரிகைக்கு என்ன இலட்சியம், பத்திரிகையினாலே சமுதாயத்திற்கு என்ன இலாபம் என்கிற அந்தப் பண்புகளையெல்லாம் மறந்துவிட்டு, எப்படிப் பணம் சேர்ப்பது அல்லது இலாபம் திரட்டுவது அல்லது நஷ்டம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வது என்கின்ற உணர்வின் அடிப்படையில் சில நேரங்களிலே பத்திரிகையை நடத்துகிறவர்கள் அதற்குத் தங்களை ஒப்படைத்துக் கொள்பவர்களாக மாறிவிடுகிறார்கள். அதனுடைய விளைவை இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதைச் சொல்கிறபோது பத்திரிகைச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்கின்ற தலைப்பின் கீழே அதற்கு இலக்கணங்கள் வகுக்கப்படுகின்றன.

மாதச் சஞ்சிகைகள் அல்லது வாரப் பத்திரிகைகள் என்று எடுத்துக் கொண்டால் அவைகள் எந்த இலக்கணத்திற்கு உட்படுத்தப்படுகின்றன என்பதைப் பற்றி இன்றைக்கு நாம் விமர்சிக்கத்தக்க அளவில்கூட இல்லாமல் போய்க்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். நாளேடுகள் என்று எடுத்துக் கொண்டால் பத்திரிகையிலே செய்தி என்ன வருகிறதோ அதைப் பற்றிக் கவலை இல்லை. பத்திரிகை வால் போஸ்டரிலே போடுகிற செய்திதான் பத்திரிகை விற்பனைக்கு மூல காரணம் என்று மக்களிடத்திலே எண்ணத்தை உண்டாக்குகின்ற அளவுக்கு இன்றைக்குச் செய்திகள், செய்திப் பத்திரிகைகள் வால்போஸ்டரிலே போடுகிறார்கள். அல்லது வால் போஸ்டரைப் பார்த்துவிட்டுப் பத்திரிகையை வாங்கினால் தலைப்பு வேறு; அதற்குள்ளே இருக்கிற செய்தி வேறு; இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லுகிற அளவுக்குக் கூட நிலைமைகள் வளர்ந்து வருகின்றன.

இவைகளையெல்லாம் நாம் திருத்த முடியுமா அல்லதுபத்திரிகையை நடத்துகிறவர்கள் இவைகளைப் பற்றி எல்லாம் கவலைப்பட வேண்டுமா என்று பார்க்கிறபோது எந்தப் பத்திரிகைகளை மக்கள் ஆதரிக்கிறார்கள் என்று முடிவெடுக்கிற அந்தச் சூழ்நிலையில்தான், அந்த அடிப்படையில்தான் பத்திரிகைகள் தங்களுடைய உணர்வுகளை, கருத்துக்களை மாற்றிக்கொள்ள முன்வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறபோது, 'தினமலர்' அந்த முறையிலே தனக்கென்று ஓர் நிலையை வகுத்துக்

85366


தமிழரசு
16—5—1979
மலர்: 9
இதழ் : 22

## கோவை மாவட்டத்தில் ரயில் பெட்டி பழுது பார்க்கும் தொழிற்சாலை

ரயில் துறையின் மத்திய வாரியம் (போர்டு) தென்பகுதியில் ரயில் பெட்டிகளைப் பழுதுபார்க்கும் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலை அமைவதற்குரிய சாத்தியக் கூறுகளை ஆராயும் வகையில் மாநிலத் திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு கோவை. செழியன் அவர்கள், உயர்மட்ட அதிகாரிகளுடன் சென்று பல்வேறு இடங்களைப் பார்வையிட்டார். அவைகளில் ஒன்று, கோவை—மேட்டுப்பாளையம் ரயில் பாதையிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் காரமடைக்கு வடக்குப் பக்கத்தில் உள்ள 300 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பாகும்.

10 கோடி ருபாய் செலவில் அமையவிருக்கும் இந்தத் தொழிற்சாலையால் 3 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள் என்று தெரிகிறது. இந்தத் தொழிற்கூடம் தமிழகத்தில் அமையவேண்டும் என்ற ஆர்வம் தமிழக அரசுக்கு இருப்பதால், தொழிற்சாலைக்குத் தேவைப்படும் 300 ஏக்கர் நிலத்தைத், தமிழக அரசு-மைய அரசுக்கு அன்பளிப்பாகத் தருவதற்கு முன்வந்திருக்கிறது.

இத்தொழிற்சாலை தமிழ்நாட்டில் அமையவேண்டுமென்பதில் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தனி அக்கறை காட்டி வருகிறார்கள்.




கொண்டு அப்படிப்பட்ட செய்திகளை வழங்குவதில் ஓரளவிற்கு அவர்கள் எந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்று விரும்புகிறார்களோ அது அவர்களுடைய உரிமை. அந்த உரிமையின் அடிப்படையிலே அவர்கள் பின்பற்றுகின்ற, ஏற்றுக் கொண்டிருக்கிற சில உணர்வுகளின் அடிப்படையில் இந்தப்பத்திரிகைகள் இன்றைக்குச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. அதனாலேயேதான் அது வளர்ந்து மேலோங்கி இன்று மூன்றாவதுபதிப்பாக சென்னை நகரத்திலே துவங்குகிற அளவிற்கு அது வளர்ந்து இருக்கிறது.

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இன்றைக்கு இருந்திருப்பார்களேயானால், அவர்களுடைய திறமையை இன்றைக்குப் பாராட்டி மகிழ்ந்து இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. காரணம் 27 ஆண்டுகளுக்கு முன்னாலே அவர்கள் அனுப்பியிருக்கிற அந்த வாழ்த்தில் "It is very difficult to conduct a daily newspaper these days and I hope your financial arrangements are such as to give no Cause per daily anxiety." இதுதான பத்திரிகை நடத்துகிறவர்களுக்கு ஏற்படுகிற மிகப் பெரிய தொல்லை. ஒவ்வொரு நாளும் அந்தப் பத்திரிகை உருவாகி, அது மிஷினிலே போய் அச்சாகி, வெளிவருகிற வரை அந்தப் பத்திரிகை நடத்துகிறவர்களுக்கு ஏற்படுகிற பொருளாதாரத் தொல்லை என்பது மிகப் பெரிய கஷ்டம்.

பிரசவம் என்பது பத்து மாதம் கழித்து வருகிற ஒரு பிரசவ வேதனை என்று சொல்வோம் பெண்களுக்கு. ஆனால், பத்திரிகையை-தினசரிப்பத்திரிகை நடத்துகிறவர்களுக்கு தினசரி பிரசவ வேதனை என்றால் அந்தப் பத்திரிகை வருவது என்பது தினசரி ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பது போன்ற ஒரு நிலைமைக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள்; ஆளாவார்கள் என்பதுதான், இன்றைக்கு நடைமுறையிலே உள்ள உண்மையாகும். அப்படிப்பட்ட பிரசவ வேதனைகளையெல்லாம் அனுபவித்து அனுபவித்துத் தாண்டி இன்றைக்கு இந்த நிலைமைக்கு வளர்ந்து இருப்பதைப் பார்க்கிற பொழுது உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்; தமிழக மக்களின் சார்பிலே இது இன்னும் வளர வேண்டுமென்று வாழ்த்துகிற போது ஒரு கருத்தைச் சொல்வதற்கு இங்கே இருக்கின்ற பத்திரிகையாளர்கள் பல பேர் முன்னாலே இருக்கிறார்கள். பொது மக்கள் பலபேர் வந்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற ஜனநாயக அமைப்பில் வளர்ந்து கொண்டு வருகிற இந்தியத் துணைக் கண்டம் போன்ற ஒரு நாட்டில் – அதிகக் கல்வி அறிவைப் பெறாத மக்கள் வாழ்கிற ஒரு சமுதாயத்திலே தினசரிப் பத்திரிகைகளுக்கு எவ்வளவு பெரிய பொறுப்புகள் இருக்கின்றன என்பதைத் தயவு செய்து நீங்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்த்து அதற்கேற்ற வகையிலே உங்களுடைய செய்திகளை வெளியிடுகிற தன்மையைப் பத்திரிகைகளை அமைத்துக் கொள்கிற அந்தப் பண்பாடுகளை நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே வைப்பது பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வார்கள். நியூஸ் பத்திரிகைகள்; வியூஸ் பத்திரிகைகள் என்று. 'தினமலர்' வியூஸ் பத்திரிகை என்று நான் கொள்ள மாட்டேன். அது நியூஸ் பத்திரிகை. இது செய்திகளைத் தருகிற பத்திரிகை. வியூஸ் பத்திரிகைகள் என்றால் கட்சிக் கருத்துக்களை வெளியிடுகிற பத்திரிகைகள். ஆகவே, அதை வாங்குகிறபோதே. மக்களுக்கு அதைப் பார்க்கிறபோதே கட்சிப் பத்திரிகை; இதிலே கட்சிக் கருத்துக்கள்தான் வரும் என்ற எண்ணத்திலே வாங்குவார்கள். நான் தினமலர் வெளியீட்டுவிழா என்பதாலேயே தினமலரைச் சொல்லிப் பேசுகிறேன். ஆகவே, மற்ற பத்திரிகைகளைத் தொடாமல் இல்லை. மற்ற பத்திரிகைகளுக்குச் சேர்ந்ததுதான் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்திப் பத்திரிகைகள் 'என்று நடத்துகின்ற பத்திரிகையாளர்கள், உரிமையாளர்கள்,நான் முன்னாலே சொன்னேனே தினசரி பிரசவ வேதனையிலே இருந்து தாண்டிய பத்திரிகைகள், நல்ல வசதிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிற பொருளாதார அமைப்பை, வலுவான அமைப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிற பத்திரிகைகளாவது இனிமேல் இந்தச் சமுதாயத்தினுடைய நன்மையை அவர்கள் மனத்திலே கொள்ள வேண்டும் என்பதுதான் நான் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் அவர்களுக்கு வைக்கிற வேண்டுகோள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சம்பவத்தை நான் சொல்கிறேன். சொல்வதிலே தவறு






இருக்காது என்ற காரணத்தினாலே. சமீபத்திலே இந்தத் தமிழ் மாநிலத்தில் ஒரு பந்த் நடைபெற்றது. அந்தப் 'பந்தை' யார் அறிவித்தார்; அவருக்கு என்ன பின்னணி; அவர் இந்த நாட்டிலே எப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய செல்வாக்கை வளர்த்துக் கொண்டிருக்கிற தலைவர் அல்லது அரசியல் கட்சியைச் சார்ந்தவர் என்பதை எல்லாம் நாம் கவனிக்கத் தேவையில்லை. விட்டு விடுவோம். ஆனால், ஒரு நிகழ்ச்சிக்காக இந்த தமிழ்நாட்டிலே கடையடைப்பை நடத்த வேண்டும். வேலைநிறுத்தம் செய்ய வேண்டும்; பந்த் நடத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார். இந்த வேண்டுகோள் விடுத்ததற்கு பிறகு அரசாங்கம் தன்னுடைய வேண்டுகோளை வைக்கிறது. இதை நடத்த வேண்டாம்; கடையை மூட வேண்டாம்; இதனாலே வன்முறைகள் ஏற்படும். தொல்லைகள் ஏற்படும். ஆகவே இதிலே கலந்து கொள்ள வேண்டாம் என்று அரசாங்கம் வேண்டுகோள் விடுக்கிறது. இந்தவேண்டுகோளை விடுக்கிறவர் ஒரு தனி மனிதர். இந்த வேண்டுகோளை வேண்டாம் என்று மறுத்துச் சொல்வது ஒரு அரசாங்கம். ஒரு நாட்டு மக்களுடைய சார்பிலே சொல்கிறது. ஆனால், அதற்குப் பிறகு சில விளைவுகள், நிகழ்ச்சிகள் பல நடைபெறுகின்றன. அந்த நிகழ்ச்சியாலே பல விளைவுகள் உருவாகின்றன. பல துன்ப சம்பவங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

ஆனால் நம்முடைய பத்திரிகைகளுக்கு இதிலே என்ன கடமை என்பதை நான் தினமலரைப் போன்ற நடுநிலைமைப் பத்திரிகைகள், மக்கள் நல்வாழ்விலே அக்கறையுள்ள பத்திரிகைகள் என்ற காரணத்தினாலே இந்தக் கூட்டத்திலே சொல்வதற்கு இது பொருத்தமான இடம் என்ற காரணத்தினாலே சொல்கிறேன். வேறு இடமாக இருந்தால்- நெருப்பு பற்றிக்கொண்டு எரிந்தால் அங்கே பிடுங்கியது லாபம் என்று கருதுகிற பத்திரிகைகளாக இருந்தால் நான் அங்கே போய் சொல்ல மாட்டேன்.

### உணர்வுடன் செயல்படுக!

விபச்சாரியினிடத்திலே போய் பத்தினித் தன்மையைப் பற்றிச் சொன்னால் அவனைவிட பைத்தியக்காரன் இருக்க முடியாது. திருடியதற்காகப் பத்துத் தடவை சிறைக்குச் சென்று வந்தவனிடத்தில் போய் திருடவேகூடாது என்று உபதேசம் செய்தால் அவனைப்போல் ஒரு முட்டாள் யாரும் இருக்க முடியாது என்று எண்ணுவதைப் போல் - நான் அப்படிப்பட்ட ஒரு கட்சிக்கு-அல்லது எது நடந்தாலும் கவலை இல்லை; நாங்கள் எதையாவது சொல்லி மக்களிடத்திலே குழப்பத்தை உண்டாக்குவோம் என்று எண்ணுகிற பத்திரிகைகளுக்குச் சொல்லிப் பயனில்லை. என்பதை அறிவேன். ஆனால் நடுநிலைப் பத்திரிகைகள், செய்திகளைத் தருகிற பத்திரிகைகள் அந்தச் செய்திகளைத் தருகிற போது இந்த நாட்டு மக்களுக்கு நன்மை தரவேண்டும், நன்மை பயக்க வேண்டும், அமைதி தவழ வேண்டும் என்ற உணர்வுடன் செயல்பட வேண்டும். அங்கே எரிகிற நெருப்பு உங்கள் வீட்டுக்கு வருவதற்கு நேரமாகாது. அதை மனதிலே வைத்துக் கொண்டு செய்திகளை வெளியிட வேண்டும்.

நான் ஒருசம்பவத்தைச் சொன்னால் அவர்கள் வருந்தமாட்டார்கள் என்று கருதுகிறேன். கடந்த காலத்தில் ஒன்றிரண்டு சம்பவங்கள் நடைபெற்றதை நினைவு படுத்துவதில் தவறு இல்லை என்றும் கருதுகிறேன். இதிலே அரசியல் கலந்து பேசுகிறேன் என்று எண்ண மாட்டார்கள் என்றும் நம்புகிறேன். சில பத்திரிகைகள் அன்றைக்கு இருந்த அரசாங்கத்தைப் பற்றி எதிர்த்து எழுதினார்கள். மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார்கள். குமுதம் பத்திரிகை, ஆனந்தவிகடன் பத்திரிகை. அந்தப் பத்திரிகையின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட அந்த வரலாற்றை இன்னும் பசுமையாக நாங்களெல்லாம் இதயங்களிலே வைத்துக் கொண்டு இருக்கிறோம்.

### அந்த நெருப்பு

அதுமாத்திரம் அல்ல. இன்னொரு நாள் பத்திரிகை, மிகப் பெரிய செல்வாக்கு வாய்ந்த ஆங்கிலப் பத்திரிகை. (பெயரைச் சொல்ல விரும்பவில்லை) அந்தப் பத்திரிகை அந்த அரசாங்கத்திற்கு எதிராக இருக்கிறது. அல்லது அரசுக்கு எதிராக இருக்கிறது என்ற காரணத்தினாலே அந்தப் பத்திரிகைக்குத் தரப்பட்ட தொல்லைகள், அவர்களுடைய ஆட்சியின் அதிகாரத்தை வைத்துக்கொண்டு தரப்பட்ட கொடுமைகள் எவ்வளவு என்பதை இன்னும் நாங்கள் மறந்து விடவில்லை. ஆகவே எங்கேயாவது கொடுமை நடைபெறுகிறது என்கிறபோது—இன்றைக்கு அது உங்களுக்கு நடக்கவில்லை என்பதால் அதைத் தூண்டுவோம் என்று எண்ணுவீர்களேயானால், அந்த நெருப்பு உங்கள் வீட்டிற்கு வருவதற்கு நேரம் ஆகாது என்பதைத் தயவு செய்து மனதிலே நீங்கள் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இங்கே அப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்தால் இங்கே இன்றைக்கு ஆரம்பிக்கிற 'தினமல'ரிலேயே வைத்துக்கொள்ளுங்கள். ஏதோ ஒரு நிகழ்ச்சியின் காரணமாக, வேலை நிறுத்தத்தின் காரணமாக, வேறு பல்வேறு குழப்பங்களின் காரணமாக, கருத்து மாறுபாடுகளின் காரணமாக, ஒரு விவகாரம் வந்து விடுகிறது. அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று நீங்கள்

யாரை அழைப்பீர்கள்? யார் வந்தால் உங்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்று நம்புகிறீர்கள்? தயவு செய்து மனதிலே வைத்துக் கொள்ளுங்கள். அப்படி அமைதிக்காக அழைக்கிறவர்களை, பாதுகாப்புக்காக அழைக்கிறவர்களை, இன்னொரு இடத்திலே நீங்கள் தெரிந்தோ, தெரியாமலோ குற்றம் சுமத்துகிற வேலையை, பழி சுமத்துகிற வேலையை நீங்கள் உங்கள் பத்திரிகையிலே உருவாக்கி விட்டால் அதற்குப் பிறகு உங்களுக்கு எங்கேயிருந்து பாதுகாப்பு கிடைக்கும்? உங்களுக்கு எப்படிப்பாதுகாப்புத்தரமுடியும் என்று நம்புகிறீர்கள்?

நான் முன்னாலே சொன்னேனே இந்த பந்த்தைப் பற்றி. பந்த் நடந்து முடிந்தது. பல இடங்களில் வன் முறைகள் நடத்தப்பட்டன. பஸ்கள் வழி மறிக்கப்பட்டன. சாலைகளிலே மரங்களை வெட்டி வீழ்த்தி வழிமறித்தார்கள். பல தொல்லைகளை ஏற்படுத்தினார்கள் பொது மக்களுக்கு. கிராமங்களில் இருந்து வந்த பால் வண்டிகளை அடித்துத் தகர்த்து பாலை எல்லாம் கீழே ஊற்றினார்கள். இப்படிப்பட்ட வன்முறைகள் நடந்தன. இதைப்பற்றி அந்தப் பத்திரிகையினுடைய நிருபர் போய் விசாரித்து இதெல்லாம் நியாயம் தானா என்று நான்கு பொது மக்களிடத்திலே கேட்டு அந்தப் பத்திரிகையிலே கட்டுரை வரவில்லை; செய்தி வரவில்லை; ஸ்டோரி வரவில்லை

## அண்ணன்-தம்பி கொலையுண்டிருந்தால்....

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கொன்றார்கள். நம்முடைய சகோதரனைக் கொன்றால் நாம் அங்கே போய், எப்படிக் கொன்றார்கள் என்று நிருபர் போய் விசாரிப்பாரா என்று நான் கேட்கிறேன். நான் அந்த நிருபரைக் கேட்கிறேன்— போட்ட பத்திரிகையினுடைய மனசாட்சியைக் கேட்கிறேன். உங்களுடைய தம்பி, அண்ணன், அப்படிக் கொலை செய்யப்பட்டிருந்தால், நாம் போய் இந்தக் கொலை நடந்ததற்கு என்ன காரணம் என்று இதற்கு மாறுபட்ட கருத்தைத் திரட்டிப் போடுகிற முயற்சியிலே ஈடுபட்டு இருப்போமா?

நம்முடைய சொத்துக்குப் பாதுகாப்பு வேண்டும்என்று கேட்கிறபோது எந்தக் காவல்துறையை அழைக்கிறோமோ, எந்தக்காவல் துறைக்கு உடனே போன் செய்து வரவில்லை என்று துடிக்கிறோமோ அந்தக் காவல் துறையினுடைய அதிகாரியைக் கொல்லுகிறார்கள். அதிலே என்ன நடந்தது என்பதைக்கூட கொஞ்சம் சாவதானமாக, நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது. அதிலேபோய் ஏன் பெட்ரோலை ஊற்றுகிறீர்கள்? அது கொஞ்சம் அணையட்டுமே? அதற்குப் பிறகு குற்றவாளிகளைக் கண்டு பிடிப்போம். எங்கே ஓடிவிடுகிறார்கள்? யார் தவறு செய்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்போம். ஆனால் அவசரம் அவசரமாக நிருபர் போகிறார். அங்கே யாரையோ நாலு பேரைப் பார்த்துக் கேட்கிறார். செய்திகளை வெளியிடுகிற மிகப் பெரிய பத்திரிகைகள், பொறுப்புவாய்ந்த பத்திரிகைகள், செய்தி வெளியிடுகின்றன என்றால், இந்தநாட்டிலே இன்னும் நாலு போலீஸ் இன்ஸ்பெக்டர்களைக் கொல்லலாம் என்று நாம் தூண்டுகிறோம் என்று பொருளா?

தயவு செய்து மனதிலே கை வைத்துச் சொல்லுங்கள். எப்படி இந்த நாட்டிலே அமைதி ஏற்படவேண்டும், ஏற்படும் என்று கருதுகிறீர்கள்?

## எவ்வளவு நேரமாகும் ?

நாளைக்கு இங்கே பத்துப் பேர் நுழைந்து அந்தக் காரியத்தைச் செய்வதற்கு எவ்வளவு நேரமாகும்? அந்த வன்முறையைத்தூண்டிவிட்ட அந்தத் தலைவரை இந்த நாட்டிலே வளர்த்து விட்டால் அதுதானே நடக்கும்? சரி—என்னுடைய செய்தியை இந்தப் பத்திரிகை போடவில்லையா? போ. 50 பேர் உள்ளே நுழை. அந்த ஆசிரியரை அடித்துவிட்டு வா என்று சொல்வதற்கு எவ்வளவு நாழிகை ஆகும் என்று கருதுகிறீர்கள்? நடந்ததா இல்லையா? அன்றைக்கு ஆட்சியிலே இருந்து நடத்தினார்கள். இன்றைக்கு ஒரு மனிதர் வெளியிலே இருந்து நடத்திக் கொண்டு இருக்கிறார்.

ஒரு இன்ஸ்பெக்டர் கொல்லப்பட்டார். என்ன அவசரம்? கொல்லப்பட்ட இடத்திலே போய் எதை விசாரித்துக் கொண்டு எழுதுகிறார்கள் பத்திரிகையில். ஏன் அது நடந்தது? நான் கேட்கிறேன் பந்த் என்று அந்த மனிதர் அறிவித்தாரே அந்த பந்த்தைப் பற்றி இந்தப் பத்திரிகைகள் வாய் திறந்தனவா? இது நியாயம் அல்லது நியாயம் அல்ல என்று சொன்னீர்களா? தலையங்கம் எழுதினீர்களா? இந்த நாட்டு மக்களை எச்சரித்தீர்களா? இது தவறா சரியா? சரி என்று எண்ணினால் எழுதுங்கள். அரசாங்கத்திற்கு ஆதரவாக இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. வன்முறை வேண்டும் என்று விரும்பினால் எழுதுங்கள். பத்திரிகை சுதந்திரம் இருக்கிறது. இப்படி அடிக்கலாம், கொல்லலாம், பஸ்களைத் தடுத்து நிறுத்தலாம் : எங்கேயாவது ஒரு பஸ் போக்குவரத்திலே ஒரு மாணவனுக்கும் ஒரு கண்டக்டருக்கும் ஒரு பாஸஞ்சருக்கும், அல்லது டிரைவருக்கும் தகராறு என்றால், சென்னை நகரம் முழுவதும் பஸ்ஸை நிறுத்தி விடுகிறார்களே குறுக்கே. இது சரி என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? தவறு என்றால் யாராவது எடுத்துச் சொன்னீர்களா? இப்படித்தடுத்து நிறுத்தலாமா? தொழிலாளியினுடைய உரிமைக்காகப் போராடுவது என்பது வேறு. எங்கேயாவது ஒருவர் உணர்ச்சி வயப்பட்டு மோதிக் கொண்டால் இந்த நாட்டு மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? குறுக்கே எல்லா இடங்களிலும் ஆயிரக்கணக்கான பஸ்களை நிறுத்தி விட்டுவிட்டு எந்தப் போக்குவரத்திற்கும் தடை செய்தால் இந்த நாடு எங்கே போய் முடியும்? பத்திரிகைகள் ஏன் தங்களுடைய கருத்துக்களைச்சொல்ல பயப்படுகிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. ஏதோ நடக்குது நடக்கட்டும். இப்படி பஸ்கள் எல்லாம் தடுத்து நிறுத்தப்பட்டன என்று, அதையும் படம் எடுத்துப் போட்டுப் பத்திரிகைச் செய்தியாக்கி விற்றால் இதிலே என்ன பலன் கிடைக்கும்.

ஒரு சப்-இன்ஸ்பெக்டரை அடித்துக் கொன்றிருக்கிறார்கள் என்றால், நீங்கள் செய்திகளைத் தாருங்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஒரு வாரம் கொஞ்சம் பொறுத்து இருக்கக் கூடாதா? நாட்டிலே ஒரு அமைதிச் சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பிறகு அதற்கெல்லாம் என்ன காரணம் என்று ஆராய்ந்திருக்கக்கூடாதா? உங்களுடைய நிருபருக்கு அப்படி என்ன அவசரம் வந்து விட்டது- அந்தத் திருநெல்வேலி நிருபருக்கு? அவருக்கு என்ன அதில் அவ்வளவு அக்கறை? நான் கேட்கிறேன். அவர் இந்தப் பத்திரிகையினுடைய நடுநிலைத் தன்மைக்கு ஏற்ற நிருபரா? அதிலே தான் எனக்குச் சந்தேகம் வருகிறது. தயவு செய்து அந்த பத்திரிகைக்காரர்கள் அவரை விசாரித்து அறிய வேண்டும். அப்படி என்ன அக்கறை? அல்லது நீங்கள் அங்கே உங்களுடைய தலைமை ஆசிரியர் உடனே செய்தியைச் சொல்லி என்ன நடந்தது என்று சொல்லு என்று கேட்டீர்களா? அப்படி கேட்டீர்கள் என்றால் அந்த தலைமை ஆசிரியருக்கு என்ன அவ்வளவு அக்கறை? நீங்கள் அரசாங்கத்தை எதிர்க்கிறீர்கள் அல்லது அரசாங்கத்திற்கு விரோதமான காரியங்களில் ஈடுபடுகிறீர்கள் என்பதற்காகச் சொல்லவில்லை.

## உங்களையும் தாக்கும்

அரசாங்கம் என்பது ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுகிற அரசாங்கம். அது 5 ஆண்டுகளில் இருக்கலாம்—10 ஆண்டுகளில் இருக்கலாம். ஆனால் அமைதி என்பது என்றைக்கும் இருக்க வேண்டிய ஒன்று அதை மனதிலே வைத்துக் கொள்ளுங்கள் வன்முறைகளை வளர்த்து விடுவதற்கு நீங்கள் தெரிந்தோ தெரியாமலோ துணை போகாதீர்கள். துணை போனால் அது உங்கள் வீட்டிற்கும் வரும். அந்த வன்முறை உங்களையும் தாக்கும். அன்றைக்கு நம்மையெல்லாம் காப்பாற்றுவதற்கு யாரும் இருக்க மாட்டார்கள்.

தடி எடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலைமையை நாட்டிலே ஏற்படுத்துகிற ஒரு சூழ்நிலை, நாம் விடுதலை இயக்கத்தை நடத்திக் கொண்டிருந்தபோது இருந்த நிலைமை வேறு. நான் அதனாலேதான் இன்னொரு விழாவிலே கூட பேசினேன். தயவுசெய்து பெரிய பத்திரிகைகள், நடுநிலைமை மாறாமல் செய்திகளைத் தர வேண்டுமென்று எண்ணுகிற பத்திரிகைகள், செய்திகளை மக்களுடைய நன்மைக்காகத் தர வேண்டுமென்று எண்ணுகிற பத்திரிகைகள் தங்களுடைய அணுகுமுறைகளை தயவு செய்து மறு பரிசீலனை செய்தாக வேண்டும்.

இது அரசாங்கத்திற்கு ஆதரவானதா அல்லது எதிரானதா என்று நான் சொல்லவில்லை. மக்களுக்கு நன்மையானதா, தீமையானதா? அந்தத் தராசிலே வைத்து எடைபோடுங்கள் எந்த நிகழ்ச்சிகளையும். நீங்கள் எந்த முடிவுகளையும், செய்திகளையும் பத்திரிகைகளில் அறிவிப்பதற்கு முன்னாலே தயவு செய்து இதன் மூலம் மக்களுக்கு என்ன நன்மை பயக்கும் என்று நீங்கள் முடிவு எடுங்கள். இந்த பந்தைத் தூண்டி விட்டவரைப் பற்றி எவ்வளவு வன்முறையாளர் என்று சட்டமன்றத்திலே அத்தனைக் கட்சிகளும் அங்கே சாட்சியம் அளித்து இருக்கின்றார்கள். அத்தனைக் கட்சித் தலைவர்களும் அங்கே பேசியிருக்கிறார்கள். அவர் என்ன பேசிக் கொண்டிருந்தார் கடந்த ஆறு மாதம் என்புதைச் சொல்லி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு வன்முறை ஆகட்டும்; வன்முறையாளர் தூண்டிவிட்ட ஒரு சம்பவத்தில் அவர் ஆறு மாதமாக உபதேசித்துக் கொண்டிருந்தார்-அதைச் செயல்படுத்தியிருக்கிறார்கள்.

## எவ்வளவு நேரமாகும்?

எவனாவது அரசாங்க அதிகாரி வந்தால் அவனை அடித்து விரட்டு-அவர் பேசினார். எவனாவது பியூஸ்கேரியரைக்கழட்ட வந்தால் அவனைக் கட்டிவை என்று பேசினார். எவனாவது போலீஸ்காரன் வந்தால் அவனுடைய மனைவியினிடத்திலே சொல்லிவிட்டு வந்து விட்டானா என்று கேட்டுவிட்டு அனுப்பு; அவனுடைய பிள்ளைக்கு அவன் தந்தை ஆக மாட்டான், இருக்க மாட்டான் என்று சொல்லு என்று சொன்னவர் நடத்திய நிகழ்ச்சியிலே ஒரு சப்-இன்ஸ்பெக்டர் கொலை செய்யப்படுகிறார். அந்த நிகழ்ச்சியைப் பற்றி அவசரம் அவசரமாக ஒரு மிகப்பெரிய பொறுப்பு வாய்ந்த பத்திரிகையில் அங்கே போய் நிருபர் தகவல் சேகரித்துக் கொண்டு தருகிறார் என்றால் - எவ்வளவு நேரமாகும் இன்னொரு நிருபர் போய் தகவல் சேகரித்துக் கொண்டு இதற்கு மாறுபட்டக் கருத்தைச் சொல்வதற்கு?

எத்தனை பேரைக் கேட்டார்? இந்த நாலு பேருக்கு மாத்திரம் தான் இந்த நிருபர் கிடைத்தாரா? அல்லது இந்த நிருபருக்கு இந்த நாலு பேரும் தான் கிடைத்தார்களா? மற்றவர்கள் எல்லாம் கிடைக்க மாட்டார்களா? தயவு செய்து இதனுடைய விளைவுகளை எண்ணிப் பாருங்கள்.

நெருப்பு பற்றி எரிகிறபோது அதை அணைக்க எல்லோரும் முயற்சிப்போம். அணைத்ததற்குப் பிறகு இந்த நெருப்பு ஏன் பற்றியது? என்பதைப் பற்றி ஆராய்வோம். குற்றவாளிகளைக் கொண்டு வந்து நிறுத்துங்கள். பத்திரிகைகளுக்கு உரிமை இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. தவறு நிகழ்ந்து இருக்கிறது என்றால் எடுத்துச் சொல்லுங்கள். திருத்துவோம். ஆனால் சமுதாயத்தினுடைய நன்மையை முதலிலே மனதிலே வைத்துக் கொண்டு பாடுபட வேண்டும். சமுதாயத்தினுடைய நன்மை என்று சொல்கிறபொழுது ஏதோ அரசாங்கத்திற்கு ஏற்படுகிற நன்மை அல்லது அரசாங்கத்தினுடைய ஆதரவு என்று நான் சொல்லவில்லை. மக்களுக்கு ஏற்படுகிற நன்மை என்கிறபொழுது அதிலே நீங்களும் வருகிறீர்கள்; தினமலர் பத்திரிகையும் வருகிறது; அல்லது மற்ற பத்திரிகைகளும் வருகின்றன. அவர்களுக்கு ஒரு சங்கடம் என்றால் நீங்கள் எங்கே வந்து நிற்கிறீர்கள்?

ஆகவே அந்த அமைப்பை நாம் கேவலப்படுத்தி விட்டால், ஊனப்படுத்தி விட்டால், பங்கப்படுத்திவிட்டால் நமக்குப் பிறகு யார் பாதுகாப்புக்கு வருவார்கள்? தயவு செய்து இப்படிப்பட்ட உணர்விலே பத்திரிகைகள், நான் 'தினமலர்' விழாவிலே, உரிமையோடு பேசுகிறேன். வேறு விழாவாக இருந்தால் பேசமாட்டேன்.

## சேர்ந்து உதவ வேண்டும்.

அது மாத்திரம் அல்ல. எனக்கு முன்னாலே இங்கே இருக்கிறவர்கள் என்னுடைய அன்புக்குரியவர்கள், மரியாதைக்குரியவர்கள் சில பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவும் பேசுகிறேன். நான் நல்ல எண்ணத்தோடு, அன்புள்ளத்தோடு பேசுகிறேன். நான் மனம் நொந்து பேசுகிறேன். அமைச்சர் என்ற முறையிலே பேசவில்லை. இந்த நாட்டினுடைய குடிமகன் என்றமுறையிலே பேசுகிறேன். இந்த நாடு அமைதி தவழும் பூங்காவாக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறபொழுது அதற்கு எல்லோரும் சேர்ந்து உதவ வேண்டும்.

எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு உதவ வேண்டும். முடிவுகள் வருகிறபோது உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள். தேர்தல் வருகிறபோது உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள். யாருக்கு வாக்கு அளிக்க வேண்டும் என்று கூட பத்திரிகைகள் சொல்லலாம். அதிலே ஒன்றும் தவறு இல்லை. ஆனால் ஆட்சி என்ற ஒன்று அமைந்து நடக்கின்றபொழுது இந்த நாடு அமைதியாக இருக்க வேண்டும். அதற்கு எங்களுடைய பங்கு என்ன என்பதிலே பத்திரிகைகள் மிகப் பெரிய கடமையாற்ற வேண்டும். பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அது தான் ஜனநாயகம்; அதுதான் பத்திரிகைச் சுதந்திரம் என்று கூறி இப்படிப்பட்ட வாய்ப்பு அளித்த நண்பர்களுக்கு நன்றி கூறி, என்னுடைய உடல் நலம் சரியில்லை என்று நேற்று வரை நான் இதிலே கலந்து கொள்ள முடியவில்லை என்று இருந்தேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளாத ஒரு சூழ்நிலையில் நானும் வராமல் இருந்தால் எங்களுடைய கடமையிலிருந்து வழுவிய குற்றத்திற்கு ஆளாவோம் என்ற காரணத்தினாலேதான் நான் இந்தச் சூழ்நிலையிலே இங்கே கலந்து கொண்டு இந்த கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்புத் தந்த அருமை நண்பர்களுக்கு நன்றி கூறி விடை பெற்றுக் கொள்கிறேன்.






# சிறந்த திரைப்படங்கள் கலைஞர்கள் விருது வழங்கும் விழா

சிறந்த திரைப்படங்களுக்கும், சிறந்த கலைஞர்களுக்கும் தமிழக அரசின் விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 1977-78 ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படங்களுக்கும் சிறந்த கலைஞர்களுக்கும் விருது வழங்கும் விழாவும், சிறந்த படங்களுககு உதவித் தொகை வழங்கும் விழாவும் மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் 1.5.'79 அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பரிசுகளையும் விருதுகளையும், உதவித் தொகைகளையும் வழங்கினார்.

சிறந்த இலட்சியம் உள்ள தரமான திரைப்படத்துக்கு இலட்ச ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்படி 'அச்சாணி', 'அன்பின் அலைகள்', 'ஆளுக்கொரு ஆசை', 'நாம்பிறந்த மண்', 'பட்டினப் பிரவேசம்', 'புவனா ஒரு கேள்விக் குறி' ஆகிய ஆறு படங்கள் உதவித் தொகை பெற்றன.


விருதுபெறும் திரைப்படங்கள், மற்றும் கலைஞர்களைத் தேர்ந்தெடுக்க மதுரைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு எஸ். வி. சிட்டிபாபு அவர்கள் தலைமையிலும் நிதி உதவி பெறும் திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்க மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி பு. ரா. கோகுல கிருஷ்ணன் அவர்கள் தலைமையிலும் வெவ்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டன. இக்குழுக்களின் தேர்வின்படி விருதுகளும் நிதி உதவியும் வழங்கப் பெற்றன.

முதற் பரிசு பெற்ற '16 வயதினிலே' படத்தின் தயாரிப்பாளருக்கு 50 ஆயிரம் ரூபாயும் தங்கப் பதக்கமும், 2 ஆம் பரிசு பெற்ற 'மதுரகீதம்' படத்தின் தயாரிப்பாளருக்கு 30 ஆயிரம் ரூபாயும் வெள்ளிப் பதக்கமும், 3ஆம் பரிசு பெற்ற 'பலப் பரீட்சை' படத்தின் தயாரிப்பாளருக்கு 20 ஆயிரம் ரூபாயும், வெள்ளிப்பதக்கமும், சிறப்புப் பரிசுக்குரிய 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' படத்தின் தயாரிப்பாளருக்கு 25 ஆயிரம் ரூபாயும் வெள்ளிப் பதக்கமும், சிறந்த செய்தி விளக்கப்படமான 'ஏன் இந்த விஷம்' படத்தைத் தயாரித்த தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறைக்கு 5 ஆயிர ரூபாயும்

திரு எஸ்.வி. சிட்டிபாபு



மாண்புமிகு
உயர் நீதிமன்ற நீதிபதி
திரு பு. ரா. கோகுல கிருஷ்ணன்






திரு ஏ. வி. எம்.



திரு நாகிரெட்டி



திரு புல்லையா



திரு சித்ரமகால் கிருஷ்ணமூர்த்தி

வெள்ளிப்பதக்கமும், அரசு புதிதாக அறிவித்துள்ள 'ராஜா சாண்டோ நினைவுப் பரிசுத் திட்டத்தின்படி திரு எம்.ஏ. வேணு, அவர்களுக்கு ரூ. 25 ஆயிரமும், வெள்ளிக் கேடயமும் மாண்புமிகு முதல்வரால் வழங்கப்பட்டன. மற்றும் திரைப்பட சம்பந்தமான பல்வேறு கலைஞர்களுக்குத் தங்கப் பதக்கங்களை முதல்வர் வழங்கினார்.

இந்த விழா நிகழ்ச்சிப் படங்கள் 'தமிழரசு' இதழின் உட்பக்க அட்டைகளை அணி செய்கின்றன.

படவிளக்கம்:

1. திரு எம்.ஏ. வேணு
   ராஜா சாண்டோ நினைவுப்பரிசு
2. 16 வயதினிலே (முதற் பரிசு)—
   தயாரிப்பாளர்
3. மதுரகீதம் (2ஆம் பரிசு)—
   தயாரிப்பாளர்
4. பலப்பரீட்சை (3ஆம் பரிசு)—
   தயாரிப்பாளர்
5. மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் (சிறப்புப் பரிசு
   —தயாரிப்பாளர்
6. திரு. கமலஹாசன்—
   சிறந்த நடிகர்
7. செல்வி. லதா—சிறந்த நடிகை
8. திரு. முத்துராமன்—சிறப்புப் பரிசு
   —நடிகர்
9. திருமதி ஸ்ரீவித்யா—
   சிறப்புப் பரிசு நடிகை
10. திரு பாரதி ராஜா—
    சிறந்த இயக்குநர்
11. திரு. குகநாதன்—
    சிறந்த கதாசிரியர்
12. திரு. தூயவன் —
    சிறந்த உரையாடல் ஆசிரியர்
13. திரு. இளையராஜா—
    சிறந்த இசையமைப்பாளர்
14. திரு. ஜேசுதாஸ்—
    சிறந்த பின்னணிப் பாடகர்
15. திருமதி ஜானகி—
    சிறந்த பின்னணிப் பாடகி
16. திரு. புலமைப்பித்தன்—
    சிறந்த பாடலாசிரியர்
17. செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்
    திரு என். கிருஷ்ணமூர்த்தி—
    சிறந்த செய்தி விளக்கப்படத் தயாரிப்பாளர்.
18. திரு பாபு—சிறந்த வண்ணப்பட ஒ்ளிப்பதிவாளர்
19. திரு ஏ. சோமசுந்தரம்—
    சிறந்த கறுப்பு - வெண்மைப்பட ஒளிப்பதிவாளர்
20. திரு. பூவண்ணன்—
    சிறந்த குழந்தைப்பட கதாசிரியர்
21. சிறுமி. இந்திரா—
    சிறந்த குழந்தை நடிகை
22. அச்சாணி—தயாரிப்பாளர்
23. அன்பின் அலைகள்—
    தயாரிப்பாளர்
24. ஆளுக்கொரு ஆசை—
    தயாரிப்பாளர்
25. நாம்பிறந்த மண்——
    தயாரிப்பாளர்
26. பட்டினப்பிரவேசம்—
    தயாரிப்பாளர்
27. புவனா ஒரு கேள்விக்குறி—
    தயாரிப்பாளர்

அனுபவமும் ஆற்றலும் மிக்க பழம்பெரும் படத்தயாரிப்பாளர்களான திரு ஏ. வி. மெய்யப்பன், திரு பி. நாகிரெட்டி, புகழ் பெற்ற திரைப்பட இயக்குநரான திரு.பி. புல்லையா, தென்னிந்திய திரைப்பட வர்த்தக சங்கத்தின் தலைவர் திரு 'சித்ரமகால்' கிருஷ்ணமூர்த்தி ஆகிய பெருமக்கள், பரிசு பெற்ற கலைஞர்களை வாழ்த்திப் பாராட்டினார்கள். பரிசு பெற்ற கலைஞர்களின் சார்பில் நடிகர் திரு ஆர். முத்துராமன் அரசுக்கு நன்றி தெரிவித்தார்.



# பாவேந்தர் பாரதிதாசன் விழா

புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் கவிஅரசர் என்றும் போற்றிப் புகழப்படும் பாரதிதாசன் அவர்கள்ின் 89-வது பிறந்தநாள் விழாவை தமிழகத்தின் தலைநகரமாகிய சென்னையிலும், ஏனைய மாவட்டத் தலைநகர்களிலும் அரசு மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

சென்னையில் கலைவாணர் அரங்கில் பாவேந்தரின் விழா ஏப்ரல் 29 அன்று காலை 8.30 மணிக்கு குடந்தை சீனிவாசன் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியுடன் ஆரம்பம் ஆகியது. தமிழ் நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறைத் துணை இயக்குநர் திரு து.மு. காளியப்பா வரவேற்புரை கூறினார்.

விழாவைத் துவக்கி வைத்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் குறிப்பிட்டார்:

''சாதிகளை நமது தமிழகத்தின் பழங்காலக் கவிஞர்கள் சாடியிருக்கிறார்கள். என்றாலும் பாரதிதாசன் சாதியை வேகமாகச் சாடியதுபோல், யாரும் சாடியதில்லை. அவர் சாதியைத் தீவிரமாகக் கண்டித்திருக்கிறார்''

அடுத்து உவமைக் கவிஞர் திரு.சுரதா அவர்களின் தலைமையில் 'பாவேந்தர் படைத்த பாத்திரங்கள்' என்னும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

கவிஞர் புலமைப்பித்தன் கவிஞர் ஈரோடு தமிழன்பன் கவிஞர் இளஞ்செழியன் கவிஞர் முத்து ராமலிங்கம் கவிஞர் பனப்பாக்கம் சீத்தா -கவிஞர் செங்கைப் பொதுவன் கவிஞர் திருமதி அரசு மணிமேகலை ஆகியோர் கவிதைகளை அரங்கேற்றினர்.

பிற்பகல் 3.30 மணி அளவில், மாண்புமிகு தமிழ்நாடு அரசு சிறப்புப் பிரதிநிதி திரு க.இராசராம் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. செய்தி - மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் திரு. வி.டி. வீரப்பன் அனைவரையும் வரவேற்றார். தலைமை ஏற்ற திரு ராசாராம் குறிப்பிட்டார்:

''பாரதிதாசன் வாழ்ந்த காலம்-கவிஞர்கள் கடவுளைப் பற்றியே பாடி வந்த காலம்; மனிதனைப் பாடுவதற்குப் பயப்பட்ட காலம்; அந்தக் காலத்தில் ஆடு மேய்ப்பவனைக் குறித்து, வண்டிக் காரனைக் குறித்து, தொழிலாளரைக் குறித்து, புறம் பின்னும் பெண்ணைக் குறித்துப் பாவேந்தர் எழுதினார் என்றால், அது போற்றத் தகுந்த செயல்;

தலைமை உரைக்குப் பின்னர், 'பாவேந்தர் கண்ட இயற்கை' என்னும் தலைப்பில் திரு. சிலம்பொலி செல்லப்பன் உரையாற்றினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இயற்கைக் காட்சிகளை சங்கப் புலவர்கள் போல எளிமையாகச் சொல்லியிருக்கிறார் பாரதிதாசன். அவர் இயற்கையிலே தோய்ந்தவர்.''



திருமதி வைஜயந்திமாலா பாலி

அடுத்து, 'பாவேந்தர் கண்ட புதுமைகள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றிய திரு கா. வேழவேந்தன், குறிப்பிட்டதாவது:

''பாவேந்தரின் நெஞ்சம் புதுமைக்கு எப்போதும் வரவேவேற்பு வழங்கி வந்திருக்கிறது. அவர் புதுமை மின்னும் வகையில் கவிதை படைத்தார்;'

அடுத்து, 'பாவேந்தர் கண்ட தமிழுணர்வு' என்ற தலைப்பில் உரையாற்றிய டாக்டர் சு.பாலச்சந்திரன் தெரிவித்தார்;

''தமிழ்நாட்டில் தமிழுக்கு அவமரியாதை ஏற்பட்டபோது பாவேந்தர் கொதித்தார்; அதன் விளைவுதான் அவரது 'தமிழியக்கம்' நூல். பாவேந்தருக்குத் தமிழ்தான் உயிர்! உலகில் உள்ள உறவினர்கள்- இன்பங்கள் யாவும் அடுத்தபடிதான் அவருக்கு!''

அடுத்து, 'பாவேந்தர் கண்ட தொழிலாளர்கள் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றிய திரு டி.கே. சீனிவாசன் தமது உரையில் குறிப்பிட்டார்;

''நிலவைக் குறித்துப் பாடும் போதுகூட தொழிலாளியின் நினைவு தான் வருகிறது பாவேந்தருக்கு! காதலியைப் பற்றிப் பாடும் போதுகூட, தொழிலாளியின் நினைவுதான் அவருக்கு ஏற்படுகிறது.

மாலை 6.30 மணியளவில், மாண்புமிகு நீதிபதி திரு ச. மோகன் அவர்கள் தலைமையில் நிறைவுவிழா நடைபெற்றது. செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு சி.என். கிருஷ்ணபாரதி அனைவரையும் வரவேற்றார்.

நீதிபதி திரு ச. மோகன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பழங்காலத்துக் கவிஞர்கள் எல்லாரும் கடவுள், காதல் என்னும் இருபொருள்களை மட்டுமே சிறப்பித்துப் பாடிக் கொண்டி

ருந்தார்கள். இந்த நிலையை மாற்ற 20ஆம் நூற்றாண்டிலே பாரதி, பாரதிதாசன் என்னும் இரு கவிஞர்கள் தோன்றினார்கள். நாடு விடுதலை பெறப் பாடினார் பாரதி; மொழி விடுதலை பெறப் பாடினார் பாரதிதாசன்!''

அடுத்து உரையாற்றிய திரு நெ.து. சுந்தரவடிவேலு தமது உரையில் குறிப்பிட்டார்:

''சமுதாயத்தின் அறியாமையை-கோளாறுகளை நீக்கக் குரல் கொடுத்த பாரதிதாசன், கற்றவர்கள், கல்லாதவர்களுக்குக் கல்வி அளிக்க வேண்டும் என்று அவர் வினார்''

அடுத்து உரையாற்றிய அரசுக் கவிஞர் திரு கண்ணதாசன் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பாரதிதாசன் முதலில் 'சுப்பிரமணியர் துதி அமுதைப்' பாடினார். பின்னர் சுயமரியாதைக் கருத்துக்களை மட்டுமே பாடி வந்தார். இதுதான் பரிணாம வளர்ச்சி!'

அடுத்து உரையாற்றிய டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பாரதிதாசன் எதை எடுத்துச் சொன்னாலும் பாடினாலும் அவருக்கு எவரும் ஈடு இல்லை-இணையில்லை என்ற நிலையில் நின்றவர். தந்தை பெரியாரின் கருத்துக்களுக்கு நிரந்தரமான கவிதையைத் தந்தவர் அவர்.



முல்லை முத்தையா

''நாட்டைப் பற்றி, மொழியைப் பற்றி பாரதிதாசன் பாடியதுபோல வேறு யாரும் பாடியது இல்லை. அவரது அணுகுமுறையே தனி. காசுக்காக மற்றவரை மகிழ வைக்கப் பாட வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு வந்ததில்லை; கடைசி வரையில்தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டுக்கும் பாடுபட்டவர் பாரதிதாசன்.''

நாவலரின் உரைக்குப் பின்னர் பாவேந்தர் விழாவையொட்டி ஏற்பாடு செய்யப் பட்டிருந்த கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற திரு சந்திரசேகரன் (கன்னியாகுமரி மாவட்டம்) 2ஆம் பரிசு பெற்ற திரு ஜி ராஜாராமன் (இராமநாதபுர மாவட்டம்), 3ஆம் பரிசு பெற்ற திரு சண்முக தாயுமானவன் (திருச்சி மாவட்டம்) ஆகியோருக்கும், ஓவியப் போட்டியில் முதற்பரிசு பெற்ற திரு ரெங்கனாதன் (செங்கை மாவட்டம்), 2ஆம் பரிசு பெற்ற திரு .வி. கணேசன் (சென்னை),3ஆம் பரிசு பெற்ற இரா. மரியதாசன் (நெல்லை மாவட்டம்) ஆகியோருக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

பாரதிதாசன் விருதுக் கவிஞர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் பரிசளிக்கும் திட்டத்தைச்சென்ற ஆண்டு தமிழக அரசு அறிமுகம் செய்தது. உவமைக் கவிஞர் சுரதா-சென்ற ஆண்டு பரிசுபெற்றார். இந்த ஆண்டு, மறைந்த கவிஞர்கள் வாணிதாசன்,எஸ்.டி. சுந்தரம் இருவரின் குடும்பத்தவருக்கும் தனித்தனியாக10 ஆயிரம் ரூபாய் பரிசை அரசு அளித்தது. வாணிதாசனுக்குரிய பரிசுத் தொகையை அன்னாரின் மனைவி திருமதி ஆதிலட்சுமி அவர்களிடமும் எஸ்.டி. சுந்தரம் அவர்களுக்குரிய தொகையை அவரின் மகன் ராஜாவிடமும் வழங்கினார் கல்வியமைச்சர்.

பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புக் குறித்துச் சிறந்த நூல்களை எழுதிய ஆசிரியர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிக்கும் திட்டத்தை இந்த ஆண்டு தமிழக அரசு அறிமுகம் செய்துள்ளது. அதன்படி 'கவிஞரும் காதலும்' என்னும் நூலை எழுதிய புலவர் ந. இராமநாதன், 'புரட்சி முழக்கம்' நூலை எழுதிய டாக்டர் சாலை இளந்திரையன், 'பாரதிதாசன் கதைப் பாட்டு, பாரதிதாசன் இலக்கியங்கள்' ஆகிய நூல்களை எழுதிய டாக்டர் ச.சு. இளங்கோ, 'புரட்சிக்கு வித்திடும் பாவேந்தர் பாட்டு' என்னும் நூலை எழுதிய திரு. மயிலைநாதன் ஆகியோர் ஒவ்வொருவருக்கும் 1000 ரூபாய் பரிசையும், சான்றிதழையும் மாண்புமிகு கல்வியமைச்சர் அளித்தார்.

பாவேந்தரின் நூலை முதன் முதலில் சிறப்பாக வெளியிட்டமைக்காக திரு முல்லை. முத்தையா அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகையை மாண்புமிகு கல்வி அமைச்சர் வழங்கினார்.

நிறைவுவிழாச் சொற்பொழிவை ஆற்றிய மாண்புமிகு கல்வி அமைச்சர் குறிப்பிட்டார்:

(44-ஆம் பக்கம் பார்க்க)



புலவர் ந. இராமநாதன்



டாக்டர்
சாலை இளந்திரையன்



டாக்டர்
ச. சு. இளங்கோ



மயிலைநாதன்





# ஐந்து ஆண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள்!

தமிழ்நாட்டில் கிராமக்கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் 1950 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன. இச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து உறுப்பினர்களுக்கு அரசின் நிதியிலிருந்து ஒரு நபருக்கு ரூபாய் 10,000 வரை 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும் கடன்கள் கொடுக்கப்பட்டு வந்தன. இத்திட்டத்தின் மூலமாக ரூ. 1.30 கோடி கடனாகக் கொடுக்கப்பட்டு 1960 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

## கிராம வீடு கட்டும் திட்டம்

கிராம வீடு கட்டும் திட்டம் என்று ஒரு திட்டம் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைத் துறை) மூலமாக 1966 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்தது. இத்திட்டத்திற்கு அரசே வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்து வந்தது. இத்திட்டத்தின்கீழ் கிராம மக்களுக்கு நபர் ஒருவருக்கு ரூபாய் 5000 கடனாக வழங்கப்பட்டது. சுமார் 3 செண்டுக்குக் குறையாமல் வீட்டு மனை வைத்திருப்பவர்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலமாக, நான்கு தவணைகளில் கடன்கள் வழங்கப்பட்டன.

வீடுகள் கட்டப்படுவதைச் சாலை ஆய்வாளர்கள் மேற்பார்வை செய்தனர். இக்கடன்களை வசூலிக்கும் பொறுப்பு வட்ட ஆட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் மூலமாக 1966 ஆம் ஆண்டிலிருந்து 31.3.1978 வரை8,584 வீடுகள் ரூ. 3.59 கோடி மதிப்பிற்குக் கட்டப்பட்டு இருக்கின்றன.



திரு ஏ. இ. செல்லையா
வீட்டுவசதி வாரியத் தலைவர்

## எல்லாருக்கும் வீடுகள்

இந்தக் கிராம வீடு கட்டும் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று அரசு முடிவெடுத்து, 1976 ஏப்ரலில் அதற்கான உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவுப்படி 10 வட்ட கிராமிய கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் 1976-77ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டன. இதை மேலும் விரிவாக்கி தமிழ்நாட்டிலுள்ள அத்தனை கிராம மக்களும் வீடு கட்டிக் கொள்ள வேண்டும் என்ற பெரிய நோக்கத்துடன், 50 கிராமிய கோட்ட அளவிலான கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகவும் தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதன் மூலமாக 1978-79 ஆம் ஆண்டிற்கு 20,000 கடன்கள் ரூ. 10 கோடி மதிப்பிற்கு அனுமதி செய்து, 10,000 வீடுகள் 5கோடி மதிப்பிற்கு 30.6.79 முடிய முடிகப்பட வேண்டுமென்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இதுவரை 2093 வீடுகள் கட்டி

**தமிழ்நாடு அரசு அலுவலருக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்.**

இத்திட்டம் மாவட்ட மற்றும் வட்டத்தலைமையகங்களில் ரூ. 200 முதல் ரூ. 750 வரை அடிப்படைச் சம்பளம் பெறும் அரசு ஊழியர்களுக்கு சலுகை வாடகை அடிப்படையில் வீட்டு வசதி வழங்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அரசு சார்பில் வீட்டு வசதி வாரியம் செயல்படுத்துகிறது. மேலும் கட்டிய வீடுகளைப் பேணி பாதுகாக்கவும் செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் கட்டிடங்கள் அரசு உடைமைகளாகும். பொதுவாக இத்திட்டத்தின் கீழ் அரசுக்கு சொந்தமான நிலங்களில் வீடுகள் கட்டப்படுகின்றன.

இரண்டாம் அய்ந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்திலிருந்து இதுவரை வீட்டு வசதி வாரியத்தால் 9,324 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1978–79 ஆம் ஆண்டில் 1,299 வீடுகள் கட்டி முடிக்கப்படும். பணியிடம் மாறுதலுக்குள்ளாகும் அலுவலர்களுக்கு வீட்டு வசதி கிடைப்பதில் உள்ள பற்றாக்குறையைப் போக்கும் வண்ணம், இத்திட்டத்தின் தற்போதைய ஒதுக்கீட்டை ரூ. 200 இலட்சத்திலிருந்து 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 250 இலட்சமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த உயர்வு மேலும் 1,400 வீடுகளைக் கட்ட துணை புரியும்.

முடிக்கப்பட்டு இருக்கின்றன. 5533 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. சுமார் ரூ. 5 கோடி மதிப்பிற்கு 10,800 மனுக்கள் மத்திய சங்கத்தில் அங்கீகாரத்திற்கான பரிந்துரை செய்து அனுப்பப்பட்டிருக்கின்றன.

**ஒரு இலட்சம் வீடுகள்**

தமிழ்நாடு அரசு தனது 16.2.'79 தேதியிட்ட ஆணைகளில் 5 ஆண்டுகளில் 1 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இதில் பெரும்பான்மையான வீடுகளின் மதிப்பு ரூ. 3000மும் அதற்குக் குறைவாகவும் இருக்க வேண்டுமென்றும், பல வீடுகள் ரூ. 4000த்திலும் ரூ. 5,000 மதிப்பீட்டிலும் கட்டப்படவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கின்றது. 1979-80, 80-81 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 20,000 வீடுகளும், 1981-82, 1982-83 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 25,000வீடுகள் வீதமும் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**மதுரை மாவட்டத்தில்..**

இந்த 1 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு திட்டம் தயாரித்து, அந்தத் திட்டத்தின் கீழ் 3,000 வீடுகள் மதுரை மாவட்டத்தில் மட்டும் கட்ட ஏற்பாடுகள் செய்தது மட்டுமில்லாமல், இதற்கான கடன் மனுக்களைத் தயாரித்து மத்திய சங்கத்திற்கு அனுப்பி இருக்கிறார்.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக 42 வீடுகள் வடபுதுப்பட்டி கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்டு 1.3.'79ம்தேதியன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி. பி.டி. சரசுவதி அவர்கள் அந்த விழாவில் பங்கு ஏற்றார். இந்த விழாவில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கப் பதிவாளர் திரு எ.இ. செல்லையா அவர்கள் இந்த 1 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தின் முக்கிய அம்சங்களை விளக்கினார்கள்.

**ஏழை எளிய மக்கள் பயன்பெற...**

தமிழக முதல்வர் அவர்கள், அரசின் 1 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தை விளக்கிப் பேசினார். இத்திட்டம் கிராமங்களிலுள்ள எளிய மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள உதவி செய்கிறது என்றும், அரிசன உறுப்பினர்களுக்கு வட்டி இல்லாக்கடன் கொடுக்கப்படுகின்றன என்றும் ரூ. 3000 மதிப்பீடும் அதற்குக் கீழும் கட்டிக் கொள்பவர்களுக்கு 20 சதவிகிதம் மானியமாகக் கொடுக்கப்படும் என்றும், இந்த மானியம் அரிசனங்களுக்கும், அரிசனங்கள் வசிக்குமிடத்தில் வீடுகள் கட்டி வசிக்க முன்வரும் பிற வகுப்பினர்களுக்கும் வழங்கப்படும் என்றும் விளக்கினார்.

இத்திட்டத்தினால் கிராம மக்கள் பெருமளவில் பயனடைய வேண்டும் என்றும், அதற்குவேண்டிய நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கமும், கூட்டுறவுத் துறை அதிகாரிகளும் வேண்டிய உதவிகள் புரிவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

**நல்வாழ்வுக்கான திட்டங்கள்**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் — கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் பதிவாளர் திரு எ. இ. செல்லையா அவர்கள் பேசுகையில், மேற்படி 1 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 60 கூட்டுறவு கிராமிய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு, பணியாற்றி வருகின்றன, என்றும் தற்போது கணிசமான அளவு கிராம மக்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கின்றனர் என்றும், ஏறக்குறைய 9800 கடன்கள் 475 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றன என்றும், ரூ.1.70 கோடி பட்டுவாடா செய்யப்பட்டிருக்கின்றன என்றும் விளக்கினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், கிராமங்களில் உள்ள ஏழைகளின் நல்வாழ்விற்காக இத்திட்டத்தைத் தீட்டி அமல் செய்யப்படுகிறது என்றும், அடுத்த ஆண்டில் 20,000 வீடுகள் கட்ட வேண்டும் என்னும் நோக்கத்துடன் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அறிவித்தார்.

**திட்டம் வெற்றி பெற...**

இந்த 1 இலட்சம் வீடுகள் கட்டி முடிக்க ஏறக்குறைய 40 கோடி ரூபாய் தேவைப்படும். இந்தத் தொகையை ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்தும், அரசிடமிருந்தும் இன்னும் மற்ற நிறுவனங்களிடமிருந்தும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் கடனாகப் பெற்று கிராமத்திலுள்ள மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்க ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்கும், மத்திய சங்கத்திற்கும், கூட்டுறவு வீட்டு வசதித் துறைக்கும் எந்தெந்த உதவிகள் தேவையோ அவைகள் அனைத்தையும் அரசு செய்து வருகின்றது.

இத்திட்டம் கிராம மக்களின் ஒத்துழைப்பின் மூலமும் மத்திய சங்கத்தின் ஆதரவின் மூலமும், கூட்டுறவு வீட்டு வசதித்துறை ஊழியர்கள் உழைப்பின் மூலமும் வெற்றிகரமாகச் செயல்படும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை!





# அனுமதியற்ற ஆக்கிரமிப்பு - தடுப்பு நடவடிக்கை

குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளைத் தகுதி வாய்ந்த குடிசை வாசிகளுக்கு ஒதுக்கீடு செய்வதில் பிரச்சினை ஏதும் இருப்பதில்லை!

ஆனால்.... குடியிருப்பு கட்டும் பணிக்காகக் குடிசையைப் பிரித்து இடம் கொடுத்து, கட்டடம் எழும்பும் நாளிலிருந்து தன்னுள் 'மாளிகைவாசியாகக்' கற்பனையை வளர்த்துக் கொண்டு மகிழ்ச்சிக் கடலில் திளைத்து வரும் தகுதி பெற்ற குடிசைவாசி காத்திருக்க,

கொட்டும் மழையையும், வெள்ளத்தினையும் - புயலையும் தனக்குச் சாதகமாக்கி அந்நாட்களில் குடியிருப்புகளில் அனுமதியின்றி அடைக்கலம் புகும் குடும்பங்கள் ஏராளம்! கட்டிய குடியிருப்புகளில் மட்டுமா? அரைகுறையாகக் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளிலும் தான்!

அவ்வண்ணம் குடிபுகும்போது அவர்களைத் தடுக்கவோ-தவிர்க்கவோ 'மனிதாபிமானம்' இடம் தருவதில்லை. காரணம், அந்நேரம் நாமே கண்கலங்கி நிற்கும் காட்சி அது!

ஆனால் குடிபுகுந்தவர் மழை விட்டதும் தன்னிருப்பிடம் திரும்ப முயல்வதில்லை-நினைப்பதும் இல்லை. அடைக்கலம் புகுந்து தங்கிய இடத்தைத் தனதாக்கிக் கொள்ளவும்- ஒதுங்கிய கட்டடத்தில் நிரந்தர வாசியாக நிலைத்திடவும் அவர் மேற்கொள்ளும் முயற்சி, அப்பப்பா... விந்தை நிறைந்தது. இதனையும் 'சீர்கேடான செயல்' எனக் கருதி இதயத்தை இரும்பாக்கி, சட்டத்தின் துணையின்கீழ் உடனே தண்டிக்கத் துடித்ததில்லை வாரியம்.

நுழைந்தவரும் ஏழைதானே என்ற ஈர உணர்வால் அவர்களுக்கும் ஓரிருமுறை அறிவிப்பும்- அன்பு வேண்டுகோளும் விடுத்து, போதுமான அவகாசம் கொடுத்து வெளியேற்றுகிறார்கள். வேதனையுடன் தான்!

கடந்த ஆண்டு மட்டும் அவ்வண்ணம் வெளியேற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 1100க்கும் மேலாகும்.

இதுமட்டுமா......?

வாரியத்தின் குடியிருப்பைப் பெற்ற குடும்பங்களில் ஒருசிலரின் வறுமையையும் வேதனையையும் தனக்குப் பலன் தரும் வாய்ப்பாக மாற்றி - அவரது உடன் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள அவர்தம் பெயருக்கு வழங்கிய குடியிருப்பை விற்கவும், அடகு வைக்கவும் முன்வரச் செய்து - குடியிருப்புகளைப் படிப்படியாகத் தன் பெயருக்கு மாற்றிக் கொள்வோரும் உண்டு, இடைத்தரகர்களின் உதவியால்! அந்த ஒருசில சமூக விரோதிகளின் செய்கை-வாரியத்தின் ஒப்பற்ற பணிக்குக் களங்கமானதாக உள்ளது.

தனது பணக்கஷ்டத்திற்கு ஈடு கட்ட அரசால் அளிக்கப் பட்ட வீட்டை விட்டுக் கொடுக்க முன்வரும் இந்த 'அவர்' முன்னாள் குடிசைவாசி-பின்னர் எங்கு செல்வார்?

மீண்டும் நடைபாதையிலுள்ள அல்லது வேறு குடிசையில் ஒண்டு குடித்தனம் மேற்கொள்ளத் தானே?.....

சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்து மேலே கொணரப்பட்டவர் மீண்டும் கீழே வீழ்ந்திட காரணமான ஒருசிலரின் செய்கைகள் வாரியத்தின் பாதையில் களைந்தெறிய வேண்டிய முட்களாக-பனிச்செனத் தென்படுகின்றன.

இதுபோன்ற தவறுகளை அனுமதிக்கக்கூடாது என்று வாரியம் மேற்கொள்ளும் முழு முயற்சி பலன் தராமல் போக வில்லை. வாரியத்தின் புலனாய்வுப் பிரிவின் பல்வேறு கோணங்களில் மேற்கொள்ளும் பணி-கேடு கெட்டவர்களின் செய்கைகளை அம்பலத்துக்குக் கொண்டுவர உதவுகின்றது.

உண்மை நிலை கண்டறிந்து, ஒதுக்கீடு பெற்றவர் விற்றதற்குத் தண்டனையாகக் கொடுத்த குடியிருப்பை ரத்து செய்வதும்- விலை பேசி, பணம் கொடுத்து வாங்கியவருக்கு தண்டனையாக அவரை அக்குடியிருப்பிலிருந்து வெளியேற்றுவதும் - அவ்வப்போது தவறாமல் வாரியம் மேற்கொள்ளும் நடவடிக்கையாக இருப்பதை குடியிருப்பு வாசிகள் உணர்ந்து வருகின்றனர்.

கடந்த ஆண்டில்- ஏறத்தாழ 300 இடங்களில் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'குடிசையில் வாழ்ந்த குடும்பம் ஒன்றிற்கு ஒரு குடியிருப்பு'



## தீப்பிடிக்காத வீடுகள்

என்ற கொள்கை நியாயத்தின் அடிப்படையில் மட்டுமல்ல-வாரியத்தின் குடியிருப்புகளை மேலும் பல குடும்பங்களுக்கு வழங்கிட ஏதுவாகும் என்ற ஆர்வத்தின் அடிப்படையிலும் திட்டப்பட்டதாகும். இதனையும் மீறி மேற்படி கொள்கைக்குப் புறம்பாக இணைந்த ஒரு குடும்பத்தின் உறுப்பினர் ஒரு குடியிருப்பிற்கு மேல் பெற்றிருந்தால் அதனையும் தீவிர முயற்சியால் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

வாரியத்தின் நோக்கம் 'தவறு செய்பவர்களைச் சட்டத்தின் பிடியில் சிக்கவைத்து - இ.பி.கோ செக்ஷன் கீழ் கொணர்ந்து தண்டிப்பது அல்ல' காரணம் வறுமையின் நிர்ப்பந்தத்தால்—வேதனை நெருக்கடியால் மேற்படி தவறுகள் பெரும்பாலானவை ஏற்படுகின்றன. இது அனுபவத்தில் கண்டறிந்த உண்மைகள்!

தவற்றைச் சுட்டிக் காட்டி, வாரியத்தின் பணியில் அமைந்துள்ள சீரிய நோக்கத்தைப் பலனடைந்தோர் முழு அளவில் உணரவும்- சீர் பெற்றோர் மீண்டும் தவறி சேற்றிலும் சகதியிலும் உழல அவருடைய தேவையும், மற்றவர் ஆசை வார்த்தையும் காரணமாக அனுமதிக்கப்படக்கூடாது என்பதையும் மீண்டும் மீண்டும் அறிவுறுத்தவும் தான் விழைகிறது குடிசைமாற்று வாரியம்.

எனவேதான், சட்டத்தின்கீழ் தண்டனை வழங்க முழுமூச்சுடன் நிற்பதில்லை. இருப்பினும், விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு பணி புரிந்தால் தானே அரசு வழங்கும் பணமும் அதனைக் கொண்டு செய்யப்படும் வாரியத்தின் பணியும் குடிசைவாழ் மக்களுள் முறையானவருக்குச் சரியான முறையில் போய்ச் சேரும்.

எனவே, அலுவலர்களை வைத்து ஆய்வுசெய்து, கண்டு பிடிப்பதுடன் - குடிசைவாழ் மக்களே தங்களுக்குள் கட்டுப்பாட்டுடன் வாரியத்தின் பணி சீராக நடைபெற முழு அளவில் ஒத்துழைக்க முன்வந்தால் - அதன் பலன் இன்றிருப்பதைக் காட்டிலும் பன்முறை மேலும் பெருகிட உதவும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

# அரசு அலுவலர்கள் வீடு கட்ட...

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டவும், வீட்டு மனைகள் வாங்கி அதில் வீடு கட்டவும், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்கவும் முன்பணம் வழங்கப்படுகிறது.

6 ஆண்டுகள் தொடர்ந்து அரசின் கீழ் பணியாற்றிய அலுவலர்கள் இக்கடன் உதவி பெறத்தகுதியுடையவர்கள் ஆவர். அரசு அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களின் அகவிலைப்படியுடன் கூடிய அடிப்படைச் சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது ரூ. 70,000 இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகை முன்பணமாக வழங்கப்படுகிறது.

கடன்தொகை அலுவலர்கள் தங்கள் அலுவல் காலத்திற்குள், அவர்களது சம்பளத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு வீதம் மாதந்தோறும் திருப்பிச் செலுத்துவதற்கு உள்ள திறன் மற்றும் அவர்களின் இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக்கொடையின் அடிப்படையில் நிச்சயிக்கப்படுகிறது.



# நெல்லை-குமரியில் கால்நடை வளர்ச்சி

**பி. துரைசாமி, ஐ.ஏ.எஸ்.**
**இயக்குநர்,**
**கால்நடை பராமரிப்புத்துறை.**

நம் முன்னோர்கள் ஒரு நாட்டின் சிறப்பைக்கூற வரும்போது ''பாலும், தேனும் வழிந்தோடும் நாடு'' என்று குறிப்பிட்டார்கள். நாட்டின் செல்வச் செழிப்புக்கு கால்நடைகளின் பங்கு மிக முக்கியமானதாகும் என்பதே இதன் உட்கருத்து. கிராமப் பொருளாதார முன்னேற்றத்தில் கால்நடைகளின் பங்கு மிக முக்கியமானது. விவசாயப் பெருங்குடி மக்களின் உழவுத் தொழிலுக்கு உறுதுணையாகவும், கால் நடை வளர்ப்புத் தொழிலை அன்றாடம் வாழ்க்கைக்கு உற்ற தொழிலாக ஏற்றுக் கொண்டுள்ள சிறு நில, குறுநில மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கு ஊன்று கோல் போல விளங்கும் கால்நடைகளின் தரத்தினையும், உற்பத்தித் திறனையும் உயர்த்துதல் பால்வளம் பெருக தரமிக்க உயர் முறை கருவூட்டல் மூலம் இன விருத்தி செய்தல், கால்நடைகளுக்கு வரும் நோய்களை வரும் முன் கண்டு அறிந்து தடுப்பு நடவடிக்கை எடுத்தல், நோய்கண்டவற்றிற்கு உரிய வைத்தியம் அளித்தல், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள்—கோழிப் பண்ணைகள் அமைக்க, கறவை மாடுகள் வாங்கி கடனுதவி பெற வழி செய்து கொடுத்தல் ஆகியவைகளே இன்று நாம் கால்நடை வளர்ப்புத் தொழில் மேம்பாடு அடைய ஏற்றுக் கொண்டுள்ள முக்கியப் பணிகளாகும்.

தமிழ் நாட்டில் ஏறத்தாழ 239 லட்சம் கால்நடைகள் உள்ளன. எண்ணிக்கை அதிகம் இருப்பினும் அவைகளின் உற்பத்தித் திறன் மிகக் குறைவு. இவைகளின் உற்பத்தித் திறன் அதிகரிக்க வேண்டுமெனில் கிராம மக்கள், மற்றும் கால் நடை வளர்ப்போர் இனவிருத்தி, தீவன உற்பத்தி ஆகியவற்றிலும், கால் நடை வளர்ப்பிலும், பராமரிப்பிலும், நோய்களிலிருந்து காப்பாற்றுதலிலும், நவீன முறைகளைக் கையாளுதல் வேண்டும். இவைகளை மக்கள் அறிந்து கொள்ள கால்நடை கண்காட்சிகள், கன்றுப் பேரணிகள், வானொலிப் பேச்சுகள், நாடகங்கள், தொலைக்காட்சிகள் ஆகியவை முக்கிய சாதனங்களாக விளங்குகின்றன. மக்கள், இதன் மூலம் கண்டறியும் கேட்டறியும் சேதிகள் மூலம் கால்நடை வளர்ச்சியில், பல்வேறு அம்சங்களையும் நன்கு அறிந்து, ஆதாயம் பெற முடியும்.

நெல்லை குமரி மாவட்டங்களில் கால்நடைகளின் கண்காட்சி 28.3.'79, 29.3.'79 ஆகிய இரண்டு தினங்கள் பாளையங் கோட்டையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இவ்விரு மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள், குறிப்பாக வேளாண் பெரு மக்கள் கண்காட்சிக்கு, பெருந்திரளாக வருகை தந்து, கால்நடைப் பராமரிப்பில் தங்களுக்குள்ள பற்றுதலையும், புதிய கால்நடை பேணுதல் முறைகளை அறிந்து கொள்ளவும், இம்முக்கிய துறையில் கண்டுள்ள அண்மைக்கால முன்னேற்றங்களைக் கண்டறிந்து பயன்பெறவும், தங்களுக்குள்ள பேரார்வத்தைக் குறைவற வெளிப்படுத்தினர்.

கண்காட்சி நடைபெற்ற இரு தினங்களிலும் நல்ல தரமுள்ள ஆவினங்களும் மற்றும், ஆடுகள், கோழிகள் போன்ற இதர கால் நடைகளும் பங்கு பெற்றன. 27.3.1979 அன்று அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டினை ஒட்டி 8 முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கால் நடைகள் மற்றும் இதர விலங்குகள் தொடர்பாக சித்திரப் போட்டி ஒன்றும் நடைபெற்றது. 28.3.1979 அன்று கால்நடைக் கண்காட்சியில் ''காவல்துறை

யைச் சேர்ந்த நாய்கள் கண்காட்சி'' ஒன்று நடைபெற்றது. அவைகள் கீழ்படிதல், ஏவல்கள் செய்தல் போன்ற தங்களது பல்வேறு திறன்களைச்செய்து காட்டின. கால்நடை வல்லுநர்கள் கண்காட்சியில் சிறந்த ஆவினங்கள், கோழியினம் போன்றவைகளில் பரிசுக் கேற்றவைகளைத் தேர்ந்தெடுத்தனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அசீதி என்னும் இடத்திலுள்ள கன்னிமாடத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படும் பண்ணையைச் சார்ந்த ஆவினங்கள், (நாளொன்றுக்கு 12 முதல் 16 லிட்டர் வரை பால் கொடுக்கும் கறவை மாடுகள்)சிறந்த ஆவினங்களாகத் தேர்வு செய்யப்பட்டன. அன்றைய விழாவின் இறுதியில் மெல்லிசை, பல்குரல் நிகழ்ச்சி பரத நாட்டியம் போன்ற கலைநிகழ்ச்சிகள் கண்காட்சிக்கு வந்தோர்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்தன.

29.3.1979 அன்று காலை காவல் துறையைச் சார்ந்த நாய்கள் தங்களது ஆற்றலைக் காண்பித்தன. குறிப்பாக யுவராஜ் என்ற பெயருடைய நாய் தனது தனிச் சிறப்பை அருமையாக வெளிக்கொணர்ந்து அனைவரின் வியப்பையும், பாராட்டுதலையும் பெற்றது. அது நமது பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கால்களைத் தொட்டு மேலெழுந்து வணங்குவது போன்று முன்னங்கால்களைத் தூக்கி தனது மரியாதையை வெளிப்படுத்தியது, மிகவும் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

மிகச் சிறப்புடன் நடைபெற்ற இந்தக் கால்நடைக் கண்காட்சியில் இடம் பெற்று, கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் எடுக்கப்பட்ட 50 கோழிகளை பேணுதற்குரிய மாதிரி ''ஆழ்கூழ் வீடு'', கண்காட்சிக்கு வந்திருந்தோரின் தனிக் கவனத்தை ஈர்த்து, ஆர்வத்தை தூண்டுவதாக அமைந்தது. மிகச் சீரிய முறையில் நடைபெற்ற இக்கண்காட்சியில் கால்நடைப் பராமரிப்புத்துறையைத் தவிர, தமிழ்நாடு சமூக நலத்துறை, மீன்வளத்துறை மற்றும் வேளாண்மைத்துறை ஆகிய துறைகளும் பங்குபெற்றன. அவர்கள் தங்கள் துறைகள் மூலமாகச் செய்து வரும் பணிகளைப் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறினர்.

**பரிசளிப்பு விழா நிகழ்ச்சி:**

28.3.'79 மற்றும் 29.3.'79 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற இச்சிறப்புமிகு நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பாகப் பரிசு வழங்கும் நிகழ்ச்சி அமைந்தது. மாண்புமிகு தமிழக கால்நடைப் பராமரிப்புத்துறை, சமூக நலத்துறை அமைச்சர் செல்வி.பி.டி. சரஸ்வதி அவர்கள் இவ்வினிய விழாவிற்கு தலைமை தாங்கினார்கள். அவர்கள் பேசும்போது திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு கால்நடை வளர்ச்சித் திட்டங்களைப் பற்றியும், தாய்மார்களுக்குத் தமிழக அரசு புகுத்தியுள்ள பல்வேறு திட்டங்களைப் பற்றியும் குறிப்பிட்டு, விவசாயப் பெருங்குடி மக்கள் கால்நடை வளர்ச்சியில் சிறந்த ஆர்வம் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தின் அனைத்துப் பிரிவு மக்களின் நலத்திற்கும் தமிழகத்தின் உயர்வுக்கும் அயராது பணியாற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் விழாவில் கலந்துகொண்டு, கண்காட்சியில் மிகச் சிறந்தவைகளாகத் தேர்வு செய்யப்பட்ட கால்நடைகளுக்குப் பரிசு வழங்கி, சிறப்புரையாற்றினார்கள். அவருடைய பேருரை அனைவருக்கும் பெருமகிழ்ச்சியையும் புத்துணர்வையும் ஊட்டும் வகையில் அமைந்தது. கால்நடை தரத்தை உயர்த்துவதன் அவசியத்தையும், கால்நடைகளை எவ்வாறு பராமரிக்க வேண்டுமென்பது பற்றியும் கால்நடைத்துறை எப்படிப் பொதுமக்கள் சேவைக்காகச் செயல்பட வேண்டுமென்பது பற்றியும் அவருடைய உரையில் வற்புறுத்திக் கூறினார்கள். கால்நடைத் துறை பராமரிப்புக்காகக் கடந்த ஆண்டுகளில் செலவு செய்த தொகையை விட சென்ற இரண்டு ஆண்டுகளில் செலவு



செய்த தொகை பல மடங்காகும் என்பதைப் புள்ளிவிவரங்களோடு எடுத்துக்கூறி, பொது மக்கள் கால்நடை வளர்ச்சித் திட்டங்களில் அதிக அக்கறையையும் அதன் மூலம் மிகுந்த பயனையும் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். கடந்த 10 ஆண்டுகளில் கால்நடை வளர்ச்சித் திட்டங்களில் தமிழக அரசு கீழ்க் கண்டவாறு செலவு செய்திருப்பதா ந எடுத்துக் கூறினார்கள்.

| ஆண்டுகள் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|
| 1971—72 | 51.75 |
| 1972—73 | 40.39 |
| 1973—74 | 49.14 |
| 1974—75 | 72.87 |
| 1975—76 | 75.11 |
| 1976—77 | 144.85 |
| 1977—78 | 305.57 |
| 1978—79 | 405.99 (ஒதுக்கீடு) |

திருநெல்வேலி மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், சிறப்புக் கால்நடைத் திட்டம், ஆகிய பல்வேறு திட்டங்கள் மூலம் செயல்படும் கால்நடை வளர்ச்சித்திட்டங்களைக் குறிப்பிட்டுப் பேசும்போது, இத்திட்டங்களை விவசாயப் பெருமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அவைகள் மூலம் தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்றும் செய்யக் கூடிய தொழில் எத்தகையதாக இருந்தாலும் வேற்றுமை பாராட்டாமலும் அத்தொழிலை உயர்வாக மதித்துப் போற்ற வேண்டுமென்றும், சமுதாயத்திற்கு கேடு பயக்கக்கூடிய தொழிலைத் தவிர மற்ற எல்லா தொழிலும் உயர்வானதே என்றும் குறிப்பிட்டுப் பேசினார்கள். ''செய்யும் தொழிலே தெய்வம்'' என்ற எண்ணம் வரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

மேலும் மாண்புமிகு நிதி அமைச்சர் உயர்திரு நாஞ்சில் மனோகரன் அவர்கள், கன்றுகள் மான்யம் வழங்கி, கால்நடை வளர்ப்புக் கையேடு ஒன்றினையும் வெளியிட்டார்கள். தமிழ்நாடு உணவு அமைச்சர் மாண்புமிகு உயர்திரு ஜி.ஆர். எட்மண்ட் அவர்கள் கண்காட்சியினையொட்டி நடைபெற்ற சித்திரப் போட்டியில் வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கினார்கள்.

மிகச் சிறப்பாக நடைபெற்ற கண்காட்சிக்கு அமைச்சர்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களும் பொதுமக்களும் கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களுக்குத் தங்கள் பாராட்டைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 4.46 இலட்சம் மாடுகளும், 1.78 இலட்சம் எருமை மாடுகளும் உள்ளன. இவற்றில் 1.38 இலட்சம் மாடுகளும் 0.97 இலட்சம் எருமைகளும் இன விருத்திக்கு உகந்தவையாகும். மற்றும் 5.32 இலட்சம் செம்மறியாடுகளும், 3.09 இலட்சம் வெள்ளாடுகளும் 0.42 இலட்சம் பன்றிகளும் உள்ளன. 9.98 இலட்சம் கோழிகளும் உள்ளன.

**செயல்படும் திட்டங்கள்:**

தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன்மாதேவி, தூத்துக்குடி பகுதிகளில் செயல்படுகிறது. மேற் கூறிய பகுதிகள் நீங்கலாக, இதர பகுதிகளில் கேந்திரகிராம திட்டம் செயல்படுகின்றது. கன்யாகுமரி மாவட்டத்திலும் இத்திட்டம் செயல்பட்டுவருகின்றது. இத்திட்டங்களின் மூலம்-இப்பகுதியில் உள்ள ஆவினங்களின் தரம் உயர்த்தப்படுதலின் மூலம்-பால் உற்பத்தி அதிகரிக்கும். மற்றும் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், கால்நடை சிறப்பு வளர்ப்புத் திட்டம், கால்நடை நோய் புலனாய்வுத் திட்டம் ஆகியவை சிறுவிவசாயிகள், குறுநில விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் செயல்புரிந்து வருகின்றன. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டமும் செயல்படுகின்றது. ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் வேளாண்மை மறுநிதி கழகத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

**செயல்படும் நிலையங்கள்:**

திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்டக்கால்நடைப் பண்ணை ஒன்றும், கால்நடை சுகாதாரப் பணிகளுக்காக 52 கா் நடை நிலையங்களும், 8 கேந்திர கிராம நிலையங்களும், கால்நடை நோய் புலனாய்வு நிலையம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. குமரி மாவட்டத்தில் 6 கேந்திர கிராம நிலையங்களும், 3 கால்நடை மருத்துவ நிலையங்களும், 14 கால்நடை மருந்தகங்களும் ஒரு பரிசோதனைச் சாலையும்இயங்கி வருகின்றன.

## குழந்தைகள் நூல் வரிசை



அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டைக் குறிக்கும் வகையில் மத்திய அரசு நூல்கள் வெளியீட்டுப் பிரிவு குழந்தைகளுக்கான நூல்கள் வரிசை ஒன்றை வெளியிட்டு வருகிறது.

ஒவ்வொரு மாதமும் இரண்டு நூல்கள் வீதம் இந்த ஆண்டு 24 நூல்கள் வெளியிடப்படும். நம்முடைய பண்பாட்டு பாரம்பரியத்தைக் குழந்தைகள் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த நூல்கள் வெளியிடப்படுகின்றன.

பொதுவாக குழந்தைகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு பல்வேறு தலைப்புக்களில் இந்த நூல்கள் வெளியிடப்படுகின்றன புராண, கற்பனைக் கதைகள். விஞ்ஞானக் கதைகள், சுற்றுப்புறச் சூழ்நிலைகள் பற்றிய விளக்கங்கள், இயற்கை வளங்கள், சிறு கதைகள், கர்ண பரம்பரைக் கதைகள், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய பல்வேறு துறைகளில் குழந்தைகளுக்காக நூல்கள் வெளியிடப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட துறை வல்லுனர்கள் குழந்தைகளுக்கான இலக்கியங்களை எழுதியிருக்கின்றனர். அப்படி தேர்ந்தெடுக்கப்படும் நிபுணர்கள் குழந்தை இலக்கியங்களைப் படைப்பதிலும் ஆற்றல் உள்ளவர்கள்.

சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு எஸ். கந்தசாமி (துறைவன்) தமிழில் குழந்தைகளுக்கான நூல் ஒன்றை எழுதியிருக்கிறார். இந்த நூல் வெளியிடப்படுகிறது.

படங்கள், விளக்கக் குறிப்புகளுடன் குழந்தைகளைக் கவரும் வகையில் அழகாக இந்தி, ஆங்கிலம் மற்ற வட்டார மொழிகளில் இந்த நூல்கள் வெளியிடப்படுகின்றன. ஏற்கெனவே இந்த வரிசையில் நான்கு நூல்கள் வெளியிடப்பட்டு விட்டன.



# முகவை மாவட்டத்தில் முந்திரித் தொழிற்சாலை

தமிழ்நாட்டிலுள்ள பிற மாவட்டங்களைக் காட்டிலும் மிகவும் வறட்சியான பகுதிகளைக் கொண்டது இராமநாதபுரம் மாவட்டம் ஆகும்.

இம்மாவட்டத்தில் விவசாயம் பெருமளவிற்கு நடைபெற்றாலும் ஆண்டுதோறும் வான் பொய்த்து விடுவது இயற்கையாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாக இருந்து வருகிறது. எனவே, மக்கள் விவசாயத்தை மட்டும் நம்பிப் பயனில்லை; தொழில்கள் மூலம் இம்மாவட்டத்தை வளமாக்க எண்ணி, தமிழ்நாடு அரசு முழு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஏற்கெனவே இம்மாவட்டத்தில் விவசாயம் தவிர முக்கியத் தொழில்களாக தீப்பெட்டித் தொழிற்சாலைகள், உப்பளங்கள், மீன் பிடி தொழில், கடலில் மூழ்கி சங்கு எடுக்கும் தொழில், பனை மரத்திலிருந்து கிடைக்கின்ற பொருட்களை வைத்துக் கலைப் பொருட்களும், அத்தியாவசியப் பொருட்களும் தயாரித்தல் போன்ற பல தொழில்கள் நடைபெற்று வருகின்றன.

தொழில்களின் பாதையில் புதிய முயற்சியாக முகவை மாவட்டம் குன்றக்குடி என்ற ஊரில் ''பெரியார் முந்திரித் தொழிற்சாலை'' ஒன்றினை உருவாக்கும் பொருட்டு, திட்டமொன்றினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சா. சுப்பிரமணியம் ஐ.ஏ.எஸ்., அவர்கள் அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பியிருந்தார். அத்திட்டத்தினை அரசு ஆய்வு செய்து சுமார் நாலரை இலட்சம் ரூபாய் செலவில் முந்திரித் தொழிற்சாலை ஒன்றிற்கு அனுமதி வழங்கியது.



இந்த மாவட்டத்தில் 11,000 ஏக்கரில் முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. இதில் ஆயிரம் ஏக்கருக்கு ஒரு தொழிற்சாலை வீதம் இம்மாவட்டத்தில் மட்டும் 11 தொழிற்சாலைகள் அமைக்கலாம்..

குன்றக்குடியில் அமைக்கப்பட உள்ள முந்திரித் தொழிற்சாலையினால் ஆண்டு ஒன்றுக்கு 30 டன் முந்திரிப் பருப்பும், 30 டன் முந்திரி எண்ணெய்யும் தயாரிக்கலாம்.

முந்திரி எண்ணெய்யிலிருந்து வர்ணம், பிரேக் லைனிங்க்ஸ், இரசாயனப் பொருட்கள் போன்ற பலவிதமான பொருட்கள் தயார் செய்வதன் மூலம் மேலும் இம்மாவட்டத்தில் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே, குன்றக்குடி-நேமம் ஒருங்கிணைப்புத் திட்டக் குழுவினரால் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான முன்னோடி விழா கடந்த 8.4.'79 ஆம் நாளன்று குன்றக்குடியில் பெரியார் முந்திரி தொழிலாளர் 'தொழிற் கூட்டுறவுச் சங்கக் கட்டட அடிக்கல் நாட்டு விழா' முகவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலும் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு பொ. காளியப்பன் அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. மாண்புமிகு செய்தி- அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் சங்கக் கட்டட அடிக்கல்லை நாட்டினார்.

தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு . ராசாராம் அவர்கள், தந்தை பெரியாரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். குன்றக்குடியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்க எல்லாவித ஒத்துழைப்புக்களையும் நல்கி வரும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் விழாவில் வாழ்த்துரையாற்றினார்.





# இறவைப் பருத்தி ரகங்களுக்கான கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள்

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 3.5 இல்ட்சம் எக்டேர் நிலப்பரப்பில், பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இப்பரப்பிலிருந்து உற்பத்தியாகும் பஞ்சு, 4 இலட்சம் பேல்கள்,

தமிழ்நாட்டிலுள்ள 210 பஞ்சாலைகள் இயங்குவதற்குச் சுமார் 13 இலட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது. இந்த அளவு பஞ்சுத் தேவையில் 30 சதவிகிதம் பஞ்சுதான் தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கிறது. மீதமுள்ள பஞ்சு பிற மாநிலங்களிலிருந்து தருவிக்கப்படுகிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 5 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. எனவே, பெருகிவரும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவைப்படும் அனைத்து ரகத் துணிகளை உற்பத்தி செய்யவும் இந்திய நாட்டின் பஞ்சாலைகட்குத் தேவைப்படும் அதிக நீண்ட இழைப்பருத்தி உற்பத்தியினை அதிகரிக்கவும்,வெளிநாட்டிலின்று பஞ்சு இறக்குமதியைக் குறைப்பதினால் அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தித் தன்னிறைவு அடையவும்,வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்கவும், பஞ்சு உற்பத்தியை அதிகரிப்பது மிகவும் அத்தியாவசியமாகிறது.

மேலும், தமிழ்நாட்டில் பருத்திச் சாகுபடியில்; 75 சதவீதம் பருவ நிலைகளை எதிர்நோக்கி மானாவாரிப் பயிராகச் சாகுபடி செய்வதாலும், குறைந்த மகசூல் தரும் 'கருங்கண்ணிப் பருத்தியை' பெரும்பான்மையாகச் சாகுபடி செய்வதாலும், உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய, பாசன,பருத்திச் சாகுபடியில், தீவிர கவனம் செலுத்துவது உடனடி அவசியமாகிறது.

பருத்தி மிகுவிளைவு மாவட்ட திட்டத்தின் பயனாகச் சாகுபடிக்குத் தேவையான விதை, உரம் பூச்சி மருந்து மற்றும் பயிர்க் கடன்கள் ஆகியவை காலத்தே கிடைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

பருத்தி சாகுபடியாளர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்பு செய்யத் தேவையான விசைத் தெளிப்பான்கள் ரூ.200 மானிய விலையில் தரப்படுகின்றன.

தவிர சாகுபடியாளர்களுக்கு விசைத் தெளிப்பான்கள் அரசு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகைக்கு விடப்படுகிறது. அனைத்து பருத்திச் சாகுபடியாளர்களும், புதிய கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளைக் கையாளும் வண்ணம் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்களில் எக்டேருக்கு ரூ. 200 மானியத்தில் செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்படுகின்றன.

சான்றிதழ் பெற்ற பருத்தி விதைகள், நுண்ணூட்டச் சத்துக் கலவை, தரமான பூச்சி மருந்துகள் ஆகியவை ஊராட்சி ஒன்றிய வேளாண் கிடங்குகளின் மூலமும் திட்டப் பணியாளர்களின் மூலமும் வழங்கப்படுகின்றன. அவ்வப்பொழுது புதிய சாகுபடி நுணுக்கங்களும், தொழில் நுட்பச் செய்திகளும் வழங்கப்படுகின்றன.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பருத்தியின் தரத்தினை இலவசமாக அறிய, தரம் பிரிக்கும் மையங்கள் பொள்ளாச்சி, திருப்பூர் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ளன.

பருத்தியை நல்ல விலைக்கு விற்க ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பொள்ளாச்சி,உடுமலை மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இதனை நல்ல முறையில் பயன்படுத்துமாறு விவசாயிகள்கேட்டுக் கொள்ளப்படுகிறாகள.

1978-79 ஆம் ஆண்டு, தமிழ் நாட்டில் பஞ்சு உற்பத்தியின் குறிக்கோள் 4.25 இலட்சம் பேல்கள். இக்குறியீட்டினை, குறைந்த செலவில் அடையக் கீழ்க்கண்ட கட்டுக்கோப்பான சாகுபடி முறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

**பருவம்**

வீரிய ஒட்டு ரகங்களான வரலட்சுமி மற்றும் சி.பி.எஸ். 156 மற்றும் பொறுக்கு இரகமான "சுவின்" ஆகியவைகளை ஜூலை முதல் ஆகஸ்டு மாதம் வரை விதைக்கலாம். ஜூலை கடைசி வாரத்திலிருந்து ஆகஸ்டு முதல் வாரம் வரை விதைப்பது சிறந்தது

பொறுக்கு ரகமான எம்.சி.யு. 5ஐ ஆகஸ்டு-செப்டம்பர் மாதம் வரை விதைக்கலாம். ஆகஸ்டு மத்தியில் விதைப்பது சிறந்தது.

வயது:

வரலட்சுமி 180-200 நாட்கள்

சி.பி.எஸ்-156, 180-200 நாட்கள்

சுவின் 180-200 நாட்கள்.

எம்.சி.யு.-5, 165-175 நாட்கள்.

**விதை அளவு ஏக்கருக்கு:**

| | பஞ்சு நீக்காத விதை | பஞ்சு நீக்கிய விதை |
|---|---|---|
| வரலட்சுமி | 1 கிலோ | 600 கிராம் |
| சி.பி.எஸ்.156 | 1 கிலோ | 600 கிராம் |
| சுவின் | 4 கிலோ | — |
| எம்.சி.யு.5 | 6 கிலோ | 4 கிலோ |

**விதை நேர்த்தி**

ஒரு கிலோ விதையை 100 மில்லி அடர்கந்தக அமிலம் தோய்த்து பஞ்சு நீக்குவதன் மூலம் விதையின் முளைப்புத்திறன் அதிகரிக்கப்படுகிறது. அத்துடன் செடிகள் ஒரே காலத்தில் முளைத்துச் சீராக வளர்கின்றன. மேலும் விதையின் மூலம் பரவும் கருங்கிளைநோய் மற்றும் வாடல் நோய் கிருமிகளும் இளஞ்சிகப்புக் காய்ப்புழுவின் கூட்டுப் புழுவும் அழிக்கப்படுகின்றன.

பின்னர் ஒரு கிலோ விதைக்கு 400 கிராம் 'கேப்டான்' அல்லது விட்டாவாக்ஸ்' மருந்து கலந்து விதை நேர்த்தி செய்த பிறகு விதைக்க வேண்டும்.

**இடைவெளி:**

நிலத்தை நன்கு உழுது கீழ்க்கண்ட அளவுகளில் பார்கள் அமைத்து விதையினை ஊன்ற வேண்டும்.

| | |
|---|---|
| வரலட்சுமி | 4 அடி × 2 அடி |
| சி.பி.எஸ்.156 | 4 அடி × 2 அடி |
| சுவின் | $2\frac{1}{4}$ அடி × $1\frac{1}{2}$ அடி |
| எம்.சி.யு5. | $2\frac{1}{2}$ அடி × 1 அடி |

வரலட்சுமி மற்றும் சி.பி.எஸ். 156 ஆகிய ரகங்களுக்கு குழிக்கு ஒரு விதை வீதமும், எம்.சி.யு.5 மற்றும் சுவின் ஆகிய ரகங்களுக்கு குழிக்கு 3 முதல் 4 விதைகள் வீதமும் ஊன்றவும்.

வீரிய ஒட்டு ரக விதையின் விலை அதிகமாதலால், பாடுவாசி நடவு செய்ய பாலித்தின் பைகளில் வளர்க்கப்பட்ட செடிகளை விதைத்த 10ஆம் நாள் நடவு செய்யவும்.

**உரம் மற்றும் உரமிடல்:**

பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கு இடையூறாக உள்ள காரணங்கள் பல. அவற்றுள் அளவாக, வேண்டிய, உரமிடல் மிக முக்கியமானது. தீவிர சாகுபடி முறைகளால் இக்குறைபாடுகள் பரவலாகக் காணப்படுகின்றன. ஆகவே, பருத்தியின் சத்துக்கள் தேவை என்ன, அவற்றை எவ்வாறு அளிப்பது, குறைபாடுகள் தோன்றினால் எவ்வாறு கண்டறிவது போன்ற விவரங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளுதல் அவசியம்.

**தழைச்சத்து (Nitrogen)**

மற்ற எல்லாச் சத்துப் பொருள்களை விட அதிகமாகப் பருத்திப் பயிருக்குத் தேவை. ஒரு எக்டேர் பருத்திப் பயிர் சுமார் 185 கிலோ தழைச்சத்தை நிலத்திலிருந்து எடுத்துக் கொள்கிறது. இறைவைப் பயிரில் மொத்த தழைச்சத்தின் தேவையில் 20 சதம் பூக்கும் காலம்வரையிலும், 26 சதம் அடுத்த இரண்டு வாரங்கள் வரையிலும், 43 சதம் காய் பிடிக்கும் காலத்திலும், மீதி 11 சதம் காய் வெடிக்கும் காலத்திலும் தேவைப்படுகிறது.

தழைச்சத்துக் குறைவினால் இலைகள் சிறுத்தும், இளம் மஞ்சள் கலந்த பச்சை நிறமாகவும் தோன்றும். இச்சத்துக் குறைவு மிக அதிகமாக இருக்கும்பொழுது இலைகள் சிவப்பு நிறமாகத் தோன்றும். காய் பிடிக்கும் தருணத்தில் தழைச்சத்துக் குறைவு தோன்றினால் சப்பைகள், பூக்கள், பிஞ்சுகள் அதிகமாக உதிரும். குறைவு அறிகுறிகள் தோன்றும்போது $2\frac{1}{2}$ சதம் யூரியா கரைசலைத் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். அதிகமான தழைச்சத்து செடியின் வளர்ச்சியை அதிகமாக்கி, மகசூல்குன்றி வெடித்தலைத் தாமதப்படுத்தும்

**மணிச்சத்து (Phosphorous)**

இது தழைச்சத்தை விடக் குறைந்த அளவுதான் தேவைப்படும். ஒரு எக்டேர் நிலத்திலிருந்து சுமார் 45 கிலோ மணிச்சத்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. நல்ல மகசூல் பெறுவதற்கு தகுந்த அளவு மணிச்சத்து இட வேண்டும். மணிச்சத்து குறைவினால், இலைகள் சிறுத்தும், கரும்பச்சை நிறமாகவும் காணப்படும். செடிகள் பூக்கும் காலம், காய் பிடிக்கும் காலம், காய் வெடிக்கும் காலம் தாமதப்பட்டு மகசூல் குறையும்.

**சாம்பல் சத்து (Pottasium)**

ஒரு எக்டேர் பருத்திப் பயிர் சுமார் 215 கிலோ சாம்பல் சத்தை நிலத்திலிருந்து எடுத்துக் கொள்கிறது. இச்சத்து, விதைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவுகிறது. இச்சத்துக் குறைவால் முதிர்ந்த இலைகளில்

லேசான மஞ்சள் கலந்த வெண்புள்ளிகள் தோன்றி, பின் இலைகள் வெளிர் மஞ்சள் கலந்த பச்சை நிறமாக மாறுகிறது. செடிகளின் தண்டுகள், காய்கள் வளர்ச்சியடையாமல் குட்டையாகத் தோன்றும். முழுமையாக நன்கு மலர்ந்து வெடிக்காது.



**பருத்திப் பயிருக்கு சிபாரிசு செய்யப்படும் உர அளவு:**

| | | | |
|---|---|---|---|
| சுவின் | 4 கிலோ | — | |
| | தழைச் சத்து | மணிச் சத்து | சாம்பல் சத்து |
| வரலட்சுமி—அடியுரம் | 30 | 10 | 30 |
| சி பி எஸ் 156—மேலுரம் | 30 | 0 | 0 |
| —இலைமூலம் | | 0 | 0 |
| எம் சி யு 5—அடியுரம் | 16 | 16 | 16 |
| சுவின் —மேலுரம் | 16 | 0 | 0 |

மேற்கொடுக்கப்பட்ட உரஅளவைப் பருத்தி வகைக் கேற்ப பாரின் பக்கவாட்டில் கீழிருந்து 1/3 பாகம் உயரத்தில் குச்சியால் அல்லது கலைக் கொத்தால் கீறிவிட்டு உரத்தினை அளிக்கவேண்டும். பின்னர் உரமிட்ட பகுதிக்கு மேல் மேற்கூறியபடி கீறிவிடுவதால் அளிக்கப்பட்ட உரம் மண்ணால் மூடப்பட வேண்டும்.

ஏக்கருக்கு 6 கிலோ வீதம் பருத்திக்கென பிரத்தியேகமாக விவசாய இலாகாவினால் தயார் செய்து விநியோகிக்கப்பெறும் நுண்ணூட்டச்சத்துக் கலவையினை அளித்தல் அவசியம். முன்பு அடியுரம் அளிப்பதற்கு கூறியது போல் பாரின் பக்கவாட்டில் 1/3 பாக உயரத்தில் நுண்ணூட்டச் சத்துக் கல்வையினை இடவேண்டும். எக்காரணம் கொண்டும் இரசாயன உரங்களுடன் சேர்த்து இடுதல் கூடாது.

**பின்செய்நேர்த்தி களையெடுத்தல்:**

களைகளை அகற்ற லாசோ களைக்கொல்லி 1.5 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து விதைத்த மறுநாள் தெளிக்கவும். விதைத்த 60 நாட்களுக்குள் 2 அல்லது 3 முறை களையெடுப்பது அவசியம்.

விதைத்த 40ஆம் நாள் பார் களைக் களைந்து மண்ணை நன்கு பரப்பி விடவும். பின்னர் 50ஆம் நாள் மீண்டும் பார் பிடித்துச் செடி பாரின் நடுமத்தியில் இருக்குமாறு மண் அணைத்து விடவும்.

**மேலுரமிடுதல்:**

மேலுரமாக இடப்படும் தழைசத்தினை விதைத்த 45ம் நாள் செடியைச் சுற்றி 6 அங்குலம் தள்ளி இட வேண்டும்.

**இலை வழி மூலம் யூரியா தெளித்தல்:**

2.5 சத யூரியா கரைசலை, விதைத்த 65 மற்றும் 85-ஆம் நாள் தெளிக்கவும். இரண்டு அல்லது மூன்று தினங்கட்கு முன்னர் யூரியாவைத் தண்ணீரில்கரைத்து வைத்துப் பின்னர் தெளிப்பது நல்ல பலன் கொடுக்கும்.

**பிளோனோபிக்ஸ் தெளித்தல்:**

பருத்திச் செடியிலிருந்து இயற்கையாய் உதிரும் சப்பை மற்றும் இளம் பிஞ்சுகளைத் தடுக்க பிளானோபிக்ஸ் 1 மில்லி மருந்தை 4.5 லிட்டர் நல்ல தண்ணீரில் கலந்து விதைத்த 45-ஆம் நாளும், 65-ஆம் நாளும் காலை 10 மணி முதல் மாலை 3 மணிக்குள் செடிகள் நன்கு நனையும் படியாக கைத்தெளிப்பான்மூலம் தெளிக்கவும். ஒரு ஏக்கருக்கு ஒவ்வொரு தடவையில் 65மில்லி பிளானோபிக்ஸ் மருந்து தேவைபடும். வரலட்சுமி பருத்திக்கு பிளானோபிக்ஸ் தெளிக்க வேண்டியது இல்லை.

**நுனி நசுக்குதல்:**

வளமான நிலங்களிலும், ஆயக்கட்டுப் பகுதிகளிலும் வளரும்

## தமிழ்நாடுகதர், கிராமத்தொழில்

## நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு!

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 308 கிராமிய நூற்பு நிலையங்கள் தற்பொழுது இயங்கி வருகின்றன. இரு நிலையங்களில் 10164 பெண்கள் வேலை செய்து நாள் ஒன்றுக்குச் சராசரியாக ரூ. 2.50 கூலி பெற்று வந்தனர். இக்கூலி விகிதம் தற்போதைய வாழ்க்கைச் செலவுப் புள்ளியுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக இருந்ததால் தமிழக அமைச்சரும் வாரியத்தலைவருமான மாண்பு மிகுதிருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தலைமையில் 10.1.79ல் மதுரை மாவட்டம் காந்தி கிராமத்தில் நடைபெற்ற மாநில சான்று வழங்கும் குழுக் கூட்டம், நூற்பாளர்களின் கூலி விகிதத்தை உயர்த்தத் தீர்மானித்தது.

ஒவ்வொரு நூற்பாளரும் நாள் ஒன்றுக்குச் சராசரியாகப் பெற்றுவந்த கூலி விவரங்களும், உயர்வுக்குப் பின் பெறும் கூலி விவரங்களும் பின்வருமாறு:

| | 13.1.79 வரை சராசரி கூலி ரூ. | 14.1.79 முதல் சராசரி கூலி ரூ. | உயர்வு ரூ. |
|---|---|---|---|
| 6 கதிர் அம்பர் ராட்டை 33-ஆம் எண் நூல் | 2.70 | 3.42 | 0.72 |
| 50 ,, | 2.55 | 3.15 | 0.60 |
| 70 ,, | 2.20 | 2.80 | 0.60 |
| 12 கதிர் அம்பர் ராட்டை 33-ஆம் எண் நூல் | 3.60 | 4.50 | 0.90 |
| 50 ,, | 3.50 | 4.25 | 0.75 |

செடி 5 முதல் 5½ அடி உயரம் வளர்ந்து, 22 முதல் 24 கிளைகள் இருந்து செடியின் வயது 80 முதல் 90 நாட்கள் ஆகியிருப்பின் செடியின் நுனியை நசுக்கி விடுவதன் மூலம் வளர்ச்சியைக் கட்டுப் படுத்தலாம். இவ்வாறு செய்வதனால் துண்டு இலைகள் ஆகியவற்றின் வளர்ச்சி தடுக்கப்பட்டு காய்கள் பருமனாகவும், பிஞ்சு முதிர்ச்சியடையவும் உதவுகின்றது.

**பாசனம் :**

விதைத்தவுடன் ஒரு முறையும் விதைத்த 4ஆம் நாள் மறுமுறையும் பின்பு 25ஆம் நாள் முதல் 105 நாட்கள் வரை 10 நாட்கள் இடைவெளியிலும் , பருத்தி வெடித்த ஆரம்பத்திலும் 15 நாட்கள் இடைவெளியிலும் நீர் பாய்ச்சவும்.

## பயிர்ப்பாதுகாப்பு

| பூச்சி நோய் பெயர் | பயிரின் வயது. | உபயோகிக்க வேண்டிய பூச்சி மற்றும் பூஞ்சாள மருந்தின் பெயர் | மருந்தின் அளவு ஏக்கருக்கு. | மருந்து கலவையின் அளவு. |
|---|---|---|---|---|
| உறிஞ்சும் பூச்சிகள்: | | | | |
| அசுவினி தத்துப்பூச்சி இலைப்பேன் | | திம்பெட் 10 சதம் ஜி (அல்லது) | 6 கிலோ | விதைக்கும்பொழுது விதைக்கு 1 அங்குலம் தள்ளி விதைப்பதன் மூலம் 45 நாட்கள்வரை உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப் படுத்தலாம். |
| | | சால்விரைக்ஸ் 5 சதம் ஜி (அல்லது) | 12 கிலோ | |
| | | டைசிஸ்டான் 5சதம் ஜி (அல்லது) | 12 கிலோ | |
| | | ப்யுரடான் 3சதம் ஜி | 12 கிலோ | |
| அசுவினி தத்துப்பூச்சி இலைப்பேன் | விதைத்து 30ம் நாள் வரை | மெட்டாசிஸ்டாக்ஸ் 25ஃ (அல்லது) | 200 மி.லி. | 80 லிட்டர் |
| | | ரோசார் (அல்லது) | 200 மி.லி | 80 லிட்டர் |
| | | டைமெக்ரான் | 100 மி.லி | 80 லிட்டர் |
| காய்ப்புழு | விதைத்து 30ம் நாள் முதல் 65நாள் வரை | கீழ்க்குறிப்பிட்டுள்ள பூச்சி மருந்துகள் காய்ப்புழுவின் தாக்குதலின் கடுமை மற்றும் தன்மையினைப் பொறுத்துச் சிபாரிசு செய்யப் படுகிறது. | | |
| | | மிதைல் பாரத்தியான் + | 200 மி.லி | 90 லிட்டர் |
| | | கரையும் டி.டி.டீ 50சதம் | 600கிராம் | 90 லிட்டர் |
| | | செவிமால் | 1 கிலோ | 90 லிட்டர் |
| | விதைத்து 65ம் நாள் முதல் 85ம் நாள்வரை | நுவக்கிரான் | 800 மி.லி | 100 லிட்டர் |
| | | ஜோலான் | 800 மி.லி | 100 லிட்டர் |
| காய்ப்புழு | விதைத்து 85வது நாள் முதல் 155 நாள்வரை | மிதைல் பாரத்தியான் + | 200 மி.லி | 120 லிட்டர் |
| | | கரையும் டி.டி.டீ50சதம் | 600 கிராம் | |
| | | தையோன் | 600 மி.லி | 120 லிட்டர் |
| | | ஜோலோடான் | 800 மி.லி | 120 லிட்டர் |
| காய்ப்புழு மற்றும் செம்பேன் | | கரையும் செவின் 50சதம் + | 1 கிலோ | |
| | | கரையும் கந்தகம் (அல்லது) | 500 கிராம் | 120 லிட்டர் |
| | | கெல்தேன் | 600 மி.லி | 120 லிட்டர் |
| | | நுவக்கிரான் | 800 மி.லி | 120 லிட்டர் |
| | | காய்ப்புழுவின் தாக்குதலின் கடுமையினைப் பொறுத்து மேற்கூறப் பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகளில் ஏதாவது ஒன்றை 10 நாட்கள் இடைவெளியி மறுமுறையும் தெளிக்கவும். | | |
| தண்டுப் புழு | விதைத்த ஃவது வாரம் | பாரத்தியான் | 200 மி.லி | 100 லிட்டர் |
| | | மேற்படி பூச்சியின் தாக்குதல் அதிகமாக காணப்படும் இடங்களில் 2 அல்லது 3 முறை தெளிக்கவும். | | |

# கண்ணைக் கவரும் கைத்தறி ஆடைகள்



பட்டுச் சேலை

கைத்தறித் துணிகளை மேலும் மேலும்
ஆர்வத்துடன் ஆதரிக்கும்படி மக்களை-
குறிப்பாகத் தாய்க்குலத்தை வேண்டிக்
கேட்டுக் கொள்கிறேன்.
கை வண்ணத்துக்கோர்
எடுத்துக் காட்டு-
கைத் தறித துணி.
— பேரறிஞர் அண்ணா



மதுரைப் பட்டு

பாலியஸ்டர் சர்டிங்






பட்டுச் சேலை



பாலியஸ்டர் சர்டிங்



மதுரைப் பட்டு



கைத்தறி ஆடை மக்களை
ஒளி பொங்கச் செய்வது
போல், நெசவாளர்களின்
வாழ்க்கையில் ஒளி
பொங்கச் செய்ய வேண்
டியது நம் கடமை.
உழவுக்கு அடுத்த
இடத்தைக் கைத்தறித்
தொழில் பெற்றிருக்
கிறது. இதனைக்
காத்திடுவது
நமது கடமை.

—பேரறிஞர் அண்ணா

| | | | |
|---|---|---|---|
| கருங்கிளை நோய் | விதை நேர்த்தி | கந்தக அமிலம் தோய்த்து பஞ்சு நீக்கிய பின் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் கேப்டான் (அல்லது) விட்டாவாக்ஸ் (அல்லது) அக்ரசான் (அல்லது) கெரசான் கலக்கவும். | |
| | 2. அக்ரிமைசின் 100<br>தாவர பூசணக்கொல்லி | 50 கிராம்<br>750 கிராம் | 100 லிட்டர் |
| | நோயின் கடுமை அதிகமாகக் காணப்பட்டால் 10-15 நாட்கள் இடைவெளியில் 3 முதல் 5 தடவை மேற்சொன்ன மருந்துகளை மீண்டும் தெளிக்கவும் | | |
| வெர்ட்டி சிலியம் வாடல் நோய் | நனையும் செரான் 0.1 சத கரைசல் | 1 கிலோ சப்பைபிடிக்கும் சமயத்தில் சுற்றி ஊற்றவும். பின்னர் 7.5 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உடன் 5 கிலோ யூரியாவை 200 லிட்டர் தண்ணீருடன் கலந்து 15 நாள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கவும். | |
| ப்யுசேரியம் வாடல்நோய் | பாவிஸ் டின்(அல்லது)<br>பென்லேட் | 200 கிராம்<br>200கிராம் | 200 லிட்டர்<br>200 லிட்டர் |
| | 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கவும். | | |

## 'புரொடினியா' புகையிலைப் புழு

இலையின் மீது காணப்படும் மயிர்க்கால்கள் நிறைந்த பழுப்பு நிறம் கலந்த முட்டைகளை சேகரம் செய்து அழித்து விடவும், ஆரம்பத்தில் ஒரு முட்டையை அழிப்பது பின்னர் 100 முட்டைகளைக் கொல்வதற்குச் சமானம் ஆகும்.

ஆரம்பத்தில் இலையின் அடிப்பாகத்தில் அடை அடையாய்க் காணப்படும் இளம்புழுக்கள் பச்சையத்தை அரித்துத் தின்றுவிடுவதால் இலைகள் சல்லடை போல் காணப்படும். எனவே இலையின் அடியில் காணப்படும் இளம் புழுக்களை இலையோடு சேர்த்துக் கிள்ளியெடுத்து எரித்து விடவும்.

கீழ்க்குறிப்பிட்ட பூச்சி மருந்துகளில் ஏதாவது ஒன்றைத் தெளித்து இளம் புழுக்களை அழிக்கலாம்.

டி.டி.டீ. 5% தூள்—10 கிலோ ஏக்கருக்கு

செவின் 10%தூள் 10 கிலோ-ஏக்கருக்கு

மிதைல் பாரத்தியான் 50%ஈசி —200 மி.லி-ஏக்.

சுமத்தியான் 50%ஈ.சி—250மி.லி -ஏக்கருக்கு

கரையும் கார்பரைல் 50%—0.8 கிலோ-ஏக்கருக்கு

எக்கலாக்ஸ் 25%ஈசி—300 மி.லி. -ஏக்கருக்கு

லெபாசிட் 100%ஈசி—1 லிட்டர்-ஏக்கருக்கு

கரையும் டி.டி.டீ. 50%—0.8 கிலோ-ஏக்கருக்கு

டி.டி.டீ 25% ஈசி— 1 லிட்டர் ஏக்கருக்கு

பென்தோலெட் 50% ஈசி—500 மி.லி- ஏக்கருக்கு

தையோடான் 35% ஈசி—400மி. லிட்டர்-ஏக்கர்க்

வளர்ந்த புழுக்களைக் கையினால் சேகரம் செய்து அழிக்கவும் மேலும் கீழ்க்கண்ட பூச்சி மருந்துகளில் ஏதாவது ஒன்றை 400 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகளின் அனைத்துப் பாகமும் வரப்பும் தரையும் நன்கு நனையும்படித் தெளித்துக் கட்டுப்படுத்தவும்.

(அ) டாஸ்பான்—1600 மி.லி.
(ஆ) நுவான்— 400 மி.லி.
(இ) பென்தோலேட் —800 மி.லி.

வயல்களைச் சுற்றி நாற்புறமும் ஒரு அடி ஆழம், 3/4 அடி அகலமும், உள்ள பள்ளங்கள் வெட்டி விடுவதால் புழுக்கள், அடுத்துள்ள வயலுக்கு வருவதையும் தடுக்கிறது. பள்ளங்களின் பக்கங்கள் யாவும் செங்குத்தாய் இருத்தல் அவசியம். இதனால் புழுக்கள் மேலேறுவதைத் தடுக்கிறது. மேலும் பள்ளங்களில் டி.டி.டீ. 5% தூளைத் தூவுவதன் மூலம் புழுக்களைப் பள்ளத்தில் அழிக்கலாம்.

### பொறி தயாரித்தல் :

பச்சரிசி தவிடு— 5 கிலோ
கரும்பு சர்க்கரை— 1 கிலோ

கரையும் டி.டி.டீ. 50%
அல்லது
கரையும் கார்பரைல் (50% தண்ணீர்)—½ கிலோ
தண்ணீர்— 3 முதல் 5 லிட்டர்

மேற்குறிப்பிட்ட பச்சரிசித் தவிடு 5 கிலோ கரும்பு சர்க்கரை 1 கிலோ மற்றும் கரையும் டி.டி.டீ.50%அல்லது கரையும் செவின் 50% அரைகிலோ ஆகிய மூன்றையும் கலந்து தண்ணீர் தெளித்து சிறு உருண்டைகளாகத் தயார் செய்து ஒரு ஏக்கர் பரப்பில் அனைத்து இடங்களிலும் மாலை நேரத்தில் தூவவும். இதனால் புழுக்கள் ஈர்க்கப்பட்டுக்கொல்லப்படுகின்றன.

இரவு நேரங்களில் அதிக சக்தி வாய்ந்த மின் விளக்குகளைப் பயன்படுத்துவதன் மூலம் தாய் அந்துப்பூச்சிகளைப் பிடித்து அழிக்கவும்.

செடிகளின் சருகுகளில் புழுக்கள் பகல் நேரங்களில்

## 1981 – அனைத்து நாட்டு உடல் ஊனமுற்றோர் ஆண்டு :

1981ஆம் ஆண்டை அனைத்து நாட்டு ஊனமுற்றோர்கள் ஆண்டாகக் கொண்டாடுவதற்காக ஐ. நா. அறக்குழு ஒன்று தனியாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்த அறக்குழுவுக்கு இந்தியா 10,000 டாலர்கள் நன்கொடை அளிக்கத் தீர்மானித்துள்ளது.

மேலும், இந்த ஆண்டில் நினைவு அஞ்சல் தலை ஒன்றும் வெளியிடப்படும். இந்த ஆண்டைக் குறிப்பதற்கான இந்தத் திட்டங்களின் ஒரு பகுதியாக உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிப்பதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை ஆலோசிக்க நிபுணர்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது,

தேசிய மறுவாழ்வுக் கொள்கை பற்றிய வழிகாட்டு நெறிகள் வரையப்பட்டு அவை மாநில அரசுகளுக்கும், முக்கிய சுயசேவை நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

மறைந்து கொள்வதால், செடி சருகுகளை சேகரம் செய்து எரித்து விடவும்

வரப்பு ஓரங்களில் ஆமணக்கு பயிர் செய்வதால், புரொடினிய புழுவின் தாக்குதலின் அறிகுறியை அறிய ஏதுவாகும்.

பருத்தி மகசூலை அவ்வப்பொழுது பரிந்துரைக்கப்படும் தொழில் நுட்ப உத்திகளை மட்டும் கையாளுவதன் மூலமே அதிகரிக்க முடியும். குறிப்பாகக் குறைந்த செலவில் பருத்தியில் நிறைந்த மகசூலைப் பெற பயிருக்கு. ஒருங்கிணைந்த பயிர்ப் பார்துகாப்பு என்பது இன்றியமையாத ஒன்றாகும். ஒருங்கிணைந்த பயிர்பாதுபாப்பு கையாளுவதன் மூலம் பருத்தி சாகுபடியில் ஆகும் செலவில் பெரும் பகுதியினைக் குறைக்க முடியும். இதனால் பெறக்கூடிய இலாபத்தினைக் கணிசமாக அதிகரிக்கச் செய்ய இயமும். ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:

'பருவத்தே பயிர் செய்' என்பதற்கேற்ப உரிய பருவத்தில் பருத்தியினை விதைக்க வேண்டும். எவ்வித காலவரம்புமில்லாமல் அவரவர் விருப்பத்திற்கேற்ப விதைப்பு செய்யாமல் ஒரே காலத்தில் அதுவும் 15தினங்களுக்குள் பருத்தி விதைப்பு முடித்து விடுதல் வேண்டும். இதனால் பயிர் ஒரே சீராக வளர்ந்து ஒரே சமயத்தில் சப்பை பிடித்து காய் விடும். பூச்சி தாக்குதலின் தன்மை அனைத்துப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும். அதனால் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது சுலபம்.

ஒவ்வொரு கணிசமான குறிப்பிட்ட பகுதியில் அல்லது கிராமப்பகுதியில் பல்வேறு வயதுள்ள வெவ்வேறு பருத்தி ரகங்களைப் பயிரிடாமல் ஒரே ரகப் பருத்தி பயிரிடப்படுதல் வேண்டும். பூச்சிகளின் வளர்ச்சி நிலை அனைத்துப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாகக் காணப்படுமாதலால் கட்டுப்படுத்துவது எளிது.

3 பருத்தியினத்தைச் சார்ந்த வெண்டை மற்றும் பச்சைக் காய்ப்புழு தாக்கக்கூடிய துவரை மற்றும் மக்காச்சோளம் போன்ற பயிர்களை அருகில் பயிரிடக் கூடாது.

4 கடந்த ஆண்டு சாகுபடி செய்யப்பட்ட பருத்தி மார்களை சேகரம் செய்து வைக்காமல் உடனே எரித்து அழித்து விடுதல் வேண்டும்.

5. கட்டைப்பருத்தி விடுதல் அல்லது குளிர்சாகுபடி பகுதியில் மறுமுறையும் கோடை கால பருத்தி சாகுபடி செய்தல் ஆகியவை அறவே இருத்தல் கூடாது. இதன் விளைவினுல் பருத்திப் பயிரே சாகுபடி செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம் என பருத்தி சாகுபடியாளர்களுக்கு எச்சரிக்கை விடப்படுகிறது.

6 பூச்சி தாக்குதலின் வகைகளுக்கேற்ப உரிய பூச்சி மருந்துகளை, சிபாரிசு செய்யப்பட்ட அளவில் தக்க சமயத்தில் பூச்சிகளின் எண்ணிக்கை மற்றும் சேதத்தினைக் கணக்கிட்டு தெளித்தல் அவசியம்.

7 நாள்தோறும் பருத்திப் பயிரினை பார்வையிட்டு பூச்சிகளின் எண்ணிக்கையினை கணக்கிட்டு மருந்து தெளித்தல் வேண்டும்.

### தத்துப்பூச்சியின் தாக்குதல் கணக்கிட:

பருத்தி வயலை, கிழக்கு, மேற்கு, தெற்கு வடக்கு என நான்கு பாகமாக பிரித்துக்கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு பாகத்திலும் செடிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பூச்சிகளின் எண்ணிக்கையினை கணக்கிடுதல் வேண்டும். அவற்றில் செடிக்கு இரண்டு என இளந்தத்துப்பூச்சிகள் காணப்படின் மேற்படி பூச்சியின் தாக்குதல் ஆரம்பமென அறியலாம். வளர்ந்த தத்துப்பூச்சி ஒவ்வொரு செடியிலும் இரண்டிருப்பின் மருந்து தெளித்தல் அவசியம். ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு நாளென வைத்து, ஒவ்வொரு பாகத்திலும் 50 செடியில் 50 இலைகளில் காணப்படும் பூச்சிகளின் எண்ணிக்கையினை (கணக்கிட்டு) நான்கு நாட்களுக்குள் முடித்தல் வேண்டும். மீண்டும் 5ம் நாள் முதல் பாகத்திலிருந்து பூச்சிகளின் எண்ணிக்கையினை கணக்கிடுதலை ஆரம்பிக்க வேண்டும்.

### அசுவனியின் தாக்குதலைக் கணக்கிட:

ஒவ்வொரு செடியினை ஆதாரமாக எடுத்துக்கொண்டு 100க்கு 25 செடிகளுக்கு மேல் அசுவினி தாக்குதல் காணப்படின் மருந்து தெளிக்க வேண்டும். அசுவினி தாக்கப்பட்ட செடிகள் உள்ள இடங்களில் மட்டும் மருந்து தெளித்தால் போதுமானது.

மேற்கூறப்பட்ட அசுவினி மற்றும் தத்துப்பூச்சியினைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட மருந்துகளில் ஏதாவதொன்றை தெளிக்கவும்.






இந்தியாவில் உள்ள கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கை 35.63 இலட்சம். அவற்றில் 5.56 இலட்சம் தறிகள் தமிழ்நாட்டில் ளன. ஆக, நாட்டிலுள்ள தறிகளின் மொத்த எண்ணிக்கையில் ஆறில் ஒரு பங்கு தறிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அதே சமயம், நாட்டின் மொத்த கைத்தறித் துணி உற்பத்தி அளவு 230 கோடி மீட்டர். இதில் தமிழ்நாட்டில் மொத்த உற்பத்தியளவு 60 கோடி மீட்டர் ஆகும். அதாவது நான்கில் ஒரு பங்கினை தமிழ்நாடு உற்பத்தி செய்கின்றது.

1. ரோகார் 2. நுவக்கிரான், 3. டைமக்ரான்—பூச்சி தாக்குதலின் தன்மையைப் பொறுத்து 150 முதல் 250 மி.லி மருந்து உபயோகிக்கவும்.

### புள்ளிக்காய்ப் புழுவின் தாக்குதலைக் கணக்கிட

வாரம் இருமுறை 100 சப்பைகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக கணக்கிட்டு அவற்றில் 10 சதவீத சப்பைகள் புள்ளிக் காய்ப்புழுவினுல் தாக்கப்பட்டிருந்தால் தையோடான் மருந்தினை ஏக்கருக்கு 500 மி.லி வீதம் 2லிருந்து 3முறைவிதைத்து 100 நாட்கள் வரை தெளிக்கலாம்.

பூச்சி மருந்து உபயோகிக்கையில் சிபாரிசு செய்யப்படும் அளவிற்கு குறைவாக உபயோகிக்கலாகாது.

பூவிதழ்களை மூடியிருக்குமேயானுல் அது இளஞ்சிகப்புக் காய்புழு தாக்கியிருக்கிறது என அறிந்து அதற்கு பூவின் மேல் பாகததை நசுக்குவதாலும், செடியினின்று உதிர்ந்து நிலத்தின் மீது காணப்படும் சப்பைகளை எடுத்து எரிப்பதால் பச்சைக்காய்ப்புழு மற்றும் புள்ளிக் காய்ப் புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். எளிதில் கண்களுக்கு புலப்படும் பச்சைக் காய்ப்புழு, இலைப்புழு, புள்ளிக் காய்ப் புழு ஆகியவற்றை கையினுல் சேகரம் செய்து அழித்து விடலாம்.

### இளஞ்சிவப்பு காய்ப்புழுவினை

1 கார்பரில் ரோகார்
(அல்லது)
2. ஜோலான்
(அல்லது)

நுவக்கிரான் தெளித்துக்கட்டுப் படுத்தலாம். பூச்சியின் தாக்குதல் கடுமையாக காணப்படின் மேற்கூறப்பட்ட மூன்று மருந்துகளில் இரண்டு மருந்தை சம அளவு கலந்து தெளிக்கலாம். மழைக் காலத்தில் 'சாண்டோவிட்' போன்ற பசைப் பொருட்களை 1 லிட்டர் மருந்துடன் 1 மில்லி சாண்டோவிட் கலந்து தெளிப்பதால் மருந்து மழையினால் எளிதில் கரையாது பயிரில் ஒட்டியிருக்கும்.

### பருத்தி அறுவடை:

பருத்தி அறுவடையின்போது சில முக்கியமான முறைகளை பின் பற்றுதல் வேண்டும். நன்கு மலர்ந்து வெடித்த பருத்தியையே எடுக்க வேண்டும். காலை நேரங்களில் பருத்தி எடுக்க வேண்டும். நல்ல பருத்தியை தனியாகவும் பூச்சி மற்றும் நோயினுல் தாக்கப்பட்ட கெட்ட பருத்தியைத் தனியாகவும் பிரிந்து வைக்க வேண்டும். அறுவடையாகும் பருத்தியை தரையில் குவிக்காமல் சாக்கு அல்லது பாய்களின் மீது குவித்து வைப்பது நல்லது. ஒவ்வொரு முறை எடுக்கும் பருத்தியினை நிழலில் உலர்த்தி பின்னர் அறைகளில் சேமித்து வைக்க வேண்டும்.

### முடிவுரை:

வீரிய ஒட்டு, மற்ற ரக பருத்தி உற்பத்தியைப் பெருக்க கையாள வேண்டிய முக்கிய வழி முறைகளின் சுருக்கம் பின்வருமாறு:

1 சான்றிதழ் பெற்ற வீரிய ஒட்டு ரகப் பருத்தி விதைகளையே விதைப்பது.
2 கந்தக அமிலம் தோய்த்து பஞ்சு நீக்கிய விதைகளை உபயோகிப்பது.
3 உரிய காலத்தில் தகுந்த தேவையான உரமிடுவது.
4 களைகொல்லி மருந்து உபயோகித்தல்.
5 பிளானுேபிக்ஸ் தெளித்தல்
6 முறையான மற்றும் தேவையான அளவு நீர்ப்பாசனம்.
7 இலை மூலம் யூரியா தெளித்தல்.
8 வளர்ச்சி அதிகமாயுள்ள செடிகளின் நுனியினை நசுக்குதல்.
9 தரமான பூச்சி பூஞ்சாள மருந்துகளைச் சிபாரிசு செய்யும் அளவுப்படியே உபயோகித்தல் ஆகியவையாகும்.
10 ஒருங்கிணைந்த பயிர் பாது காப்பு முறைகள் கடைப்பிடித்தல்.

இவ்வாறு, வீரிய ஒட்டு ரகப் பருத்திச் சாகுபடியினை மேற்கொண்டு, அமோக விளைச்சலைப் பெறுவதோடு மட்டுமின்றி அதிக வருவாயும் பெற்று, நாட்டின் பொருளாதாரம் கணிசமான அளவு பெருகுவதற்கும் வழிவகை செய்வோமாக.






# ஏற்றம் பெற்றுவரும் இறால் ஏற்றுமதி

—திரு டி. சுந்தரராஜன்,
திரு எஸ். விக்டர் சந்திரபோஸ்,
திரு வெ. வெங்கடேசன்,
சாந்தோம் உவர் நீர் மீன் பண்ணை,
சென்னை-600 028.

தமிழ்நாட்டின் நெடிய கடலோரப் பகுதிகளையொட்டி ஏறத்தாழ இரண்டு இலட்சம் எக்டேர் உவர்நீர்ப் பரப்புகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் முகத்துவாரப் பகுதிகள், கழுவெளிப் பகுதிகள், உப்பு ஏரிகள், உப்பு சதுப்பு நிலப்பகுதிகள் ஆகிய உவர் நீர்ப் பகுதிகளும் மற்றும் கடலோரத் தாழ்வுப் பகுதிகளும் உள்ளடங்குகின்றன. தற்போது இத்தகைய நீர்ப் பகுதிகளில் உப்புக் காய்ச்சுவதும் இயற்கையாக வந்தடைந்து வளரும் மீன் மற்றும் இறால் இனங்களைப் பிடித்து பொருளீட்டுவதையும் தவிர வேறு எவ்வித விளைச்சலுக்கும் இப்பகுதிகள் பயன்படுத்தப்படுவதில்லை.

இந்தியாவின் ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்றாக இறால் ஏற்றம் பெற்றுள்ளதால் இறால் பிடிப்பும், இறால் வளர்ப்பும் பெருமளவில் வாணிபச் சிறப்பினை அடைந்துள்ளது. குறிப்பாகக் கடலோர மாநிலங்களில் இத்துறையில் ஈடுபாடு காட்டி வருகின்றன. இறால் வளர்ப்பு நடைமுறைக்குச் சாத்தியந்தானா என்ற நிலைமை பல காலம் இருந்து வந்ததுண்டு. இதனைக் கருத்தில் கொண்டு தமிழக மீன் துறையின் சாந்தோம் உவர்நீர் மீன் பண்ணையில் அண்மைக் காலமாக முனைப்பான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனாகக் ''குறைந்த செலவில் இறால் வளர்க்கும்'' முறை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தோற்றுவாயாக, கடலோர கிராமப் புறங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியில் இறால் வளர்ப்பு சிறந்ததோர் பங்கு வகிக்கும் என அறுதியிட்டுக் கூறலாம். பயனற்றுக் கிடக்கும் உவர்நீர்ப் பகுதிகள் ''பொன் விளையும் பூமிகளாக'' மாறுவதற்கு அரிய வாய்ப்பு அண்டி வருகின்றது. மேலும், கிராமப் புறங்களில் பெருவாரியான வேலை வாய்ப்பிற்கு இறால் வளர்ப்பு வழி வகுக்கும்.

## உவர் நீர்ப் பரப்பில் உட்புகும் இறால் குஞ்சுகள் :

உவர் நீர் இறால்கள் கடலில் இனவிருத்தி செய்கின்றன. இவற்றின் மிகச் சிறிய குஞ்சுகள் கரையை நோக்கிக் கடல் நீரோட்டத்தினால் தள்ளப்படுகின்றன. உவர் நீர்ப்பரப்புகள் கடலுடன் இணைப்புக் கொண்டவையாதலால், கடல் மட்டம் தினமும் உயரும்போது கடல் நீர் இந்நீர்ப் பரப்பில் உட்புகுகின்றது; அந் நீரோட்டத்தில் பல்வேறு இன இறால் குஞ்சுகள் உவர் நீர்ப் பரப்பினுள் புகுகின்றன. இறால் இனத்தில் வெள்ளை இறால், கருப்பு இறால், பாசி இறால், செமக்கை இறால், வளிச்ச இறால் ஆகியவற்றின் குஞ்சுகள் உவர் நீர்ப் பகுதிகளில் நுழைந்து வெகுவாக வளர்கின்றன.

மேற்கூறியவாறு இவ்வகை இறால் குஞ்சுகள் உவர்நீர்ப் பரப்பில் நுழையும்போது நுண்ணிய குஞ்சுகளாக (5 முதல் 8 மி.மீ வரை) இருக்கும். அங்கு வளர்ந்து இருப்பு செய்யும் பருவத்தை அடையும் போது 50 மி.மீ நீளமும் ஏறத்தாழ ஒரு கிராம் எடையும் உடையதாக இருக்கும். பல்வகை இறால் இனங்களில் வெள்ளை மற்றும் கருப்பு இறால் வகையே வேகமாக வளரும் தன்



மையுடையவை. வெள்ளை இறால் குஞ்சுகள் மணற்பாங்கான கரையோரப் பகுதிகளிலும், சிறு சிறு குட்டைகளிலும் மண்டி வளரக்கூடியவை. கருப்பு மற்றும் பாசி இறால் குஞ்சுகள் புற்பூண்டுகள், கடற் பாசிகள், போன்றவற்றில் ஒட்டி வளரக் கூடியவை. சனவரி முதல் ஏப்ரல், ஜூன் முதல் செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாதங்கள் இவற்றிற்கான பருவ காலங்கள். வெள்ளை இறால் குஞ்சுகள் உவர் தன்மை அதிகமுடைய இடங்களிலும், கருப்பு இறால் குஞ்சுகள் உவர் தன்மை குறைவான இடங்களிலும் அதிகம் காணப்படும்.

## வளர்ப்புக் குளங்கள் அமைத்தல் :

தினமும் கடலின் நீர்மட்டம் 6 மணிக்கு ஒரு முறை உயர்ந்தும்

வெள்ள நிலைமை) அடுத்த 6 மணியில் தாழ்ந்தும் (வடிப்பு நிலைமை) மாறி மாறி ஏற்படுவதை அறிவோம். ஒரே நாளில் இவ்வண்ணம் இரு வெள்ள நிலைகளும் இரு வடிப்பு நிலைகளும் ஏற்படுவது கண்கூடு, பௌர்ணமி, அமாவாசை காலங்களில் வெள்ளநிலை மிக உயர்ந்தும் வடிப்பு நிலை மிகத் தாழ்ந்தும் அமையும். இதன் விளைவாக முகத்துவாரப் பகுதிகளில் நீர் உட்புகுவதும் வடிவதும் முகத்துவாரத்தின் அகல, ஆழத்தைப் பொறுத்து நிகழும்.



உட்புகும் நீரினால் மூழ்கடிக்கப்படும் தாழ்வான நிலப்பரப்புகள் இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்க ஏதுவான இடங்கள். ஏனெனில், இதுபோன்ற இடங்களில்தான் இயற்கையாக ஏற்படும் வெள்ள நிலை மற்றும் வடிப்பு நிலைகளைப் பயன்படுத்தி குட்டையில் நீரேற்றவோ வடிக்கவோ இயலும். மற்ற இடங்களில் எஞ்சின் உதவி கொண்டே நீரேற்றவும் வடிக்கவும் முடியும். பண்ணையில் 0.8 மீட்டர் அளவில் நீரைத் தேக்கி வைத்தல் இன்றியமையாதது. இத் தண்ணீரும் அடிக்கடி மாற்றப்பட வேண்டும். இவ்வாறாகப் பண்ணையில் தேக்கப்படும் நீரின் உவர் தன்மை ஆயிரத்திற்கு 16 முதல் 32 பாகங்கள் என்ற ($2\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$) டிகிரி அளவில் இருந்திட வேண்டும். இறால் பண்ணைகள் அமைக்க தேர்ந்தெடுக்கப்படும் இடம், மண் மற்றும் களி (20 சதம் முதல் 40 சதம்) கலந்ததாக இருக்க வேண்டும். இல்லையெனில் குளத்தினுள் நீர் தங்காது. முழுமையும் மணற்பாங்கான பகுதிகள் பயனற்றவை. கடல் மட்டத்திற்கு மேல் 0.8 மீட்டர் வரை உயர்ந்துள்ள பகுதிகளைப் பண்ணை அமைக்க தெரிவு செய்யலாம், அதற்கு மேற்பட்ட உயர்வு கட்டுமானச் செலவினை அதிகரிக்கும்.

குளம் அமைக்கும்போது கிடைக்கும் மண்ணைக் கொண்டே கரைகளை ஏற்படுத்தலாம். குளத்தின் கரைகள் கடலின் மிக உயர்ந்த வெள்ள உயரம் மற்றும் அப்பகுதியைச் சார்ந்த ஆற்றின் வெள்ள மட்டம் ஆகியவற்றைவிட இரண்டு அடி உயரமாவது இருத்தல் வேண்டும். குறைந்தது 1 முதல் 2 எக்டேர் பரப்புள்ள குளங்களை வளர்ப்புக்கு அமைக்கவேண்டும்.

மொத்தப் பரப்பில் 10 சதவீதம் நாற்றங்கால் குளங்கள் அமைக்க வேண்டும். நாற்றங்கால் குளங்கள் 0.1 எக்டேர் அளவுடையதாய் அமைத்திட வேண்டும். ஒரு எக்டேர் பரப்புள்ள குளத்துறகு ½ மீட்டர் அகலம் உள்ள திறந்த டதகுகள் அமைக்க வேண்டும். தண்ணீரைத் தேக்க பலகை அடைப்பும் மீன் மற்றும் இதர உயிரினங்கள் நுழையாமல் தடுக்க சல்லடைக் கண் நைலான் அடைப்பும் அடுத்தடுத்துப் பொருத்த வேண்டும்.

மதகுகளும், அடைப்புகளும் நீரோட்டக் கால்வாயிலிருந்து நீரை வரவழைத்து ஏற்றவோ, வடிக்கவோ வகை செய்யும். பல குளங்களுக்கும் பொதுவான நீரேரட்டக் கால்வாய்களும் வசதிக்கேற்ப அமைக்கலாம். எங்கெல்லாம் மேற்சொன்ன அமைப்பு அமைக்க இயலாதோ, அங்கெல்லாம் மோட்டாரைப் பயன்படுத்தலாம். மோட்டாரைப் பயன்படுத்துகையில் கட்டுமான மூலதனம் அதிகரிக்கும். எனவே, இதனைக் குறைக்கும் வகையில் குட்டைகள்ள மாற்றி அமைக்கவேண்டும். நீர் கசிவதைத் தடுக்க பலமான கரைகளை ஏற்படுத்த வேண்டும். இதற்குத் தேவையான மண் மட்டுமே குளம் அமைக்கும் இடங்களில் தோண்டி எடுத்தால் (25 செ.மீ.) போதுமானது. மோட்டார் மூலம் நீர் நிரப்புங் குளங்களில், நீர் வடிக்க அப் பகுதியில் நிலவும் வெள்ளத் தாழ்வு நிலையைப் பயன்படுத்த வேண்டும். இதற்கேற்ப, குளங்களின் தரை, வெள்ளத் தாழ்வு நிலைக்குச் சற்று உயரத்தில் வைக்க வேண்டும்.

வளர்ப்பிற்கென சேகரிக்கப்படும் குஞ்சுகள் மிகச் சிறியனவாயிருந்தால் நாற்றங்கால் பராமரிப்பு தேவைப்படும். 0.05 முதல் 0.1 எக்டேர் வரையிலான குளங்களில் 60 முதல் 70 செ.மீ உயர நீர் தேக்கம் செய்து அவற்றை நாற்றங்கால் பராமரிப்பிற்குப் பயன்படுத்தலாம். பச்சிளங் குஞ்சுகளைச் சேகரித்துப் பராமரிப்பு செய்வதற்கு முன்பாக, நாற்றங்கால் குளங்களில் நீரை வடித்துத் தரையைச சூரிய வெப்பத்தில் காய விட வேண்டும். இதனால் தேவையற்ற மீன், நண்டு வகைகள் அழிவதுடன் குளத்தின் தரை பண்படுத்தப்படுகிறது. நீரை வடிக்க இயலா குளங்களில் இருப்பைத் தூளை ஒரு எக்டேருக்கு 1500 கிலோ முதல் 2000 கிலோ வரை நச்சுப் பொருளாகப் பயன்படுத்தி தேவையற்ற மீன் வகைகளை அகற்றி விடலாம். 15 முதல் 20 நாட்களுக்குள் நச்சுத் தன்மை நீரில் நீங்குவதோடு இருப்பைத் தூள் உரமாகவும் மாற்றமடைகிறது. மேற்கூறிய மீன் அகற்றும் வேலையின் போது நீர்மட்டத்தை மிகக் குறைந்த அளவில் வைத்துக் கொண்டால் செலவு குறையும்.

இதன் பிறகு, 20 முதல் 30 செ.மீ. வரை நாற்றங்கால் குளத்தில் நீரேற்றி மாட்டுச் சாணம், கோழியின் கழிவு உரம் போன்றவற்றை ஒரு எக்டேருக்கு 100 கிலோ வீதம் போடலாம். அல்லது மாற்றாக 4:1 வீதத்தில் ஒரு எக்டேருக்கு 25 கிலோ வீதம் யூரியா, சூப்பர்பாஸ்பேட் உரமிடலாம். சில நாட்களில் நுண்ணிய உயிரினங்கள் தோன்றி குளத்தின் அடிப்பகுதியில் ஆடை கட்டும். அதன் பின்னர் குளத்தின் நீரை 60 முதல் 60 செ.மீ வரை உயர்த்திட வேண்டும்.

பச்சிளங் குஞ்சுகளைச் சேகரிப்பு இடங்களிலிருந்து கொண்டு வந்த பின்னர் புதிய நீர் நிலைக்குப் பக்குவப்படுத்த வேண்டும். சிறிது சிறிதாக நாற்றங்கால் குளத்தின் தண்ணீரைக் குஞ்சுகள் கொள்கலன்களில் விட்டுப் பக்குவப்படுத்திட வேண்டும். 3 முதல் 4 இலட்ச குஞ்சுகளை ஒரு எக்டேர் நாற்றங்கால் குட்டையில் விடலாம். காலை வேளைகளில் குஞ்சுகளைக் குளத்தில் விடுவது சாலச் சிறந்தது. 2-3 வாரங்களில் பச்சிளங் குஞ்சுகள் (10-20



மி.மீ) பருவமான குஞ்சுகளாக (40-50 மி.மீ) ஏறத்தாழ 1 கிராம் எடையுள்ளதாக வளருகின்றன. சல்லடைக் கண் நைலான் வலை, சிறுகண் பணிவலை மற்றும் சிறுகண் இழுப்பு வலை ஆகியவற்றின் மூலம் நாற்றங்கால்களில் அறுவடை செய்ய



லாம். ஏறத்தாழ 60 சதம் திரும்பக் கிடைக்கும். வளர்ப்புக் குளத்தில் இருப்பு செய்வதற்கு 20 அல்லது 25 நாட்களுக்கு முன்னரே நாற்றங்கால் இருப்பு தொடங்கப்படவேண்டும்.

நாற்றங்கால் பராமரிப்பு இன்றி இருப்பு செய்வதற்கு முகத்துவாரப் பகுதிகளில் பருவமான குஞ்சுகள் (40-50 மி.மீ) சுமார் 1 கிராம் எடை) இருக்குமாயின் அவற்றைச்சல்லடைக்கண் நைலான் வலை, சிறுகண் மணிவலை மற்றும் இழுப்பு வலைகளினால் சேகரித்து வளர்ப்புக் குளங்களுக்குக் கொண்டு வரலாம். ஒரே இனமானதாகவும், ஒரே அளவானதாகவும் உள்ள பருவக் குஞ்சுகளை வளர்ப்புக் குளத்தின் நீரில் பக்குவப்படுத்துதல் இன்றியமையாததாகும். இதனைச் செய்யும்போது நலிவுற்ற குஞ்சுகளை எளிதில் அகற்றிவிட இயலும்.

**வளர்ப்புக் குளங்களில் இருப்புச் செய்தல் :**

நாற்றங்கால் பராமரிப்புக் குளங்களைத் தயாரித்தது போன்றே வளர்ப்புக் குளங்களையும் தயாரிக்க வேண்டும். நீர் மட்டத்தை முழுமையாக வடித்து சூரிய வெப்பத்தில் குளத்தைக் காய வைக்கலாம். மீன், நண்டு வகைகள் செத்து வாயுக்கள் வெளிப்பட்டு இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு குளத்தின் அடிமண்ணின் உற்பத்தித்திறன் கூடுதலாகும். நீரை வடிக்கவியலா குளங்களில் முடிந்த மட்டும் நீரைக் குறைத்து மாறி மாறி மீன்பிடிப்பு மேற்கொண்டு இயன்றவரை எல்லா நீர்வாழ் உயிரினங்களையும் அகற்ற வேண்டும். இதற்கு மேலும் இருப்பைத் தூளை ஏற்கெனவே சொல்லப்பட்ட அளவில் போட்டு உயிரினங்களை அழித்துவிட வேண்டும். 15-20 நாட்களுக்குப் பிறகு நீர்மட்டத்தை மெல்ல உயர்த்தி (0.3-0.4 மீட்டர் அளவு) ஒரு எக்டேருக்கு 400 கிலோ கோழி உரம் அல்லது 4:1 என்ற வீதத்தில் 50 முதல் 100 கிலோ யூரியா சூப்பர் பாஸ்பேட் உரமிட வேண் வேண்டும். சில நாட்களில் நீரின் தெளிவு மாறி கலங்கல் ஏற்படும். ஐந்தாறு நாட்களில் கோடிக் கணக்கான நுண்ணுயிர்கள் குளத்தின் தரையில் ஆடையாக உற்பத்தியாகிவிடும். இதன்பின்னர் 0.8 மீட்டர் நீரை உயர்த்தி இருப்புச் செய்யலாம்.

நாற்றங்கால் குளங்களிலிருந்தோ முகத்துவாரப் பகுதிகளிலிருந்தோ கொண்டு வரப்படும் குஞ்சுகளை இருப்புக் குளத்து நீரில் 6-8 மணி நேரம் பக்குவப்படுத்த வேண்டும். பச்சிளங் குஞ்சுகளோ, பருவக்குஞ்சுகளோ வெகு தொலைவிலிருந்து வரவேண்டுமாயின் அவற்றைப் பாலிதீன் பைகளில் பிராண வாயு அடைத்துக்கொண்டு வரலாம். 25 முதல் 45 மி.மீ அளவுள்ள குஞ்சுகளை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 முதல் 30 வரை போட்டு 12 முதல் 14 மணி நேரம் வரை பயணத்தில் கொண்டு செல்லலாம். பச்சிளங் குஞ்சுகளாயின் (20-25 மி.மீ) 75 முதல் 100 வரை ஒரு லிட்டர் தண்ணீரில் போட்டு 18 முதல் 24 மணி நேரம் வரை பயணத்தில் கொண்டு போகலாம். இதற்கும் சிறிய குஞ்சுகளை 100 முதல் 150 வரை போட்டு 18 மணி முதல் 24 மணி நேரம் வரை பயணத்தில் கொண்டு போகலாம். பயணத்தில் வெப்பநிலை 28 டிகிரி செண்டி கிரேடு முதல் 30 டிகிரி செண்டி கிரேடு வரை மேற்படாமல் இருக்க ேண்டும், ஒரு நாளின் குறைந்த வெப்பமுடைய நேரத்தில் பயணத்தைத் தொடங்க வேண்டும். குஞ்சுகள் சேகரிக்கப்பட்ட இடத்தின் தண்ணீரையே இதற்குப் பயன்படுத்த வேண்டும். நீரை பாலிதீன் பையில் விடு முன்னர் வடிகட்டுதல் நலம். இவையன்றி, திறந்த கலன்களில் குஞ்சுகளை எடுத்துச் செல்ல வேண்டுமாயின், 18 முதல் 30 மி.மீ அளவுள்ள குஞ்சுகளை ஒரு லிட்டருக்கு 50 முதல் 70 வரை போட்டு 3 முதல் 4 மணி வரை பயணத்தில் கொண்டு செல்லலாய.

இதற்கும் சிறியதாக இருந்தால் 150 முதல் 200 வரை கொண்டு செல்லலாம். சிறந்த கலன்களில் கொண்டு செல்லும் போது பாசிச் செடிகளை மேல் போட்டு வைப்பது உகந்தது.

**இருப்புச் செய்யும் இறால்களின் நீளமும் எண்ணிக்கையும் :**



| வகைகள் | பருவ அளவு | ஒரு எக்டேருக்கு இருப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| வெள்ளை இறால் | 35—50 மி.மீ | 40,000-45,000 |
| கருப்பு இறால் | 35—50 மி.மீ | 25,000-30,000 |
| பாசி இறால் | 30—45 மி.மீ | 40,000-45,000 |



**வளர்ப்பு குளங்களைப் பராமரிக்கும் முறை :**

மேற்காட்டிய அளவில் இருப்பு செய்த பின்னர் வளர்ப்புக் குளங்களைப் பராமரிப்பு செய்ய வேண்டும். குளத்தின் நீரை 0.8 மீட்டர் அளவில் தொடர்ந்து இருக்கச் செய்யவேண்டும். 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் மாற்றம் செய்ய வேண்டும். மாற்றம்

செய்த பின்னர் ஒரு எக்டேருககு 25 கிலோ வீதம் ஏற்கெனவே சொல்லப்பட்ட அளவில் உரமிட வேண்டும். தேவைப்படுமாயின் தண்ணீரையும், மண்ணையும் பரிசோதனை செய்த பின்னர் உரமிடுதலை மேற்கொள்ளலாம்.

அதிகப்படியாக உரமிடுதல் கேடு விளைக்கும். தண்ணீரின் அமிலம் மற்றும் காரத் தன்மை (Ph) 7.3 முதல் 8.0 வரை இருக்கலாம். உப்பு நிலை ஆயிரத்திற்கு 18 முதல் 25 பங்கு வரை இருக்கலாம். பிராணவாயும் பத்து இலட்சத்தில் 5.0 முதல் 8.0 பங்கு வரை இருக்கலாம். இது 3.0 பாகத்திற்குக் குறையும்போது இரால் தினறும் நிலையை அடையும். இந்நிலை நீடிக்குமாயின் நோய்களும் தாக்கக்கூடும். பிராணவாயுவின் அளவு மேலும் குறைந்தால் இரால்கள் இறக்க நேரிடும்.

அதிக வெப்பத்தில் (28 டிகிரி செண்டி கிரேடு முதல் 32 டிகிரி செண்டி கிரேடு வரை) நாளொன்றுக்கு 5 மி.மீ அளவில் தண்ணீர் ஆவியாகக்கூடும். இதனால் உப்புச் சத்து அதிகரிக்கக் கூடும். குளத்தில் தண்ணீரை ஏற்றி இறக்குவதன் மூலம் இதனைச் சரிக்கட்டுவதோடு இத்தகைய மாற்றம் தேவையான இயற்கை உணவையும் குளத்தில் உற்பத்தி செய்யும். தண்ணீர் மாற்றம் செய்யும்போது பிற மீன் குஞ்சுகள் உள்ளே நுழையா வண்ணம் கவனமாயிருத்தல் வேண்டும்.

இரால்கள் பாம்பு போன்று உடற்மேற்கட்டை உரித்து வளரும் தன்மையுடையவை. அத்தருணத்தில் அவைகள் பலவீனமடைவதால் அவைகளை மற்ற இரால்கள் அடித்துத் தின்றுவிடாமல் குளத்தில் சிறு பாதுகாப்பு அமைப்புகள் உண்டு. பண்ண வேண்டும். சிறிய மூங்கில் குழாய்கள், மற்றும் கட்டுக் குச்சிகள் இத்தகைய பாதுகாப்பிடங்களை உண்டு பண்ணும். பராமரிப்புக் குளங்களில் இரால் திருடுபோவதைத் தடுக்க முட்களை ஆங்காங்கே நீரினுள் போட்டு வைக்கலாம். நண்டுகள் கரையேறும் தன்மையுடையவை. எனவே, அவ்வப்போது இவற்றினை 'நண்டு' கச்சா மூலம் பிடிக்கலாம். தீங்கு விளைக்கும் 'உலவா' பாசி மற்றும் 'எண்டிரோ மார்பா' பாசிச் செடிகள் தோன்றி வளர்ந்தால் அவற்றைப் பிடுங்கிவிட வேண்டும். பண்ணைக்கு அருகில் தொழிற்சாலைகளின் கழிவு அல்லது விவசாய பூச்சி மருந்து கலக்குமாயின் அவற்றைப் பண்ணை நீரில் கலக்கா வண்ணம் தடுப்புச் செய்து கொள்ள வேண்டும்.

மேற்காட்டிய வகையில் பராமரிக்கப்படும் வளர்ப்புக் குளத்தில் ஒரு மாதத்தில் வெள்ளை இரால் 7 முதல் 8 கிராம் எடையும், கருப்பு இரால் 10 முதல் 12 கிராம் எடையும் வளரும். இந்த வளர்ச்சியையும் அவ்வப்போது சோதனை இரால் பிடிப்பு மூலம் கணித்துக் கொள்ளலாம்.



இவ்வண்ணம் வளர்க்கப்பட்ட இரால்களை மூன்று முதல் நான்கு மாதங்களில் அறுவடை செய்தலே உசிதமானது. மூன்று மாதங்களில் கீழ்க்காணும் வளர்ச்சி காணப்படும்:

| இனம் | தலையுடன் எடை | அளவு |
|---|---|---|
| 1. வெள்ளை இரால் | 20—23 கிராம் | 120-140 மி.மீ |
| 2. கருப்பு இரால் | 30—35 கிராம் | 145-160 மி.மீ |
| 3. பாசி இரால் | 20—25 கிராம் | 125-140 மி.மீ |

**அறுவடை :**

அறுவடை மேற்கொள்ளப்படும்போது குளத்தின் நீரை முடிந்தவரை குறைத்து விட வேண்டும். மதகின் அருகில் பள்ளம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் நீர் வடித்து இரால் எடுப்பது சுலபம். இல்லையெனில், மணி வலை, கொண்டைவலை, இழுப்பு வலை ஆகியவற்றைப் பயன்படுத்தி அறுவடை செய்யலாம். அதிகாலை வேளையே இரால் அறுவடைக்கு ஏற்றது.

நன்கு பராமரிக்கப்பட்ட குளத்தில் ஒரு எக்டேருக்கு ஒரு அறுவடையில் (மூன்று முதல் நான்கு மாத காலம்) 500 கிலோ இரால் கிடைக்கும். ஒரு போகத்திற்கு (ஓராண்டில்) ஒரு எக்டேருக்கு ஒரு டன் வீதம் மகசூல் கிட்டும்.









# குடிசைகள் கோபுரமாகின்றன!

**தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு ப. ராமபத்திரன் அவர்களின் பேட்டி**

அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுள் வீட்டுப் பிரச்சினையும் மிக முக்கியமான ஒன்றாகும்.

அதுவும் ஏழை எளிய மக்களுக்கு-குடிசை வாழ் மக்களுக்குப் பாதுகாப்பான குடியிருப்புகளை வழங்கி, அவர்கள் நல்வாழ்வில் அக்கறை கொண்டு ஆக்கப்பணிகள் புரிந்து வரும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணிகளை விளக்கிக் கூறுகிறார் அதன் தலைவர் திரு ப. ராமபத்திரன் அவர்கள்.

**கே: தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் எப்போது தோன்றியது? அதன் நோக்கம் என்ன?**

ப: தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் அமைக்கப்பட்டது. வாரியத்தின் நோக்கங்கள்

தற்போதுள்ள குடிசைப் பகுதிகளைத் திட்டமிட்டு அகற்றி அந்தந்தப் பகுதியிலேயே மின்வசதி, குடிநீர் வசதியுடன் மாடிக் குடியிருப்புக் கட்டிக் கொடுத்தல்.

புதிய குடிசைப்பகுதிகள் தோன்றா வண்ணம் பாதுகாத்தல்.

தனிப்பட்டோர் நிலத்திலும், அரசு, மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களிலும் வாழும் குடிசைவாழ் மக்கள் வெளியேற்றப் படும்பொழுது அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல். அதாவது, குடிசைப் பகுதியில் உள்ளவர்களை வெளியேற்றுவதானால் அது குறித்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். அவ்வாறு வெளியேற்றப்படுபவர்களுக்குப் புதிய குடியிருப்புகள் கட்டி முடிக்கப் படுகிற வரையில் தற்காலிக இடவசதி அளிக்கும் பொறுப்பினைத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொள்ளுதல்.

நடைபாதை வாசிகளும், உரிமையின்றிக் கூடாரம் அமைத்துள்ளவர்களும் தங்களுக்கு வசதிக்குறைவையும் இடர்ப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்வது மட்டுமின்றி, நடைபாதைகளில் விபத்து ஏற்படுவதற்கும் காரணமாகின்றனர். இவர்களுக்குப் பிற்காலத்தில் வீட்டு வசதி செய்து தருதல்.

தீ விபத்தால்-வெள்ளத்தால் பாதிக்கப்படும் குடிசைவாழ் மக்களுக்கு உதவியளித்தல்.



**கே: தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை குடிசைப் பகுதிகள் உள்ளன?**

ப: தமிழ்நாட்டில், சென்னையில் 1972ல் நடத்திய சமூகப் பொருளாதார ஆய்வின்படி 1202 குடிசைப்பகுதிகள் இருந்தன. அவற்றில் பல குடிசைப் பகுதிகள் அப்புறப்படுத்தப்பட்டு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மற்றும், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான கோயமுத்தூர், திருச்சி மற்றும் மதுரையில் ஏறத்தாழ 29 குடிசைப் பகுதிகள் உள்ளன. 1981 ல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும்பொழுது குடிசைப் பகுதிகள் பற்றிய ஆய்வும் செய்யப்பட உள்ளது.

**கே: இதுவரையில் எத்தனை குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன?**

ப: இதுவரையில் தமிழ்நாட்டில் 42,292 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. சென்னையில் மட்டும் 31-12-78 முடிய 35,602 குடும்பங்களுக்குக் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**கே: இந்தக் குடியிருப்புகளில் சம்பந்தமில்லாதவர்கள் குடியிருப்பது குறித்து நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கப்படுகின்றனவா?**

ப: தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளில் ஒதுக்கீடு பெறாமல் ஆக்கிரமிப்பு செய்து வசித்து வரும் நபர்களுக்குத் தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடிசைப் பகுதிகள் மாற்று வாரிய (சொத்துக்களின் கட்டுப்பாடு, நிர்வாகம் குறித்த) விதிகளின் 4-வது மற்றும் 5-வது விதிகளின் கீழ் 'ஏ' நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அதற்கு அவரிடமிருந்து ஏதாவது பதில் வரப்பெற்றிருப்பின் அதனைப் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாமல் இருப்பின் 'ஏ' சார்வு நோட்டீஸ் சார்வு செய்த 15 தினங்களுக்குப் பிறகு 'பி' இறுதி ஆணை வழங்கப்படுகிறது. மேற்படி குடியிருப்பு தகுதிவாய்ந்த நபருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆக்கிரமிப்புதாரரை வெளியேற்றி ஒதுக்கீடுதாரர் வசம் ஒப்படைக்கப்படுகிறது. இதுவரை ஏறத்தாழ 2,000 வீடுகள் இவ்வாறு காலி செய்யப்பட்டு ஒதுக்கீடுதாரர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**கே: மேலும் எத்தனை குடியிருப்புகள் கட்டப்பட இருக்கின்றன?**

ப: அதற்கு இதோ, சில புள்ளி விவரங்கள்

| நடப்பில் இருக்கும் திட்டங்கள் | திட்டம் | குடியிருப்பு |
|---|---|---|
| அ. குடிசை அப்புறப் படுத்தும் திட்டம் | 14 | 3916 |
| ஆ. அட்கோ நிதி உதவியினால் | 15 | 4880 |
| மொத்தம் | 29 | 8796 |
| இ. உலக வங்கித் திட்டத்தின் மூலம் அடிப்படை வசதி செய்து தர | 8 | 15,349 |

**கே: சென்னை மாநகரை அழகுபடுத்தும் திட்டம் ஏதேனும் உள்ளதா?**

ப: சென்னையிலுள்ள குடிசைகளை அப்புறப்படுத்தி, அவ்விடங்களில் மாடி வீடுகளைக் கட்டிக் கொடுப்பதன் மூலம் சென்னையிலுள்ள குடிசைகளை ஒழித்து, நல்ல வீடுகள் கட்டி சென்னையை அழகுபடுத்திக்கொண்டு வருகின்றோம். அப்படி கட்டப்பட்ட குடியிருப்புகளில் சுகாதார வசதிகள் செய்து கொடுப்பதுடன், பூங்காக்கள் அமைத்தும், குடியிருக்கும் மக்கள் மகிழ்வுடன் பொழுது போக்குவதற்கு வழி வகைகள் செய்தும் கொடுத்திருக்கிறோம். சென்னை மாநகரை அழகுபடுத்துவதில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பங்கும் சிறப்பானதாகும்.

**கே: புதிய திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?**

ப: வாரியத்தின் சார்பில் பல்வேறு புதிய திட்டங்கள் உள்ளன. அவை:

| | திட்டம் | குடியிருப்பு |
|---|---|---|
| (அ) குடிசை அப்புறப் படுத்தும் திட்டம் | 10 | 5,912 |
| (ஆ) உலக வங்கித் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதி செய்து தரும் திட்டங்கள் | 8 | 2,320 |

**கே: குடியிருப்புகளில் என்னென்ன வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன?**

ப: குடியிருப்புகளில் மக்கள் வசிக்கத்தகுந்த அறை வசதிகளுடன், தனி குளியல் அறை, கழிவிடம், உட்புறச்சாக்கடை, குடிதண்ணீர், மின்சார விளக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவை தவிர, வெளிப்புற, குடிநீர்க் குழாய், சாக்கடை, பொதுக்குழாய், நல்ல சாலை, தெரு விளக்கு முதலிய வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

**கே: வாரியம் ஆற்றும் பணிகள் குறித்து, பிற மாநிலங்கள் பாராட்டுக்கள் தெரிவித்துள்ளனவா?**

ப: இத்திட்டம் மற்ற மாநிலத்தவர்களை மட்டும் அல்லாது வெளிநாட்டவர்களையும் கவர்ந்துள்ளது.

வாரியம் ஆரம்பித்த பின் வருகை தந்து திட்ட விவரம் அறியவும், பகுதிகளைப் பார்வையிடவும் ஆர்வம் காட்டிய முக்கிய மானவர்களில் சிலர் :

| | |
|---|---|
| புதுடில்லி | திட்டக் கமிஷன் உறுப்பினர், மத்திய அரசு வீட்டு வசதி. பொதுப்பணி அமைச்சர், பார்லிமெண்டு திட்டக்குழு உறுப்பினர், மத்திய அரசு ரயில்வே துறை அமைச்சர், ஃபோர்டு ஃபவுண்டேஷனைச் சேர்ந்த திரு. சட்டர்ஜி. |
| மைசூர் மாநிலம்: | நகர வளர்ச்சி வாரியத்தின் தலைவர், நகராட்சி வீட்டு வசதித்துறை அமைச்சர், பெங்களூர் |
| அமெரிக்க நாட்டுத் தூதுவர் | (டெல்லியில் பணியாற்றியவர்) திரு மொய்கால் |
| அரியானா | நிதித்துறை, வீட்டுவசதித்துறை அமைச்சர். |
| பஞ்சாப் | வீட்டு வசதித்துறை அமைச்சர் |
| மேற்கு வங்காளம் | மேற்கு வங்காளச் சட்டமன்ற மதிப்பீட்டுக் குழுத் தலைவரும், உறுப்பினர்களும். |
| குஜராத் | குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு அசோக்பட். |
| உலகவங்கி நிலையத்தைச் சேர்ந்தவர்கள்: | "தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் இந்திய துணைக்கண்டத்திலேயே பல நல்ல பணிகளைச் செய்து, முன்மாதிரியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது" என்று கருத்துத் தெரிவித்துள்ளார்கள். |

வெளிநாடுகளிலிருந்து பார்வையிட்டவர்கள்:

உலக வங்கியின் துணை இயக்குநர், வாஷிங்டன் நகரம், ஜெர்மன் நாடு ஆகியவற்றினைச் சேர்ந்த நகர அமைப்புத் தலைவர்.

சுவீடன் நாட்டில் இயங்கும் சுவாலோஸ், சமூகப்பணி நிறுவனத்தின் தலைவர்.

பிரிட்டன் நாட்டில் ஆக்ஸ்போர்ட் பகுதியைச் சேர்ந்த திரு நைஜில் ஹாரிஸ்.

மாரேஷியஸ் நாட்டின் வீட்டு அமைப்பின் தலைவர், சுவிஸ் நாட்டின் பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த மாணவர் குழு.

சென்னை நகரில் இயங்கும் அமெரிக்க நாட்டின் தூதுவர்.

போலந்து நாட்டின் ஐக்கிய நாட்டுச் சபை வீட்டுவசதி அணியின் தலைவரான ஆஸ்திரேலிய நாட்டினைச் சேர்ந்தவர்கள். சுவிட்சர்லாந்து நாட்டினைச் சேர்ந்தவர்கள்.

அந்தமான் நிகோபார் தீவுப்பகுதிகளைச் சார்ந்த பிஷப் அவர்கள்.

ஜெனிவா நாட்டினைச் சேர்ந்த திரு பாப்.

எதியோப்பியா நாட்டினைச் சேர்ந்த திரு. அப்துல் ரஹ்மான்.

இலங்கை நாட்டின் வீட்டுவசதித் துறையைச் சேர்ந்த திரு சில்வியா.

நியூயார்க்கில் பூடான் நாட்டின் நிரந்தரக் குழுவின் ஆலோசகராகப் பணியாற்றும் திரு. மணி.

பாரிஸ் பல்கலைக் கழக மாணவர் குழு.

**கே: மற்ற மாநிலங்களில் இந்த மாதிரி வாரியங்கள் செயல்படுகின்றனவா?**

ப: தமிழக குடிசை மாற்று வாரியத்தின் பணிகளைப் பார்த்து, மதிப்பிட்டு, கர்நாடக மாநிலத்தில் தனியாக குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆந்திர மாநிலத்தில் இப்படியொரு தனி நிர்வாகத்தை ஆரம்பிப்பதற்கு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம் ஆலோசனைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். குஜராத் மாநிலத்தில் குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆரம்பிக்கப்பட்டுப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. கேரளாவிலும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆக, இப்பணிகளுக்கெல்லாம் முன்மாதிரியாகத் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்கு நாளும் பாடுபட்டு வருகிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**பேட்டி: பி. வி. கிரி**

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய அச்சகம்

**த**மிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கடந்த 8.2.73 முதல் ஓர் அச்சகம் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த வாரியத்திலுள்ள பதிவேடுகள், பாரங்கள் ஆகியவைகளை வெளி அச்சகத்தில் கொடுத்து அச்சடிப்பதைவிட தனியாக ஓர் அச்சகம் ஆரம்பித்து நடத்தினால் வாரியத்தினுடைய சுயதேவையைப் பூர்த்தி செய்வதுடன் ஒரு சில குடிசைவாசிகளுக்கு வேலைவாய்ப்பும் ஏற்படுத்தித் தரலாம் என்ற நோக்கத்துடன் இவ்வச்சகம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான நிதி உதவியைத் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (சிட்கோ) பெறப்பட்டது.

தற்பொழுது இவ்வச்சகத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகிய அலுவலகங்களுக்குத் தேவையான எல்லா விதமான அச்சு வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை முழுவதும் திருப்பி அளிக்கப்பட்டு, தற்பொழுது அச்சகம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சொத்தாக ஆக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த அச்சகத்தை விரிவுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

## (16—4—79 முதல் 30—4—79 முடிய)

### 16—4—79

பதினெட்டு இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட 968 ஊராட்சிகளை உள்ளடக்கி, சிறிய பேருந்துகளையும், பேருந்துகளையும் விடுவதற்காக 476 வழித்தடங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டிப் பள்ளிப் பாடல்நூல்களில் எழுத்துச் சீர்திருத்தம் செயல்படுத்தப்படும். தமிழக அரசின் பாடநூல் நிறுவனம் பள்ளிக் கல்வி மேல்நிலை 2-ஆம் ஆண்டு வகுப்புக்குப் புதிதாக அச்சிடப்படும் நூல்களில் இம்முறை செயல்படுத்தப்படும் என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

### 17—4—79

தமிழ்நாட்டில் 410 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திக்கு 9 நிலையங்கள் அமைப்பது பற்றி மத்திய அரசுக்குத் திட்டங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றிற்கு அனுமதி கிடைத்துள்ளது என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்.

### 18—4—79

சென்னையில் தீ விபத்தைத் தடுக்க நவீன கருவிகள் அமைக்கப்படவுள்ளன. புதிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழகத்தின் மற்ற பகுதிகளுக்குச் செல்லும் விரைவுப் பேருந்துகளையும், அண்டை மாநில நகர்களுக்குச் செல்கின்ற விரைவுப் பேருந்துகளையும் உள்ளடக்கிய திருவள்ளுவர் விரைவுப் போக்குவரத்துக் கழகம் ஒன்று அமைக்கப்படுகிறது என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

### 19—4—79

மதுவிலக்கை அமல் நடத்த புதிதாக நடமாடும் காவல்துறைப் பிரிவு அமைக்கப்படும். 145 காவல்நிலையங்கள் அமைக்கப்படும். இதற்கு 8300 சார்புநிலைக் காவலர்கள் சேர்க்கவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலைக்குப் பயன்படுத்தப்படும் சிறுவர்களுக்குக் கல்வியும், வேலையும் அளிக்கும் திட்டம் உட்பட 5 திட்டங்களை அமைச்சரவை முடிவு செய்திருப்பதாக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

### 20—4—79

தாயகம் திரும்பிய தமிழர்களைப் பாதுகாப்பதிலிருந்து தமிழக அரசு பின்வாங்காது என்று பெங்களூரில் நடந்த தென் மாநில முதல்வர்கள், மறுவாழ்வுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் தெரிவித்தார்.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி, சிறைக் கைதிகளின் தண்டனையைக் குறைக்கத் தமிழ்நாடு அரசு பரிசீலித்து வருவதாகச் சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர் திரு எம். ஏ. ஜெயவேலு அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

### 21—4—79

கிராமத் தொழில்கள் வளர அனைத்து உதவிகளையும் அரசு செய்யும், நடப்பு ஆண்டில் மட்டும் அரசின் திட்டங்கள் காரணமாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

மீனவர்களுக்கு ரூ. 10 ஆயிரம் மானியத்தில் நவீன படகுகள் தவணை முறையில் வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### 22—4—79

வெளிநாட்டில் தொழில் நடத்திக்கொண்டிருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவர்கள் மீண்டும் தமிழகம் வர விரும்பினால் தமிழக அரசு அவர்களுக்கு உரிய இடம் அளித்து வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுக்கும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தெரிவித்துள்ளார்.

### 23—4—79

சென்னையில் வணிகவரி அலுவலகத்திற்கு ரூ. 75 இலட்சத்தில் சொந்தக் கட்டடம் ஒன்று கட்டப்படும் என்ற தகவலை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### 24—4—79

விதவையை மணம் புரிந்து கொள்ள முன் வருவோருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்று மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் மேலவையில் தெரிவித்தார்.

### 25—4—79

புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு கோடியே 9 இலட்சத்து 77 ஆயிரத்து 470 கிலோ அரிசி டிசம்பர், ஜனவரி மாதங்களில் வழங்கப்பட்டதாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

உணவின்றிப் பசியால் கிராம மக்கள் வாடுகின்ற நிலையை மாற்றியமைக்கவே கிராம மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம். கிராமங்களில் தொடங்கும் தொழில்களுக்கு வரிச் சலுகை தருவது பற்றியும் முடிவெடுக்க இருக்கிறோம் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் மேலவையில் தெரிவித்தார்.

### 26—4—79

அரசுக் கட்டடங்கள் மற்றும் பொது இடங்களுக்கு உயிரோடு இருப்பவர்களின் பெயரை வைக்கத் தடை செய்வதற்கான மசோதா ஒன்றைச் சட்டமன்றத்தில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் தாக்கல் செய்தார்.

உடல் ஊனமுற்றவர்களுக்குத் தொழிற்பயிற்சி தர இரண்டு மாவட்டங்களில் தொழிற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

### 27—4—79

தமிழ் இசைக் கலாச்சாரப் பல்கலைக் கழகம் அமைப்பது பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலோசித்து வருகிறார் என்று மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பள்ளிக்கூட ஆயாக்களுக்குச் சம்பள உயர்வு அளிப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

### 28—4—79

பசுக்களை இறைச்சிக்காகக் கொல்லுவதற்குத் தடை செய்யவும் மற்றும் பிற மாநிலங்களுக்கு வதை செய்ய கொண்டு செல்வதைத் தடுக்கவும் வகை செய்யும் சட்ட மசோதாவை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

### 29—4—79

நெசவாளர்கள் வருமானம் குறைந்தபட்சம் ரூ. 200 முதல் 250 வரை உயர 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல திட்டங்கள் ரூ. 68 கோடிக்குப் போடப்பட்டுள்ளது என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மின்சார விபத்தால் உயிரிழக்கும் பொது மக்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் இழப்பீடு கொடுக்கப்படும் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

### 30—4—79


ஓட்டல் பண்டங்களின் விலையினைக் குறைக்க மத்திய அரசின் ஒப்புதலோடு விரைவில் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வருவது பற்றி அரசு ஆலோசனை செய்து வருகிறது என்று மாண்புமிகு உணவு அமைச்சர் திரு எட்மண்ட் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

# சுற்றுலாப் பெருமை

பழந்தமிழரின் பண்பாட்டுப் பெருமைகளை விளக்கும் வழிபாட்டுத் தலங்களும், உயர்ந்து நிமிர்ந்த மலைச் சிகரங்களின் இடையே எழிலோடு விளங்கும் உடல் நலம் பேணும் மலைத் தலங்களும், நெஞ்சைக் கவரும் கடற்கரைப் பகுதிகளும், பிற இடங்களும் நம் தமிழ்நாட்டின் சிறப்பான சுற்றுலாச் செல்வங்களாகும். ''இங்கு இல்லாதன வேறு எங்கும் இல்லை'' என்று சொல்லும் வண்ணம், இயற்கை நலங்களனைத்தையும் ஒருங்கே பெற்று, சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன் தரும் நாடாகத் தமிழகம் விளங்குகிறது. நீண்ட சாலை வசதிகளும், நாளும் வளர்ந்து வரும் போக்குவரத்து வாய்ப்புக்களும் தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கு வழி வகுக்கின்றன.

தலைமைச் செயலகத்தின், பொதுத் துறையுடன் சுற்றுலாத் துறையின் இயக்ககமும் இணைந்து செயல்பட்டு வருகிறது. மதுரை, உதகை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, சேலம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த அலுவலகங்கள், பயணிகளுக்கு சுற்றுலாத் தகவல்களை அளித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதுடன் சுற்றுலா மேம்பாட்டிற்கான விளம்பரப் பணி, வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டு இயங்கி வருகின்றன. மதுரை, திருச்சிராப்பள்ளி, இராமேசுவரம், கோயம்புத்தூர் தொடர் வண்டி நிலையங்களிலும், கொடைக்கானலிலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் செயற்படுகின்றன. சென்னை மத்திய தொடர் வண்டி நிலையத்திலும், திருநெல்வேலி தொடர் வண்டி நிலையத்திலும், மீனம்பாக்கம் விமான நிலையத்திலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் விரைவில் தொடங்கப்படவிருக்கின்றன. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்யத்தக்க வகையில், புது டெல்லியிலும் ஒரு சுற்றுலாத் தகவல் நிலையம் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிதம்பரம், பூம்புகார் போன்ற சுற்றுலாப் பயணிகளை கவரும் இடங்களோடு பிச்சாவரத்தையும் ஒரு சிறந்த சுற்றுலா மையமாகவும், விடுமுறை ஓய்வகமாகவும் அமைக்கும் திட்டமும் ஏற்கப் பெற்றிருப்பதால் சிதம்பரத்தில் ஒரு சுற்றுலா அலுவலர், பணியாளர்கள் கொண்ட சுற்றுலா அலுவலகம் ஒன்றை நடப்பு ஆண்டில் அமைப்பதென அரசு முடிவு எடுத்துள்ளது.




**இளைஞர் விடுதி (Youth Hostel) :**

குறைந்த செலவில் இளைஞர்கட்குத் தங்குமிட வசதி செய்ய 1975 ஜூலை முதல் ஒரு இளைஞர் விடுதி, அதன் உள் நிர்வாகக் குழுவின் கருத்துப்படி மத்திய அரசின் கருத்திற்கிசைய இலாப நட்டமற்ற அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது.


**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவி:**

1971 ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம், வணிகக் கலப்புக் கொண்ட வளர்ச்சிப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூபாய் இரண்டு கோடியாகும். இதில், இதுவரை, ரூபாய் 179.25 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. 1979–80 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 15 இலட்சம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 1978–79 ஆம் ஆண்டில் ரூபாய் 24.25 இலட்சம் அரசால் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1979–80 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 15 இலட்சம் கடனாக அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுலா மாளிகைகள்:**


தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உதகையில் படகுக் குழாம் ஒன்றை நடத்தி வருவதுடன் பின்வரும் இடங்களில் சுற்றுலா விடுதிகளையும் நடத்தி வருகிறது :—

1. உதகை.
2. திருச்சிராப்பள்ளி.
3. மதுரை.
4. கன்னியாகுமரி.
5. திருச்செந்தூர்.
6. கொடைக்கானல்.
7. ஏர்க்காடு.
8. ஒகேனக்கல்.
9. இராமேசுவரம்.
10. சிதம்பரம்.
11. கன்னியாகுமரி-கேப்விடுதி.
12. மாமல்லபுரம்-கடற்கரை வளாகம்.
13. தஞ்சாவூர்-இராசா ஓய்வு விடுதி.



சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் இடங்களிலும் சுற்றுலா விடுதிகளை விரைவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது :—

1. கோயம்புத்தூர்.
2. குற்றாலம்.
3. பிச்சாவரம்.
4. முதுமலை.




**சாலை ஓர விடுதிகள்:**

இம் மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலைகளில் நூறு கிலோ மீட்டருக்கு ஒரு சாலை ஓரத் தங்கும் விடுதி வீதம் (Motels) ஏற்படுத்துவது இத்துறையின் குறிக்கோளாகும். இதன் முதற்படியாக, வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையில், சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் ''மரகதம் சாலை ஓரத் தங்கும் விடுதி'' ரூபாய் 7.85 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள் முதல் திறக்கப்பட்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சென்னை-திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலையில் உளுந்தூர்ப்பேட்டையில் பிறிதொரு சாலை ஓர விடுதி கட்டப்பட்டு, கட்டிடப் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. விரைவில் இது செயல்படத் தொடங்கும்.

**போக்குவரத்துப் பிரிவு :**


தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் போக்குவரத்துப் பிரிவு (Transport Wing) 2 சொகுசு (Luxury Coaches) ப் பேருந்துகளுடன், 1972 ஏப்ரல் மாதம் முதல் செயல்படத் தொடங்கியது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் சுமார் ரூ. 22 இலட்சம் மதிப்புள்ள பத்து சொகுசுப் பேருந்துகள் பயணிகளுக்கென இப்போது இயங்கி வருகின்றன. இப்பேருந்துகள், குறிப்பிட்ட சுற்றுலாப் பயணங்களுக்கும் (Conducted Tours) ஒப்பந்தப் பயணங்களுக்கும் (Package Tours) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தனியார் சுற்றுப் பயணங்களுக்கும் பொது மக்களின் தேவைகளுக்கும் துணை புரியும் வகையில் இப்பேருந்துகள் வாடகைக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

**பூம்புகாரும் கட்ட பொம்மன் நினைவுக் கோட்டையும்:**

பூம்புகாரையும் பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்ட பொம்மன் நினைவுக் கோட்டையையும் சுற்றுலாத் துறை தனது பொறுப்பில் ஏற்று நடத்தி வருகின்றது. மாநிலம் தழுவிய ஏராளமான சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான முயற்சிகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1979–80 ஆம் ஆண்டில் ரூ. 3 இலட்சம் செலவில் பூம்புகார் வளாகத்திற்குட்பட்ட (Poompuhar Complex) சாலைகளைச் செப்பனிட்டு மேம்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில் மேல் நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவை தவிர, சுற்றுலாப் பயணிகள் தங்குமிட வசதிக்காகப் பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள, ''சங்கு'', ''சிப்பி'' வடிவக் குடில்கள், குறைகள் நிவர்த்திக்கப்பட்டு, விரைவில் திறக்கப்பட்டுச் செயல்பட உள்ளன. சுற்று

லாப் பயணிகளை மேலும் கவரும் வகையில் கட்டபொம்மன் நினைவுக் கோட்டையை வசதிகளோடு மேலும் அழகுபடுத்திட வும் திட்டமிடப்பட்டுள்ளது.



**இராமேசுவரம் மேம்பாடு:**

இந்தியப் பெருநாட்டின் வழிபாட்டுத் தலங்களுள் முதன்மை பெற்று விளங்கும் இராமேசுவரம், சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவிற்கு ஈர்த்து வருகின்றது. ஆகவே, இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும், சமயப் பயணிகளுக்கும் தக்க வசதி செய்யும் வகையில் சுமார் ரூ. 3 இலட்சம் செலவில் ஓய்வறை களையும், கடற்கரையில் உடை மாற்று அறைகளையும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இராமேசுவரத்தை இந்தியாவின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக்கும் விரிவான திட்டம் ஒன்றும் அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.



**உதகமண்டலம்:**

உதகமண்டல ஏரிப் பகுதியின் அழகிற்கு மேலும் மெரு கூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னையில் உள்ள சிறந்த கட்டிடக்கலை நிறுவனம் ஒன்றால் இந்த ஏரியை அழகுபடுத்துவதற்கான பெருந்திட்டம் (Master Plan) தயாரிக்கப்பட்டு ரூ. 16 இலட்சம் செலவில் ஏரிப் பகுதியை மேம்படுத்தும் பணியினை அரசு மேற்கொண்டுள்ளது.

பூம்புகாரையும் பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டையையும் சுற்றுலாத் துறை தனது பொறுப்பில் ஏற்று நடத்தி வருகின்றது. மாநிலம் தழுவிய ஏராளமான சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கான முயற்சிகள் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏர்க்காட்டிலுள்ள '' சீமாட்டி இருக்கை '' (Lady's Seat) என்னும் இடத்தில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு தொலை நோக்கி இல்லம் கட்டுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தொலை நோக்கியின் வழியாக, வண்ண விளக்கொளியில், மின்னி மிளிரும் சேலம் நகரின் தோற்றத்தைக் கண்டு மகிழலாம்.

கொடைக்கானல் :

கொடைக்கானல் ஏரியையும் மேம்படுத்தி, அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், அழகுபடுத்தச் செலவு மதிப்பீட்டுடன் திட்ட அறிக்கை ஒன்று தயாரித்துத் தந்திட மற்றொரு கட்டிடக் கலை நிறுவனம் அமர்த்தப்பட்டது. அந்நிறுவனம், தோராயமாக ரூ. 25,64,100 செலவு மதிப்பீட்டில் பல்வேறு கட்டங்களில் செயலாக்கத்தக்க பல வகையான திட்டங்களை செலவு மதிப்பீட்டு விவர அறிக்கையுடன் தந்துள்ளது. ஏரியை அழகு படுத்தும் பணியின் முதற் கட்டமாக, 1977–78 ஆம் ஆண்டில் சிறிய பணிகளுக்காக ரூ. 58,100 வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டமாக, கொடைக்கானலில் ரூ. 2.03 இலட்சம் செலவில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு சிற்றுண்டிச் சாலை கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், கொடைக்கானலில் '' கோக்கர்ஸ் வாக் '' (Coaker's Walk) என்னும் இடத்திலும், '' குறிஞ்சி ஆண்டவர் கோயில் '' அருகிலும் இரண்டு தொலை நோக்கி இல்லங்கள் ரூ. 1,60,000 செலவில் அமைக்கப்பட்டுள்ளன, கொடைக் கானல் செல்லும் சுற்றுலாப் பயணிகள், இத்தொலை நோக்கிகளின் மூலம் வடக்கில் பழனி ஆண்டவர் கோயிலின் அழகுத் தோற்றத்தையும், தெற்கில் வைகை அணையின் வனப்பான காட்சியையும் கண்டு மகிழலாம்.

இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதியை அதிகரிக்கும் வகையில் சிறு தொழில் கழகத்திற்கு சொந்தமான சுமார் 1.54 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் தற்போது பழுதடைந்த நிலையிலுள்ள கட்டிடத்தை வாங்கி அங்கு 96 படுக்கைகள் கொண்ட துயில்கூட விடுதி ஒன்றை (Dormitory) அமைப்பதற்காக நடப்பாண்டில் ரூ. 7·03 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாமல்லபுரம் :

குடவரைக் கோவில்கள், பாறைச் சிற்பங்கள், நீண்ட பெருங்கடற்கரை, ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற சூழ்நிலை, முதலிய நலங்களால் உலகத்தின் உன்னதச் சுற்றுலாத் தலமாக மாமல்லபுரம் திகழ்கின்றது.

மத்திய அரசின் பரிந்துரைக்கேற்ப மாமல்லபுர வளர்ச்சிக்கான செலவு மதிப்பீடுகளுடன் உரிய திட்டங்களைத் தயாரித்திட கட்டிடக்கலை நிறுவனம் ஒன்று அமர்த்தப்பட்டது. அந்நிறுவனம் தயாரித்து வழங்கிய திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுதவிர, இப்பகுதியின் இயற்கையான சூழ்நிலையையும் இயற்கை அழகையும் உள்ளவாறு பேணிப் பாதுகாக்கும் நோக்கத்தில், ரூபாய் 1,28,185 செலவில் 33.95 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது. மாமல்லபுரத்திற்கு வருகின்ற குறைந்த வருவாய்ப் பிரிவு சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன்படும் வகையில், அடிப்படை வசதிகளைக் கொண்ட ஒய்வுக் கூடம் (Rest shed) ஒன்று கட்ட 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 1,81,814 வழங்கப்பட்டுள்ளது. 1979–80 ஆம் ஆண்டில், மாமல்லபுரத்தில் '' தானே சமைத்து உண்டு-உலவி மகிழும் '' (Self catering Holiday) வகைப்பட்ட சுற்றுலாப் பயணங்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ. 3.50 இலட்சம் செலவில் முகாமிடங்களையும் (Camping sites) உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்திய சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்வதற்குத் தமிழ்நாட்டில் இரு இடங்களைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க, மாமல்லபுரத்தையும், கன்னியாகுமரியையும் இவ்வரசு பரிந்துரை செய்துள்ளது.

கன்னியாகுமரி :

இந்திய துணைக்கண்டத்தின் தென்கோடி முனையாக கன்னியாகுமரி திகழ்கிறது. மூன்று கடல்கள் முத்தமிடும் குமரி முனையில்தான் ஒரே நேரத்தில் கதிரவன் மறைவதையும், பால்நிலவு எழுவதையும் காணும் அரிய வாய்ப்பு அமைந்துள்ளது.


அனைத்து மாநிலங்களிலிருந்தும் குமரியம்மன் ஆலைய வழிபாட்டிற்கு வந்து செல்லுகின்றனர். நீலத் திரை கடல் ஓரத்தில் நின்று நித்தம் தவம் செய்யும் குமரி என்று பாராட்டப்படும் எல்லையும் இதுதான்.

கடல் பாறையின் மேல் கலையழகு மிளிர அமைக்கப் பட்டுள்ள விவேகானந்தர் நினைவகமும் சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவிற்கு ஈர்த்து வருகின்றது. சுமார் பத்தாயிரம் அயல்நாட்டு சுற்றுலாப்பயணிகளும், ஐந்து இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் கன்னியாகுமரிக்கு ஆண்டுதோறும் வருகை தருகின்றனர். கன்னியாகுமரியைச் சிறந்த சுற்றுலா மையமாக மேம்படுத்த வேண்டும் என்று ஆறாவது ஐந்தாண்டு வரைவுத் திட்டத்தில் 75 இலட்சம் ரூபாய் செலவில் திட்டங்களை நிறைவேற்றிட மத்திய அரசுக்கு இவ்வரசு பரிந்துரைத்துள்ளது.

குற்றாலம் :

விடுமுறைப் பயணிகளுக்கும், உடல் நலம் நாடிவரும் பயணிகளுக்கும் மகிழ்வூட்டும் ஒப்பிலாச் சுற்றுலாத் தலம் என்று புகழப்படுவது குற்றாலம். ஆண்டுதோறும் பெருகிவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையால் தங்குமிட நெருக்கடி இங்கு வளர்ந்து கொண்டே வருகிறது. எனவே, குறைந்த வருவாய்ப் பிரிவு சுற்றுலாப் பயணிகளுக்கும், சிக்கனச் சுற்றுலாப் பயணிகளுக்கும் பயன்படும் வகையில் ரூ. 7.97 இலட்சம் செலவில் 100 படுக்கை வசதிகளைக் கொண்ட துயிலகவிடுதி (Dormitory) ஒன்று கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.





ஏலகிரிமலை :

ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் சிறப்புமிக்க இடம் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலை. சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதிகள் இங்கு எதுவும் இதுவரை இல்லை. ஆகவே, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக 1978—79 ஆம் ஆண்டில் ரூ. 1.05 இலட்சம் செலவில் நான்கு தன்னிறைவு அமைப்புகள் கொண்ட அறைகளுடன் கூடிய கூடம் ஒன்று கட்டப்பட்டு நிறைவுறும் நிலையில் உள்ளது.

பிச்சாவரம் :

தொன்மை வாய்ந்த வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றான சிதம்பரத்திற்குக் கிழக்கே 13 கிலோ மீட்டர் தொலைவில் பிச்சாவரம் உள்ளது. இயற்கையின் எழில் குலுங்கும் சோழ மண்டலக் கரையில், சுமார் 3,000 ஏக்கர் பரப்பில் அடர்ந்து வளர்ந்த புதுவிதமான மரக்கூட்டங்களுக்கிடையே சிறு சிறு தீவு களாய் அமைந்துள்ளது. படகு விடுவதற்கும், மீன் பிடிப்பதற்கும், நீர்ச்சறுக்காட்டத்திற்கும், கடல் அலையாடலுக்கும் பொழுது போக்கு விளையாட்டுகளுக்கும், விளையாட்டுப் போட்டி களுக்கும், பந்தயங்களுக்கும் ஏற்ற ஒரு சிறந்த இடமாகவும் இது அமைந்துள்ளது. காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகர் ஏரியில் உள்ளது போல படகு வீடுகளையும் இங்கு அமைக்கலாம்.

விருந்தோம்பல் :

பயண எழுத்தாளர்கள், பயண முகவர்கள் ஆகியோரை வர வேற்று விருந்தோம்புவது சுற்றுலா மேம்பாட்டிற்கு ஏற்றம் தரும் பணியாதலின் இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிற்கு வருகின்ற வெளிநாட்டுப் பயண முகவர்களையும், பயண எழுத்தாளர்களையும் நம்முடைய மாநிலப் பயணமுகவர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரையும் தமிழகச் சுற்றுப் பயணத்திற்கு சுற்றுலாத் துறை ஆவன செய்துவருகிறது. இத்தகைய விருந்தோம்பல்களினால் தங்கள் நாட்டுச் செய்தித் தாள்கள், பிற இதழ்கள் ஆகியவற்றில் தமிழகத்தைப் பற்றியும், தமிழ்நாட்டுச் சுற்றுலா வளங்களின் தனிச் சிறப்புகள் பற்றியும் விரிவாக எழுதிப் பலரும் அறிந்து நம் நாட்டுக்கு வர அவர்கள் வழிவகை செய்கின்றனர்.

இந்திய அரசின் பரிந்துரை பெற்று அமெரிக்கப் பயண எழுத்தாளர்கள் கழகத்தைச் சார்ந்த புகழ்மிக்க பயண எழுத் தாளர்கள், நிழற்படக் கலைஞர்கள், திரைப்படத் தயாரிப் பாளர்கள், செய்தித்தாள் நிருபர்கள் ஆகிய அறுபது பேர் களடங்கிய குழுவினர் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் புதுடெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டபின் தமிழகம் வந்திருந்தனர். தமிழ்நாடு சுற்றுலாத் துறை அவர்களை வரவேற்று மகிழ்ந்தது. தமிழகத்தின் விருந்தோம்பல் பண்பையும் அன்பளிப்புகளையும் அவர்கள் பெரிதும் பாராட்டிச் சென்றனர்.

கண்ணுக்கும் கருத்துக்கும் கவர்ச்சியூட்டுவதோடு நாட்டின் கருவூலத்திற்குப் பொருள் வருவாயினையும் சேர்க்கின்ற சுற்று லாத்துறையில், மேலும் பல திட்டங்களை இணைத்துச் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்த அரசு கருதுகிறது. எல்லாத் தரப் பினரும் குறிப்பாக எளிய நிலையினரும் ஓய்வை நன்கு நுகரவும், நெஞ்சுக்கு நிம்மதி பெறவும், உணர்வுகளால் உயர்வடையவும், தாயகத்தின் வரலாற்றுப் பெருமைகளையும் கலைக்கூறுகளை யும் அறிந்து மகிழவும் இத்துறை செயல்பட்டு வருகிறது





# கோழி வளர்ப்பு: ஓர் ஆராய்ச்சி


—டாக்டர்
சி. ஏ. கோபாலகிருஷ்ணன்
பேராசிரியர்—தலைவர்,
கால்நடை பராமரிப்புத் துறை,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோவை-3.


கோழிப் பண்ணைக்குத் தேர்ந்தெடுக் கப்பட வேண்டிய கலப்பினக் கோழி ரகங் கள், அபரிதமாக முட்டையிடும் வகையைச் சேர்ந்தவையாகவும், கோழி, விவசாயிகளின் மத்தியில்பிரசித்திவாய்ந்தவையாகவும் இருக்க வேண்டும். அதிக முட்டையிடும் திறன் கொண்ட வீரிய கோழிக் குஞ்சுகளையே வாங்க வேண்டும்.

மலிவாகக் கிடைக்கக் கூடிய குஞ்சுகளை வாங்குவது கூடாது.

வாங்கும் வீரிய இனக் கோழிக் குஞ்சு களும் ஒரு நாள் வயதுடையதும், ராணிகட், மேரக்ஸ் போன்ற நோய்களுக்குத் தடுப்பூசி போட்டும் வாங்க வேண்டும்.

கோழிப் பண்ணையை ஆரம்பிக்க, ஒரு நாள் கோழி பெட்டைக் குஞ்சுகளைத் தரு வித்து வளர்ப்பது இலாபகரமானது ஆகும்.

முட்டையிடும் பருவத்தில் 20 வார வய தில் வாங்கி வளர்ப்பது இலாபகரமானதல்ல.

20 வார வயது கோழியின் விலை ரூ 22 முதல் ரூ. 24 ஆகும். ஒரு நாள் குஞ்சு பருவத் தில் இருந்து 20 வார வயது வரையில் குஞ்சு கள் இறப்பு 10 சதத்திற்குமேல் இருக்கக் கூடாது.



முட்டையிட ஆரம்பித்ததும் 20 வார வயது முதல் 72 வார வயது வரையில் இழப்பு 12 சதம் மேல் இருக்கக்கூடாது.


ஒருநாள் வயது கோழிக் குஞ்சு 20 வார வயதை அடையும் வரையில் உட்கொள்ளும் தீவனம் பத்துக் கிலோ மட்டுமே ஆகும். 20 வார வயதிலிருந்து 72 வார வயது வரையில் உட்கொள்ளும் தீவனம் ஒரு கோழிக்கு 42 கிலோ மட்டுமே ஆகும்.

ஒரு முட்டை உற்பத்தி செய்ய கோழி உட்கொள்ளும் தீவனம் 200 கிராம் ஆகும்.

ஒரு கோழி ஒரு நாளைக்கு உட்கொள் ளும் தீவனம் 100 முதல் 120 கிராம் ஆகும்.

ஒரு கோழி ஒரு நாளைக்கு உட்கொள் ளும் தண்ணீர் 250-300 மில்லி லிட்டர் ஆகும்.

40 கோழிகள் மூலம் ஒரு ஆண்டில் ஒரு டன் எரு ஆழ்குப்பை வளர்ப்பு மூலம் கிடைக் கும்.



# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தன்னிகரற்ற பணிகள்



**எஸ். ஆர். இராதா, எம்.எல்.ஏ.**
**தலைவர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்**



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எட்டு ஆண்டுக் காலமாகப் பணியாற்றி வருகிறது. தமிழகத்தின் சுற்றுலாச் செல்வங்களை வியாபார நோக்குடன் பயன்படுத்துவதற்காக 1971 ஆம் ஆண்டு ஜூலை முதல் நாளன்று இக்கழகம் அமைக்கப்பட்டது. ஒரு மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சியடைய வேண்டுமானால் அதற்கான போக்குவரத்து வசதிகள், பயணிகளுக்கான தங்குமிடங்கள், சுற்றுலாச் சிறப்பு மிக்க இடங்கள் பற்றிய விளம்பரங்கள் ஆகியவைகளை விருத்தியாக்குவது அடித்தளத் தேவையாகும். இத்தேவைகளை நிறைவேற்றித் தருவதையே தனது முக்கிய நோக்கமாகக் கொண்டு இக்கழகம் அமைக்கப்பட்டது. போக்குவரத்தும், தங்கும் இடங்களும் தலையாய வசதிகளாகக் கருதப்படுவதால் இக்கழகம் இந்த இரு வசதிகளைப் பெருக்கி வளர்ப்பதில் பெரிதும் கவனம் செலுத்தி வருகிறது.

**சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள்:**

தொடக்கத்தில் திருச்சி, மதுரை, திருச்செந்தூர், உதகமண்டலம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அரசு நடத்தி வந்த ஆறு சுற்றுலா மாளிகைகளின் நிர்வாகத்தையும் இக்கழகம் மேற்கொண்டது. அப்பொழுது இந்த மாளிகைகளில் இருந்த மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 253 ஆகும். அதற்குப் பின்னர் இந்த மாளிகைகள் விரிவு படுத்தப்பட்டுப் புதிய இணைப்புக் கட்டடங்கள் கட்டப்பெற்றன. அத்துடன் ஒகேனக்கல், ஏர்க்காடு, கொடைக்கானல், இராமேஸ்வரம், மாமல்லபுரம், சிதம்பரம், தஞ்சாவூர், ராணிப்பேட்டை ஆகிய ஊர்களில் புதிதாகச் சுற்றுலா மாளிகைகள் நிர்மாணிக்கப்பட்டன. இதனால் தற்போதுள்ள சுற்றுலா விடுதிகளில் உள்ள மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 946 ஆக உயர்ந்துள்ளது. மற்றும் எல்லாச் சுற்றுலா மாளிகைகளிலும் உணவு விடுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

உதக மண்டலத்தில் அரசு நடத்தி வந்த, படகுத் துறையையும் இக் கழகம் 1973 ஜூன் திங்களில் ஏற்றுக் கொண்டு, அதனைச் சிறந்த முறையில் வியாபார நோக்குடன் நடத்தி வருகிறது. மேலும் புதிதாக 14 படகுகளும், குழந்தைகள் ரயில் ஒன்றும் வாங்கப்பட்டுள்ளன.

கொடைக்கானலில் தொலை நோக்கி நிலையம் ஒன்றினை 1977 அக்டோபர் திங்களில் 1.6 இலட்சம் ரூபாய் செலவில் இக் கழகம் அமைத்தது. கொடைக்கானலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் சிறப்புடைய அம்சங்களில் இதுவும் ஒன்றாகும்.

நெடுந்தூரம் மோட்டார் வண்டிகளில் பயணம் செய்பவர்களுக்கு, இடையில் சிறிதுநேரம் எங்கேனும் தங்கி, ஓய்வெடுக்கத் தோன்றுமல்லவா? இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இராணிப் பேட்டையில் ரூ. 7.85 இலட்சம் செலவில் ஒரு பெருவழி ஓய்வு விடுதி (Motel) அண்மையில் திறந்துள்ளது. இதுபோன்றதொரு விடுதி உளுந்தூர்ப் பேட்டையில் 3.80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு முடிவடையும் தறுவாயில் உள்ளது. உதகைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதால் அங்குள்ள சுற்றுலா மாளிகைகள் தவிர ரூபாய் 5 இலட்சம் செலவிம் 8 உல்லாசக் குடில்களை (Cottages) இக்கழகம் கட்டியுள்ளது. மேலும் மதுரையில் அசைவ உணவு விடுதி ஒன்றையும், பலர் ஒரு சேரத் தங்குவதற்கான கூடத்தினையும் (Dormitory Hall) அண்மையில் கட்டியுள்ளது.

முக்கியமான சுற்றுலா இடங்களில், பயணிகளுக்குத் தேவையான சிறுசிறு வசதிகளைச் செய்து தருவதிலும் இக்கழகம் தன் கவனத்தைச் செலுத்தி வருகிறது. மாமல்லபுரத்தில் சுற்றுலா உதவி நிலையங்கள் அமைக்கப்பெற்று அங்கு குளிர்பானங்கள், பெட்ரோல் மற்றும் கார்களுக்குத் தேவைப்படும் சிறு கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந் நிலையங்கள் இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் உதவியாக உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான நவீன வசதியுள்ள 10 பேருந்துகள் உள்ளன.

**குறுகிய காலப் பயணங்கள்: (Conducted Tours)**

சென்னை நகரின் எழில் மிகு இடங்களைக் கண்டுகளிக்க வெள்ளிக்கிழமை தவிர மற்ற நாட்களில் சுற்றுலாப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காலநேரம், மாலை 2 மணி முதல் 6.30 மணி வரையாகும். இதற்குச் செலுத்த வேண்டிய கட்டணம் ஒருவருக்கு ரூ.15- ஆகும்.

இதுபோல், சென்னையிலிருந்து மாமல்லபுரம் சென்றுவர காலை 7.15 மணியிலிருந்து மாலை 1 மணி என்கிற அளவில் ஒருவருக்கு ரூ. 20 வீதம் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை மேற்காணும் சென்னை நகரப் பயணத்துடன் ஒரே நாளில் இணைத்துச் செல்வதற்கு ஒருவருக்கு ரூபாய் 30- வீதமே கட்டணம் சலுகையாகப் பெறப்படுகிறது.

அடுத்து குறுகிய காலப் பயணத்தின் வரிசையில் இடம்பெறுவது சென்னையிலிருந்து புறப்பட்டு காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்று வருவதாகும். இதன் காலநேரம் காலை 7 மணி முதல் மாலை 5.30மணி வரை, எல்லா நாட்களிலும் மேற்கொள்ளப்படும் இதற்கான கட்டணம் ஒருவருக்கு ரூ. 30- ஆகும்.

**குழுச்சுற்றுலா: (Package Tour)**

இது ஒரு குறிப்பிட்ட கால அளவில் மேற்கொள்ளப்படுவதாகும்.

**(1) தமிழ்நாடு தழுவிய பயணம்**

**பயண காலம்: 7 நாட்கள்**

இப்பயணம் ஒவ்வொரு சனிக்கிழமையும் புறப்பட்டு அடுத்து வரும் வெள்ளிக்கிழமை திரும்புவதாகும்.

**சுற்றிவரும் இடங்கள்:**

சென்னை - பாண்டிச்சேரி - சிதம்பரம் - கும்பகோணம் - தஞ்சாவூர் - மண்டபம் - ராமேஸ்வரம் - திருச்செந்தூர் - கன்னியாகுமரி - குற்றாலம் - மதுரை - ஸ்ரீரங்கம் - திருச்சி - உளுந்தூர்ப்பேட்டை - சென்னை.

**கட்டணம்:** ரூ. 390- (பொது தங்குமிடம்)

(இது, முதலில் வரும் 15 பயணிகளுக்கு மட்டுமே அளிக்கப்படுவதாகும்) இது தவிர, ரூ.490- கட்டணமாகச் செலுத்துபவர்களுக்குத் தனி அறை வசதிகளும் செய்து தரப்படும்.

## முகப்பில் இராமேசுவரம் திருக்கோயிலின் பிரகாரம்

இராமேசுவரம் திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரத்திற்கு சொக்கட்டான் மண்டபம் என்று பெயர். இந்தப் பிரகாரம் போன்று உலகில் வேறு எங்கும் இல்லை. உலகிலேயே நீண்ட 'நடை' என்று சொல்லப்படுகிறது. மொத்த நீளம் ¾ மைல் அதாவது சுமார் 3850 அடி.

இப்பிரகாரம் தமிழகத்தின் கட்டடக் கலை உயர்வுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இப்பிரகாரம் இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதியால் கட்டப்பட்டது. இப்பிரகாரத்தின் பணிகள் 1740-ஆம் ஆண்டில் தொடங்கி 30 ஆண்டுகள் நடைபெற்றன. இதில் 1212 தூண்கள் வரிசையாக நூல் அளவு கூட பிசகாமல் அழகாக நிறுத்தப்பட்டிருப்பது கண்கவர் காட்சியாகும்.

சுற்றிலும் கடல்சூழ்ந்த தீவில்-கற்களும் பாறைகளும் கிடைக்காத இடத்தில்-போக்குவரத்து வசதிகள் எளிதாக அமையாத காலத்தில்-இவ்வளவு பிரம்மாண்டமான பிரகாரத்தை அமைந்திருப்பது வியந்து வியந்து பாராட்டிப் பெருமை கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

**(2) தென்னிந்தியப் பயணம்**

**பயண காலம்:**—7 நாட்கள்.

இப்பயணமும் ஒவ்வொரு சனிக்கிழமையும் புறப்பட்டு அடுந்து வரும் வெள்ளிக்கிழமை திரும்புவதாகும்.

**சுற்றிவரும் இடங்கள்**

சென்னை - திருவண்ணாமலை ஒகேனக்கல் - ஊட்டி - முதுமலை வனவிலங்குப் புகலிடம் - மைசூர் பிருந்தாவனம் தோட்டம் - ஸ்ரீரங்கப்பட்டணம் - பெங்களூர் - திருப்பதி-திருமலை - திருத்தணி-காஞ்சிபுரம் - சென்னை.

**கட்டணம்:** ரூ. 450- (பொது தங்கு வசதி)

(இது, முதலில் வரும் 15 பயணிகளுக்கு மட்டுமே அளிக்கப்படுவதாகும்) இது தவிர, ரூ. 550- கட்டணமாகச் செலுத்துபவர்களுக்குத் தனி அறை வசதிகளும் செய்து தரப்படும்.

(மேற்காணும் தனி நபர் கட்டணத்தில் திருப்பதியில் சிறப்பு தரிசனத்திற்காக ரூ. 25- சேர்க்கப் பட்டுள்ளது).

**சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பிற பணிகள்:**

சென்னையில் அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியினையும், மதுரையில் சித்திரை சுற்றுலாப் பொருட்காட்சியினையும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒவ்வொரு வருடமும் சிறப்புற நடத்தி வருகிறது. இப் பொருட்காட்சிகளினால் மக்கள் மகிழ்வதுடன், கணிசமான வருமானமும், பலருக்கு வேலைவாய்ப்பளிக்கக் கூடிய சந்தர்ப்பமும் கிடைத்து வருகின்றன.

அண்மையில் மதுரை மாநகரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டினைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ 30 இலட்சம் செலவில் பெரியதொரு பயணிகள் விடுதியைக் கட்டி முடிக்கத் திட்டமிட்டுள்ளது.

சென்னை அண்ணா சாலையில் ரூ. 50 இலட்சம் செலவில் இக் கழகத்தின் அலுவலகம் நிர்மாணிக்கப்படும் திட்டம் ஒன்றும் உள்ளது. இதன் முதற் கட்டப் பணிகள் இவ்வருடத்தில் துவங்கப்படும்.

மாமல்லபுரத்தில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ள இக் கழகத்தின் இருப்பிடங்களை மேலும் விரிவுபடுத்தி ரூ. 20 இலட்சம் செலவில் எழில் மிகு உல்லாசக் குடில்கள் கட்டப்படவிருக்கின்றன.

**நிதிநிலையில் முன்னேற்றம்:**

1978-79-ஆம் வருடம் முதல் முறையாக அரசிடம் பெற்றுள்ள கடன் தொகைக்கான வட்டி விகிதங்களைச் செலுத்தியபின் இக்கழகம் இலாபத்தினைப் பெற்றுள்ளது. இது குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியாகும். இனி வரும் ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளுக்கான பல்வேறு வசதிகளை மேம்பாடு பெறச் செய்வதுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வர்த்தக ரீதியின் தேவைகளுக்கான வருமானத்தையும் சிறந்த முறையில் ஈடுசெய்ய முடியும் என்பது உறுதி.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

''தமிழுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் சமத்துவ நிலை, நல்ல நிலை உருவாக வேண்டும் என்பதற்காகப் பாடுபட்டவர் பாரதிதாசன்.

''நாட்டில் எது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அனைவருக்கும் கல்வி தேவை என்று குறிப்பிட்டார் பாரதிதாசன்.

''மதத்தின் கொடுமையால் பிரிந்து நின்று நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கக்கூடாது என்று கூறினார்.

''மதம் மனிதனின் சட்டையைப்போல-அதனை எப்போது வேண்டும் என்றாலும் கழற்றி எறிந்துவிட்டு நாட்டு முன்னேற்றத்தில் அக்கறை காட்ட வேண்டும்



இன்னிசை வழங்கிய
குடந்தை சீனிவாசன்

''நாடு ஒற்றுமையுடன் திகழ வேண்டுமானால் மொழி ஆதிக்கம் கூடாது'' என்றார்.

நிறைவு விழாச் சொற்பொழிவுக்குப் பின்னர் செய்தி - மக்கள் தொடர்புத்துறை ஆய்வு அலுவலர் திரு சி. நல்லரசு நன்றி கூறினார். அதன் பின்னர் அரசுக் கலைஞர் கலைமாமணி திருமதி வைஜயந்தி மாலா பாலி அவர்கள் பாவேந்தரின் பாடல்களுக்கான நாட்டிய நிகழ்ச்சியை நிகழ்த்தினார்.

இன்னிசையுடன் துவக்கம் ஆகிய விழா - இயற்றமிழின் துணையுடன் நாடக (நாட்டியத்) தமிழுடன் நிறைவு பெற்று விழாவுக்கு வந்திருந்த மக்களின் நெஞ்சங்களில் நிறைந்து, இன்னும் எதிரொலியை எழுப்பிக் கொண்டே இருக்கிறது!

—விழாச்செய்தித் தொகுப்பு:
தமிழ்ப்பித்தன்.



## கவிஞர் வாணிதாசன்

கவிஞர் வாணிதாசன் அவர்கள் 22.7.1915 அன்று புதுவை மாநிலத்தைச் சேர்ந்த வில்லியனூரில் பிறந்தவராவார். திரு. அங்க-திருக்காமு, திருமதி துளசியம்மாள் தம்பதியர் இவரது பெற்றோர்.

புதுவையிலுள்ள பிரஞ்சுக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவரான திரு வாணிதாசன் அவர்கள், சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் பட்டம் பெற்றவர்.

காரை புதினக் கல்லூரி, புதுவை கலவைக் கல்லூரி ஆகியவற்றில் பேராசிரியராகப் பணியாற்றிய இவர், இறுதியாகக் கிருமாம்பாக்கம் பள்ளித் தலைமையாசிரியராகப் பொறுப்பு வகித்தார். அதிலிருந்து 1969ல் ஓய்வு பெற்றபின், வேளாண்மைத் தொழிலில் ஈடுபாடு கொண்டார்.

திருமதி ஆதிலட்சுமி இவரது துணைவியாராவார். ஒன்பது பிள்ளைச் செல்வங்களின் தந்தையாரான திரு வாணிதாசன் அவர்களின் உடன் பிறந்தார் நால்வர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களோடு உடனுறைந்து பழகி, இலக்கிய-இலக்கணத்தில் பயிற்சி பெற்ற நேர்மாணாக்கர் இவர்.

கவிஞர் வாணிதாசனின் கவிதைகள் சில, ரஷ்ய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

பாரிசுப் பல்கலைக் கழகத்தால் இவருக்கு–'Ordre de Etoile d' Anjounam' என்ற சிறப்பு விருது அளிக்கப்பட்டது.

இவரெழுதிய 'பாட்டரங்கப் பாடல்' என்ற நூல் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றதாகும்.

இனிக்கும் தமிழ்க் கவிதைகள் குலிக்கும் கவிக்குயிலாக வாழ்ந்த கவிஞர் திரு. வாணிதாசன் அவர்கள் 7.8.1974 அன்று இயற்கை எய்தினார்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆத்தூரில் 22.7.1921ல் பிறந்தவர் கவிஞர் எஸ். டி. சுந்தரம் அவர்கள்.

துரைசாமி ஐயா, பூங்கோதை தம்பதியருக்குப் பிறந்த இவர் இளமை முதலே நாடகக் கலையில் பேரார்வம் கொண்டிருந்தார். புகழ்பெற்ற நாடகக் குழுவான நவாப் டி. எஸ். இராசமாணிக்கம் கம்பெனியில் சேர்ந்து நாடகம் பயிற்றுபவராகவும், தயாரிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

திருச்சி வானொலி நிலையத்தில் இரண்டாண்டுகள் பணியாற்றினார். தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் செயலாளராகப் பல்லாண்டுகள் பணியாற்றிய இவர் 1964 முதல் 1968 வரை மேலவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தார்.

1949ல் ஜெயலட்சுமி அவர்களை மணந்த இவருக்கு நான்கு ஆண் மக்களும் ஒரு மகளும் உள்ளனர்.

இவர் 10.3.1979 அன்று சென்னையில் இயற்கை எய்தினார்.



கவிஞர் எஸ். டி. சுந்தரம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




பதிவு எண். M. 8676
பட்டுச் சேலை